திருவில்லிப்புத்தூர் வட்டாரச் சிறுதெய்வங்கள்

அழகப்பா பல்கலைக்கழகத்தில் தமிழில் முனைவர் (Ph.D)
பட்டத்திற்குப் பகுதி நிறைவாக அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்
ப.சி. குருசண்முகாம்பாள்
(பதிவு எண்.1550)

நெறியாளர்
பேரா. முனைவர் மு.பாண்டி

தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம்
(தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் 'A' மதிப்புப் பெற்றது)
காரைக்குடி - 630 003.
தமிழ்நாடு
இந்தியா

ஜூலை 2011

பேரா. முனைவர் மு.பாண்டி,
தமிழ்த்துறைத்தலைவர்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.

நாள்: 22.07.2011

நெறியாளர் சான்றிதழ்

"**திருவில்லிப்புத்தூர் வட்டாரச் சிறுதெய்வங்கள்**" என்னும் தலைப்பில் **திருமதி ப.சி.குருசண்முகாம்பாள்** அவர்கள் முனைவர் பட்டத்திற்காகச் செய்த இந்த ஆய்வு அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப் பெற்றது என்றும், இந்த ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப் பெறவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

22/07/2011

துறைத்தலைவர்
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி-630 003

22.07.2011

(முனைவர் மு.பாண்டி)
நெறியாளர்

ப.சி.குருசண்முகாம்பாள்,
முனைவர்பட்ட ஆய்வாளர் (தமிழ்),
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.

நாள்: 22.07.2011

ஆய்வாளர் உறுதிமொழி

"**திருவில்லிப்புத்தூர் வட்டாரச் சிறுதெய்வங்கள்**" என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக எழுதப் பெற்ற இவ்வாய்வேடு என் சொந்த முயற்சியில் உருவானதாகும். இவ்வாய்வேடு இதற்கு முன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்று உறுதியளிக்கிறேன்.

ப.சி. குருசண்முகாம்பாள்
ப.சி.குருசண்முகாம்பாள்
ஆய்வாளர்

உறுதிக் கையொப்பம்
22.7.2011

பேரா. முனைவர் மு.பாண்டி,
தமிழ்த்துறைத்தலைவர்,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-630 003.

நன்றியுரை

என்னை, முனைவர்பட்ட ஆய்வு மாணவியாக அனுமதித்து, ஆய்வு மேற்கொள்ள வைத்த காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு என் பணிவான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்விற்குத் தேவையான கருத்துக்களையும், விளக்கங்களையும் கொடுத்து இமைப் பொழுதும் இடைவெளியின்றி ஆசிரியப் பணியோடு நிருவாகப் பணியாற்றும் என் நெறியாளர், அழகப்பா பல்கலைக்கழகக் கலைப்புல முதன்மையர், தமிழ்த்துறைத் தலைவர் வணக்கத்திற்குரிய **பேரா.முனைவர் மு.பாண்டி** அவர்களுக்கு என்றும் மறவாத என் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

ஆய்வுகள் குறித்துக் கருத்துக்களைக் கூறியும், என் சொந்த நலனில் அக்கறை கொண்டு ஆலோசனைகள் பல வழங்கிய **முனைவர் எஸ்.ஆர்.ஸ்ரீதர்** அவர்களுக்கும், சிறு தெய்வங்கள் பற்றிய புதிய தகவல்களை அறிந்து கொள்ள வாய்ப்பளித்த மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்விற்கு அனுமதியளித்த நாள் முதல் பல்வேறு நூல்களைப் படிக்கத் தூண்டியதோடு அவ்வப்போது ஏற்படும் ஐயங்களைத் தெளிவித்து இனிய நல் நெஞ்சத்துடன் உதவிய **முனைவர் பொ.இராமநாதன்** அவர்கட்கு என் உள்ளங்கனிந்த நன்றிகள் பல.

என் ஆய்விற்கு ஊக்கம் அளித்த என்னுடைய பெற்றோர் **திரு.ப.சிவராமன், திருமதி இ.செல்லம்மாள்** அவர்களுக்கும், ஆய்வுக்குத் தேவையான பொருளைக் கொடுத்துதவிய எனது பாசமிகு சகோதரர்கள் **திரு. சி.சங்கர், திரு. சி.பொன்முருகன்** அவர்களுக்கும், என் சித்தப்பா

திரு.சிவராமன் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

முனைவர் பட்டம் பெறுவதற்கு உடல் உழைப்பு மற்றும் சிக்கலைத் தீர்த்து முழு ஊக்கமளித்தவர் என் அன்பான கணவர் **ஆர்.கண்ணன்** அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுத் தொடர்பான கருத்துக்களை பகிர்ந்து கொண்ட தோழி இதயா மகளிர் கல்லூரி விரிவுரையாளர் **திருமதி முத்துமாரி** அவர்களுக்கும், ஆய்விற்குத் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய நியூ செஞ்சுரி புத்தக நிலையத்தில் பணிபுரியும் **திரு.பாலசுப்பிரமணியன்** அவர்களுக்கும் என் நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

ஆய்வுத் தொடர்பான செய்திகள் சேகரிக்கச் சென்ற போது எனக்குப் பல உதவி செய்த கலசலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வணிகவியல்துறை விரிவுரையாளர் **திரு.ச.முனீஸ்வரன்** அவர்களுக்கும், மற்றும் **திரு சங்கரன்,** நிழற்படம் எடுக்க உதவிய தம்பி **திரு.பாபு, திரு. தனசேகரன், நந்து ஸ்டுடியோ நிறுவனத்தார்** ஆகியோருக்கும் என்றென்றும் என் நன்றிகள் பல.

ஆய்வின் போது நல்லுதவி புரிந்த நண்பர்களான **திரு.சிவசங்கரன், வைரமணி, மீனா, அருணா, செல்வராணி, மணி, கவிதா, பிரியா, பழனி** ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டினை செம்மையுற கணினியில் அச்சாக்கம் செய்தளித்த **காரைக்குடி நிதிஷ்பிரபா கம்ப்யூட்டர்ஸ்** நிறுவனத்தாருக்கும், கட்டமைப்பு செய்து கொடுத்தப் **பூச்சரம் கம்ப்யூட்டர்ஸ்** நிறுவனத்தாருக்கும் என் நன்றிகள் பல.

ப.சி. குருசண்முகம்பாள்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்	-	அகநானூறு
ஐங்	-	ஐங்குறுநூறு
கலி	-	கலித்தொகை
கி.மீ.	-	கிலோமீட்டர்
குறுந்	-	குறுந்தொகை
ச.கி.மீ.	-	சதுர கிலோ மீட்டர்
சிலம்பு	-	சிலப்பதிகாரம்
தகவல்	-	தகவல் கூறியவர்
திருமுருகா	-	திருமுருகாற்றுப்படை
தொல்	-	தொல்காப்பியம்
நற்	-	நற்றிணை
நூ	-	நூற்பா
புறம்	-	புறப்பொருள்
புற	-	புறநானூறு
மணி	-	மணிமேகலை
மு.நா	-	முற்காட்டிய நூலிலிருந்து
மேலது	-	மேற்காட்டிய நூல்
ப	-	பக்கம்
வ	-	வரிகள்
P	-	Page
Vol	-	Volume

பொருளடக்கம்

முன்னுரை

முன்னுரை

மனிதனின் அச்சவுணர்வு உலகில் சமயம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது என்பர். மனிதனின் அறிவுத் தேடலுக்கேற்ப, சமயமானது பெருமரபுச் சமயம், சிறுமரபுச் சமயம் என்று இரு வேறு நிலைகளில் பிரிக்கப்பட்டுள்ளன. இலக்கண வரையறைக்கு உட்பட்டவையான இறுக்கமானக் கோட்பாடுகளும், அவற்றைச் சார்ந்த மாற்றம் பெறாதச் சடங்குகளும் ஆகம விதிகளுக்கு உட்பட்டவையும் பெருமரபுச் சமயமாகும். பயம், பாதுகாப்பு, பயன்பாடு என்ற நிலையில் தோன்றி நம்பிக்கை என்னும் அடித்தளத்தின் மீது உருவாகி நெகிழ்வுத் தன்மை கொண்டது ஆகம விதிக்கு உட்படாதது சிறுமரபுச் சமயமாகும்.

சமுதாயத்தில் உயர்ந்தோர் - தாழ்ந்தோர், மேலோர் - கீழோர், பெரியவர் - சிறியவர் முதலிய பாகுபாடுகள் தோன்றி வளர்ந்திருப்பதைப் போலவே; தெய்வங்களின் வழிபாட்டுத் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு தெய்வ வேறுபாடுகள் அல்லது பிரிவுகள் தோன்றியிருக்கும் என்பதினை அறிந்து கொள்ள முடிகின்றது.

சிறுதெய்வம் என்பதற்குப் பல்வேறு ஆசிரியர்கள் விளக்கம் அளித்துள்ளனர். சிறுதெய்வ ஆய்வு நாட்டுப்புறப் பண்பாட்டியலின் ஒரு பெரும் பிரிவாகும். இந்த வகையான ஆய்வுச் சிந்தனையைத் தொடங்கியதில் தாமரை, ஆராய்ச்சி போன்ற இதழ்களுக்குப் பெரும் பங்குண்டு.

சிறுதெய்வம் என்ற சொல் முதன் முதலாகச் ‘சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்’ என்று அப்பர் தேவாரத்தில் பயின்று வருகிறது. இதன் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டாகும். இதற்கு நேர்மாறாகப் பெருந்தெய்வம் என்ற சொல் வழக்குப் புறநானூற்றிலேயே காணப்படுகிறது. இரண்டு வேந்தர்களையும் நன்றாகக் கண்ட புலவர் ‘இரு பெருந்தெய்வமும் உடன் நின்றா’

(பாடல் எண்:58) என்று பலராமனையும் திருமாலையும் நினைத்துப் பாடுகிறார். எனவே சமூகத்தின் அடித்தளத்து மக்கள் வழிபடும் கடவுளரைச் சிறுதெய்வங்கள் எனவும், மேல்தளத்து மக்கள் வழிபடும் தெய்வங்களைப் பெருந்தெய்வம் எனவும் குறிப்பிடும் வழக்கம் அக்காலத்திலேயே இருந்திருப்பதாகத் தெரிகிறது.

கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் குமரகுருபரர் 'செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன்' என்று முருகனைக் குறிப்பிடுகின்றார். இப்பாடலில் செத்துப் பிறப்பனவாக அவர் குறிப்பது சிறுதெய்வங்களாகும் என்பதைச் சிறுதெய்வ நெறிக் கட்டுரைகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

பொதுவாகச் சிற்றூர் வாழ்க்கையை நாட்டுப்புற வாழ்க்கை என்று சொல்வதுண்டு. அந்த நாட்டுப்புற வாழ்க்கையோடு இணைந்தது தான் நாட்டுப்புறச் சமயம். சிற்றூர் மக்களின் வாழ்வியலை அறிய வேண்டுமானால் அச்சிற்றூரிலுள்ள கோயில்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். அங்குள்ள தெய்வங்களைக் கண்டு கொள்ள வேண்டும். சிற்றூர் மக்களுக்கு நாட்டுப்புறத் தெய்வங்கள் தான் உயிர்நாடி. அவை மக்களால் உருவாக்கப்பட்டவை என்று துளசி இராமசாமி கூறுகிறார்.

நாட்டுப்புறத் தெய்வங்கள் நாட்டுப்புற மக்களோடு ஒன்றி காணப்படும் சக்தியாக விளங்குவதோடு அல்லாமல் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கொடுப்பதாக நம்பிச் சிறுதெய்வங்களை அன்றாடம் நினைந்து மக்கள் வழிபடுகின்றனர். இதனால் சிறுதெய்வங்கள் சிற்றூர் மக்களுக்குப் பாதுகாவலாக, வழிகாட்டியாக இணைந்து காணப்படுகின்றன என்று ஆறு.இராமநாதன் கூறுகிறார்.

பண்டைத் தமிழ் மக்கள் சிறுதெய்வங்களை வழிபட்டனர் என்பதை மன்றம், பொதியில், கள்ளி, திண்ணை முதலிய இடங்களில் வாழ்ந்த தெய்வங்களை வாழ்த்தியமையிலிருந்து அறியலாம் என்கிறார் மீ.அ.மு.நாசீர்அலி. பிறந்து இறக்கும் தன்மையிலும் உயிர்ப்

பலியிட்டு வழிபடப்படுவதாலும் பெரும்பாலும் பாமர மக்களால் வழிபடப் பெறுவதாலும், நிலையாகக் கோயில் அமைப்பு, முறையான பூசை இல்லாத காரணங்களாலும் அமைந்த தெய்வத்தைச் சிறுதெய்வம் எனலாம் என்று மே.ஆ.பாலமுருகன் குறிப்பிடுகிறார்.

சிறுதெய்வங்கள் என்பதற்கு இணையாக நாட்டுப்புறத் தெய்வங்கள் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. சிறுதெய்வங்கள் எனப்படுபவை மிகப் பழைய நம்பிக்கைகளையும் உணர்வுகளையும் பேணி நிற்பவையாகும். சிறுதெய்வம் என்ற சொல்லிற்குப் பதிலாக வேறு ஒரு பொருத்தமான சொல்லை உருவாக்கிக் கொள்வதைவிட அதே சொல்லையே சிறிய எல்லையில் குறிப்பிட்ட மக்களால் வழிபடப்படும் தெய்வம் என்ற பொருளில் கையாளலாம். இச்சொல் நாம் பழகி விட்ட சொல் என்பதாகவும் எடுத்தாளப்படுகிறது.

நாட்டுப்புறத் தெய்வங்களைச் சிறுதெய்வங்கள் என்று அழைக்கிறோம். சிறுதெய்வங்கள் பெரும்பாலும் வேதக் கடவுளோடு தொடர்பு கொள்ளாதவை. பூசை, திருவிழா முதலியவற்றில் திட்டமிட்ட வரையறை எதுவும் கடைப்பிடிக்கப் படுவதில்லை. செவிவழிச் செய்திகளும், கர்ண பரம்பரைச் செய்திகளும் உண்டு. நாட்டில் நாட்டுப்புறத் தெய்வங்கள் தான் அதிகம் உள்ளன. சிற்றூர் மக்களின் வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப் பிணைந்திருப்பன. நாட்டுப்புறத் தெய்வங்களே நாட்டுப்புறக் கலைகளின் வளர்ச்சிக்குக் காரணம் என்றால் மிகையாகாது என்று ச.இராமமூர்த்தி கூறுகிறார்.

ஆய்வின் முக்கியத்துவம்

தமிழர் பண்பாட்டில் வழிபாட்டினைத் தெய்வங்கள் அவற்றின் இயல்புகளின் அடிப்படையில் குலதெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு என்ற நிலைகளில் வகைப்படுத்தலாம். குலதெய்வமாக, வழிபடப்பட்ட தெய்வம் காலப்போக்கில் ஊர்த் தெய்வமாகவோ, சிறுதெய்வமாகவோ வழிபடப்படும் வளர்ச்சிப் பரிணாமத்தை நிறுவலாம். சிறுதெய்வங்கள் என்பவை ஒரு

கிராமத்தாராலோ, பல கிராமத்தாராலோ அம்மக்களின் வாழ்வியல் யதார்த்தங்களைப் பிரதிபலிக்கும் பண்பாட்டுக் கூறுகளுடன் வழிபடப்படுபவையாகும். அவற்றுள் ஒரு சில ஊர்த் தெய்வமாக வளரலாம். பல தெய்வங்கள் சிறுதெய்வங்களாகப் பரிணாமம் பெறலாம். ஆயினும் இவை உள்ளீடு அடிப்படையில் ஒரே இயல்புடையவை. எனவே இம்மூவகைத் தெய்வங்களும் சிறுதெய்வங்கள் என்று வழங்கப்படுகின்றன. அவ்வகையில் திருவில்லிப்புத்தூர் வட்டாரச் சிறுதெய்வங்களை ஆவணப்படுத்தி ஆய்வு செய்ய வேண்டியது இன்றியமையாதது என்று கருதப்பட்டது.

தமிழகத்தில் ஏறத்தாழ ஐம்பதாயிரத்திற்கும் மேல் சிறு தெய்வங்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இத்தெய்வங்களில் கருப்பர், முனியாண்டி, மாரியம்மன், அய்யனார், சுடலைமாடன், பிரம்மசக்தி, பத்திரகாளி, இசக்கியம்மன் போன்றவை தென்மாவட்டப் பகுதிகளில் பெரும்பான்மையாக வழிபடப்படுகின்றன.

இத்தெய்வங்கள் பற்றிய தோற்றக் கதைகள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், உருவத்தோற்றங்கள் யாவும் ஒரே மாதிரியானவை; ஒரே காலத்தவை என்று கூறிவிட முடியாது. ஏனெனில் ஒவ்வொரு ஊர்ப்பகுதிகளின் சூழல்களின் தன்மைக்கேற்ப அவை வேறுபட்ட தன்மைகளைக் கொண்டவையாக அமைந்துள்ளன. அதனை களப்பணியின் போது அறிய முடிந்தது.

மனிதனின் வாழ்க்கைச் சூழலில் தம்மைத் தீயவை அணுகக் கூடாது, நல்லவை அணுக வேண்டுமென்று தெய்வத்திடம் வேண்ட, அது வழிபாடாக முகிழ்த்துள்ளது எனலாம். சிற்றூர்கள், காடுகள், கடற்கரை, மலைச் சாரல்களில் வாழக் கூடியன. பிறப்பு, இறப்பு போன்ற நிகழ்ச்சிகள் உண்டு. பகையை அழிக்கும் தன்மை கொண்டவை பூமியில் வாழ்வனவாகக் கருதப்படுகின்றன.

ஆய்வுத் தலைப்பு

இவ்வாய்வேட்டின் தலைப்பு **திருவில்லிப்புத்தூர் வட்டாரச் சிறுதெய்வங்கள்** என்பதாகும்.

முன் ஆய்வுகள்

நாட்டுப்புறச் சிறுதெய்வ வழிபாடுகள் குறித்துப் பல்வேறு ஆய்வுகள், ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அவற்றில் கீழ்க்கண்டவை குறிப்பிடத்தக்கவையாகும்.

முனைவர் க.வீ. வேதநாயகம் (2003), "ஈரோடு மாவட்டம் சிறுதெய்வ வழிபாடு" என்ற ஆய்வில் சிறுதெய்வ வழிபாடுகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.

த.பூமாவின் (2007), "முசுகுந்த நாட்டாரின் சிறுதெய்வ வழிபாடுகள்" என்ற ஆய்வேடு முசுகுந்த நாட்டு மக்களின் சமூகப் பிரிவுகளை சிறுதெய்வ வழிபாடு கொண்டு இனங்காட்டுகின்றது.

மு.கல்யாணிகுமார் (1999) "தூத்துக்குடி மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள் - ஓர் ஆய்வு" என்பதில் சிறுதெய்வங்கள் பற்றிய தோற்றக் கதைகள் அமைந்துள்ளன.

இரா.அழகர்சாமி, (1991) "திண்டுக்கல் வட்டச் சிறுதெய்வ வழிபாடு" என்ற ஆய்வில் தெய்வங்களின் வழிபாட்டு முறைகள் மற்றும் கோயில் அமைப்புப் பற்றியும் விளக்கியுள்ளார்.

க. சின்னப்பாவின் (1982), "திருமங்கல வட்டாரச் சிறு தெய்வ வழிபாடு" என்ற ஆய்வு தெய்வ வகைகள் பற்றிய ஆராய்ச்சியாகும்.

ப. பரமேசுவரியின் (2002), "பாகூர் வட்டார நாட்டுப்புறத் தெய்வங்கள்" என்ற ஆய்வு திருவிழாக்களும் சடங்குகளும் பற்றிய ஆராய்ச்சியாக அமைந்துள்ளது.

ஹென்றி ஒயிட் ஹெட் (1921) (Village God of south India) 'தென்னிந்தியக் கிராம தெய்வங்கள்' என்ற நூலில் ஏறத்தாழ முக்கால்

நூற்றாண்டிற்கு முற்பட்ட வழிபாடுகள் குறித்துத் தொகுத்து விளக்கியுள்ளார்.

ஆல்ப் ஹில்டபைட்டல் (1981), "திரௌபதியம்மன் வழிபாடு" குறித்து விரிவாக ஆய்வு நிகழ்த்தி இரு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

எவலின் மேயர் (1984), (Angala Parameswari) 'அங்காள பரமேசுவரி' என்ற தன்னுடைய ஆய்வு நூலில் தமிழகம் முழுவதிலும் காணப்படுகின்ற அங்காள பரமேசுவரி வழிபாடு குறித்து விரிவாகக் கூறியுள்ளார்.

துளசி இராமசாமி (1985), "நெல்லை மாவட்டச் சிறுதெய்வ வழிபாடுகள்" என்ற நூலை அதிகமான கிராமங்களில் கள ஆய்வு செய்து உருவாக்கியுள்ளார். மேற்கண்ட ஆய்வுகள் இவ்ஆய்விற்குரிய முன்னோடிகளாக அமைகின்றன.

ஆய்வு எல்லை

விருதுநகர் மாவட்டம் திருவில்லிப்புத்தூர் வட்டாரத்திலுள்ள சிறுதெய்வங்கள் குறித்துத் தனித்துக் காணும் ஆய்வாகையால் "**திருவில்லிப்புத்தூர் வட்டாரம்**" இவ்வாய்வின் எல்லையாகும். இவ்வட்டாரத்தில் ஐம்பது சிற்றூர்கள் உள்ளடங்கியுள்ளன. திருவில்லிப்புத்தூர் வட்டாரத்திலுள்ள 32 சிற்றூர்கள் ஆய்வுக் களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆய்வு நோக்கங்கள்

திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தின் தோற்ற வரலாறுகளை வெளிக் கொணர்வது, இவ்வட்டார மக்களின் சமூகப் பிரிவுகளை இனங்காட்டுவது மற்றும் இவ்வட்டாரத்தின் சிறுதெய்வங்களையும் அவற்றின் வழிபாடுகளையும் கால மாற்றங்களுக்கேற்ப ஆராய்வது, சிறுதெய்வங்களின் தோற்றக் கதைகளை ஆவணப்படுத்துவது, அவற்றின் வழி அத்தெய்வங்களை வழிபடுவோரின் இயல்புகளை பண்பாட்டு, கலாச்சார, நம்பிக்கைகளை, மேல்நிலையாக்கக்

களங்களை ஆராய்வது, இவ்வட்டாரத்தின் திருவிழா, நேர்த்திக்கடன்களை ஆராய்வது போன்றவை இவ்வாய்வேட்டின் நோக்கங்களாக அமைந்துள்ளன.

கருதுகோள்கள்

ஒவ்வொரு வட்டாரத்திற்கென்றும் மொழிக்கூறுகள், தொழில்கள், பழக்க வழக்கங்கள், விழாக்கள் போன்றவற்றில் சில தனித்தன்மைகள் இருக்கின்றன என்பதின் அடிப்படையில்,

♦ திருவில்லிப்புத்தூர் வட்டாரச் சிறுதெய்வ வழிபாடுகள் பல தனித் தன்மைகளைப் பெற்றிருக்கும்.

♦ மக்களின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் காலச் சூழல்களில் வழிபாட்டு முறைகளில் நெகிழ்வுத் தன்மைக் காணப்படும்.

♦ கல்வி, அறிவியல் கண்டுபிடிப்புகளாலான நாகரிக வளர்ச்சி, நவீனத் தொழிலக வேலை வாய்ப்புகள், புலம் பெயர்வு போன்றவற்றால் இப்பகுதி மக்களின் வழிபாட்டு முறைகளில் மாற்றங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும்.

♦ சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் பெருந்தெய்வ வழிபாட்டு முறைகளாக மாற்றம் பெற்று, மேல்நிலையாக்கம் பெற்று வருகின்றன. அவை வெகுசனத் தெய்வங்கள் என்பதால் இதற்குச் சமூகப் பின்புலங்கள் காரணமாக அமைகின்றன என்பதும்,

♦ தெய்வத் தோற்றக் கதைகள் மற்றும் வழிபாட்டு முறைகள் இப்பகுதி மக்களின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களை வெளிக்காட்டும் என்பன இவ்வாய்வின் கருதுகோள்களாகும்.

ஆய்வு மூலங்கள்

திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் களஆய்வில் ஒளிப்பதிவு செய்தல், உற்று நோக்குதல், நேர்காணல் போன்றவற்றின் வழியாகக்

கிடைக்கப் பெற்றச் சிறுதெய்வ வழிபாட்டுத் தரவுகள் இவற்றிற்கு முதன்மைச் சான்றாதாரங்களாகக் கொள்ளப்பெற்றுள்ளன.

இறை வழிபாடு மற்றும் பக்தி இலக்கியம் தொடர்பான ஆய்வேடுகள், நூல்கள், கட்டுரைகள், இதழ்கள், இணையத் தரவுகள் போன்றவை துணைமைச் சான்றாதாரங்களாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

ஆய்வு அணுகுமுறை

திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் காணப்பெறும் சிறுதெய்வங்களைப் பற்றி விளக்கும் நிலையில் விளக்கவியல் அணுகுமுறை (Descriptive Approach) இடம்பெற்றுள்ளது. இப்பகுதி மக்களின் சமூக இயங்குநிலைகளைக் கண்டறிய சமுதாயவியல் அணுகுமுறையும் (Sociological Approach), இம்மக்களின் அறவியல் தன்மைகளைக் காணும் நோக்கில் அறவியல் அணுகுமுறையும் (Ethical Approach), இவ்வாய்விற்குரிய அணுகுமுறைகளாக அமைந்துள்ளன.

தரவுகள் சேகரிக்கப்பட்ட முறை

களப்பணியைச் சிறப்பாகச் செய்ய முதலில் ஒரு வினாப்படிவம் தயாரிக்கப்பட்டது. இந்த வினாப்படிவம் ஒவ்வொரு ஊரைப் பற்றிய செய்திகளையும், தெய்வங்கள், கோயில்கள், பூசாரிகள், சடங்குகள், திருவிழாக்கள், படையல் முறைகள், தெய்வக் கதையாடல்கள், நம்பிக்கைகள் முதலியனவற்றையும் தெரிந்து கொள்ள ஏதுவாகத் திட்டமிடப்பட்டது.

களப்பணியின் போது ஒவ்வொரு சிற்றூரிலும் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டோரிடம் தேவையான கேள்விகள் கேட்கப்பட்டு அதற்கான பதில்கள் தரவுகளாகச் சேகரிக்கப்பட்டன.

ஓர் ஊரில் அமைந்துள்ள கோயில்கள், அவை ஊரில் அமைந்துள்ள இடங்கள், ஒவ்வொரு கோயிலின் அமைப்பு முறை போன்ற விவரங்கள் நேரடியாகப் பார்வையிடப்பட்டு சேகரிக்கப்பட்டன. கோயில்களின் கட்டட அமைப்பு,

தெய்வங்களின் சிலைகள், உருவ அமைப்பு போன்றவை உரிய குறிப்புகள் மற்றும் புகைப்படங்களுடன் ஒப்பிட்டுச் சேகரிக்கப்பட்டன.

ஊர்த் திருவிழாக்கள், குலதெய்வ வழிபாடுகள், அமைவிடம், அமைப்புமுறைகள் போன்றவற்றில் நேரடியாகப் பங்கு பெற்று, உற்றுநோக்கிக் குறிப்புகள் சேகரிக்கப்பட்டன. தெய்வச் சடங்குகள் தொடர்பான தகவல்கள் இயற்கையானச் சூழலில் திரட்டப்பட்டன.

ஆய்வின் பகுதியான திருவில்லிப்புத்தூர் வட்டாரத்திற்கு உட்பட்ட 32 சிற்றூர்களைச் சேர்ந்த தகவலாளர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வாளர் இவ்வட்டாரத்தைச் சேர்ந்தவர் என்பதனால் மக்களிடம் அறிமுகமாவதில் இடர்பாடுகள் ஏதும் ஏற்படவில்லை. இவ்வறிமுகம் தகவல்களைச் சேகரிக்க உறுதுணையாக அமைந்தது. ஆய்வாளரின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் இவ்வட்டாரத்தில் வசிப்பதனால் அவர்களுடைய இல்லங்களில் தங்கி தகவல்கள் சேகரிக்க முடிந்தது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் வகைப்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுப் பகுப்பு

திருவில்லிப்புத்தூர் வட்டாரச் சிறுதெய்வங்கள் என்னும் இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

ஆய்வு முன்னுரையில் ஆய்வுப் பொருண்மை, ஆய்வின் முக்கியத்துவம், தலைப்பு, முன் ஆய்வுகள், ஆய்வு எல்லை, ஆய்வு நோக்கங்கள், கருதுகோள்கள், ஆய்வு மூலங்கள், ஆய்வு அணுகுமுறை, தரவுகள் சேகரிக்கப்பட்ட முறைமை, ஆய்வுப் பகுப்பு ஆகியன இடம் பெற்றுள்ளன.

திருவில்லிப்புத்தூர் வட்டாரம் ஓர் அறிமுகம் என்னும் முதலாமியலில் ஊர்ப் பெயர்க்காரணங்கள், வட்டார அமைப்பு முறை, தொழில்கள், கல்வி முறை போன்றவை இடம்பெற்றுள்ளன.

சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம் என்னும் இரண்டாமியலில், சிறுதெய்வ வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி, வகைகள் போன்றவை சுட்டப்பட்டுள்ளன.

திருவில்லிப்புத்தூர் வட்டாரச் சிறுதெய்வங்கள் என்னும் மூன்றாமியலில், சிறுதெய்வங்கள் என்பதற்கான வரையறை, அதன் வகைகள், இவ்வட்டாரத்தில் வணங்கப்படும் சிறுதெய்வங்களின் தோற்றம், வளர்ச்சி, கோயிலமைப்பு, கல்வெட்டுச் செய்திகள் போன்றவை விளக்கப் பெற்றுள்ளன.

வழிபாடும் திருவிழாக்களும் என்னும் நான்காமியலில், இவ்வட்டாரச் சிறுதெய்வக் கோயில்களில் நிகழ்த்தப் பெறும் வழிபாடுகள், வழிபாட்டு முறைகள், விழாக்கள், படையல்கள் போன்றவை கொடுக்கப்பட்டுள்ளன.

நம்பிக்கைகளும் நேர்த்திக்கடன்களும் என்னும் ஐந்தாமியலில், இவ்வட்டார மக்களிடம் உள்ள தெய்வங்கள், வழிபாடுகள் சார்ந்த நம்பிக்கைகள், அவர்கள் வழிபடும் தெய்வத்திற்குச் செய்யும் நேர்த்திக்கடன்கள், நிருவாக அமைப்பு முறை போன்றவை தரப்பட்டுள்ளன.

அனைத்து இயல்களிலிருந்தும் பெறப்பட்ட ஆய்வு முடிவுகளின் வழி ஆய்வின் சாரங்கள் தொகுக்கப் பெற்று முடிவுரையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆய்வேட்டிற்குத் துணையாக நின்ற ஆய்வு நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள், இதழ்கள், இணையதளங்கள், அகராதிகள் போன்றவை அகர வரிசைப்படி துணைநூற்பட்டியலில் தரப்பட்டுள்ளன.

இவ்வாய்வின் பின்னிணைப்புகளாகக் கீழ்கண்டவை தரப்பெற்றுள்ளன.

1. தகவலாளர் பட்டியல்
2. கலைச்சொற்கள்
3. வழிநடைக் கும்மிப் பாடல்கள்
4. விருதுநகர் மாவட்ட வரைபடம்
5. திருவில்லிப்புத்தூர் வட்டார வரைபடம்
6. திருவிழா அழைப்பிதழ்களின் நகல்கள்
7. புகைப்படங்கள்

இயல் - 1

திருவில்லிப்புத்தூர் வட்டாரம் ஓர் அறிமுகம்

இயல் 1

திருவில்லிபுத்தூர் வட்டாரம் ஓர் அறிமுகம்

திருவில்லிபுத்தூர் இருப்பிடம்

தமிழகத்தின் தென் பகுதியில் மதுரையை அடுத்து 82 கி.மீ தொலைவில், மேற்குத் தொடர்ச்சி மலையோரத்தில் இவ்வட்டாரம் அமைந்துள்ளது. "இவ்வட்டாரம் 1985 ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டமாக இருந்தது. அதன் பின்பு 1998ல் காமராசர் மாவட்டமாக மாறியது. தற்போது இம்மாவட்டம் விருதுநகர் மாவட்டமாகத் திகழ்கிறது."(1) இம்மாவட்டம் திருவில்லிபுத்தூர், இராசபாளையம், சாத்தூர், அருப்புக்கோட்டை, விருதுநகர், காரியாபட்டி, சிவகாசி, திருச்சுழி, வெம்பக்கோட்டை, வத்திராயிருப்பு, நரிக்குடி என்னும் 11 வட்டங்களைக் கொண்டது ஆகும். இவற்றை இரண்டு கோட்டங்களாகப் பிரித்துள்ளார்கள். ஒவ்வொரு கோட்டமும் நான்கு வட்டங்களைக் கொண்டது. அதில் ஒன்று திருவில்லிபுத்தூர் வட்டம் ஆகும். மதுரை நெடுஞ்சாலையில் கிருஷ்ணன் கோவிலிருந்து எட்டு கி.மீ தொலைவில் வடதிசை நோக்கி அமைந்துள்ளது. திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் விருதுநகரிலிருந்து 90 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இவ்வட்டமானது ஆறு உள்வட்டங்களை உள்ளடக்கி 50 வருவாய் கிராமங்களைக் கொண்டுள்ளது.

பெயர்க்காரணம்

"முத்தமிழ் வளர்க்க முச்சங்கம் நிறுவிய பாண்டிய நாட்டிலே திருவில்லிபுத்தூர் சிறப்புடன் விளங்குகிறது. 2000ஆண்டுகட்கு முன்னர் வில்லிபுத்தூர் பகுதியை உள்ளடக்கிய மல்லி நாடு என்னும் நிலப்பரப்பை ஆண்ட குறுநில மன்னன் வில்லி என்பானின் பெயரில் அமைந்த ஊர். வில்லிபுத்தூர் என்ற கருத்தை நம்புவதற்கிடமுண்டு.

தொல்காப்பியம் வரையறுத்த மாயோன் மேய காடுறை உலகமாக வில்லிபுத்தூர் இருந்த காலம் அது."[(2)]

மல்லி வள நாட்டு மன்னனின் கனவில் மாதவன் தோன்றி ஆலமரத்தினடியில் புற்றினால் மூடப்பட்டிருந்த விமாலக்கருதி எனப்படும் வட பத்ரசாயி கோயில் விமானத்தை இனம் காட்டியதாகவும், வேடுவ மன்னனால் கண்டுபிடிக்கப்பட்ட அந்தக் கோவில் பல்வேறு காலகட்டங்களில் பின்னர் விரிவுபடுத்தப்பட்டது என்பதும் தல வரலாறு! சங்க காலத்தில் முருகன், கண்ணன், சிவன் ஆகியோருக்குக் கோயில்கள் இருந்துள்ளன.

சுடு மண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம் என்னும் வரியினால் அக்கோயில், மண், செங்கல் ஆகியவற்றால் ஆனதென்று அறியலாம்.

"புற்று என்ற சொல்லில் இருந்து உருவான புற்றூர் நாளடைவில் புத்தூர் என்று மருவியிருக்கலாம். புதுவை என்னும் குறும்பெயர் அந்நாளில் இந்த கருத்தே உரித்தாயிருந்தது."[(3)]

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு
முன் தோன்று மூத்த குடி" (பனம்பாரனார்)[(4)]

"மின்னார் திடமதிள்சூழ் வில்லி புத்தூரென்று ஒருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்"[(5)] (பாண்டிய பட்டர்)

ஒளி நிறைந்த பெரிய திருமதிலால் சூழப்பட்ட 'திருவில்லிபுத்தூர்' என்று ஒரு தரம் உச்சரித்தவருடைய திருவடித் தாமரைகளைச் சிரமேற் கொண்டோம்.

"மின்னனைய நுண்ணிடையார் விரிகுழல்மேல் நுழைந்த
வண்டு
இன்னிசைக்கும் வில்லிபுத்தூர் இனிதமர்ந்தாய்"
பெரியாழ்வார் (2.2.6)

"மென்னடை அன்னம் பரந்து விளையாடும்

வில்லிபுத்தூர்"[6] -ஆண்டாள்

என்று திருவில்லிபுத்தூரைப் பற்றி 1200 ஆண்டுகளுக்கு முன்னர் பெரியாழ்வாரும், ஆண்டாளும் பாடிய பாசுரங்கள் இந்நகரின் தொன்மையைக் கூறுகின்றன.

சிறப்பு

சூடிக்கொடுத்த சுடர்க் கொடியான கோதை நாச்சியார் எனப் புகழப்பட்ட ஆண்டாள் அவரித்த திருத்தலம் திருவில்லிபுத்தூர் திருமாலின் பத்து அவதாரங்களில் மூன்றாவது அவதாரமாகிய வராக அவதாரம் எடுத்ததே இத்திருத்தலத்தில் தான் என்பர். இவ்வூரில் உள்ள ஆண்டாள் கோயில் கோபுரமே "தமிழக அரசின் சின்னமாக விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்."[7]

திருவில்லிபுத்தூரில் உள்ள ஆண்டாள் கோவில் திருமலை மன்னரால் எழுப்பபட்டோ அல்லது விரிவுபடுத்தப்பட்டோ இருக்கலாம். 500 ஆண்டுகளுக்கு முன்னர் விசய நகர மன்னர் கிருஷ்ணதேவராயர் திருவில்லிபுத்தூருக்கு "வந்து ஆண்டாள் கோவிலுக்கு அணிமணிகள் வழங்கியுள்ளார். திருமலை மன்னரின் அத்தை பெயரில் உருவான சிங்கம்மாள்புரம் தெருவே இன்றைய சிங்கமாடத்தெருவாகும்."[8]

இராமரது வில்லின் பெயர் கோதண்டம். திருவில்லிபுத்தூரில் எங்குச் சென்றாலும் கோதண்டம் என்ற பெயர் கொண்டவரைக் காணலாம்.

"திருவில்லிபுத்தூரில் இருந்த கோட்டையைப் பாதுகாத்து வந்த ஆற்காடு நவாப்பின் இளைய சகோதரன் இரகீம் என்பவனை எதிர்த்து நெற்கட்டாஞ் செவ்வல் பாளையக்காரரான மாவீரன் பூலித்தேவர் போரிட்டார். 1756ல் நடைபெற்ற இப்போரில் வெற்றிபெற்றவர் பூலித்தேவரே."[9]

முதல் உலகப் போர் பற்றிய நினைவுச்சின்னம் ஒன்று திருவில்லிபுத்தூரில் உள்ளது. திருமலை மன்னர் திருவில்லிப்புத்தூரை ஆண்ட வேளையில் கட்டப்பட்ட, மதுரை மகால் பாணியிலான அரண்மனை தற்போது நீதிமன்றமாகச் செயல்பட்டு வருகிறது. அங்குள்ள நினைவுச்சின்னத்தில் 1914 முதல் 1919 வரை நடந்த உலகப் போரில் ஆங்கிலேயருக்கு ஆதரவாகத் திருவில்லிபுத்தூரில் இருந்து 52 வீரர்கள் கலந்து கொண்டனர் எனவும், அதில் எட்டு பேர் வீரமரணம் அடைந்தனர் எனவும் பொறிக்கப்பட்டுள்ளது.

"திருவில்லிபுத்தூரில் 125 ஆண்டு நிறைவினைக் கொண்டாடிய நூலகம், அப்போதைய திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ஜே.பி.பென்னிங்டன் பெயரில் அமைந்த பென்னிங்டன் நூலகம், ஏறத்தாழ 30,000 நூல்களையும், நாளிதழ், வாரஇதழ், பிறை இதழ் மற்றும் திங்கள் இதழ்களையும் கொண்டது. மிகப் பழமையான நூல்களைக் கொண்ட கருவூலமான இது வணங்கிடத்தக்கது என்று கூறுகின்றார்கள்."(10)

வட்டார அமைப்பு

"திருவில்லிபுத்தூரில் அதன் நான்கு திசைகளிலும் நன்கு விளைச்சல் தரக்கூடிய விளை நிலங்களைக் கொண்டுள்ளது. எங்கு நோக்கிலும் பச்சைப்பசேல் எனப் பச்சைப் பாய் விரிந்ததைப் போன்று தோன்றும் மிக்கச் செழிப்புடைய ஊர் ஆகும். ஆண்டாள் பிறந்த ஊர் என்பதால் இவை சுற்றுலாத் தளமாக விளங்குகின்றது. நெல்லு, கரும்பு மற்றும் வாழை மிகுதியாக விளையக்கூடிய ஊராகும். இவ்வூரிலிருந்து வடமேற்கே நான்கு கி.மீ தொலைவில் தென் திருப்பதி என்று அழைக்கப்படும் திருவண்ணாமலை கோயில் உள்ளது. இவ்வூர் முன்பு மல்லிபுத்தூர், கிருஷ்ணன் கோவில், பாட்டக்குளம், நத்தம்பட்டி, துலுக்கன்குளம், சென்னாக்குளம், எ.இராமலிங்காபுரம், ரெட்டியபட்டி, காரங்குளம், திருத்தங்கல் கொத்தங்குளம், பொட்டல்பட்டி, சாச்சியாபுரம், இடையங்குளம், வத்திராயிருப்பு, புதுப்பட்டி, ஆகிய சிற்றூர்களை உள்ளடக்கிய

நகராட்சியவாக இருந்திருக்கின்றது. ஆனால் பிற்காலத்தில் இவ்வூர்கள் அனைத்தும் தனித்தனி ஊராட்சி அமைப்புகளாக மாறிவிட்டன.''(11)

''மேற்குத் தொடர்ச்சி மலையில் பருவக்காலத்தில் பெய்கின்ற பருவ மழையின் காரணமாக வாழைக்குளம், வேப்பங்குளம், அமுதாகுளம், வாலாங்குளம், நரையன்குளம் போன்ற குளங்களுக்குக் கால்வாய் மூலம் வந்து நிரம்பிய பின்பு, உபரிநீராக வருகின்ற நீர் எல்லாம் ஒரே கால்வாயில் சேர்ந்து திருவில்லிபுத்தூரில் அமைந்துள்ள பெரிய குளம் கண்மாயில் வந்து சேர்கிறது. பெரிய குளம் கண்மாயில் ஒருதடவை நீர் நிரம்பினால் வருடத்திற்கு இரண்டு முறை விவசாயம் செய்யலாம். திருவில்லிபுத்தூர் நகருக்கு மேற்கே பத்து கி.மீ தொலைவில் உள்ள செண்பத் தோப்பு வனப்பகுதிகளில் சாம்பல் நிற அணில்கள் காணப்படுகின்றன. இவ்வகை அணில்கள் 14 ஆண்டுகள் வரை வாழும் என்பதைக் கள ஆய்வின் மூலம் அறியப்படுகின்றது.''(12)

''திருவில்லிபுத்தூருக்கு மேற்கே 15 கி.மீ தொலைவில் காட்டழகர் கோயில் காணப்படுகின்றது. செண்பகத் தோப்பிலிருந்து சாம்பல் நிற அணில்கள் சரணலாயத்தைக் கடந்து ஒரு மணிநேரம் நடந்தால் காட்டழகர் கோவிலை அடையலாம். இயற்கை எழிலுடன் கூடிய திருமலை மன்னர் காலத்தைச் சேர்ந்த இந்தக் கோவிலின் தூண்கள் வேலைப்பாடு மிக்கவை. இக்கோவிலை அடைவதற்கு முன்னமே 'நூபுரகங்கை' எனப்படும் வற்றாத அருவியும், பெரிய தெப்பவடிவிலான தீர்த்தத் தொட்டியும் உள்ளன.''(13)

''காட்டழகர் கோவிலுக்கு வடமேற்கே பத்து கி.மீ தொலைவில் கன்னிமார் கோயிலும், நாவல் மரஅடியிலிருந்து வரும் 'சிலம்பூத்து' என்னும் நீர்நிலையும் உள்ளன. இதன் அருகில் முதலியார் ஊற்று எனப்படும் வெள்ளையற் காலவிடுதி யானை நுழையா அளவில் அகழிகளுடன் இங்கிருந்து சற்றே தெற்கு நோக்கிச்

சென்றால் சித்தர் 'ஆற்றுக்காவு', 'ராஜா புடை' எனப்படும் பெரிய குகை காணப்படுகிறது.'[14] திருவில்லிபுத்தூரிலிருந்து வத்திராயிருப்பு வழியாகச் சென்று அங்கிருந்து தாணிப்பாறை வழியாக பத்து கி.மீ மலைப் பயணத்துக்குப் பின்னர் சதுரகிரியை அடையலாம். நான்கு பக்கமும் உயர்ந்த சிகரங்களும் பள்ளமான இடத்தில் கோயிலும் உள்ள அமைப்பினால் சதுரகிரி என்னும் பெயர் வந்தது. "ஆடி அமாவாசை வழிபாட்டுக்காகச் சுற்றிலும் உள்ள மாவட்டங்களில் இருந்து இலட்சக்கணக்கானோர் இங்கு வருவதுண்டு. திருமுக்குளக்கரையில் எண்ணெய்க் காப்பு மண்டபம் ஒன்று திருமலை மன்னரால் கட்டப்பட்டுள்ளது. அருகில் உள்ள எழில்மிகு கோயிலில் தங்கித் தான் இராணிமங்கம்மாள் எண்ணெய்க் காப்பு விழாவைக் கண்டு மகிழ்ந்தார். திருவில்லிபுத்தூரின் தென்கிழக்கே இரயில் நிலையம் செல்லும் வழியில் தற்போதைய வட்டாட்சியர் அலுவலகம் உள்ளது. அதன் அருகே கிருஷ்ணன் கோவில் உள்ளது."[15]

"திருவில்லிபுத்தூரில் மன்னர் திருமலை நாயக்கர் காலத்தில் நீதிமன்றமாக செயல்பட்ட கட்டடத்தை அருங்காட்சியமாக மாற்ற தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மன்னர் திருமலை நாயக்கர் மதுரையிலிருந்து திருநெல்வேலி வரை ஆட்சி செய்தக் காலத்தில் திருவில்லிபுத்தூர் வரும்போது, தெற்கு ரதவீதியில் உள்ள இந்த மண்டபத்தில் தங்குவார். இதன் ஒரு பகுதி, வழக்குகளை மேல் முறையீடு செய்யும் நீதி மன்றமாக செயல்பட்டு வந்தது."[16]

பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியின் போது 1867-ல் புதுப்பிக்கப்பட்டு நீதிமன்றமாக செயல்பட்டு வந்தது. மதுரை திருமலை நாயக்கர் மகாலில் உள்ளது போன்ற பெரிய தூண்கள் உள்ளன. மேற்கூரையில் மூலிகை ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. 2005-ஆம் ஆண்டு வரை இக்கட்டடத்தில் நீதி மன்றம் செயல்பட்டது. இந்தக் கட்டடத்தில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் திருவில்லிபுத்தூரின் பண்டைய வரலாற்று பொருட்களைச் சேகரித்து அருங்காட்சியம் நடத்த வேண்டுமென்று

செய்தி வெளியிட்டுள்ளதால், தற்போது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் அருங்காட்சியகம் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். முதற்கட்டமாக ஓவியங்களின் தன்மையை இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை, இரசாயனத்துறை, துணைக் கண்காணிப்பாளர் சந்திர பாண்டியன் தலைமையில் ஊழியர்கள் ஆய்வு நடத்தினர்.

"தொல்பொருள் ஆய்வுத் துறை முதுநிலை பராமரிப்பு உதவியாளர் பகவான் சாரதி கூறுகையில், இந்தக் கட்டடத்தில் நாயக்கர் காலத்தில் இருந்ததைப் போன்ற தோற்றத்தை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது".[17] "இவ்வட்டாரத்தின் மொத்தப் பரப்பளவு 394.67.0 ச.கி.மீ. மொத்த மக்கள் தொகை 1,69,918, இதில் 83,595 ஆண்கள், 86,323, பெண்கள் படித்தவர்களின் எண்ணிக்கை 1,40,000 ஆகும். திருவில்லிபுத்தூரின் யூனியன் பெருந்தலைவர் கு.ஆறுமுகம், இவர் திருவில்லிபுத்தூரைச் சேர்ந்தவர். துணைத்தலைவர் ஏ.ஆர்.சீனிவாசன். இவர் கோட்டைப் பட்டியைச் சேர்ந்தவர்".[18] இவ்வூரைச் சுற்றிலும் நல்ல விளை நிலங்கள் நிறைந்து இருப்பதால் ஊர் விரிவடைந்து காணப்படுகிறது. இவ்வூரின் கிழக்குப் பகுதிகளிலும் மேற்கு பகுதிகளிலும் தாழ்த்தப்பட்ட இனத்தவர் வாழ்கின்றனர். இவ்வூரில் பிள்ளைமார், தேவர், நாயுடு, யாதவர், வாணியச் செட்டியார், குறவர், தேவேந்திரகுல வேளாளர், குலாளர், சலவைத் தொழில் செய்பவர் மற்றும் நெசவுத் தொழில் செய்பவர் போன்ற பல இனத்தவர்கள் வாழ்கின்றனர்.

தொழில்

இப்பகுதி மக்கள் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் திருவில்லிபுத்தூரில் ஆண்டாள் கோயிலுக்குச் சொந்தமான தோப்புகளில் மாமரம், புளியமரம் மிகுதியாக இருப்பதால், அம்மரங்களில் விளைகின்ற மாங்காய் மற்றும் புளியம்பழம் போன்றவற்றைக் குத்தகைக்கு எடுத்து விற்பனை செய்தும் வருவாய்

ஈட்டுகின்றனர். மேலும் இவ்வூரில் முக்கியத் தொழிலாகக் கருதப்படுவது நெசவுத் தொழிலே ஆகும். நகைக் கடைகள் மற்றும் ஜவுளிக்கடைகள் நிறைந்த பகுதியாக உள்ளது. மேலும் "கோ-ஆப்-டெக்ஸ் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் இவ்வூரில் உள்ளது. 'பூ' வியாபாரத்தில் இவ்வூர் சிறப்பு பெற்று விளங்குகின்றது. காரணம், ஆண்டாள் சூடிய மாலையைத்தான் திருப்பதிக்கு எடுத்துச் செல்லுகின்றனர். பானை வனைதல் மற்றும் சிலைகள் வடித்தல், பொம்மைகள் செய்தல் மற்றும் மரத்தொழிலும் நடைபெறுகின்றது."(19)

"திருவில்லிபுத்தூர் என்றாலே நினைவுக்கு வருவது பால்கோவாதான். இந்த ஊருக்கு எந்தவொரு பிரதான தொழிலும் இல்லாதக் காலத்தில் உருவானதுதான் பால்கோவா தொழில் இப்பகுதியில் பால் கறவை மாடுகள் வைத்திருப்போர் அதிகம். இதனால் அபரிமிதமான பால் உற்பத்தியானதும் அதை வாங்கக் கூட ஆள் இல்லாத நிலையில் ஒரு காலத்தில் உருவானதாகவும் அப்போதுதான் பால் வீணாக கெட்டுப் போவதைத் தவிர்க்க இதுபோன்ற பால்கோவா தயாரிக்கும் எண்ணம் வந்ததாகவும் கூறப்படுகிறது.

ஆரம்பத்தில் ஓரிரு பால்கோவா தயாரிக்கும் நிறுவனங்கள் இருந்த நிலை மாறி தற்போது 200க்கும் மேற்பட்ட நிறுவனங்களாகி விட்டன. இதன் மூலம் ஐயாயிரத்திற்கும் அதிகமானோர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். பல்வேறு மாநிலங்களுக்கு மட்டுமன்றி சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது. ஆரம்பக்காலத்தில் எருமைப்பாலில் மட்டுமே தயாரிக்கப்பட்ட பால்கோவா தற்போது பசும்பாலில் தயாரிக்கப்படுகிறது. இத்தொழிலினால் திருவில்லிபுத்தூர் மற்றும் சுற்றுப்பகுதியிலுள்ள பல கிராமத்தவர்களுக்கு வாழ்வளிக்கிறது என்றால் மிகையில்லை."(20)

ஆயர் குடியிலுள்ள பெண்கள் மோர், தயிர், வெண்ணெய் ஆகியவற்றைக் தலையில் சுமந்து சென்று விற்றனர். மேலும் பாண்டிய நாட்டு மக்கள் கோயில்களில் தொண்டாற்றும் பணிப்பெண்களும், கோயிலில் ஆடல் பாடலில் ஈடுபட்ட பெண்களுமிருந்தனர். கடவுளரின் பணிக்காக அந்தந்த இனத்தை சேர்ந்தவர்கள் அக்கோயில் நிர்வாகிகளாக இருக்கின்றனர்.(21)

விவசாயம் அதிகம் இருப்பதால் நஞ்சை ஆயக்கட்டு முதல் முறைப்பாசனம் 7601.61 ஏக்கரும், புஞ்சை ஆயக்கட்டு இரண்டாம் முறைப்பாசனம் 31411.20.5 ஏக்கரும் ஆகும்.

இவ்வட்டாரத்தில் 97 தொடக்கப் பள்ளிகள், 23 நடுநிலைப் பள்ளிகள், எட்டு உயர் நிலைப்பள்ளிகள், 10 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இதில் மொத்தம் 138 பள்ளிகள் உள்ளன. இதில்

1. தொடக்கப் பள்ளிகள்

1.	அரசுப் பள்ளி	-	54
2.	தனியார் பள்ளி	-	40
3.	நகராட்சி	-	3
			97

2. நடுநிலைப் பள்ளிகள்

1.	அரசுப் பள்ளி	-	13
2.	தனியார் பள்ளி	-	5
3.	நகராட்சி	-	5
			23

3. உயர்நிலைப் பள்ளிகள்

1.	அரசுப் பள்ளி	-	6
2.	தனியார் பள்ளி	-	2
			8

4. மேல்நிலைப் பள்ளிகள்

1.	அரசுப் பள்ளி	-	6
2.	தனியார் பள்ளி	-	4
			10

மேலும் இவ்வட்டாரத்தில் மூன்று கல்வியியல் கல்லூரிகள், இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், இரண்டு பொறியியல் கல்லூரிகள், ஒரு தொழிற் பயிற்சி நிலையம். ஒரு மருந்தியல் கல்லூரி, ஒரு தொழில்நுட்பக் கல்லூரி, இரண்டு ஆசிரியர் பயிற்சி பள்ளிகள், இரண்டு கல்வியியல் கல்லூரிகள் போன்ற கல்லூரிகள் இவ்வட்டாரத்தில் உள்ளன.

திருவில்லிபுத்தூர் இயற்கை எழில் மிகுந்த இடத்தில் அமைந்துள்ளது. விவசாயமும், நெசவுத்தொழிலும் சிறப்புற நடைபெறுகின்றது. கல்வியறிவிலும் இப்பகுதி மக்கள் சிறப்புப் பெற்றிருப்பதை அறிய முடிகின்றது.

தொகுப்புரை:

விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் 50 சிற்றூர்களை உள்ளடக்கிய பகுதியாகக் காணப்படுகிறது. கால எல்லைக் கருதி, இவ்வட்டாரத்திலுள்ள 32 கிராமங்கள் அடங்கிய அனைத்து சிற்றூர்களும் இவ்வாய்வுக் களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. வில்லிபுத்தூர் பகுதியை உள்ளடக்கிய மல்லிநாடு என்னும் நிலப்பரப்பை ஆண்ட குறுநில மன்னன் வில்லி என்பானின் பெயரில் அமைந்த ஊராகும். வில்லிபுத்தூரில் இருந்த கோட்டையை பாதுக்காத்த நிகழ்வுகளும், முதல் உலகப்போர் பற்றிய நினைவுச் சின்னம் தொடர்பாக பல வரலாற்றுச் செய்திகளும், வாய்மொழி கதைகளும், கல்வெட்டும், ஓவியமும் காணப்படுகின்றன.

இவ்வட்டாரத்தின் சிறப்பு என்பது, சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாள் கோதை நாச்சியார் எனப் புகழப்பட்ட ஆண்டாள் அவதரித்த திருத்தலம் திருவில்லிப்புத்தூர் ஆகும். ஆண்டாள் திருக்கோயில் இராசக்கோபுரமே தமிழக அரசின் சின்னமாக விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்னர் விசய நகர மன்னர் கிருஷ்ண தேவராயர் திருவில்லிப்புத்தூருக்கு வந்து, ஆண்டாள் கோயிலுக்கு அணிமணிகள் வழங்கியுள்ளார் என்பதும், அவரது அத்தை பெயரில் உருவான சிங்கம்மாள்புரம் தெருவே இன்றைய சிங்கமாடத் தெருவாகும் என்று கூறப்படுகிறது.

அடிக்குறிப்பு :

1. தகவல்: முத்தாயம்மாள், 17.07.2007.
2. நரேன் இளவேனில், ஸ்ரீ ஆண்டாள் ப.10.
3. மேலது ப-11.
4. ஐயனாரிதனார், புறப்பொருள் வெண்பாமாலை (கரந்தைப்படலம்) ப.39.
5. டாக்டர்.நாராயண வேலுப்பிள்ளை, நாலாயிர திவ்ய பிரபந்தம் ப-27.
6. நரேன் இளவேனில், ஸ்ரீ ஆண்டாள் ப.75.
7. சங்கர நாராயணன், ஸ்ரீ வில்லிப்புத்தூர் ஆண்டாள் வரலாறு-ப.26.
8. நரேன் இளவேனில், ஸ்ரீ ஆண்டாள் ப. 77.
9. டாக்டர் ந.இராசையா, பூலித்தேவன் வரலாற்று ஆராய்ச்சி.
10. தகவல்: சிவராமன், 20.07.2007.
11. தகவல்: செல்லம்மாள், 20.07.2007.
12. தகவல்: சி.சங்கர், 17.07.2007.
13. தகவல்: வெங்டாசலம், 18.07.2007.
14. தகவல்: நாராயணன், 21.07.2007.
15. தகவல்: வேலுப்பிள்ளை, 23.07.2007.
16. தகவல்: சி.முருகன், 23.07.2007.
17. தினமலர் ப-6.
18. தகவல்: மகேந்திரன், 24.07.2007.
19. தகவல்: செல்வம், 25.07.2007.
20. தினகரன், தொழில் மலர் ப-62.
21. வே.தி.செல்வம், தமிழக வரலாறும் பண்பாடும் -19.09.2007.

இயல் - 2

சிறுதெய்வ வழிபாடு

ஓர் அறிமுகம்

இயல் 2

இவ்வியல் சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம்

மனிதன் விலங்கு வாழ்க்கையினின்றும் முன்னேறிச் சிறிது நாகரிகம் பெறத் தொடங்கியதும் பல சிந்தனைத் திறன்களைப் பெற்றான்.

இடி, மின்னல், புயல், வெள்ளம் போன்றவற்றில் பேரழிவுகள் நேரிட்டபோது தன் ஆற்றலுக்கும் மேற்பட்ட ஒரு இயற்கைச் சக்தி உண்டென உணரத் தொடங்கினான். மனிதன் தன் ஆற்றல் ஓர் வரம்பிற்குட்பட்டது என்பதை உணர ஆரம்பித்த நிலையில் தன்னை மீறிய ஓர் சக்தி உள்ளது. அது கட்டுக்கடங்காது என உணர்ந்தான், இவ்வாறு கடவுள் தோன்றியது.

அச்சம் காரணமாகவும், பின்னர் அன்பு காரணமாகவும் தெய்வ வழிபாடுகள் தோன்றின. திருநாவுக்கரசர் இவ்வருகை நிலையையும்

> "அஞ்சி யாகினும் அன்புபட் டாகிலும்
> நெஞ்சம் வாழி! நினைநின்றி யூரைநீ"(1)

என்ற பாடலில் சுட்டியுள்ளமை உணரத்தக்கது,

இக்காரணம் பற்றிய கடவுளர்களின் தொடக்க வழிபாடு கோயில்களில் இல்லாமல் குன்றுகளிலும், ஆற்றங்கரைகளிலும், ஆலமரம் போன்ற மரத்தடிகளிலும் நடைபெற்று வந்தது.

> "ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்
> கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்
> அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்"(2)

எனப் பரிபாடலில் கடுவன் இளவெயினனார் பாடுவதால் இதனை அறியலாம்.

கோயில் என்ற வழக்குக்கு முன் ஆலயத்தைக் கோட்டம் என்று வழங்கும் வழக்கம் மிகப் பழையது எனலாம்.

"கோழிச் சேவற் கொடியோன் கோட்டம்"(3) முதலாகப் பாடுகின்றார். தம்முடைய சிலப்பதிகாரத்தில் இளங்கோ அதற்கு முன்னெல்லாம் ஆலயத்திற்கு அம்பலம் என்பதே பெயராகும்.

இன்றும் கேரளத்தில் கோயில்களுக்கு அம்பலம் என்ற பெயர் வழங்குகிறது.

"வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபின் உயிர்பலி கொடுமார்
அந்தி விழவிற் றூலியங் கறங்க"(4)

கடவுள் உலகப் பெருந்தலை வராதலின், நீராட்டல், உடையுடுத்தல், உண்ணாமல் முதலியவற்றோடு நில்லாமல் குதிரையேற்றம், யானை ஏற்றம், கவரி வீசுதல் முதலிய அரச வழிபாடுகள் எல்லாம் செய்வதும் வழிபாட்டு முறையில் அடங்கிற்று. இவ்வாறு அரச வழிபாடு செய்துவரும்போது ஆலயமும் அரண்மனை போல அமைந்துள்ளது.

ஆலயங்கள் கற்றிளிகளாக ஓங்கின. அதனால் கடவுளுக்கும் 'கல் வீட்டுக்காரன்'(5) என்ற பெயர் பொது மக்களிடத்தில் வழங்குகிறது.

ஆலயம் (சொற் பொருள் விளக்கம்)

இறைவனை வழிபடுவதுதான் வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கையாகும். இறைவனை வணங்கி அவனது அருளைப் பெற வசதியாகக் கோயில்களில் அமைக்கப்பட்டன. "கோயில்கள் 'ஆலயங்கள்' எனவும் அழைக்கப்பட்டன. இக்கோயில் மனித

வாழ்க்கையில் இன்றியமையாதது ஆகும். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பர்.'[6]

கோயில் என்னும் சொல் அரண்மனை என்னும் பொருளில் வழங்கியது "வாயில் வந்து கோயில் கட்ட"[7] எனச் சிலம்பிலும் கையாளப்பட்டது. "கோயில் என்னும் சொல் தற்போதைய நிலையில் கடவுள் விக்கிரகத்தை மையமாகக் கொண்டு எழுப்பபடும் தலமாகும்.'[8]

மனிதன் அனைத்து இடங்களிலும் இறைவனை எண்ணி வணங்குதல் என்பது இயலாத ஒன்றாகும். காரணம் மனிதன் தன் எண்ணங்களை அலையவிடுவதும் அதற்கான சூழ்நிலை அமைவதுமேயாகும். எனவே மனித எண்ணங்களை ஒரு நிலைப்படுத்த ஓரிடம் தேவைப்பட்டது. அதுவே ஆலயம் ஆகும். "ஆலயம் என்ற சொல்லே ஆன்மாக்கள் லயிக்கும் இடம் என்று தான் பொருள்படுகிறது" என்று கூறுவோரும் உளர்.[9]

வழிபாடு

மனித மனத்தில் தோன்றிய அச்சம், குற்ற உணர்வு போன்ற மனவியல் பண்புகளின் பரிணாம வளர்ச்சியே வழிபாட்டு நெறிக்கு வித்திட்டது.

"அஞ்சியாகினும் அன்பு பட்டாகினும் தெய்வத்தை நினை"[10] என்று அப்பர் பெருமான் கூறியுள்ளார்.

மனிதன் துன்பத்திலிருந்து விடுபடக் கருதி வழிபாடு செய்கிறான் சிக்மண்ட் பிராய்டு "இயற்கையிடமும் மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்கின்றார்.'[11]

'வழிபாடு' என்னும் சொல்லுக்கு வழியிற் செல்லுக, பின்பற்றுக, வணக்கம், பசனை, சமயக்கோட்பாடு என்னும் பொருள்களைத் தமிழ் லெக்சிகன் தருகிறது.[12]

“கீரியாவின் தமிழ் அகராதி” வழிபாடு என்னும் சொல்லுக்கு வணங்கும் செயல், பிரார்த்தனை, விளக்கு, வழிபாட்டுப் பாடல்கள் என்னும் பொருட்களைத் தருகிறது.(13) எனவே துன்பங்கள், நோய்கள், துயரங்கள் போன்றவற்றிலிருந்து விடுபட விரும்பியதன் விளைவாக வழிபாடு தோன்றியிருக்கவேண்டும் எனக் கருதலாம்.

மக்கள் எந்தச் செயல் செய்வதாக இருந்தாலும் முதலில் தெய்வத்தை வழிபட்டுப் பின் அச்செயலைச் தொடங்குவார்கள். பழங்காலத்தில் இயற்கை வழிபாடும் பின்னர் உருவ வழிபாடும் தோன்றியது.

“ஆதிகாலத்தில் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தினர். இயற்கையின் சீற்றத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இயற்கைச் சக்திகளைக் தெய்வங்களாகக் கருதி வழிபட்டனர். அவற்றிற்கு விழா எடுத்து நன்றி செலுத்தினர்”(14) என்று வழிபாடு உருவாகிய நிலையினை அறியப்பெறுகிறது.

“நாடோறும் செய்யும் நற்செயல்களையும் தீய செயல்களுக்காக வருந்திப் பரம்பொருளிடம் முறையிடுவது வழிபாடாகும்.”(15) எனவே மனிதனின் வாழ்க்கைச் சூழலில் தம்மை தீயவை அணுகக் கூடாது. நல்லவை அணுக வேண்டுமென்று தெய்வத்திடம் வேண்ட, அது வழிபாடாக நெகிழ்ந்துள்ளது எனலாம்.

இயற்கை வழிபாடு

சிறு தெய்வ வழிபாட்டின் தொடக்கமாக இயற்கை வழிபாடு அமைகின்றது. பண்டைக் காலத்து மக்கள் இயற்கைச் சக்திகளால் அவர்களுக்கு நன்மையும், தீமையும் விளைவதாகக் கருதினர். எனவே இயற்கைப் பொருட்களைத் தெய்வங்களாகவே எண்ணினர். சான்றாகச் சிலப்பதிகார மங்கல வாழ்த்துப்பாடலில்

"திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார் சென்னி குளிர் வெண்குடை போன்றுஇவ்
அங்கண் உலகு அளித்தலான்
ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்."[(16)]

என வரும் அடிகளில் திங்கள், ஞாயிறு போன்ற வானகத்து இயற்கைச் சக்திகளை வழிபடுவதாக அமைந்துள்ளமை அறியத்தக்கது இவ்வாறு அம்மக்கள் பாம்பு, யானை போன்ற மண்ணகத்து இயற்கை உயிரினங்களையும் வழிபட்டனர் எனலாம் அதே போல்

1. "பழந்தமிழரின் சமயக் கோட்பாடு அச்சத்தை அடிப்படையாகக் கொண்டது.
2. இயற்கை கூறுகளான மலை, கடல் ஆகியவற்றை வணங்கிய நிலையைத் தெரிவிக்கும்
3. இயற்கையின் பாதிப்புக்குட்பட்ட மனிதன் அவற்றின் தாக்குதல்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயன்ற நிலையில் கடவுட்கோட்பாடும் வழிபாடும் தோன்றின.
4. பழந்தமிழரின் கடவுட்கோட்பாடு என்பது ஒரு கலப்பினக் கோட் பாடாகவே காட்சி தருகின்றது.
5. பழந்தமிழரின் சமய வாழ்வில் ஆவிக் கொள்கையும் முன்னோர் வழிபாடும், பல தெய்வ வணக்கமும் சிறப்பிடம் வகிப்பதாகச் சுட்டுகின்றனர்."[(17)]

மனிதன் தன் ஆற்றல் வரம்புக்குட்பட்டது என்பதனை உணர ஆரம்பித்த நிலையில் வழிபாட்டுக் கோட்பாடுகள் உருவாகின. அச்ச உணர்வே வழிபாட்டின் அடிப்படை எனலாம். "இயற்கையைக் கண்டு அஞ்சிய மனிதன் அதனை அமைதிப்படுத்த வழிபாட்டை உருவாக்கினான். வேத கால மக்கள் இயற்கையினையும் பாம்பு போன்ற உயிரினங்களையும் வழிபட்டு வந்தனர்"[(18)] எனச் சு.சக்திவேல் கூறியுள்ளார். ஆதி மனிதனின் தொடக்க வழிபாடு இயற்கை வழிபாடு எனலாம்.

நடுகல், வழிபாடு

பண்டைக் காலத்தில் போரில் ஒரு வீரன் வீர மரணம் எய்திடுவானாயின் அவனுக்காக, அவன் நினைவாக ஒரு கல் நட்டு அக்கல்லில் அவனது வீரச் செயல்களைப் பொறித்து அதனை மங்கல நீராடி, அதற்குப் பலிகொடுத்து மக்கள் வணங்கியருக்கின்றனர். இதுவே நடுகல் வழிபாடாக வளர்ந்திருக்கின்றது. "நடுகல்லிற்கு நாட்காலையில் நன்னீராட்டில் பாலூட்டி நெய்ந்துறை கொடுத்தலாகிய தூபம் போடுதல் மரபாம் என்னும் நற்றினைப் பாடலில் இதனை நன்கு அறியலாம்."[19]

முன்னோர் வழிபாட்டில் முதன்மை பெறுவது நடுகல் வழிபாடாகும். சிறுதெய்வ வழிபாட்டின் தொடக்கம் நடுகல் வழிபாடாக இருந்திருக்க வேண்டும். நடுகல் வழிபாடு, வீரக்கல் வழிபாடு ஆகியவை இந்தியாவெங்கும் இருந்தமைக்கானச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தனலன்
றிழுமூன்று வகையிற் கல்லொடு புணர"[20]

என்பது தொல்காப்பியம்,

"சமுதாயச் சிறப்புமிக்க இயல்புகளைக் கொண்டிருந்தவர்களின் இறப்பிற்கு பின் அவர்களது நினைவாக நடப்பட்ட கல்லே நடுகல் ஆகும்."[21] வீரமரணம் அடைந்தவர்களுக்கு நடுகல்லில் பெயரும் பீடும் எழுதலைத் தொல்காப்பியர் குறிக்கவில்லை. புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனாரும் நடுகல் சடங்குகளை மட்டும் கூறியிருக்கிறார். உரைகாரர் தங்கள் காலப்போக்கில் வளர்ந்த பெயரும் பீடும் எழுதும்முறையினைச் சேர்த்துக் கூறியிள்ளனர். நடுகல் ஆனவரைத் தெய்வாமாகப் போற்றும் பண்பு தொன்று தொட்டத் தொடர்ந்து வருவதற்கு இஃது இலக்கணச் சான்றாகும்.

"அவன் பெயர்கள் மிசைப் பொறித்துக்
கவின்பெறக் கல் நாட்டின்று"[22]

ஒருவனாய் நின்று எதிரிகளை அழித்து நடுகல் ஆனவனைப் பற்றி,

"நடுகல் பீலி சூட்டி. நார் அரி
சிறுகலத்து உகுப்பவும்"[23] (பா. 232)

என்பது தமிழர் மரபு பற்றி புறநானூறு கூறுகின்றது.

களம் புகுந்து உயிர்த் துறந்த காளையருக்கும் கல்லிலே "இவ்வாறே பொருதுபாட்டான் இன்னான்"[24] என்று அவன் புகழையும் பெயரையும் எழுதி அவனைத் தெய்வமாக வழிபாடு செய்தனர் என்பதை மலைபடுகடாம் கூறுகின்றது.

நடுகல் எடுக்கும் வழக்கத்தில் ஏற்பட்ட இடமாற்றம் ஆவிகொள்கைக்கு வழியமைத்ததனைப் பிரேசர் என்ற சமூக மானிடவியல் ஆய்வாளர் (Social Authropalogist)) "இறந்தவனது ஆன்மாவைச் சில சடங்குகள் மூலம் ஓர் இடத்திற்கு வரவழைக்கலாம்."[25] என்று கூறியுள்ளார்.

சமுதாயச் சிறப்புமிக்க இயல்புகளைக் கொண்டிருந்தவர்களில் இறப்பிற்கு பின் அவர்களது நினைவாக நடப்பட்டகல்லே நடுகல் ஆகும். இதனை அகநானூறு "நட்டபோலும் நடாவு நெங்கல்"[26] என குறித்துள்ளது.

கல்லில் இறந்த வீரனின் உருவமும், பெயரும், பெருமையும் எழுதி அதனை நட்டுத் தெய்வமாகக் கொண்டு, வழிபட்ட நிலையை அளிக்கிறோம். அதே போல் கற்பிற் சிறந்த மகளிர்க்கும் கல் நட்டனர், "சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல் நட்டதைப் பேசும் சிலப்பதிகார வஞ்சிக் காண்டமாகும்."[27]

சிலம்பு காட்டும் நடுகல் வழிபாட்டு நிலையில் கடவுளாக்கிய மாற்றத்தினை உணர்த்துவதாகும்.

"நுழைவதி நெடுவேற் குறும்படை மழவர்
முனையாத் தந்து முரம்பின் வீழ்த்த
வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட்பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்கொண்டு துரூ உப்பலி தொடுக்கும்
போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரம்"[28]

என்னும் பாடலில் அம்மூவனார் விவரித்துள்ளார்.

சங்க இலக்கியங்கள் கிடுகு (கேடயம்) சுற்றிலும் நிறைந்து வேல் பந்தலிட்ட நடுகல் கோயில்களைப் பற்றியும் அவற்றில் வீரவழிபாடு நடந்ததைப்பற்றியும், இங்கு கிடுகுக்குப் பதிலாகப் பெரிய கற்களைச் சுற்றிலும் அடுக்கி மேலே 100 அடி நீளத்துக்கும் மேலான நீண்ட வேல்களைப் பந்தலாக இட்டுள்ளதை இன்றுங் காணலாம். அத்துடன் ஆண்டு தோறும் நூற்றுக் கணக்கில் சிறு சிறு நடகற்களைப் 'பந்தி படைத் தளங்கள்' என நட்டு வழிபடுகின்றனர்.[29]

நடுகல் வணக்கம்

கல்லில் இறந்த வீரனின் உருவம் பெயரும் பெருமையும் எழுதி அதனை நட்டுத் தெய்வமாகக் கொண்டு, நன்னீராட்டியும், நறுமலரும், மயிலிறகும் சூட்டியும், பலி ஊட்டியும், நெய் விளக்கு ஏற்றவும் வழிபடுபவர் என்று சங்கப் பாக்களிலிருந்து அறிகின்றோம். "வடக்கிருந்து உயிர் நீத்தோர்க்கும் கல் நட்டனர்"[30] என்பதைக் கோப்பெருஞ்சோழனின் நடுகல் பற்றிய பாடல்கள் (புறநானூறு 221,223) உணர்த்தும்.

பத்தினித் தெய்வம் வழிபாடு

வீரர்களுக்கு நடுகல் அமைத்துப் போற்றியது போலப் பத்தினியர்க்கும் நடுகல் அமைத்துப் போற்றினர். இவ்வழிபாடு இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பரவலாக இருப்பதை அறிய முடிகிறது.

சிலப்பதிகாரத்தில் "செங்குட்டுவன் கண்ணகிக்குக் கல் எடுத்து வந்து பத்தினிக் கோட்டம் அமைத்துப் போற்றியமை கூறப்படுகின்றது. அதன் பின் நாடெங்கும் இவ்வழிபாடு பரவியது சிலப்பதிகாரம் பாடப்பெற்றதன் நோக்கமே கண்ணகியைத் தாய்த் தெய்வமாக்கிப் பத்தினியாகச் சிறப்பிப்பதற்கே என்கிறார்"(31) பி.எல்.சாமி.

கணவன் மனைவியரிடையே கருத்தொருமித்த உண்மையான ஒர்மை நிறைந்திருப்பதால், கணவன் காலம் சென்றபின் தன்னுடைய காலமும் முடிந்துவிட்டது என்று கருதும் பத்தினி தன் சரீரத்தைத் துரும்பாக மனப் பூர்வமாகத் தியாகம் செய்யத் துணிந்து விடுகிறாள்.

இத்தகைய உத்தமிகளை வழிபடுவது பரவலாக காணப்படுகிறது. மாஸ்திகல், வீரமாத்தி கோவில்கள் பல இவ்வண்ணம் எழுந்தருவையாகும். மாகாளியம்மன் திரௌ. பதியம்மன் என்று பல பெயர்களில் வழிபடப்பட்டு வரும் அம்மன்கள் பலரும் தீப்பாய்ந்து சதிகளான தீபாஞ்சைகளோ இவர்களை வழிபடுவதால் வெப்புநோயும் வைசூரியும் நீங்கும் மழை பெய்யாது பெய்யும்.

மரவழிபாடு

பழங்கால மக்கள் தங்களின் இயல்பான வாழ்விற்கு இடையூறாக இருந்த மரங்களை வெட்டி அழித்திருக்கின்றனர். நெருப்பின் பயனை அறிந்து கொண்ட பின்பும், பயிர்த்தொழிலை அறிந்து கொண்ட பின்பும், அடுப்பு எரிக்கவும், விளை நிலங்களை

ஏறபடுத்தவும் மரங்களை வெட்டியிருக்கின்றனர். அவ்வாறு மரங்களை வெட்டி அழிக்கும் பொழுது வெட்ட முடியாத அளவிற்கு மிகப் பெரிய நீண்ட நாள் வளர்ந்து வயது முதிர்ந்த மரங்கள் பல இருக்கின்றன. எனவே அவைகளை அழிக்காது தெய்வமாகவே கருதி வணங்கி இருக்கின்றனர்.

சிறுதெய்வங்களின் கோவில்கள் ஊருக்குப் புறத்தே இருப்பவை. பெரும்பாலும் மரங்களுக்கிடையே இருக்கின்றன. மரங்களை வழிபடுவது சிந்துசமவெளி நாகரிகச் சமுதாயச் சமய முறைகளில் ஒன்று இன்றும் அரச மரம் வழிபடு தெய்வமாக இருந்து வருகிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக மக்கள் வழக்கில் வழிபடு தெய்வங்களாகப் போற்றப்பட்ட மரங்கள் நாளடைவில் தல விருட்சங்கள் ஆயின.

இம்மர வழிபாட்டின் வளர்ச்சி நிலைதான் இன்று சைவ சமயக் கோயில்களில் தல விருட்சங்களை வணங்குவது ஆகும். சைவ சமயக் கோயில்களுக்குச் செல்லும் மக்கள் மறக்காது அங்குள்ள தல விருட்சத்தை வணங்கி வருகின்றனர். மேலும் ''குழந்தைப் பேறு கிட்டாத பெண்கள் இன்றும் அரசமர வழிபாடு மலட்டுத் தன்மையைப் போக்கும் எனச் சங்கர் செங்குப்தா கூறுவார்.''[32]

''அணங்காடு நின்றது மாலைவான் கொள்க எனக் கடவுள் ஒங்கு வரை பேண்மார் வேட்டு எழுந்து நினையொடு மகிழும் குன்ற நாடன்''[33] என்பதால் மரக்கூட்டங்கள் மண்டிய மலைப்பகுதியும் மக்கள் வணங்கும் தெய்வாமகிறது.

''கள்ளும் கண்ணியும் கையுறையாக
நிலைகோட்டு வெள்ளை நால் கெனிக் கிடாஅய்
நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி''[34]

என்ற அகநானூறு மலைக் கடவுகளுக்கு கள்ளைப் படைத்துப் போற்றியதைக் கூறுகிறது.

"தெய்வம் உறையும் மரத்திற்கும் மக்கள் விழா
வெடுப்பர்"[35]

என்று நா.ஆறுமுகம் அவர்கள் குறிப்பிடுவார். இம்மர வழிபாட்டின் வளர்ச்சி நிலையில் இன்று அம்மன் ஆலயங்களில் மரங்கள் இல்லை. கருப்பராயன் அண்ணன்மார், முனியப்பன் போன்ற ஆண் தெய்வ ஆலயங்கள் பலவும் மரத்தடியிலேயே உள்ளன.

மரத்தடியில் நிற்கும் பெண் தெய்வங்களின் சிற்பங்களை கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே காணலாம். இவைகளை வியாந்திர தேவதைகள் என்றும், சிறு தெய்வங்கள் என்றும் கூறுவர். பார்ஹீத், சாஞ்சி ஸ்தூபங்களிலும், குப்தர்களின் கலையிலும் மரத்தடியில் நிற்கும் இந்தப் பெண் தெய்வங்களின் சிற்பங்கள் சிறப்பாகக் காணப்படுகின்றன. மலர்நிறைந்த மரக்கிளையின் அடியில் இருக்கும் இந்தப் பெண் தெய்வத்தை யக்ஷி தேவதை என்று கூறுவர். புத்த மதத்திலும், சமண மதத்திலும் இதன் தாக்கத்தைக் காணமுடிகிறது. அவை தேவதைகளைப் போற்றப்பட்டன. சிலம்பாற்றின் கரையில் கோங்க மரத்தின் கீழ் இயக்கி தெய்வம் தோன்றியதாகக் காடுகாண் காதையில் சிலப்பதிகாரம் கூறுகிறது.

பண்டை மரபுப்படி ஒவ்வொரு கோவிலுக்கும் அல்லது தெய்வத்திற்கும் சிறப்பாக ஒரு மரம் உண்டு. அம்மரத்தில் இறைவன் உறைந்து இருப்பதாக நம்பிக்கையுண்டு. அம்மரத்தை 'ஸ்தல விருட்சம்' என்பார் வடநூலார். இவ்வாறு மாமரம் பலாமரம், புன்னை மரம், ஈலமரம், அரசமரம், கடம்பமரம் வேப்பமரம், வில்வ மரம் போன்ற பலவகை மரங்கள் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கின்றன மாரியம்மன் வேப்ப மரத்தோடும், முனியாண்டி ஆலமரத்தோடு, விநாயகர் அரச மரத்தோடும் தொடர்புப் படுத்தப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

"ஆலமரம் காப்பவராம்
அழகிய முனீஸ்வரர்"[36]

என்று நாட்டுபுறப் பாடல் குறிப்பிடுகின்றன.

குலதெய்வ வழிபாடு

குடும்ப தெய்வ வழிபாடும் குல தெய்வ வழிபாடும் ஏறக்குறையயய தொடர்புடையதாக அமைகின்றன. மனித சமுதாயத்தில் மண்டிக் கிடக்கும் சாதிகள் பல ஒவ்வொரு சாதியினரும் பல குலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு தெய்வம் உண்டு. இன்றும் கிராமப்புறங்களில் அந்தந்த குலத்துத் 'தெய்வத்துணை' எனத் திருமண அழைப்பிதழ்களில் அச்சிடக் காணலாம். ஒரே குலத் தெய்வத்தை வணங்கி வழிபடுகின்றன மக்கள் அனைவரும் பங்காளிகளாவர்.(37) குல தெய்வ வழிபாட்டின் சிறப்பை

> ''குருவை மறந்தாலும் குல தெய்வத்தை மறவேன்
> குலதெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி.''(38)

என்றும் வழங்கும் நாட்டுப்புறப் பாடல்கள் வழி அறியலாம். குலதெய்வ வழிபாட்டில் குலம் என்பது வடமொழியில் இதனைக் கோத்திரம் என்றும் சொல்லுகின்றனர். ஒரு கோயிலை அல்லது தெய்வத்தினை வணங்கும் முறையிலிருந்து ஓர் இனத்தை அடையாளம் காணலாம்.

''ஒவ்வொரு குலதெய்வத்திற்கும் பழங்கதையின் தொடர்பு இருக்கும். பழங்கதையோடு நேரடித் தொடர்பு பெற்ற இடத்தில் உள்ள கோயில் மூலக் கோயிலாகும். இதனைத் தங்கள் வசதிக்கேற்றவாறு பிடிமண் எடுத்து வந்து கோயில் கட்டிக் கொள்கின்றனர்.''(39)

காவல் தெய்வ வழிபாடு

கிராம தெய்வங்கள் என்று போற்றப்படும் சிறுதெய்வங்கள் சில காவலுக்காக ஏற்படுத்தப்பட்டவை. அவை ஊரைக் காக்கும் காவல் தெய்வங்களாகவே இருந்துள்ளன.

“தென்னவத்துக்குத் துன்பம் நேர்ந்த போது காவல் தெய்வமாகிய சம்பாபதி அத்துன்பத்தைத் தவிர்ப்பதற்கு, வடக்கே இருந்து தெற்கே போந்தாள்”[40] என்று மணிமேகலை புகழ்கிறது. மதுராபதியை மதுரையின் காவல் தெய்வம் என்று சிலம்பு வருணிக்கிறது. தமிழகத்தின் தென் முனையைக் குமரி காத்து நிற்கின்றாள். வால்மீகி இதிகாசத்தில் இலங்கையின் காவல் தெய்வமான இலங்கினியை அறிமுகப்படுத்தியிருக்கிறார். சம்பாபதி, மதுராபதி, பகவதி, இலங்கனி முதலிய காவல் தெய்வங்கள் பெண் உருவில் இருக்கக் காரணம், காட்டு மிராண்டி நிலையிலிருந்து நாகரிக சமுதாயம் மாறும்போது உலகெங்கும் பெண்ணாதிக்கமே இருந்தது. செழிப்பைத் தரும் சக்திகளையும் சக்திய வாய்ந்த இயற்கை அம்சங்களையும் அச்சம் விளைவிக்கும் இனங்காண இயலாச் சக்திகளையும் பூர்வ கால மனிதன் பெண்ணாகவே உருவகம் செய்தான். அதன் எச்சமே கிராம தேவதைகள்.

ஆனால் இன்று காவல் தெய்வமாகக் கருப்பராயன், முனியப்பன், காவலுக்காக வந்தவை என்றும் கருத இடமிருக்கிறது.

கொற்றவை வழிபாடு

தமிழ்ப் பண்பாட்டில் பெண்ணுக்கு அனைத்து நிலைகளிலும் முன்னுரிமையும், வணங்கப்பட்டவளாகவும், வாழ்த்தப்பட்டவளாகவும் பெண் உள்ளாள். பெண் வழிபாடே பல்வேறு பரிணாமங்களைப் பெற்றது எனலாம். இதனைத்தெளிவு படுத்துவது “சக்தி வழிபாடே பிறவகைக் கடவுள் வழிபாடுகள் அனைத்திலும் முன்னோடியாகும். பேய் வழிபாட்டிலிருந்து எழுந்த வளர்ச்சியின் விளைவே சக்தி வழிபாடு எனலாம். அஃது அன்று விளங்கிய பேய் மகளிரோடும் உறவுடையது. பெண்ணுரிமைச் சமுதாயத்திற்குரியது. கொற்றவை வழிபாடும் சக்தி வழிபாட்டுடன் மயங்கி நிற்கின்றது. அல்லது கொற்றவை வழிபாடு சக்தி வழிபாட்டின் முன்னோடி நிலை எனலாம். சாங்கிய கோட்பாடும் கூட அக்கொற்றவையின் ஆற்றல் பற்றிய கருத்துக்களை அடியொற்றி

எழுந்த இயற்கைக் கோட்பாடே''[41] என்று பெண் தெய் வழிபாட்டின் கொற்றவை வழிபாடாகச் சக்தி வழிபாடாக வளர்ந்தமையை விளக்குகிறார்.

கொற்றவை என்னும் தமிழ்த் தெய்வமே சிவனின் சக்தியான உமையுடன் ஒன்றினாள் என்று ஊகிக்க இடமுண்டு. ''ஊறல் கெழு சூலி''[42] என்று அவனால் குறுந்தொகை (21.8) கூறுவதாலும் முருகனைச் சிவகுமாரன் என்பதோடு கொற்றவை சிறுவன் என்றும் பழையோள் கிழவி என்று நக்கீரர் (திருமுருகாற்றுப்படையில், குறிப்பிடுகின்றன.

தொல்காப்பியர் கொற்றாவையை வெற்றிக்கு உரிய தெய்வமாகக் கூறுகிறார். தமிழகத்தில் வழக்காற்றில் உள்ள பெண் தெய்வங்களைத் தாய் என்ற பொருளை உணர்த்தும் 'ஆய் அல்லது ஆயி' என்ற சொற்களால் அழைப்பர். மாரியம்மன் என்ற பெண் தெய்வத்தை, மாரியாயி என்று அழைப்பதும் கொற்றவையை உயிர்களின் அன்னையாகக் கருதிய மரபின் தொடர்ச்சியாகும்''[43] என்று தாய் தெய்வ வழிபாட்டில் கொற்றவையின் பரிமாணங்களை விளக்கி, இவ்வாறாக வழிபாடுகள் பல்வேறு நிலைகளில் மாற்றம் பெற்று வருவதை உணர முடிகிறது.

''இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி''[44]
(வரி-47-49)

என்று சிலப்பதிகார வேட்டுவரியில் சாலினி கண்ணகியைத் தெய்வமாகவே போற்றுகிறாள். சாலினி அருள் வந்து ஆடும்போது இவ்வாறு கூறுகிறாள். அவள் உரைத்தது போல இன்று கண்ணகி பல ஊர்களில் பகவதி, மாரியம்மன், காளி, துர்க்கை போன்ற பல பெயர்களில் போற்றப்படுகிறாள்.

அம்மனுக்குக் கம்பம் போடுவதைக் கண்ணகி கோவலன் கதையுடன் ஒப்பிடுகின்றனர். கம்பம் என்பது கண்ணகியின் கணவன் கோவலன் என்பதைக் குறியீட்டு முறையில் அமைத்தனர். அக்கம்பத்தில் முகம் போட்டு வைக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. கம்பம் உள்ளவரை அம்மனின் கழுத்தில் மங்கல நாண் இருக்கும். விழா முடிவில் கம்பம் பிடுங்கியதும் மங்கல நாண் அகற்றப்படும். மதுரை எரியுண்டமைக்கு அக்கினிச் சட்டி எடுப்பதையும், பூ மிதிப்பதையும் காரணம் காட்டுகின்றனர்.

'கொற்றவை வழிபாடு' மக்கள் வழக்கில் முன்பு இருந்தது அதுவே துர்க்கையாகவும், காளியாகவும் வளர்ந்தது. பின் கண்ணகியின் நினைவில் பல அம்மன்களை வடிவெடுத்து அவ்வழிபாடு வளர்ந்தது. தீயவற்றை எதிர்த்து மக்களைக் காக்கும் என்பதைத் தகவல் மூலம் உணரமுடிகிறது.(45)

நீத்தார் வழிபாடு

"துறந்தார் பெருமை துணைக்கூறின் அவையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்(டு) அற்று."(46) (குறள் 2)

"மகத நாட்டிலே பிணத்தைப் புதைத்த இடத்திலே மண் குவித்து மேடாக்கி அதை வணங்கி வந்தனர்."(47) இதுவே பௌத்தர் தூபிகளுக்கு முன்னோடி. ஊருக்குப் புறம்பான ஒதுக்கிடத்தில் ஓங்கி வளர்ந்த சாலையில் சான்றோர் ஒருவரது சாம்பலைப் புதைத்து இடம் புனிதம் வாய்ந்த சைத்தியம் என்று போற்றப்பட்டது. இவ்விடத்தையே பாமர மக்கள் பெரிதும் போற்றினர் இவ்வழிபாட்டைப் பௌத்தர் ஏற்றது போல வைதிக மதமும் ஏற்றுக் கொண்டு போற்றியது. அரசர்கள் மாண்டபோது அவர்களுக்கு எழுப்பிய பள்ளிப்படையும், நீத்தார் வழிபாட்டில் முதல் படியாய்ச் சமாதி வழிபாடு தோன்றக் காரணமாய் அமைந்தது.

தென்னிந்தியத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கற்காலம் முதல் தற்காலம் வரை தமிழகத்தின் புதைகுழி மேடுகள் பற்றி

ஆய்ந்துள்ளனர். கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு வரையிலும் கல்லறை சவஅடக்கமே இருந்து வந்தது. இந்த சவ அடக்கங்கள் இறந்த நம் முன்னோர்களின் நினைவுச் சின்னங்கள் ஆகும். அரசர் காலப் பள்ளிப்படைச் சமாதிகள் தோன்றக் காரணமாயிற்று.

இச்சமாதிகளில் இறந்தவர் நாளில் பூசை செய்வது, அவர் விரும்பியவற்றைப் படைப்பது, சிலரது சமாதிகளில் ஊன், கள் போன்ற மர வகைகளும் படைத்து வழிபடுவது முதலான வழக்கங்கள் இன்றும் மக்கள் வழக்கில் இருக்கின்றன. தம் வீட்டு தலைக் காரியங்களுக்கு முதலில் பொங்கல் வைத்துத் தொடங்கும் நம்பிக்கையும் இருக்கிறது.

"நீர்த கணவற்றீர்த்து வேலிற் பேர்த்த மனைவி ஆஞ்சி"(48)

போர்க்கருதித் தன்னைப் பிரிந்து சென்ற கணவனது உயிரைப் போக்கிய வேலினாலேயே அவன் மனைவி தன்னுரையும் போக்கிய ஆஞ்சில் காஞ்சியும் என்று இப்பாடல் வரி விளக்குகிறது.(49) இதேபோல் "பூர்வ மக்களின் சமயம் காலஞ்சென்ற மூதாயையரை வழிபடுதலே. இறந்துபோன அரசருடன் உடன்கட்டை ஏறிய உத்தமியர் சின்ன சின்ன இடங்களில் புதைக்கப்பட்டுள்ளனர். அவரவர் தகுதிக்கு ஏற்ப அவரது சமாதிகள் சிறிதும் பெரிதுமாக உள்ளன என்பதைப் பூம்பகார் மயானத்தில் இனங்காட்டுகிறார்" மணிமேகலை ஆசிரியர்.(49)

இவ்வாறு இறந்தவரின் சமாதிகளை வணங்கும் வழக்கம் இந்தியா வெங்கும் இருந்து வந்துள்ளது என்பதைக் காணமுடிகிறது. பாமர மக்களிடத்துப் பெரிதும் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதையும் உணர முடிகிறது.

பேய் வழிபாடு

நாடோடி வாழ்க்கையிலிருந்து நிலையான தொழிலுக்கு மக்கள் மாறினர். இப்பொழுது உலகெங்கும் பெண் ஆதிக்கமே ஏற்பட்டது.

அச்சந் தரும் இனம் தெரியாது சக்திகளையும் பெண் அம்சமாகவே கருதினர். அதனால் பேய் மகள் என்ற கருத்திலும் கிராம தேவதைகள் என்ற கற்பனையிலும் பெண்ணின் வடிவத்தையே காண முடிகிறது.

மக்கள் கருத்திலே நிலைத்திருந்த பேய்களைப் பற்றிப் பலர் பாடல்களில் சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர். அடர்ந்து தழைத்த மரங்களிலும், சுடுகாட்டிலும் அவை குடியிருக்கும் என்று இன்றும் மக்கள் நம்பி வருகின்றனர்.

தொல்காப்பியர் தொடாக்காஞ்சி, பேய்க் காஞ்சி என்று கூறுகின்றனர்.

> "இன்கை மனைவியே பேஎய்ப் புண்ணோற்றுன்னுகல்
> கடிந்த தொடாக் காஞ்சியும்" (பா-10,11)
>
> "ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோற் பேஎய் ஓம்பிய
> பேஎயப் பக்கமும்"[50] (பா-5, 6)

என்று தொல்காப்பியர் பேய் தன் கணவனைத் தீண்டாதவாறு மனைவி காத்தமை பற்றியும், பேய் இறந்தவரின் உடலை நரிகள் தீண்டதாவாறு காத்தமை பற்றியும் குறிக்கின்றார்.

பிச்சைக் காலன் கதையில் கொலை செய்யப்பட்டவனது தங்கை கொலை செய்யத் தூண்டியவனது ஆசை நாயகி, கொலை செய்யத் தூண்டியவனை அவளே கொல்கிறாள் மானிட உருவில் பழிதீர்க்க முடியாதாயின் இறந்தவர்கள் பேய்களாகிப் பழிதீர்த்துக் கொள்கிறார்கள். கொலையில் உதித்தத் தெய்வங்களை வெட்டுப்போட வாதைகள், பேய்ப் படைகள், 'மாடன்கள்' என்பது நெல்லை மாவட்ட வழக்கு. இவற்றைத் துடியான தெய்வங்கள் என்றும் குறிப்பிடுவர். "மாடன் போன்ற தெய்வங்கள் சில குடும்பங்களுக்குத் குல தெய்வமாக இருக்கும். இவையாவும் பயத்தினால் வணங்கப்படும் தெய்வங்கள் என்று"[51] நா.வானமாமலை குறிப்பிடுகிறார்.

“மலையாளத்தில் கொண்டாடப்படும் தாய்த் தெய்வத்திற்கும் காதில் ஒரு கிளி, பாம்பு, குறுமுயல், பன்றி, கரடிகள் இருப்பதாகப் பாமர மக்கள் பாடுகின்றனர். பேய், காளி, பூதம் ஆகிய பரிவாரத் தேவதைகள் பழங்குடி மக்கள் திராவிடர், ஆரியர் கற்பனைகள்”[52] என்று பி.எல்.சாமி கூறுகின்றார்.

நம் முன்னோரிடத்தில் முனியப்பன் இருந்த பேய் பற்றி நம்பிக்கையைத் தெளிவுபடுத்தியது.

களஆய்வின் படி ஐயனார் கருப்பராயன் முனியப்பன், மற்றும் மாடன் கோவில்களில் பேய் விரட்டும் நிகழ்ச்சி முக்கிய இடம் பெறுகிறது.

உறுப்பு வழிபாடு

உலகிலுள்ள அனைத்துச் சமயங்களும் வழிபாட்டு முறைகளையும் சடங்குகளையும் மிகுதியாகக் கொண்டவையாகும். இவை அந்தந்தச் சமய நம்பிக்கைகளுக்கும், மரபுகளுக்கும் ஏற்ப ஏற்பட்டவையாகும். இதனால் வழிபாட்டு முறைகள் பலவாறாகக் காணப்படுகின்றன.

தனி ஒருவர் தாம் சார்ந்துள்ள குழுவினருடனோ தம் சமூகத்தினர் அனைவரிடனோ சேர்ந்து பல முறைகளில் வழிபாட்டை மேற்கொள்வர் ஒவ்வொரு வழிபாட்டு முறையிலும் “மக்கள் தம் நம்பிக்கைளுக்கும் செயலின் நோக்கத்திற்கும் ஏற்ப வழிபாட்டுப் பொருள் வேறுபடுகின்றன மிகுதியாக ஆவியுலக நம்பிக்கையுடைய (Animism) பழங்குடிச் சமுதாயம் முதல் வளர்ச்சியடைந்த சமுதயாத்தினர் வரை மக்கள் ஆவியையும் முன்னோர்களையும் இயற்கையையும் உயிரினங்களையும் பொருள்களையும் உருவங்களையும் வழிபட்டு வருகின்றனர்.”[53]

தாய்த் தெய்வ வழிபாடு

''நிலத்தின் இயல்பையும், ஒரு பெண்ணின் இயல்பயைம் ஒப்புமை ஒத்திசைவு என்ற விதிப்படி நரேந்திரநாத் பட்டாச்சாரியார் இந்தியத் தாய்த் தெய்வங்கள் என்ற நூலில் விளக்கியுள்ளார்.''(54)

''பெண்ணைத் தாயாகவும், கன்னியமாகவும் கருதுகின்றனர் முதல் உருவகம் மோடி என்ற தாய்த் தெய்வ பெயரில் காணப்படுகிறது. இரட்டை குழந்தை பெற்ற தாய் நிலத்தைத் தொட்டால் வளம் பெருகும்.''(55)

''தமிழில் மோடு என்றால் வயிறு என்று பொருள்''(56)

''திராவிட நெறியின் இயற்கையே பெண் தெய்வ வழிபாடுதான்.''(57) ஆனால் திராவிடத் தெய்வங்களாகிய பெண் தெய்வங்கள் விவசாயக் கடவுள்களாகக் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

''தமிழகத்தில் சக்திக்கு மட்டும் 2500 கோயில்கள் உள்ளன. 1961-ல் வெளியான தமிழக அரசின் கோயில் பற்றிய அறிக்கை கூறுகிறது.''(58)

இனக் குழு வழிபாடு

"ஒரு விலங்கு அல்லது தாவரம் அல்லது இயற்கைப் பொருளை வழிபடும் ஒரு அறிய கூட்டத்தைக் குறிக்கும். ஒவ்வொரு கூட்டத்தினரும் ஒரு பொருளைத் தங்கள் இனக்குறியாக கொண்டிருந்தனர்.''(59) அது பெரும்பாலும் விலங்காகவும் மரமாகவும் அரிதாகச் சூரியன், நீர், மழை, நெருப்பு போன்றவைகளாகவும் இருக்கும்.

இவற்றில் விலங்காக இருக்குமானால் அவ்வினத்தால் அவ்விலங்கினத்திற்கு எத்தீங்கும் செய்வதில்லை. சில குறிப்பிட்டச் சடங்கு முறைகளைச் செய்த பின்னர் பலி கொடுக்கவோ உண்ணவோ செய்வர். ''நடுப்பட்டி என்ற ஊரில் வாழும் காப்பியக் கவுண்டர்களில் ஒரு பிரிவினர் வெள்ளாட்டின் இறைச்சியை

உண்பதில்லை. இவ்வினத்தவரை புலி தாக்கியபோது வெள்ளாடு பால் கொடுத்து காப்பாற்றியதால் அதனை உண்ண மாட்டார்கள்.''[60]

வீர வழிபாடு


பெருவீரர்களுக்குக் கல்நட்டு வழிபடுவது பண்டைத் தமிழ் மரபில் காணலாம். வீரக்கல்லில் வீரர் தம் பெயர்களும் அவர் தம் சிறப்புகளும் பொறிக்கபட்ட நிலையில் எழுத்துடை நடுகல் இருந்ததை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. (ஐங் 352)

> ''வுழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
> எழுத்தடை நடுகலென்ன விழுப்பினார்''[61]

வீரத்தைப் போற்றும் பண்பு இருந்தாலும் ஆவி பற்றி நம்பிக்கையே நடுகல் வழிபாட்டின் அடிப்படை என கூறலாம்.

கோயிலமைப்பு

''மரம், மண்டபம், கல், நிலம், பாறை, வீடு, மாட்டுத் தொழுவம், காடு போன்ற இடங்களில் கோவில் அமைந்துள்ளது.''[62]



சிறுதெய்வ வழிபாடு

சிறு தெய்வம் என்ற வழக்கு ''சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்''[63] என்று ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த அப்பர் தேவராத்து காணப்படுகின்றது.

17-ஆம் நூற்றாண்டில் குமரகுருபர் ''செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன் 2 என்று முருகனைத் குறிப்பிடுகின்றனர். இப்பாடலில் செத்துப் பிறப்பனவாக அவர் குறிப்பது சிறு தெய்வங்களாகும்.

''சிறுதெய்வத்தை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். 1. வீட்டுத் தெய்வம், 2. குலதெய்வம், 3. ஊர்த் தெய்வம் அல்லது கிராம தேவதை என்று வகைப்படுத்தி, இத்தெய்வங்களை வணங்கினால் நன்மையும் வணங்காவிடின் தீமையும் செய்வதாக மக்கள் நம்புகின்றனர்''[64]

சமூகத்தில் அடித்தளத்து மக்கள் வழிபடும் கடவுளைச் சிறு தெய்வங்கள் எனவும் அழைப்பர்.

"மறைமலையடிகள் 1920-ஆம் ஆண்டில் வெளியான தமது நூலொன்றில் 'சிறு தெய்வ வழிபாடாக அவர் கருதும் வழிபாட்டு முறை'' குறித்துப் பின்வரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்."[65] அதாவது சிற்றுயிர்களின் வடிவங்களையும் கல்லிலும், செம்பிலும் செய்து வைத்துக் கொண்டு, அவற்றை வணங்குதலே பெரிதும் குற்றம் ஆகாது. காரணம் சிறு தெய்வம் உருவத்தால் அல்லது அளவால் அமைந்த பெயர் அன்று. இவற்றை தாம் விரும்பிய இடத்தில் தெய்வத்தை உருவாக்கி வணங்கினர்.

நடுகற்களாக வணங்கப்பட்டவர்கள் ஒரு காலகட்டடத்தில் சிறு தெய்வங்களாக மாறினர் எனவும் கருதுவர். ''வீர வணக்கம் காலக்கதியில் சிறு தெய்வ வணக்கமாக மாறியது என்றும் நடுகற்களை வணங்கியதன் காரணமாக பின்தங்கிய சமூகங்களில் வீழ்ந்துபட்டவர்களே கிராம தேவதைகளாக மாறினர்''[66] என்ற

கருத்தும் நடுகல் வழிபாடே நாளடைவில் சிறுதெய்வ வழிபாடாக மாறி வளர்ச்சி பெற்றது என்ற கருத்தை வலியுறுத்தும்.

இச்சிறு தெய்வ வழிபாடானது "பெருந்தெய்வ வழிபாட்டு முறையினின்றும் முற்றிலும் மாறுபட்டதாக அமைந்துள்ளது. இத்தெய்வங்களுக்கு பூஜை செய்ய அந்தணர்கள் இத்தெய்வங்களுக்கு பூசை செய்ய அந்தணர்கள் நியமிக்கப்பெறவில்லை. தெய்வங்களை வணங்கும் இனத்தவருள் ஒருவரே பூசாரியாக இருந்து பூசைக்குரிய பணிகளைக் கவனித்துக் கொள்கின்றனர்."[67]

இச்சிறு தெய்வக் கஷ்ரயில்களில் வரன்முறைப்படுத்தப்பட்ட பூசைகள் நடைபெறுவதில்லை. விரும்பும் நேரங்களில் பூசை செய்து கொள்வர். சிறு தெய்வக் கோயில்கள் அனைத்துமே ஒரு தனிப்பட்ட ஆளின் நிர்வாகத்தில் அல்லது ஒரு சமுதாயத்தின் கட்டுப்பாட்டில் அல்லது ஓரிரு குடும்பங்களின் கடுப்பாட்டில் இருக்கின்றன.

இதற்கெனத் தனி வருமானம் இன்மையில் தங்களுக்குள் வரி வசூல் செய்தே பூசைகளையும் திருவிழாக்களையும் நடத்துகின்றனர். இச்சிறு தெய்வக் கோயில்களில் பணியாற்றும் பூசாரிகளில் பெரும்பான்மையோருக்கு ஊதியம் கிடையாது. ஊதியத்தை எதிர்பார்க்காது தெய்வப் பணிகளை ... முடிக்கின்றனர்.

தொகுப்புரை

இறைவனை வழிபடுவதுதான் வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கையாகும். இறைவனை வணங்கி அவனது அருளைப் பெற வசதியாகக் கோயில்கள் அமைக்கப்பட்டன.

சிறு தெய்வ வழிபாட்டைப் பாமர மக்களின் வழிபாடாகக் கருதலாம். இவ்வழிபாட்டு முறைகள் அனைத்தும் அச்ச உணர்வுடன் தொடர்புடையவை, மக்களால் உருவாக்கப்பட்டவை என்பதை அறியலாம். இன்றைய நிலையில் சிறுதெய்வ வழிபாடானது வளர்ச்சியும் செல்வாக்கும் பெற்று விளங்குவதைக் காண முடிகின்றது.

சிறுதெய் வழிபாடானது வளர்ச்சிப் பெற்றுக் காணப்படுவதால் பல்வேறு வகையான வழிபாடுகள் தோன்றியுள்ளன.

இக்கோயில்களில் வழிபடப்படும் தெய்வத்தன்மையினை வைத்து சிறுதெய்வங்கள் தோன்றியதாகவும் மக்கள் நம்புகின்றனர்.

மனிதர்களிடையே உள்ள ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்தவும், உறவினர்களிடையே பிணைப்பினை உண்டாக்கவும் இவ்வழிபாடு தோன்றியுள்ளது.

மன்னர் ஆட்சிக்காலத்தில் வீர மரணம் அடைந்தவர்களுக்கும் வழிபாடு செய்யப்பட்டுள்ளது. இயற்கை சக்திகளின் அடிப்படையிலும் வழிபாடு தோன்றியுள்ளது.

அடிக்குறிப்பு

1. முனைவர் மே.அ.பாலமுருகன்- நாட்டுபுறக் கலை இலக்கியம் ப-1090, 1091.
2. முனைவர் பெ.சுப்பிரமணியன்- பரிபாடல் ப-77 (பா-67-69).
3. டாக்டர்.தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் -தமிழும் பிற பண்பாடும் ப.107.
4. மேலது-108.
5. மேலது-109.
6. உலகநாதன்- உலகநீதி ப.90.
7. சிலம்பு- வழக்காடுகாதை, வரி 46.
8. பா.ரா.சுப்பிரமணியன்-க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப. 384.
9. இரா.தண்டாயுதம்-ஆலய வழிபாட்டில் தமிழ் பக்.12-13.
10. ஜெகாதா- கிராம தேவதைகள் ப-1.
11. டாக்டர்.சு.சக்திவேல்-நாட்டுப்புற இயல் ஆய்வு ப.235.
12. தமிழ் லெக்சின் *(Tamil Lexicon)* பா -3545.
13. பா.ரா.சுப்பிரமணியன். க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ப.909.
14. முனைவர் மே. அ.பாலமுருகன்- நாட்டுப்புற இலக்கியம் ப-181.
15. மேலது ப.182.
16. முனைவர் சிரா.சந்திரசேகரன்- வழிபாட்டு மரபுகள் ப-1,2.
17. முனைவர் க.காந்தி -தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ப-260.
18. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு ப.51.
19. நற்றினை -பா.317.
20. தொல்-பொருள்-புறத்திணையில், பா.63.

21. முனைவர் க.காந்தி-தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ப.248.
22. திரு.பொ.வே. சோமசுந்தரனார்- புறப்பொருள் வெண்பாமாலை ப.274.
23. புறநானூறு. பா. 232, ப. 547.
24. மலைபடுகடாம் ப.78.
25. முனைவர் க.காந்தி-தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ப.249.
26. மேலது ப-248.
27. டாக்டர் எஸ்.இராமகிருஷ்ணன் -மக்களின் சமய நெறி ப-74.
28. முனைவர். க.காந்தி- தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ப-252.
29. மே.அ.பாலமுருகன்-நாட்டுப்புறக் கலை இலக்கியம் ப.31.
30. புறநானூறு ப-221, 223.
31. முனைவர் க.வீ.வேதநாயகம்-ஈரோடு மாவட்ட சிறு தெய்வ வழிபாடு.
32. சங்கர்குப்தா, ப. 29.
33. முனைவர் க.வீ.வேதநாயகம்- ஈரோடு மாவட்ட சிறுதெய்வ வழிபாடு ப-30.
34. மேலது- 30.
35. முனைவர் க.வீ.வேதநாயகம் - ஈரோடு மாவட்ட சிறுதெய்வ வழிபாடு ப. 31, 32.
36. முனைவர் இரா.சந்திரசேகரன்- வழிபாட்டு ஏடு மரபுகள் ப-4.
37. மே.அ.பாலமுருகன்- நாட்டுப்புறக் கலை இலக்கியம், ப. 184.
38. டாக்டர் சு.சக்திவேல்- நாட்டுப்புற இயல் ஆய்வு ப.225.
39. டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன்- நாட்டுப்புற வாழ்வியல் ப. 4, 8, 49.

40. முனைவர். கா.வீ.வேதநாயகம்- ஈரோடு மாவட்ட சிறுதெய்வ வழிபாபு ப. 31, 32.
41. மே.அ.பாலமுருகன்- நாட்டுப்புறக் கலை இலக்கியம் ப-230.
42. மேலது ப-230.
43. மேலது ப-231.
44. புலமை வேங்கடாசலம்- சிலப்பதிகாரம் ப-249.
45. தகவல்: குமரேசன், 26.07.2007.
46. திருக்குறள்- குறள் 2.
47. முனைவர் க.வீ.வேதநாயகம்- ஈரோடு மாவட்டச் சிறுதெய்வ வழிபாடு ப-33.
48. க.வெள்ளை வாரணன்-புறத்திணையியல் (பா-12, 13).
49. முனைவர். க.வீ.வேதநாயகம்- ஈரோடு மாவட்டச் சிறு தெய்வவழிபாடு 11-35.
50. க. வெள்ளை வாரணன்- புறத்திணையியல் (பா. 5, 6, 10, 11).
51. தே.லூர்து- நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப. 403, 404.
52. முனைவர் க.வீ. வேதநாயகம்- ஈரோடு மாவட்டச் சிறுதெய்வ வழிபாடு, ப. 38.
53. வாழ்வியல் களஞ்சியம்- தொகுதி (ப. 542).
54. *Bhattachariya and Narendranath. The Indian Mather Goddess P-5.*
55. ந.சி.கந்தையாபிள்ளை- சைவ சமய வரலாறு.
56. பி.எல்.சாபி - தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு.
57. துளசி ராமசாமி- நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள்.
58. *Temple Gazetter P-52.*
59. கலைக் களஞ்சியம் தொகுதி ப-176.
60. சுருளிவேல்- அருள்மிகு வெள்ளை மாலை வீரமாரம் மன் கும்மிப்பாட்டு ப-13.

61. டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன் -நாட்டுப் புற வாழ்வியல் ப-46.

62. பி.எல்.சாமி-தமிழ் இலக்கியத்தின் தாய்த் தெய்வ வழிபாடு ப.103.

63. தெ.லூர்து - நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப. 400.

64. தொ.பரமசிவன் - பண்பாட்டு அசைவுகள் (தெய்வங்களும் சமூக மரபுகளும்), ப. 125.

65. முனைவர். இரா. சந்திரசேகரன் - வழிபாட்டு மரபுகள், ப. 8.

66. தே.லூர்து - நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப. 402.

67. க. கைலாசபதி - பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 55.

இயல் - 3

திருவில்லிப்புத்தூர் வட்டாரச் சிறுதெய்வங்கள்

இயல் - 3

திருவில்லிப்புத்தூர் வட்டாரச் சிறுதெய்வங்கள்

முன்னுரை

நாட்டுப்புற மக்களால் தொன்று தொட்டு வழிபட்டு வரும் சிற்றூர்த் தெய்வங்கள் சிறு தெய்வங்கள் ஆகும். இவை நாட்டுப்புற மக்களின் காவல் தெய்வங்களாக, நோய் நீக்கி, நலம் தருபவையாக, வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பவையாகக் கருதி வணங்கப்படுகின்றன. இத்தெய்வங்கள் பரந்துபட்ட தொடர்பில்லாமல் சிற்றூர்களை இருப்பிடமாகக் கொண்டு, நாட்டுப்புற மக்களின் மரபோடு நீங்காத உறவு கொண்டு விளங்குகின்றன. வணங்கினால் நன்மையும், வணங்காவிட்டால் தீமையும் பயப்பன என்ற ஆழ்ந்த நம்பிக்கையின் காரணமாகப் பாமர மக்களால் இவை வழிபடப்பட்டு வருகின்றன.

“தொடக்கக் கால மக்கள் ‘ஆவி’ எல்லாப் பொருள்களையும் கட்டுப்படுத்துவதாக நம்பியதன் விளைவாகவே அவர்கள் இயற்கைப் பொருட்களையும் உயிரினங்களையும் வணங்கினர்”[(1)] என்று ஆவியுலகக் கோட்பாட்டை உருவாக்கிய சர் எட்வர்டு பரம்னெட் ç ¦ é ì (Esur Edward Burnet Tylore) கருதினார். ஜெர்மன் நாட்டு மாக்ஸ் முல்லர் “இயற்கையின் ஆற்றல் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையே வழிபாட்டிற்குக் காரணம் என்று கருதினார்.”[(2)] தொன்மைச் சமய வழிபாடு என்பது மலை, ஆறு, சூரியன், சந்திரன், தாவரங்கள், விலங்கினங்கள் போன்றவற்றை வழிபட்டதிலிருந்தே தொடங்குகின்றன எனலாம். இவ்வாறாக வழிபாட்டின் தோற்றக் காலங்களிலிருந்து இயற்கை, வழிபாடு, குலக்குறி வழிபாடு, முன்னோர் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு போன்ற பல வழிபாடுகள் சமூகத்தில் இருந்து வருகின்றன.

சமூகத்தில் உயர்வு, தாழ்வு, அதிகம், குறைவு போன்ற பாகுபாடுகள் தோன்றி வளர்ந்திருப்பது போலவே தெய்வங்களிலும் பெருந்தெய்வம், சிறுதெய்வப் எனப் பிரித்து நோக்கும் முறை

காணப்படுகின்றது. இதில் சிறுதெய்வம் என்பவை நாட்டுப்புறத் தெய்வங்களாகும். இன்றைய சமூகத்தில் பெருந்தெய்வ மரபுகள் (Great Tradition), சிறு தெய்வ மரபுகள் (Little Tradition) என இரு பிரிவுகள் காணப்படுகின்றன. பெரும்பாலான தெய்வங்கள் இந்த இரண்டு வகைகளுக்குள்ளே வருகின்றன. பெருந்தெய்வ மரபே அடித்தள மக்களைத் தீண்டாமைக்குரியவர்களாகக் கருதி, அவர்களை கோயிலின் நுழைவாயிலில் தடுக்கப்பட்டதற்குக் காரணமாக அமைந்தது எனலாம். ஆனால் சிறுதெயவங்களாகக் கருதப்படக் கூடிய நாட்டுப்புற தெய்வக் கோயில்கள் அனைத்துத் தரப்பு மக்களின் உறைவிடங்களாக இருந்து வருகின்றன. இவை மக்களின் நம்பிக்கைக்கு உரியவையாக இன்றும் இருக்கின்றன.

நாட்டுப்புறத் தெய்வங்கள் மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்துபவையாகவும், வட்டாரத் தன்மை பெற்றவையாகவும், குல இனக்குழுத் தன்மையைப் பெற்றவையாகவும் காணப்படுகின்றன. இவை குறித்துப் பல்வேறு வகையான வரையறைகள் அறிஞர்களால் கூறப்பட்டு வந்துள்ளன. அவற்றில் சிறப்பானவை எனக் கருதத்தக்கனவற்றைக் கீழே காணலாம்.

"நாட்டுப்புறத் தெய்வங்கள் பெருந்தெய்வங்களுடன் ஒட்டி உறவாடாதவை. வாழ்க்கை மேம்பாட்டிற்காக ஊர் மக்களால் உருவாகக்கப்பட்டவை. இதிலிருந்து மனிதத் தலைவர்கள் தாம் நாட்டுப்புறத் தெய்வங்கள். இவர்கள் இறந்து தெய்வங்களாகக்கப்பட்ட முன்னோர்களேயாவர்."(3)

"பிறந்து இறக்கும் தன்மையானது உயிர் பலியிட்டு வழிபடப் பெறுவதாலும் நிலையான கோயில் அமைப்பு, முறையான பூசையும் இல்லாத காரணத்தினாலும் அமைந்தத் தெய்வத்தைச் சிறுதெய்வம் எனலாம்."(4)

“நாட்டுப்புறச் சமயம் என்பது அமைப்புக்குட்படுத்தப்பட்டு நிறுவனமாக்கப்பட்டுவிட்ட கட்டுப்பாடுகளைக் கொண்ட சமயங்களாகும்.”[5]

“பாமர மக்களால் ஆழமாக உணரப்பட்டும் பின்பற்றப்பட்டும் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அளிக்கப்பட்டும் வருகின்ற நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளின் தொகுதியே நாட்டுப்புறச் சமயமாகும்.”[6]

“சமூகத்தின் அடித்தளத்து மக்கள் (Subaltorn) வழிபடும் கடவுளரைச் சிறுதெயவங்கள் எனலாம்.”[7]

“சமூகத்தின் அடித்தளத்து மக்கள் வணங்கும் மாடன், பிடாரி, மாரி, காடன் போன்ற தெய்வங்கள் சிறுமையானவை என்ற பொருளில் சிறுதெய்வங்கள் என்றழைக்கப்படுகின்றன.”[8]

“பாமர மக்களின் இறை உணர்வைத் தாங்கும் வலிய அரண் நாட்டுப்புறத் தெய்வ வழிபாடேயாகும்.”[9]

மேற்கண்ட கருத்துக்களைத் தொகுத்து நோக்கினால் நாட்டுப்புறத் தெய்வங்களாகிய சிறுதெய்வங்கள் என்பவை,

♦ மனிதர்களைத் தெய்வமாகக் கொண்டவை

♦ நம்பிக்கை அடிப்படையில் உருவானவை

♦ பாமர மக்களால் வழிபடப்படுபவை

♦ அடித்தள மக்களுக்குரியவை

♦ நிறுவனச் சமய எல்லைக்குள் வராதவை

♦ பெரும்பாலான சிற்றூர் மக்களால் வழிபடப்படுபவை

♦ இத்தெய்வங்கள் பெரும்பாலும் சிற்றூர்கள், காடுகள், மலைச்சாரல்களில் வாழக்கூடியவை.

♦ சிற்றூர் மக்கள் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவை

♦ கொடூர குணமுடையவை

ஆகிய தன்மைகளைக் கொண்டவை என்பதை அறியமுடிகிறது.

தெய்வங்களின் வகைகள்

நாட்டுப்புறத் தெய்வங்களைப் பலரும் பலமுறையில் வகைப்படுத்தியுள்ளனர். ரைட் ரெவரெண்ட் ஹென்றி (Right Reverend Hendry) என்பவர் நாட்டுப்புறத் தெய்வங்களை ''ஆண் தேவதைகள், பெண் தேவதைகள், கல்கள்'' என மூன்றாக வகைப்படுத்தியுள்ளார்.(10)

நாட்டுப்புறத் தெய்வங்களை ''ஊர்த் தெய்வங்கள், இனத் தெய்வங்கள், குல தெய்வங்கள், மாலைத் தெய்வங்கள், சமாதித் தெய்வங்கள், துணைத் தெய்வங்கள் என்று துளசி இராமசாமி ஆறு வகையாகப் பிரித்துள்ளார்.''(11) கோ. ராசாமணி ''காவல் தெய்வம், ஊர்த்தெய்வம், சமாதித் தெய்வம், எல்லைத் தெய்வம், துணைத் தெய்வம், குலதெய்வம் அல்லது பங்காளித் தெய்வம், மாலைத் தெய்வம், சாதித் தெய்வம் என்று எட்டு வகையாகப் பிரித்து ஆராய்ந்துள்ளார்.''(12) தே.ஞானசேகரன், ''குடும்பத்தெய்வம், குல தெய்வம், ஊர்ப் பொது தெய்வம் என்று மூன்று வகையாகப் பிரித்துள்ளார்.''(13)

சு.சக்திவேல், ''ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள், குல தெய்வங்கள், சாதித் தெய்வங்கள், ஊர்த் தெய்வங்கள் என ஐந்தாகவும்,''(14) இரா.பாலசுப்பிரமணியன், ''வீர வழிபாடு, முன்னோர் வழிபாடு என்று இரண்டாகப் பிரித்துள்ளார்.''(15) கே.குணசேரகன் ''உருவமற்ற சிறுதெய்வங்கள், உருவமுள்ள சிறு தெய்வங்கள் எனப் பிரித்து அவற்றின் கிளைப் பிரிவுகளையும் தந்துள்ளார்.''(16) நாட்டுப்புறத் தெய்வங்களை ''விருப்பத் தெய்வம், வீட்டுத் தெய்வம், குலதெய்வம், கிராமத் தெய்வம், ஊர்த் தெய்வம், என்று தேசிங்குச் செட்டி வகைப்படுத்துகின்றார்.''(17) ச.பிலவேந்திரன், ''நாட்டுப்புறத் தெய்வங்களை குழுச் சூழல், பண்பாட்டுச் சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் ஊர்த் தெய்வம் குல தெய்வம் என்ற பாகுபாடே பொருத்தமானதாக இருக்கும்

என்று கூறுகின்றனர்.''[18] இவ்வாறாக, நாட்டுப்புறத் தெய்வங்களாகிய சிறுதெய்வங்களை வகைப்படுத்தியுள்ளனர்.

வீட்டுத் தெய்வம்

ஒரு குடும்பத்தில் தங்களுக்குள் வழிகாட்டியாய் விளங்கி, வாழ்ந்து மறைந்த முன்னோர்களையோ, கன்னியாக இருந்த நிலையில் வாழ்ந்து மறைந்த பெண்களையோ, தங்களின் வீட்டுத் தெய்வமாக வழிபடும் மரபு காணப்படுகிறது. இது பெரும்பாலும் பெண் தெய்வமாக இருக்கும். இதனை வீட்டுச்சாமி, குடும்பத் தெய்வம், கன்னித் தெய்வம், வாழ்வரசி என்றெல்லாம் கூறுவதுண்டு.

குல தெய்வம்

ஒரு குறிப்பிட்ட மூதாதையர் மரபில் தோன்றியதன் வாயிலாக ''ஒருவருக்கொருவர் உறவு கொண்டுள்ள குழுவே 'குலம்' (Clan) ஆகும். இரத்த உறவுடைய பங்காளிகள் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர். இவர்களுக்குள் திருமண உறவு நடைபெறாது. இவ்வாறு அமையும் ஒவ்வொரு குலத்திற்கும் தனித்தனித் தெய்வமும் கோயிலும் இருக்கும். இதுவே குல தெய்வம் என்றும் குலதெய்வக் கோயில் என்றும் குறிப்பிடப்படும்.''[19] 'குல தெய்வத்தை வணங்கினால் கோடி நன்மை உண்டு' என்பது பழமொழி. குலதெய்வ வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்தும். பூப்புச் சடங்கு, திருமணம், காதணி விழா அழைப்பிதழ்களில் குலதெய்வத்தின் பெயர் தவறாது இடம் பெறுவதைக் காணலாம்.

இனத் தெய்வம்

பல குலங்கள் சேர்ந்தது ஓரினம், ஒரு சாதி (Caste) என்று கூறப்படும். ஒரு குறிப்பிட்ட சாதிக்கென்று உள்ள தெய்வங்கள் இனத் தெய்வங்கள், இனச் சார்புத் தெய்வங்கள், சாதித் தெய்வங்கள் என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட இனத்தாரின் தனித்துவத்தைக் காட்டும் வகையில் இத்தெய்வங்களின்

வழிபாடுகள் சிறப்பாக அமையும். மிகுதியும் பெண் தெய்வங்களே இனத் தெய்வங்களாக இருக்கும். ஒரே மரபு வழிப்பட்ட குலத்தாரை ஒன்றிணைக்கும் சாதியாக இனத் தெய்வங்கள் விளங்குகின்றன.

வெகுசனத் தெய்வங்கள்

வெகுசனத் தெய்வங்கள் என்பது சாதி, மதம், மொழி என்ற வேறுபாடில்லாமல் அனைவரும் சென்று வழிபடும் வகையில் அமைந்த சிறுதெய்வங்கள் இங்கு வெகுசனத் தெய்வங்கள் என்ற பெயரில் விளக்கப்படுகின்றன. "சிறு தெய்வ மரபிற்கும் பெருந்தெய்வ மரபிற்கும் இடைப்பட்ட ஒரு கலப்பு வழிபாட்டு மரபாக இவை வளர்ந்தும் வளர்த்தெடுக்கப்பட்டும் வருகின்றன."[20] இவை பின்வரும் செயல்பாடுகளின் வழி வெகுசனத் தெய்வ நிலைக்கு மாற்றப்படுகின்றன.

♦ சிறு தெய்வமாக இருந்து வளர்ந்ததாக இருந்தாலும், ஆதி, அந்தம் இல்லாததாகவும், அவதாரக் கடவுளாகவும் பெருந்தெய்வங்களுக்கு உறவுடையதாகவும் மாற்றப்படும்.

♦ பிரபலமான ஆற்றல் கொண்டவையாக, நோய்கள், துன்பங்கள் ஆகியவற்றிற்கு நிவாரணம் கொடுப்பவையாக நம்பப்படும். பழிவாங்கும் உணர்வு, ஆவேசம், உக்கிரம் போன்றவை குறைக்கப்பட்டுச் சாந்தம், அமைதி போன்ற பெருந்தெய்வக் குணங்கள் இத்தெய்வங்களுக்குக் கற்பிக்கப்படும்.

♦ கோயிலின் வருமானத்தைக் கொண்டும், ஆகம விதிகளின்படியும், கோயிலும், தெய்வ உருவமும் மாற்றி அமைக்கப்படும். சைவப் படையலில் தெய்வத்தின் முன்பாகவும், அசைவப் படையலில் கோயிலுக்கு வெளிப்புறமும் படைக்கப்படும். திருவிழாக்கள் ஏழு நாட்கள் அல்லது பத்து நாட்கள் வரை நடைபெறும்.

♦ கள ஆய்வில் மாரியம்மன், காளியம்மன், அய்யனார் போன்ற தெய்வங்கள் வெகுசனத் தெய்வங்களாக இன்று வழிபடப்பட்டு வருகின்றன.

இத்தெய்வங்கள் எல்லாச் சாதி, மத, மொழி மக்களுக்கும் பொதுவானவை என்று கருதப்படுகின்றன.

சிறுதெய்வங்கள்

சிறுதெய்வங்கள் பெரும்பாலும் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கை அடிப்படையிலேயே தோற்றம் பெறுகின்றன. சிறுதெய்வங்கள் எல்லாம் ஒரே முறையில் தோற்றம் பெறுவதில்லை. அவை பல்வேறு காரண, காரிய அடிப்படையில் பல்வேறு பின்புலத்தில் தோற்றம் கொள்கின்றன. சிறு தெய்வங்களின் தோற்ற முறைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1) “குறிப்பிட்ட ஊரில், குறிப்பிட்ட வட்டாரத்தில் பிறந்து, இறந்ததன் அடிப்படையில் தோற்றம் பெறுதல்.

2) ஆற்றில் மிதந்து வந்த பெட்டிக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டுத் தோற்றம் பெற்றவை.

3) மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் புலம் பெயர்ந்த நிலையில் பூர்வீகத் தெய்வக் கோயிலில் இருந்து பிடிமண்ணாக எடுத்து வரப்பட்டுத் தோற்றம் பெற்றவை.

4) “வேறு திசைகளிலிருந்து வந்து ஒரு குறிப்பிப்பிட்ட ஊர் மக்களை, வட்டார மக்களைப் பாதுகாத்ததன் வாயிலாகத் தோற்றம் பெற்றவையாக இருக்கின்றன.”[21] இவ்வாறு தோற்றம் பெற்றவை ஆண் தெய்வங்களாகவோ, பெண் தெய்வங்களாகவோ இருக்கும். “வழிபடுவோரின் பொருளாதார நிலைக்கேற்பத் தெய்வமும் கோயிலும் சிறப்புப்பெறும். ஒவ்வொரு சிறுதெய்வத்திற்கும் ஏதேனுமொரு தோற்றக்கதை வாய்மொழி மரபில் கதையாகவோ, பாடலாகவோ வழங்கிவரும்.”[22] வழங்கப்பட்டு வருகின்றன.

சிறுதெய்வக் கோயில் உருவமைப்பு

சிறுதெய்வக் கோயில்களில், "கோயில் என்ற சொல் இறைவன் எழுந்தருளி இருக்கும் ஆலயத்தைக் குறிப்பதாகும்." கோயில் என்றவுடன் வானுயர்ந்த கோபுரங்கள், பல்வேறு வண்ணத்திலான சிற்பங்கள், நீண்ட மதில்கள் போன்ற அமைப்பில் இல்லாமல் சிறுதெய்வக் கோயில்கள் பெரும்பாலும் மரத்தடியிலும், குளம், கண்மாய், ஏரி, ஆறு போன்ற நீர்நிலைகளுக்கு அருகிலும் அமைந்திருக்கும். இக்கோயில்கள் கிழக்கும் வடக்கும் பார்த்து இருத்தல் வேண்டும் என்பது மரபு.


சிறுதெய்வங்களுக்குக் கோயில் எழுப்பி வழிபடும் வழக்கம் பிற்காலத்தில் தோன்றியதாகும். பெரும்பாலும் திறந்த வெளியில் மரத்தின் கீழே தெய்வமாகக் கருதி வழிபடத்தக்க கல், சூலாயுதம், வேல், அரிவாள், விளக்கு, மாடம் போன்றவை இருக்கும். வேறு சில இடங்களில் பீடம் அமைக்கப்பட்டு மேற்கூறிய வழிபாட்டுப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும். இதற்கு அடுத்த நிலையில் சிலைகள் (தெய்வச் சிலைகள், குதிரை, நாய்) உருவாக்கப்பட்டு அவை திறந்த வெளியிலோ, கோயில் உள்ளோ வைக்கப்பட்டிருக்கும். இக்கோயில்கள் கூடக் "கூரை வேயப்பட்டதாக, சதுர வடிவிலோ. வட்ட வடிவிலோ அமைந்திருக்கும் வடிவமே தொன்மையானக் கோயில் அமைப்பாகும். வழிபடுவோரின் பொருளாதார நிலைக்கேற்பக் கோயில் அமைப்பும், தெய்வ உருவங்களும் மாறிக் கொண்டே இருக்கும். பெண் தெய்வக் கோயில் மற்றும் ஆண் தெய்வக் கோயில்களில் மஞ்சள், சிவப்பு, வெள்ளை வண்ணங்கள் மிகுதியாகப் பயன்படுத்தப்படும்."[23] இவ்வாறாகச் சிறு தெய்வக் கோயில்களின் அமைப்பு காணப்படுகின்றது.

சிறுதெய்வ வகைப்பாடு

சிறுதெய்வத்தினை ஆண் தெய்வம், பெண்தெய்வம் என இரு வகையாகப் பிரித்துள்ளனர்.

பெண் தெய்வங்கள்

சிறு தெய்வங்களில் பெண் தெய்வங்கள் மிகுதி என்பதால் பெண் தெய்வங்கள் முதன்மை நிலையில் வைத்து விளக்கப்படுகின்றன. “இனக்குழுச் சமுதாயத்தின் தொடக்கக் காலந்தொட்டுச் செழுமையின் அடையாளமாகவும் வலிமையின் குறியீடாகவும் பெண் கருதப்பட்டால் பெண் வணங்குதற்கும் வழிபாட்டிற்கும் உரியவளானாள். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பெண் தெய்வப் பெயர்களும் பெண் தெய்வ வழிபாடுகள் பற்றிய குறிப்புகளும் நிறைந்து காணப்படுகின்றன.”[24]



மனித உயிர்கள் அனைத்தையும் பெற்றெடுத்தவள் என்ற அடிப்படையில் தாயாகவும், என்றும் மாறாத அழியாத கன்னித் தன்மையுடையவள் என்ற அடிப்படையில் கன்னியாகவும் பெண் தெய்வங்களை வழிபடும் மரபு காணப்படுகின்றது. உலகின் பல்வேறு நாடுகளிலும் கூட இம்மரபு இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தாய்த் தெய்வங்கள்

தாய்த்தெய்வமானது “மழையாகப் பொழிந்து மண்ணுயிர்களைக் காப்பவள் மாரியம்மா, நதியாக ஓடி நஞ்சை, புஞ்சைகளைக் காப்பவள் கங்கையம்மா, தீமைகள் அண்டாதவாறு காப்பவள் எல்லையம்மா என்று பெண் தெய்வங்கள் வளமையை மையமிட்டே வணங்கப்படும்; வழிபடப்பட்டும் வருகின்றன. காவிரி, கங்கை, யமுனை, சரசுவதி போன்ற பெரு நதிகளைப் பெண் தெய்வங்களாகவும் தாய்த் தெய்வங்களாகவும் வழிபடுவது இந்திய மரபாகும்.”[25]

கள ஆய்வின் மூலம் தாய்த் தெய்வங்களாக வணங்கப்பட்டு வருபவை பெரிய மாரியம்மன், காளியம்மன், முத்தாலம்மன், திரௌபதியம்மன், முத்துப்பேச்சியம்மன், திருமலைப்பேச்சி, அங்காள பரமேசுவரி, முத்துமாரியம்மன், பத்ரகாளியம்மன், தேவிகருமாரியம்மன், இசக்கியம்மன், அம்மச்சியாரம்மன் ஆகிய பெண் தெய்வங்கள் வணங்கப்பட்டு வருகின்றன. நன்மை அளிக்கும் தெய்வங்கள், தீமை அளிக்கும் தெய்வங்கள் என்று கூட இவற்றை வகைப்படுத்தலாம். சக்தியின் அவதார வடிவமாகப் பெண் தெய்வங்கள் கருதப்பட்டு வணங்கப்படுகின்றன.

கன்னித் தெய்வங்கள்

கன்னித் தெய்வங்கள் பெரும்பான்மையும் சிறுதெய்வ வழிபாடே ஆகும். "கன்னி என்ற சொல்லிற்குப் பூப்படைந்து திருமணமாகாதக் கன்னித்தன்மை இழக்காதப் பெண் என்று அகராதி பொருள் கூறுகிறது." இயல்பாகவோ அல்லது கொலை செய்யப்பட்டோ இறக்கும் பெண்களைக் கன்னித் தெய்வமாக வழிபடும் மரபு தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகிறது. இறந்த கன்னிப்பெண், தன் வீட்டாருக்கு வளமையும், பாதுகாப்பும் அளிப்பதாகவும், அவள் கன்னிப் பெண்கள் மீது இறங்கி அருள் வாக்குச் சொல்வதாகவும் நம்பப்படுகிறது. கள ஆய்வின் மூலம் வீட்டுத் தெய்வம் மற்றும் குல தெய்வமே கன்னித் தெய்வங்களாக வழிபடப்படுகின்றன.

ஆண் தெய்வங்கள்

சிறுதெய்வங்களில் பெண் தெய்வங்களை நோக்க ஆண் தெய்வங்கள் குறைவு என்றுதான் கூற வேண்டும். பெண் தெய்வங்கள் பல்வேறு சக்திகளைத் தங்கள் வசம் வைத்திருப்பதாகவும் ஆண் தெய்வங்கள் குறைந்த சக்தி உடையவையாகவும் நம்பப்படுவதே இதற்குக் காரணம் எனலாம். "சக்தி இருந்தா வேலையைச் செய், இல்லையென்றால் சிவனேன்னு கிட"[26] என்ற பழமொழி பெண் தெய்வங்களைச் சிறப்பிக்கவே உருவாக்கப்பட்டதாகும்.

ஆண் தெய்வங்களில் சில முதன்மைத் தெய்வங்களாகவும் பல முதன்மைத் தெய்வங்களுக்குத் துணைமைத் தெய்வங்களாகவும் விளங்குகின்றன. துணைமைத் தெய்வங்களைப் பரிவாரத் தெயவங்கள் என்றும் கூறுவதுண்டு.

தெய்வமாக வழிபடுவதை "பெண்களை இழிவுப்படுத்தும் ஆணாதிக்கச் சிந்தனையேயன்றி வேறல்ல" என்று டபிள்யூ.டி. எல்மோர் கூறுகிறார்.[27]

பெண் தெய்வங்கள்

I. சிற்றூர்த் தெய்வங்கள்

1. இராக்காச்சி அம்மன்
2. தங்கமலை காளியம்மன்
3. மாரியம்மன்
4. முப்பிடாரி அம்மன்
5. திரு பேச்சியம்மன்
6.. துர்க்கையம்மன்
7. சீலைக்காரியம்மன்

II. அகால மரணமடைந்த தெய்வம்

பாதாள பேச்சியம்மன்

III. இனத் தெய்வங்கள்

தாய்த்தெய்வம்	**கன்னித் தெய்வம்**
1. அங்காளப் பரமேசுவரி	1. பாம்பலம்மாள்
2. தேவி கருமாரியம்மன்	2. சேலைக்காரி அம்மன் முத்தம்மாள்
3. முத்தாலம்மன்	3. சீலைக்காரி அம்மன்
4. திரௌபதியம்மன்	
5. பெரிய மாரியம்மன்	
6. அம்மச்சியார் அம்மன்	
7. திருமலைப்பேச்சி	

8. முத்துமாரியம்மன்

9. காளியம்மன்

10. முத்துப்பேச்சியம்மன்

11. இசக்கியம்மன்

12. திரு பத்ரகாளியம்மன்

IV. பிடிமண் தெய்வம்

1. காளியம்மன்

2. சமயபுர மாரியம்மன்

3. வீரமாகாளியம்மன்

4. திரு கோட்டைப்பட்டி காளியம்மன்

5. மாரியம்மன்

6. வட பத்ர காளியம்மன்

7. அக்னி மாரியம்மன்

V. குல தெய்வம்

நீர்நிலைக் காவல் தெய்வம்	**புதையுண்ட தெய்வம்**
1. பேமலையம்மன்	1. காளியம்மன்
2. திரு சந்தன மாரியம்மன்	2. திருசெவல் பேமலையம்மன்
3. பத்ர காளியம்மன்	3. வடபத்ர காளியம்மன்
	4. காளியம்மன்

திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் மிகுதியான சிறுதெய்வங்கள் உள்ளன. இதில் பெண் தெய்வங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. சந்தனமாரியம்மன், முப்பிடாதி அம்மன், பத்ர காளியம்மன், இராக்காச்சி அம்மன், பேச்சியம்மன், வீரமா காளியம்மன், கோட்டைப்பட்டி காளியம்மன், பெரிய மாரியம்மன், துர்க்கை அம்மன், பாம்பலம்மாள், காளியம்மன், வடபத்ர காளியம்மன், செவல் பேமலையம்மன், தேவி கருமாரியம்மன், மாரியம்மன், முத்துமாரியம்மன், பாதாள பேச்சியம்மன், அம்மச்சியார் அம்மன், சீலைக்காரி அம்மன், சமயபுர மாரியம்மன், அக்னி மாரியம்மன், முத்தாலம்மன், அங்காள பரமேசுவரி, திருமலைப்பேச்சி, பேமலையம்மன், முத்துப்பேச்சியம்மன், சேலைக்காரி முத்தம்மாள், தங்கமலை காளியம்மன், இசக்கி அம்மன், சீலைக்காரி அம்மன்,

திரௌபதியம்மன், காளியம்மன், காளியம்மன், காளியம்மன், வடபத்ர காளியம்மன், மாரியம்மன், பத்ரகாளியம்மன் ஆகிய பெண் தெய்வங்களும், வண்ணாண் மாடன், கோட்டைக் கருப்பசாமி, தூண்டில் கருப்பசாமி, நிறைகுளத்து அய்யனார், சுடலைமாடன், செக்கடி முனியாண்டி, கரையடி முனியாண்டி, சுந்தரசுவாமி, கற்குவேல் அய்யனார், நிறைமடை அய்யனார், பொான் இருளப்பசாமி, சுடலைவீரன், வெயில்முத்து அய்யனார், புழுகாண்டி, புதியவன்சாமி, கொன்றையாண்டி, அய்யனார், மதுரைவீரன், முனியாண்டி, கருப்பசாமி, இரண வீரன், வேடப்பசாமி, கற்குவேல் அய்யனார், முனியாண்டி, வண்ணார மாடன் போன்ற ஆண் தெய்வங்களும் உள்ளன.

மேற்கண்ட தெய்வங்கள் தொடர்பானச் செய்திகளை ஒருமுகப்படுத்தி நோக்கும் போது தெய்வங்களின் வழிபாட்டில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடிய மக்கள் வரையறை, பண்பாடு, இனக்குழுத் தன்மை ஆகியவற்றைப் பொறுத்துத் தெய்வங்களை,

- சிற்றூர்த் தெய்வங்கள்
- குல தெய்வங்கள்
- சாதித் தெய்வங்கள்

என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

சிற்றூர்த் தெய்வங்கள்

ஒரு சிற்றூரில் வாழும் அனைத்துச் சாதியினரும் வழிபடும் தெய்வத்தைச் சிற்றூர்த் தெய்வம் அல்லது ஊர்ப் பொதுத் தெய்வம் எனக் கூறலாம். பொதுவாகக் குலதெய்வ வழிபாடு ஏற்றம் பெறும் போது ஊர்ப் பொதுத் தெய்வ வழிபாடாகிறது. ஒவ்வொரு ஊரும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தெய்வங்களின் சக்திக்குட் பட்டதாகவும், கட்டுப்பட்டிருப்பதாகவும் கருதப்படுகிறது. அச்சிற்றூரின் நிலப்பகுதி, நீர்நிலை, மக்கள், கால்நடைகள் ஆகிய அனைத்தையும் காக்கும் பொறுப்பு அத்தெய்வங்களைச் சேர்ந்ததாகும். எனவே அச்சிற்றூரில் குடி கொண்டிருக்கும்

தெய்வங்களின் அனுமதியில்லாது எந்தவித தீயசக்திகளும் அல்லது தெய்வங்களும் உட்புக முடியாது என்ற நம்பிக்கை அச்சிற்றூர் மக்களிடம் வேரூன்றியுள்ளது. இத்தெய்வங்களை மகிழ வைப்பதால் நன்மைகள் பெருகும் என்று சிற்றூர் மக்கள் நம்புகின்றனர். களப்பகுதியில் சில சிற்றூர்களில் குல தெய்வமாக இருக்கும் தெய்வங்கள் ஊர்த் தெய்வமாகவும், ஊர்த் தெய்வமாக இருப்பவை குல தெய்வமாகவும், ஊர்த் தெய்வமாக இருப்பவை சாதித் தெய்வமாகவும் இருக்கின்றன.

1. களப்பகுதியில் சிற்றூர் தெய்வங்கள் பெரும்பாலும் ஊரின் மையப் பகுதியில் மந்தையில் அமைந்துள்ளன. சில இடங்களில் ஏரிக்கரையில் அமைந்து காணப்படுகின்றன. இவை சிற்றூரிலுள்ள எல்லாச் சாதியினரும் விருப்பப்பட்டு வழிபடும் தெய்வங்களாக உள்ளன. மேலும் இத்தெய்வங்கள் சிற்றூரைக் காக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மிக இன்றியமையாத தெய்வங்களாக மக்களால் கருதப்படுகின்றன. களப்பகுதியில் சேகரிக்கப் பெற்ற தெய்வங்களில் சிற்றூர் தெய்வங்கள் இராக்காச்சி அம்மன், தங்கமலை காளியம்மன், முப்பிடாரி அம்மன், திருபேச்சியம்மன், மாரியம்மன், துர்க்கையம்மன் சீலைக்காரி அம்மன் போன்றவையாகும்.

இராக்காச்சி அம்மன்

திருவில்லிப்புத்தூரிலிருந்து செண்பகத் தோப்புக்குச் செல்லும் பாதையில் சுமார் இரண்டு மைல் தொலைவில் முதலியார்புரம் என்ற இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது.

இத்திருக்கோயில் ''பழமையான கோயிலாகக் காட்சியளிப்பதால் இதனைக் காட்டுத் தேவதை ஆலயம் என்று அழைப்பார்கள்.''[28] மாலை ஆறு மணிக்கு மேல் யாரும் இவ் ஆலயத்திற்குச் செல்ல மாட்டார்கள். காரணம் அங்குக் காட்டு விலங்குகளின் நடமாட்டம் உள்ளது. திருவிழாக் காலங்களில் மட்டும் காட்டு விலங்குகளின் நடமாட்டம் இருக்காது. இவ்வம்மன்

காட்டு தேவதை மட்டுமின்றி முதலியார்புரத்திற்கும் சிற்றூர்த் தேவதையாக விளங்குகின்றாள்.

கோயிலமைப்பு

1. இராக்காச்சியம்மன் ஆலயமானது காட்டுப் பகுதியில் அமைந்துள்ளதால் ஆரம்பத்தில் வளர்ச்சி பெறாமல் இருந்தது.

2. தற்பொழுது கட்டிட அமைப்புடன் மின்சார வசதியும் அமைத்துள்ளார்கள்.

3. நான்கு பக்க சுவர் அமைப்புடன் நவீன ஓடு (டைல்ஸ்) கொண்டு தளம் அமைத்துள்ளனர்.

4. வழிபாட்டின் போது, அதாவது திருவிழாக் காலங்களில் மட்டும் மக்கள் தங்குவதற்காகக் கட்டடம் அமைத்துள்ளனர்.

தங்கமலை காளியம்மன்

தட்டான்குளம் என்ற சிற்றூர் மல்லிபுத்தூர் வட்டாரத்தில் அமைந்துள்ளது. இவ்வூரில் தங்கமலை காளியம்மன் கோயில் இருந்ததாக மக்கள் கருதுகின்றனர். ''ஆரம்பக் காலக்கட்டத்தில் தட்டான்குளம் காளியம்மன்னாக இருந்த இவ்வாலயம் தற்பொழுது பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தட்டான்குளம் காளியம்மனை, தங்கமலைக் காளியம்மனாக மாற்றம் செய்திருக்கின்றார்கள்.

இவ்வாலயம் 200 ஆண்டுகட்கு முன்பு தோன்றியது.''[29] பரிவார தெய்வமாக விநாயகர் மட்டும் தான் உள்ளது.

சேத்தூரைச் சார்ந்த வயது முதிர்ந்த ஒரு பெண் கனவில் தோன்றி தனக்குக் கோயில் அமைக்க வேண்டும் என்றும் அக்கோயில் தட்டான்குளம் என்ற சிற்றூரில் அமைய வேண்டும் என்று கூறியது. மறுநாள் தன் கனவில் தோன்றிய நிகழ்வை அவ்வூர் மக்களிடம் கூறியபோது அவர்கள் அதற்குச் சம்மதம் தெரிவிக்கவில்லை. பின்னர்

அப்பெண் தன்னால் முடிந்தவரை அக்கோயிலுக்கு; சேவை செய்து வந்தாள். என்னுடைய காலத்திற்குப் பிறகாவது இவ்அம்மனுக்கு ஆலயம் எழுப்புங்கள், நீங்கள் நினைத்தது நிறைவேறும் என்று கூறினார். அதனால் தான் இவ்ஆலயமானது தட்டான்குளம் காளியம்மன் நினைவாகத் தங்கமலைக் காளியம்மன் என மாறியது.

கோயிலமைப்பு

தங்கமலை காளியம்மன் கோயில் ஆரம்பத்தில் குடிலாக இருந்த இவ்வாலயம் தற்பொழுது சிறிய கட்டட அமைப்புடன் காணப்படுகிறது.

கோயிலுக்குக் கிழக்கே விநாயகர் கோயில் உள்ளது.

பக்தர்கள் தங்குவதற்குக் கொட்டகை அமைப்புடன் நான்கு பக்க சுவர் இல்லாத அமைப்புடன் காணப்படுகிறது.

மாரியம்மன்

மாரி மழைக்குரிய கடவுள் என சிற்றூர் மக்கள் நம்புகின்றனர். “மாரியம்மன் சிலை கழுத்திற்கு மேல் உள்ளது. முகத்தில் ஒருவித பொலிவுடன் அரச பரம்பரைத் தோற்றமும், கழுத்திற்குக் கீழ் உள்ள மேனியில் ஓர் ஏழ்மையும், பாமரத்தனமும் காணப்படுகின்றன. இருவேறு மாறுபட்ட சிறப்புகளால் சேர்ந்தது தான் மாரியம்மன். உடம்பையும், தலையும் மாறி வடிவமைக்கப்பட்டதால் மாரி அம்மன்” என்று பெயர் வந்ததாகக் கூறுகின்றார்கள்.[30]

“ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது
மாரிகடன் தீர்த்தவருக்கு மனக்கவலை தீருமம்மா”[31]

என்ற நம்பிக்கை மக்களிடம் காண்கிறோம்.

மாரியம்மன் தோற்றம் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன என்பதற்குப் பல்வேறு கதைகள் சான்றுகளாக விளங்குகின்றன. “சமதக்கினி முனிவரின் மனைவி ரேணுகை நீர் கொண்டுவரச் சென்றபோது நீரில் கந்தருவன் ஒருவனுடைய நிழலைக் கண்டு மயங்கியதால், சமதக்கினியால் வெறுக்கப்பட்டு

மகன் பரசுராமனால் தலை வேறு, உடல் வேறாகத் துண்டிக்கப்பட்டாள். பரசுராமன் தந்தையை வேண்டி இவளை உயிருடன் எழுப்பினான். அப்போது இவள் தலை வேற்றுடலில் பொருத்தப்பட்டதனால் நிலை கெட்ட இவளை சிற்றூர்களில் சென்று தெய்வமாகி, அவர்களுக்கு உண்டான நோய்களைப் போக்கி வழிபாடு பெறுக எனச் சமதக்கினி முனிவர் ஏவியதாக உரைப்பார்."(32) சமதக்கினி முனிவரின் மனைவியான இந்த ரேணுகையை மாரியம்மன் என்பது புராணக் குறிப்பாகும். இக்கதையைப் போன்று மற்றொரு கதையும் மாரியம்மன் பற்றிக் கூறப்படுகிறது.

"பிருகு முனிவரின் மனைவியின் கற்பு நிலையைப் பரிசோதிக்க வந்த மும்மூர்த்திகளை அவள் குழந்தையாக மாற்றினாள். இதனால் மும்மூர்த்திகளும் அவளுடைய முகத்தில் அம்மைநோயை உருவாக்கினார்கள். இதைக்கண்ட பிருகுமுனிட நீ பூமியில் மக்களுக்கு அம்மை நோயை உண்டாக்கும் தெய்வமாக விளங்குக எனச் சபித்தார். இதைத் தொடர்ந்து சிவபெருமான் இவளைச் சிற்றூர்த் தேவதையாக்கினார் என்று குறிப்பிடப்படுகிறது.(33)

திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் அமைந்துள்ள பெருமாள் தேவன்பட்டி என்ற சிற்றூரில் மாரியம்மன் சிற்றூர்த் தெய்வமாக விளங்குகின்றாள். இக்கோயில் 1000 வருடத்திற்கு முன்பு உருவாக்கப்பட்டு. அதாவது பத்து தலைமுறையினருக்கு முன்னால் உருவாக்கப்பட்டது. இத்தெய்வமானது முதலில் ''மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்று, தரிசனம் செய்த பின்னர் அங்கிருந்து அழகர் கோயிலுக்குச் சென்று அங்கேயும் இருக்க முடியாமல் திருவில்லிப்புத்தூருக்கு வந்த போது, இத்தெய்வத்தின் உடன் பிறந்த சகோதரர் கோவிந்தன் மற்றும் கண்ணன் இருவரும் சேர்ந்து தன் தங்கையை அழைத்துத் தான் செல்கின்ற இடத்திற்குச் சென்று தெய்வமாகக் காட்சியளிப்பாயாக என்று கூறினார்கள்.

அதன்படி திருவில்லிப்புத்தூரிலிருந்து இராசபாளையம் செல்லும் பாதையில் வன்னியம்பட்டி, துலக்கன்குளம் ஆகிய இரு ஊரைக் கடந்து அடுத்துள்ள பெருமாள் தேவன்பட்டி என்ற ஊரில் ஆயர் இனத்தவர்கள் இருக்கின்றார்கள், அங்குச் சென்று மக்களைக் காப்பாற்று என்று கூறி மறைந்தார்கள்.

பின்னர், அவ்வூரில் ஆயர்குல மக்கள் மேய்த்தல் தொழிலைச் செய்பவர்கள். அப்பொழுது அவ்வூரில் 'கீதாரி' என்பவர் ஆடுகளை மேய்த்துவிட்டுத் 'திருவூரணி' என்ற இடத்திலுள்ள ஆட்டுக்குடிலில் அதனைச் சேர்த்துவிட்டு, ஆட்டிலிருந்து பாலைக் கறந்து ஆட்டின் குட்டிகளுக்குக் கொடுப்பதற்காக அவற்றை ஒரு பானையில் தினந்தோறும் எடுத்து வைத்துவிட்டுப் போனார். ஆனால் ஒவ்வொரு நாளும் அவர் கறந்து வைத்தப் பால் காணாமல் போவதை அறிந்து இதைக் கண்டு பிடிப்பதற்காக ஒருநாள் ஆட்டுக்குடிலுக்குப் பின்னால் மறைந்து நின்றுப் பார்த்தார். அப்பொழுது ஐந்து வயது குழந்தை அந்தப் பாலை அருந்துவதைப் பார்த்து அருகில் வந்து மிரட்ட எண்ணினார். ஆனால் அவர் பார்த்தக் காட்சி அவருக்கு அதிர்ச்சியாகவும், வியப்பாகவும் இருந்தது. காரணம் தன் கையில் சூலாயுதம் வைத்திருந்தது. இருந்தாலும் அக்குழந்தையைப் பார்த்து நீ யார் என்று கேட்டார். அதற்குத் தான் வந்த நிலையை எடுத்துச் சொல்லி, இவ்விடத்தைவிட்டு நான் எங்கும் போக மாட்டேன். இனிமேல் இங்குதான் இருக்கப் போகிறேன் என்று கூறியது.

நாங்கள் சிற்றூரில் இருப்பவர்கள். சுத்தம் இல்லாமல் இருக்கும் பொழுது உன்னை எப்படி வழிபடுவது. ஏதாவது குற்றம் குறைகள் நடந்தால் எங்களால் தாங்க முடியாது எனக் கூறினார். அதற்கு அக்குழந்தையானது, நீங்கள் எப்படி இருந்தாலும் நான் கோபப்படமாட்டேன். உங்களின் குறைகளைத் தீர்ப்பதே என் கடமை. நான் எந்தக் காரணத்திற்காகவும் கோபப்பட மாட்டேன் என்று சத்தியம் வாங்கியது. அதன் பின்னர் அக்குழந்தையானது திருவூரணி என்ற இடத்திலிருந்து ஊரின் நடுவிலுள்ள ஆட்டுக்குடிலில் அமர்ந்து தெயவமானாள். இத்தெய்வம் புற்று

மண்ணாகத்தான் காட்சி அளிக்கின்றாள். இவ்வூரில் உள்ள ஆண்கள் பெரும்பாலோர் பட்டாளத்தில் வேலை பார்ப்பதால் "குட்டிப் பஞ்சாப்"[34] என்று இச்சிற்றூரை அழைக்கின்றனர்.

கோயிலமைப்பு

மாரியம்மன் கோயில் கூடார அமைப்பில் இருக்கும் பொழுது அவ்வூரிலுள்ள வீடுகளும் கூரை வீடுகளாகத்தான் இருந்தன.

♦ கோயில் கட்டட அமைப்பானவுடன் அவ்வூரிலுள்ள வீடுகளும் கட்டட அமைப்புடன் வளர்ச்சிப் பெற்றுக் காணப்படுகின்றன.

♦ கோயிலின் முன் வாசலில் நான்கு பெரிய மணிகள் கட்டப்பட்டுள்ளன.

♦ கோயிலின் வாசலில் இருபக்கமும் கல்தூணுடன் சூலாயுதம் அமைத்துள்ளனர்.

♦ கோயிலின் முன் வாசலிலுள்ள வேப்பமரமானது தொட்டில் கட்டுகின்ற மரமாக உள்ளது.

♦ பலி கொடுக்கின்ற திண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

♦ திருவிழாக் காலங்களில் தங்குவதற்குப் பெரிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

♦ கோயிலின் முன் வாசலில் முரசு கொட்டுகின்ற மேளம் உள்ளது. இவை கையால் அடிக்கக் கூடியவையாகும்.

♦ மின்சார வசதி அமைக்கப்பட்டுள்ளது.

♦ ஆரம்ப நிலையில் ஆட்டுக் குடில் அமைக்கப்பட்டுள்ள ஆலயமாகத்தான் இருந்தது.

♦ பின்னர் கட்டட அமைப்பாக மாறியது. இவை இறைவனின் திருவிளையாடல் என்று தான் சொல்ல வேண்டும். ஆட்டுக்குடிலின்

மீது நெய் தீபம் ஏற்றி வைத்த அந்தத் திரியை எலியானது எடுத்து ஆட்டுக்குடிலின் மீது போட்டதால் அக்குடில் தீ பிடித்து எரிந்தது. அதன் பின்னர் கட்டடம் அமைத்தனர்.

- நுழைவு வாயில் மூன்று பக்கம் பெரியதாக அமைக்கப்பட்டுள்ளது.

முப்பிடாரி அம்மன்

பிடாரியம்மன் என்றழைக்கப்பட்ட பெண் தெய்வம் பிற்காலத்தில் முப்பிடாரி அம்மன் என்று பெயர் மருவியதாகக் காண முடிகிறது. மகிசாசூரனை வதம் செய்யப் பார்வதியம்மன் எடுத்த அவதாரத்தில் மூன்றாவது அவதாரம் முப்பிடாரி அம்மன் என்று அம்மன் பிறப்புக் கதையில் கூறப்படுகிறது. வில்லுப்பாட்டுக் கதைகளிலும் முப்பிடாரி அம்மனை மாரியம்மனின் அவதாரம் என்றே பாடுகின்றனர். "பிடாரியம்மன் பரவலாக வணங்கப்படும் பெண் தெய்வமாகும். தெய்வத்தாயர் எழுவரில் (சப்தமாதர்) ஒருத்தியாகப் பிடாரியம்மன் கருதப்படுகிறது.'[35] இத்தெய்வத்தை "மைசூர் போன்ற மாநிலங்களில் சாமுண்டி என்றும், சிலப்பதிகாரத்துக்கு அரும்பதவுரை கூறிய ஆசிரியர் பிடாரியை அறுபவர்க்கும் இளையவள் என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார். மேலும். பிடாரி, பத்தரகாளி, காளி ஆகிய மூவரும் சக்தியின் வீர ஆற்றலின் உருவகமான காளியே என்பது அவருடைய கருத்தாகும். பிடாரியம்மன் வழிபாடு சோழர் காலத்தில் பெருகியிருந்துள்ளது என்றும், கல்வெட்டுக்களிலும் பிடாரியைப் பற்றிய குறிப்புகள் வந்துள்ளன என்றும்" கூறப்படுகிறது.[36] சிற்றூரின் எல்லையைக் கடந்து நிற்கும் தெய்வமாக பிடாரியம்மன் கருதப்படுகிறது. இத்தெய்வத்தை "இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி, ஆதிசக்தி இவளே பராசக்தியாக ஐந்து அம்சங்களில் பிறந்ததாகவும் ஆறாவது அம்சமாக மகமாரியாக மாறிப் பிறந்து மகிடனை வென்றதால் தேவர்கள் இவளை வீர பிடாரி" என்று அழைப்பர்.[37] இத்தெய்வம் வயல்களுக்கு நடுவே மந்தவெளியில் வடக்குப் பக்கமாக

அமைந்துள்ளது. பிடாரியம்மன் எவ்விதத் தீமையானவையும் ஊரை அண்டாதவாறு ஊரின் எல்லையைக் காக்கும் காவல் தெய்வமாக விளங்குகின்றது. மக்கள் குறைகளைப் பொறுத்துப் போற்றி வளர்ப்பவள் என்று மக்கள் நம்புகின்றனர்.

இத்தெய்வமானது "திருவில்லிபுத்தூரிலிருந்து இராசபாளையம் செல்லும் சாலையில் சுமார் பத்து கல் தொலைவில் கீழப் பொட்டபட்டி என்ற சிற்றூரில் இக்கோயில் அமைந்துள்ளது. பரிவாரத் தெய்வமாக விநாயகர் சிலை மட்டும் உள்ளது. இத் தெய்வத்தைத் தேவேந்திரகுல வேளாளர் கொண்டாடுகின்றனர்."[38] இவ்வாலயம் பல ஆண்டுகளுக்கு முன்புத் தோன்றியதாகும்.

கோயிலமைப்பு

முப்பிடாரி அம்மன் கோயிலானது கோபுர அமைப்புடன் காணப்படுகிறது.

♦ பரிவாரத் தெய்வமான விநாயருக்குச் சிறிய கோயில் அமைத்துள்ளனர்.

♦ கோயிலின் முன் பகுதியில் காவு கொடுக்கக் கத்தி அமைத்துள்ளார்கள்.

♦ மக்கள் பொங்கல் வைப்பதறகுக் கோயிலைச் சுற்றிச் சுவர் எழுப்பியுள்ளார்கள்.

♦ தற்பொழுது நவீன இசைக் கருவிகள் அமைத்துள்ளனர்.

♦ ஆரம்பக் காலக் கட்டத்தில் மந்தவெளியில் இருந்த இவ்வாலயம் நாளடைவில் வளர்ச்சி பெற்றுக் காணப்படுகிறது.

திருபேச்சியம்மன்

திருவில்லிபுத்தூரிலிருந்து இரண்டு கல் தொலைவில் செண்பகத் தோப்புக்கு அருகில் திருபேச்சியம்மன் சிற்றூர்த் தேவதையாகக் காட்சியளிக்கின்றார். 400 ஆண்டுகட்கு முன்புத் தோன்றியது.

நான்கு தலைமுறைக்கு முன்பு வனத் தேவதையாகத் திருபேச்சியம்மன் எழுந்தருளியுள்ளனர். “திருவில்லிப்புத்தூர் மேட்டுத் தெருவில் பிறந்து. பெரியகுளத்தில் வசித்து வரும் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இந்தத் தேவதையை நினைத்து, தான் அரசியலில் பெரிய மனிதனாகவும் பேரும் புகழும் பெற வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அதன்படி முதலமைச்சர் ஆனார். இந்த அம்மன் மீது நம்பிக்கை வந்ததால் வனத் தேவதையாக இருந்த இந்த அம்மனுக்குக் கட்டடம் கட்டிக் கொடுத்தார்.”(39) இத்தெய்வத்தை இனத் தெய்வமாக வழிபடாமல் பொதுத் தெய்வமாக வழிபட்டனர். பரிவாரத் தெய்வமாக விநாயகர், மாடன் போன்ற தெய்வங்கள் உள்ளன.

கோயிலமைப்பு

பேச்சியம்மன் கோயிலானது ஓர் ஏக்கர் பரப்பளவில் அம்மனுக்குக் கோபுரம் (விமானம்) அமைத்துள்ளனர்.

- சிமெண்ட் தளம் போடப்பட்டுள்ளது.
- விநாயகர் மற்றும் மாடனுக்குச் சிறிய கட்டடம் அமைத்துள்ளனர்.

துர்க்கையம்மன்

துர்க்கையாகிய கொற்றவை மகிசாசூரனை வதம் செய்ய எடுத்த கோலம் மகிசாசுரமர்த்தினி எனும் உருவமாகும். புராணக் கதையின்படி அரம்பன் என்று ஓர் அசுரன் இருந்தான். அவனுக்கும் ஓர் எருமைக்கும் ஏற்பட்ட உறவில் உதித்தவனே மகிசாசூரன், எருது எனப் பொருள்படும் மகிசம் என்னும் சொல்லின் அடிப்படையில் அவருக்கு அப்பெயர் ஏற்பட்டது. அவன் கடுமையானத் தவம் செய்து வரங்களைப் பெற்றுத் தன் வலிமையைப் பெருக்கிக் கொண்டான். தன் வலிமையால் தேவர்களைப் போரில் வென்றான். அடுத்துத் தேவர்களையே தேவருலகத்திலின்றும் துரத்த முயன்றான். அதனை உணர்ந்த தேவர்கள் முப்பெருங் கடவுளரிடம் முறையிட்டனர். மகிசாசூரனைக் கொல்லவென்றே துர்க்கையாம்

கொற்றவைக்கும் புதுவடிவம் தந்தனர். மூண்டெழுந்த சினத்தால் தங்கள் வாய்களிலிருந்து வெளிப்பட்ட அக்கினிப் பிழம்பிலிருந்து அவளைப் படைத்தனர். சிவனின் திரிசூலமும் திருமாலின் சக்கரமும் அவளிடம் தரப்பட்டன. அதைப் பின்பற்றி வாயு வில்லும், கதிரவன் அம்பாறந் துணியும், எமன் தண்டாயுதமும், இந்திரன் குடிமுழக்கமும் குபேரன் சூலாயுதமும், அனைத்துத் தேவரும் அரிமா தந்து தேவியை ஆயுதப் பாணியாக்கினர்.

துர்க்கையாகிய கொற்றவைப் பெருத்த வயிறும், குட்டை உருவமும் கொண்ட பூதகணங்கள் ஆகியோர் ஒரு புறமும், மகிசாசுரனும் அசுரர்களும் ஒருபுறமும், எதிர் எதிர் நின்று போரிடுவது போன்றத் தோற்றத்தை ஏற்படுத்திக் காட்டியுள்ளது. அக்காட்சி உறுமிக் கொண்டு உலவிடும் சிங்கத்தின் மீதமர்ந்து கால்கள் இரண்டையும் இருபக்கமும் தொங்கவிட்டு எட்டுக் கைகளிலும், தனித்தனிப் படைகளை ஏந்தி மகிசாசுரனைத் தாக்கப் போராளியாகத் துர்க்கை புறப்பட்டு வருவது போலுளளது. இடமேற்கையில் ஏந்திய வில்லில் நாணைத் தன் காதளவு இழுத்து, வல மேற்கையில் அம்புத் தரித்து இடக்கையை முன்னால் நீட்டி வலக்கையைப் பின்னே நீட்டிச் செதுக்கியிருப்பது தேவி வில்லை வளைத்து அம்பை எய்வது போன்ற ஒரு தோற்றத்தைத் தோற்றுவிக்கிறது. ஒரு வலக்கையில் கதாயுதமும் மற்ற மூன்று கைகளில் குறுவாள், சங்கு பாசக்கயிறு ஆகிய படைக் கலங்களும் தாங்கி எவ்வகைப் போருக்கும் தயாராகக் காட்சி அளிக்கும் தோற்றம் கண்ணைக் கவர்கிறது.[37]

“துர்க்கமன் என்ற அரக்கனை அழித்தக் காரணத்தினால் துர்க்கையம்மன் என்ற பெயர் வந்தது.”[40] சுமார் 100 ஆண்டுகட்கு முன்னால் உருவானது மூல தெய்வம் துர்க்கையம்மனும் பரிவாரத் தெய்வம் விநாயகரும் உள்ளன.

பாட்டக்குளம் என்ற சிற்றூரில் 1980இல் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டிருந்த பெண் அவ்வழியில் வரும்பொழுது அத்திருத்தலத்தில்

ஒரு கல் மீது சூடம் மட்டும் இருந்தது. ஆனால் தீப்பெட்டி இல்லை. அந்தப் பெண் சூடனைக் கொழுத்தத் தீப்பெட்டி இல்லையே! யாரிடம் கேட்பது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது அந்த வழியாக ஒரு வயதான மனிதர் சென்று கொண்டிருந்தார். அவரிடம் போய் அய்யா தீப்பெட்டி இருந்தா கொடுங்கள் என்று கேட்டாள். அதற்கு அவர் தன்னிடம் உள்ள தீப்பெட்டியைக் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு சூடம் ஏற்றும் போது "தாயே என் வீட்டில் ஒரு வாரத்துக்கு முன்புக் காணாமல் போன நகையையும் பணத்தையும் கிடைக்கும்படிச் செய்தால் உனக்கு வாராவாரம் தீபம் போடுகிறேன் என்று கூறினாள். அன்று மாலை 4.15 மணிக்கு அந்தப் பெண் வீட்டில் காணாமல் போன (திருடு போன) நகை, பணம், மஞ்சள் துணியில் கிடப்பதைப் பார்த்து ஆனந்தமடைந்தாள்."[41] தான் நினைத்தக் காரியம் நடந்ததால் வாராவாரம் செவ்வாய்க் கிழமை 4.15 மணிக்கு எலுமிச்சம் பழம் தீபம் போடுவதாக நேர்ந்து கொண்டாள். பின்பு அந்தப் பெண்ணுக்கு மூன்று ஆண்டு கழித்துப் பாட்டக்குளம் அருகே நான்கு கல் தொலைவில் மல்லி என்ற ஊரில் திருமணம் நடந்தது. அன்று முதல் இன்று வரை செவ்வாய்க் கிழமைகளில் 4.15 மணிக்குத் தீபம் போட்டு வந்தாள், தான் செயல் காரியம் நடக்கும் என்பதில் ஐயமில்லை என்பதை உணர்ந்த அந்தக் குடும்பம் கோயில் பூசாரியாக 35 வருடம் தொண்டு செய்து வருகின்றனர்.

கோயிலமைப்பு

♦கோயில் கட்டட அமைப்புடன் காணப்படுகிறது.

♦கோயிலின் முன் பகுதி கஜலட்சுமியுடன் சேர்ந்து காட்டப் பெற்றுள்ளது.

♦கிழக்குப் பக்கமாக விநாயகர் உள்ளது.

சிலைக்காரியம்மன்

"சிலைமான் சிற்றூர் தேவதை உச்சிமாகாளி அம்மன்."[42] இந்த அம்மன் கோயிலில் சாமி கும்பிடும் போது ஊர்

நாட்டாமைக்காரருக்கு முதல் மரியாதைக் கொடுப்பது வழக்கம். சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் உச்சிமாகாளி அம்மன் கோயில் ஊர்த் திருவிழா நடந்த போது முதல் நாள் கரகம் எடுப்பது வழக்கமாகும். இரண்டாம் நாள் நாடகம் நடத்துவது மரபாகும். இந்த நாடக நிகழ்ச்சிக்கு நாட்டாண்மைக்கார வீட்டுப் பெண்கள் வெளியே வருவதில்லை.

ஆகையால் நாட்டாண்மை மற்றும் ஊர் முக்கிய நபர்கள் அமர்ந்து நாடகம் பார்த்துக் கொண்டிருந்த போது நாடக நடிகர் கேலிப் பேச்சு பேசிக் கொண்டிருக்கும் போது நாட்டாண்மைக்காரரின் மச்சைப் பார்த்து சிறிது நேரம் பேசியிருக்கிறார். இதைக் கவனித்த நாட்டாண்மைக்காரர் அங்குள்ள சுவரில் வளையல் அணிந்தப் பெண்ணின் கை பற்றியிருப்பதைக் கவனித்தார். பின்பு வீடு திரும்பிய அவர் தூங்கிவிட்டார். மறுநாள் காலையில் தலைமுழுகுவதற்காக எண்ணெய் தேய்த்துக் கொண்டிருக்கும் போது மனைவியை அழைத்து வீட்டிலுள்ள கிணற்றில் தண்ணீர் இறைக்கச் சொல்லியிருக்கிறார். தண்ணீர் இறைக்கும் போது மனைவியின் கால் இரண்டையும் பிடித்துக் கிணற்றில் தள்ளிவிட்டு அமைதியாக இருந்துவிட்டார்.

சிறிது நேரத்திற்குப் பின் கூச்சல் கேட்க மற்றவர்கள் கூடிக் கிணற்றுக்குள்ளேயே இறந்து போன அந்தப் பெண்ணை எடுத்துச் சுடுகாட்டில் எரித்துவிட்டார்களாம். மறுநாள் நெருப்பை அணைக்கச் சென்ற போது அந்தப் பெண்ணின் சேலை முந்தி மட்டும் எரியாமல் ஓர் ஓரத்தில் கிடந்ததாம். அதை எடுத்து வந்து சாமி வீட்டில் வைத்துவிட்டார்கள்.

பிள்ளைமார் இனத்திலுள்ள பெரியவர் கனவில் வந்து என்னைக் கொன்றவன் எனது கணவனே, அந்தக் குடும்பத்தில் இனி ஆண் வாரிசே இருக்காது. என்னை வணங்கினால் நமது மக்களுக்கு நல்ல சுகத்தைத் தருகிறேன் என்று அந்தப் பெண் கூறினாள். அதன் பின்னரே சுடுகாட்டிலிருந்து எடுத்து வந்தச் சேலையை வைத்துச்

சாமி கும்பிடத் தொடங்கினார்கள். இதுவே சிலைமானுக்குச் சீலைக்காரி அம்மன் என்றப் பெயர் வந்தது.

அகால மரணமடைந்த தெய்வம்:

பாதாள பேச்சியம்மன்

மாசாணி மயானத்தில் சயனித்துக் கிடக்கும் தேவதையாகப் பதினேழு அடி நீளத்தில் படுத்துக் கிடக்கும் கோலத்தில் காணப்படுகின்றாள். நீலகிரி மலைக்குத் தெற்கே சுமார் 100 கல் தொலைவிலுள்ள சகயாத்ரி மலைத் தொடரின் ஒரு பகுதியாகிய ஆனைமலையின் அடிவாரத்தில் காணப்படுகிறது. செய்யாதத் தவறுக்காகத் தான் தண்டனை அனுபவித்துத் தெய்வமானாள். இத்தெய்வத்தின் பெயர் "மாசாணி."[43]

"முன்னொரு காலத்தில் தென்காசியில் இருந்து சிவபக்தர் ஒருவர் காசிக்கு யாத்திரை போனார். கங்கை ஆற்றின் புனித நீராடிய அந்த சிவபக்தரின் கண்களுக்குப் பித்தளைப் பெட்டி ஒன்று ஆற்றில் மிதந்து வருவது தென்பட்டது. அதை எடுத்துத் திறந்து பார்த்தார். பெட்டிக்குள் ஐம்பொன் சிலைகள் இரண்டு இருந்தன. அந்த ஆச்சரியத்திலிருந்து சிவபக்தர் மீள்வதற்குள் இந்தச் சிலைகளைத் தென்திசைக்குக் கொண்டு போ! என்று ஓர் ஆசரீரி ஒலித்தது.

அதை ஆண்டவனின் உத்தரவாக நினைத்தச் சிவபக்தர் சிலைகள் உள்ள பெட்டியைத் தன் தலையில் தூக்கிக் கொண்டு தென்காசி நோக்கிப் புறப்பட்டார். வரும் வழியில் மதுரைக்குத் தெற்கே உள்ள காரைக் கேணி என்ற சிற்றூரை அவர் கடக்க முயன்ற போது பெட்டிக்குள் இருந்த தெய்வங்கள் தங்களைச் சுமந்து வந்த சிவபக்தருக்கு வயிற்று உபாதையை ஏற்படுத்தின. அப்போது பூங்சோலைப் போல் பூத்துக் குலுங்கிய அவ்விடத்தில் உபாதையைப் போக்கிக் கொள்ள நினைத்த அவர் தன்னிடமிருந்த பெட்டியைப் பாதை ஓரமாக இறக்கி வைத்துவிட்டு ஒதுங்கினார்.

எல்லாம் முடிந்தபின் மறுபடியும் அவர் பெட்டியைத் தூக்கியபோது அது கனமின்றி காற்றுப் போல் இருந்தது. சந்தேகப்பட்டு அதைத் திறந்து பார்த்தப் போது அதனுள் சிலை இல்லை. அப்போது புதருக்குள் இருந்து ஒரு அசரீரியாகப் பேசியத் தெய்வங்கள் எங்களுக்கு இவ்விடம் பிடித்துவிட்டது. எனவே நாங்கள் இங்கேயே தங்கிக் கொள்கிறோம் என்று கூறியது. அதன்பின்பு அத்தெய்வமானது மயானத்தில் படுத்தக் கோலத்தில் "மாசாண முத்தம்மாளாகக்"[44] காட்சி தந்தாள்.

கள ஆய்வில் போல் திருவில்லிப்புத்தூரில் ஒரு கல் தொலைவில் இருளப்பன் பாதாளப் பேச்சியாகக் காட்சித் தந்தாள்.

திருமாலையே மானசீகக் கணவனாக நினைத்துப் பூசித்தவள் பெரியாழ்வாரின் மகள் ஆண்டாள். நித்தமும் கிழக்கே காலைச் சூரியன் கண் விழித்து எழுவதற்கு முன், தான் எழுந்துத் திருமுக்குளத்தில் நீராடி தன் கையால் மாலைத் தொடுத்து, முதலில் அதைத்தான் அணிந்துப் பார்த்து, பிறகுத் தன் மானசீக மணாளனுக்குச் சூடக் கொடுத்து பேரானந்தம் கொள்வாள். இது புராணம் சொல்லும் கதை அன்றைக்கு ஆண்டாள் நீராடிய அந்தத் திருமுக்குளம் திருவில்லிப்புத்தூரில் இன்றைக்கும் ஆண்டாள் சரித்திரத்தை நினைவுபடுத்தியபடியே இருக்கிறது.

ஆண்டாள் கோயிலுக்கு மேற்கே சுமார் ஒரு கல் தொலைவில் போனால் கோடையிலும் நீரைச் சுமந்து கிடக்கும் அந்தத் திருமுக்குளம் வந்து விடுகிறது. இந்தக் குளத்திலிருந்து தெற்கேப் பார்த்தால் பெரியகுளம் கண்மாய் தெரிகிறது. அந்தக் காலத்தில் திருவில்லிப்புத்தூர் நகரத்தின் எல்லையும் இதுவாகத்தான் இருந்தது. இந்தக் கண்மாயின் மேற்கு விளிம்பை ஒட்டித்தான் பாதாள பேச்சியும் இருளப்பனும் கோயில் கொண்டு குடிகளைக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முன்னொரு காலத்தில் இந்தப் பகுதி இருள் சூழ்ந்த வனாந்திரமாக இருந்தது. அப்போது இருளப்பன் மாயாண்டி,

வீரபத்திரன் எனற மூன்று பேர் மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அடிக்கடி வேட்டைக்கு வந்துப் போயினர். அப்படி வரும் போது மலை அடிவாரத்துக்கு அருகே இந்த வனப்பகுதிக்கும் அவர்களது குதிரைகள் வந்து போகத் தொடங்கின. சில நேரங்களில் அந்த மூவரும் ஊருக்குள் வந்து அங்கு வசித்த மக்களைத் துன்புறுத்த ஆரம்பித்தனர். இவர்களின் அட்டூழியத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத ஊர் மக்கள் வனத்தின் எல்லையில் ஒன்று திரண்டு பார்வதி தேவியை நினைத்து இவர்களின் அட்டூழியத்துக்கு முடிவு கட்டும்படி வேண்டினர். இவர்களின் வேண்டுதலுக்கு இரங்கி வந்த சக்தி, அந்த மூவரின் கொட்டத்தையும் அடக்குவதாக உறுதி கொடுத்தாள்.

இந்த நிகழ்வுகளை அறியாமல் அன்றைய தினமும் அந்த மூவரும் காட்டுக்குள் வேட்டையாடி விட்டு வழக்கம் போல ஊருக்குள் போக எத்தனித்தனர். அப்போது நிறைமாத கர்ப்பிணியின் உருவில் வந்தப் பார்வதிதேவி அவர்களை ஊருக்குள் போகவிடாமல் தடுத்தாள். அவர்கள் சக்தியின் பேச்சைச் சட்டை செய்யாமல், குடியிருப்புகளை நோக்கிப் புரவிகளைத் தட்டி விட்டார்கள். அவர்களை வழிமறித்துக் குறுக்கே மல்லாந்து படுத்தத் தேவி, ‘முடிந்தால் என்னைத் தாண்டிக் கொண்டு ஊருக்குள் போங்கள்’ என்றாள். தங்களை மறிப்பது பரமனின் மனைவி என்பதை உணராமல் கர்ப்பிணிப் பெண்ணைத் தாண்டிக் கொண்டு போக மனசில்லாமல் அவளின் கால் பக்கமாகச் சுற்றிக் கொண்டு போக முற்பட்டனர். ஆனால் அவர்களுக்கு வழி கிடைக்காத அளவுக்குத் தன் கால்களை நீட்டிக் கொண்டே போன சக்தி, ஒரு கட்டத்தில் அவர்களுக்குத் தன் சுய வடிவத்தைக் காட்டினாள். தங்களை மறித்துத் தடுத்தது பார்வதிதேவி என்பதைப் புரிந்து கொண்ட மூவரும் அந்த இடத்தை விட்டு ஓரடி கூட நகராமல் அப்படியே நின்றனர். அதுநாள் வரை தாங்கள் செய்து வந்த அட்டூழியங்களை அந்த நிமிடமே உளப்பூர்வமாக உணர்ந்துக் கொண்ட மூவரும் அந்த இடத்திலேயே அமர்ந்து பார்வதிதேவியை வேண்ட ஆரம்பித்தனர். மனம் திருந்தியவர்களை மன்னித்ததேவி அவர்களைத் தன்னோடு

ஐக்கியப்படுத்திக் கொண்டாள். ஊர்மக்கள், அன்றிலிருந்து சக்தியைப் பாதாளப் பேச்சியாகவும், அந்த மூவரையும் சிவபெருமானின் அவதாரமாகவும் வழிபட ஆரம்பித்தனர்.

திருவில்லிப்புத்தூருக்கு அருகே சதுரகிரி மலையில் குடிகொண்டிருக்கும் சிவபெருமானின் சக்தியையும் இருளப்பனின் சக்தியையும் கலசத்துக்குள் அடைத்துக் கொண்டுப் போவதற்காகக் கேரள மாந்திரீகர் ஒருவர் திருவில்லிப்புத்தூரில் முகாம் இட்டார். இதற்காக 41 நாட்கள் கடும் விரதமிருந்து பீடங்கள் வைத்து அந்த மாந்திரீகள் பூசைகள் செய்தார். அப்போது தன் பக்தர் ஒருவரின் கனவில் காட்சித் கொடுத்த இருளப்பசாமி அந்த மாந்திரீகர் செய்து கொண்டிருக்கும் வேலைகளை முன்கூட்டியே சொன்னதுடன், என்னைப் பிடிக்க வந்தவன் என்ன பாடுபடப் போகிறான் பார் என்று சொல்லிவிட்டு மறைந்ததாம். அந்த வருடம் மழை பொய்த்துப் போய் ஊரே கடும் வறட்சியாக இருந்தது. அப்போது சதுரகிரி மலையில் மட்டும் பேய் மழை பெய்தது. சதுரகிரி ஆற்றில் கரைபுரண்டு ஓடிய வெள்ளம் மாந்திரீகள் வைத்திருந்த கலசங்களையும் அடித்துச் சென்றது. இருளப்பனின் சக்தியைத் தெரிந்து கொண்ட மாந்திரீகள் அனைத்தையும் போட்டுவிட்டு திருவில்லிப்புத்தூரை விட்டு ஓடியுள்ளான்

கோயிலமைப்பு

கிழக்குப் பார்த்த சந்நிதியில் தெற்கு வடக்காக ஆள் உயரத்துக்கு மல்லாந்துப் படுத்த நிலையில் இருக்கிறாள் பாதாளப் பேச்சி. அவளுக்குப் பின்னால் மூன்று பீடங்கள், அவற்றில் வீரபத்திரன், இருளப்பன், மாயாண்டி உள்ளிட்டோரின் தலையை மட்டும் சிலையாக வைத்திருக்கிறார்கள். கோயிலைச் சுற்றிச் சுவர் மட்டும் இருக்கிறது. இந்தச் சுவர்களில் 18 விளக்கு மாடங்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒரு துணைத் தெய்வமாக வணங்கப்படுகின்றன. மேல் கூரையோ, கோபுரமோ இல்லாமல் திறந்து வெளியாக இருக்கிறது. கோயில் மேல் கூரை போடுவதற்கு

எத்தனையோ முறை உத்தரவு கேட்டும், மறுத்துவிட்டதாம் பாதாளப்பேச்சிக் கோயிலுக்கு வெளியே உள்ள மண்டபத்தில் வெள்ளைக் குதிரையில் சாட்டையைச் சுழற்றியபடி இருளப்பன் வேட்டைக்குப் போவதுபோல் சிலையும் உள்ளது.

அபிராமி பதிகம்

"ஆத்தாளை எங்கள் அபிராமி வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்தாளைப் புவி அடங்கக்
காத்தாளை முக்கண்ணியைத் தொழுவர்க்கு ஒரு
தீங்கில்லையே"(45)

தாய்த்தெய்வம்:

அங்காளப் பரமேசுவரி

"திருவில்லிபுத்தூரில் உள்ள அங்காளப் பரமேசுவரி அம்மன் தான் அங்காளம்மனாகக் குடிகொண்டு இருக்கிறது. இத்தெய்வம் களத்தில் சைவ செட்டியார் இனத்தவர்கள் கொண்டாடினாலும் மற்ற சாதியினருக்கும் தாய்த் தெய்வமாக திருவில்லிபுத்தூரில் இருந்து வருகின்றது. இத்தெய்வம் பிற வட்டாரங்களில் ஊருக்கு வெளியே காணப்பட்டாலும் இவ்வட்டாரத்தில் ஊருக்குள்ளே அமைந்து இருக்கின்றது. அத்தெய்வத்தைப் பற்றிய தோற்றக் கதை வருமாறு:"(46)

முன்னொரு காலத்தில் விசும்பன், சும்பன் என்ற இரு அசுரர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் சிவனை நோக்கித் தவம் செய்து தங்களை யாரும் கொல்லக் கூடாது. தங்களைத் தாங்களேதான் அழித்துக் கொள்ள வேண்டும் என்ற வரம் வாங்கினர். வரத்தை வாங்கிக் கொண்டு இவ்விரு அசுரர்களும் வைகுந்தம், கைலாயம், சத்தியலோகம் போன்றவற்றை விருப்பப்படி சுற்றிவந்துத் தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் தொல்லைக் கொடுத்து வந்தனர். பிரம்மன் இவர்களைக் காப்பதாகக் கூறி ஒரு அழகிய பெண்ணைப் படைத்தார். அப்பெண்ணுக்குத் திரிலோத்தமை என்று பெயரிட்டு அசுரர்களின் வரத்தைப் பற்றி விளக்கி அசுரர்கள் இருக்கும் இடம்

நோக்கி அனுப்பினான். அவ்விரு அசுரர்களும் அழகிய பெண்ணைக் கண்டதும் அவளருகில் சென்றுத் தங்களை மணம் செய்து கொள்ள வேண்டும் எனக் கேட்டனர். ஒரு பெண் இருவரை மணக்க முடியாது என்றுக் கூறி மூத்தவன் நான்தான் அப்பெண்ணை மணப்பேன் என்று கூற இருவரும் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டு இறந்தனர்.

இச்செய்தியைத் தன் தந்தையான பிரமனிடம் திரிலோத்தமை சென்று கூற தான் படைத்தப் பெண்ணாகக் கருதவேண்டிய திரிலோத்தமையைப் பிரமன் காமக் கண்ணோடு நோக்கினார். இதைப் புரிந்துக் கொண்ட திரிலோத்தமை அடைக்கலம் வேண்டி கைலாசத்திற்குச் செல்ல அவள் பின்னாடியே சென்ற பிரம்மன் பார்வதியிடம் தான் யாரென்று சொல்லாமல் இருந்ததால் சிவன் என்று எண்ணிப் பாதபூசைச் செய்யும் போது தான் யாரென்று இவ்வளவு நேரம் சொல்லாமல் இருந்ததற்காகச் சாபம் கொடுத்தார். பிறகு பார்வதி எல்லாவற்றையும் தன் கணவன் சிவனிடம் கூற கோபத்தில் சிவன் பிரம்மனின் ஒரு தலையை வெட்டிவிட்டார். அந்நேரம் அங்கே ஒளிந்திருந்த திரிலோத்தமை வெளியில் வந்து தந்தை பாசம் மேலிட அவரது வெட்டுண்ட தலையைத் தன் மார்போடு அணைக்கக் காமமோகத்தில் குழந்தை பிறந்தது. இதைக் கண்ட பார்வதி அவர்களை மலையனூரர்ப் பக்கம் உள்ளக் காடுகளில் சென்று வாழச் சொன்னாள். பூவாலக் கண்டன் இருளாளக் கண்டன், வெள்ளாளக் கண்டன், மோகனக் கண்டன், பிரம்மக் கண்டன் என்ற ஐந்து அசுரர்களும் மூவுலகையும் ஆள எண்ணினார். பூவாலக் கண்டன் கைலாசம் சென்றான். அங்கே சிவனோடு மோதி இறந்தனன். இரண்டாவதாக இருளாளக் கண்டன் சிவனைப் பார்க்கச் சென்று அவரால் கவரப்பட்டு அவர்களிடம் சரண் அடைந்தான்.

சிவன் அவனுக்கு முத்து இருளப்பன் என்றுப் பெயரிட்டு பேச்சியாயியை மறைத்துக் கொண்டு சுடுகாட்டைக் காட்டேரி என்ற பெயருடன் ஆளப் பணிந்தார். இதைக் கண்ட வெள்ளாளக் கண்டன், சிவனை அணுகி அவன் தனக்கு மகனாகத் தன் மனைவி நிசாகினி

வயிற்றில் பிறக்க வரம் கேட்டான். அவரும் அவ்வரத்தைத் தந்து நிசாகினி வயிற்றில் வளர்ந்து வந்தார். இதைக்கண்டப் பார்வதி தன் அண்ணன் மகாவிசுணுவிடம் சென்று இதைக் கூற விசுணு பார்வதி தேவியைக் குறத்தி வேடம் பூண்டு நிசாக்கினிக்குக் குழந்தைப் பேறு மருத்துவம் பார்க்கச் சொன்னார். அப்போது அந்தக் குழந்தையைக் கொன்றுவிடும்படியும் கூறினாராம். அதன்படி பார்வதி குறத்தி வேடம் பூண்டு நிசாக்கினி வாழுமிடத்தை நோக்கி கையில் கூடையுடனும் குறத்தி வேடத்தோடும் குறி சொல்பவள் போல் சென்றாள். குறிச்சொல்பவளைக் கண்டதும் நிசாக்கினியின் விருப்பப்படி அவள் தோழி குறத்தி (வேடமிட்ட பார்வதி)யை அழைத்துத் தன் கையைக் காட்டி தன் எதிர்காலத்தைக் கேட்டாள். கையைப் பார்த்துக் குறிச் சொன்னப் பார்வதி சிவனைப் போல ஐந்து தலையோடு அழகான விசித்திரமான ஆண்மகன் பிறக்கும் என்று கூறினாள். அந்நேரம் நிசாக்கினின்குப் பிரசவம் பார்க்க ஒரு ஆயாவை அழைத்து வரச் சென்ற வெள்ளாளக் கண்டன், ஆயா யாரும் இல்லாமல் வரவே குறத்தி வேடத்தில் இருக்கும் பார்வதி தானே உதவுவதாகக் கூறிஅதற்கு வேண்டிய புதுமுறம், ஒரு சின்ன மஞ்சள் துணி, கத்தி மூன்றும் கேட்கவே இதையெல்லாம் கெட்ட சகுனமாக் கருதும் வெள்ளாளக் கண்டன் இதெல்லாம் எதற்கு என்றுக் கேட்டான்.

அதற்குப் புதுமுறமும், மஞ்சள் துணியும் பிரசவ நேரத்தில் உண்டாகும் அழுக்குகளைக் களைய தொப்புள் கொடியை அறுக்கக் கத்தி என்று கூறிவிட்டுத் தன் கூட கொணர்ந்த வீரபத்திர சுவாமியை வெள்ளாளக் கண்டனிடம் கொடுத்துவிட்டுப் பிரசவ அறைக்குள் நுழைந்தாள். நிசாக்கினி பிரசவ வலியால் துடித்துக் கொண்டிருந்தாள். குறத்தியான தேவி நிசாக்கினி கண்களை மஞ்சள் துணியால் கட்டிவிட்டு, அவருடைய வயிற்றைக் கிழித்து குழந்தையைப் பிடுங்கி புதுமுறத்தில் போட்டு, குடலை உருவி மாலையாகப் போட்டுக் கொண்டு அங்காள பரமேசுவரி உருவத்தில் அலங்கோலமாகக் காட்சியளித்தாள். பிறகு நிசாக்கினியின் குடல்

போன்றவற்றைக் காட்டேரியிடம் கொடுத்துக் கோபமாக வீரபத்தி சுவாமியை ஒரு பக்கக் கையிலும், பிரம்மாவின் தலையைப் (சிவன் வெட்டியது) பிரம்மகத்தியிடமிருந்துப் பெற்று மற்றொரு கையிலும் பிடித்துக் கொண்டு சுடுகாடு நோக்கித் தன்நிலை தடுமாற ஓடினாள்.

சுடுகாட்டில் சென்று ஆங்காரத்தில் அங்குள்ள பிணங்களையும் எலும்பு, சதைப் போன்றவைகளையும் உண்ணத் தொடங்கினாள். பிறகு கோபம் தாளாமல் மலையனூர் ஏரியில் தன் முதுகுப் பக்கம் படுமாறு விழுந்து கிடந்தாள். பிறகு தன்னைத் தெற்கு வடக்காகப் பிணம் செல்லும் திசைநோக்கித் திருப்பிக் கொண்டாள். அங்காளப் பரமேசுவரியை நம்பி வணங்குபவர்களைக் கைவிட மாட்டாள் என்ற நம்பிக்கை மக்களிடம் வலுவாக உள்ளது.

"காளியினுடைய பயங்கர வடிவமே அங்காளி."(47) 'அம்' என்ற சொல்லுக்கு அழகு என்று பொருள்.

"ஆம்பல் அம்தொடலை"(48)

"அம் கண் உலகின் அருந்ததி"(49)

என்றும் கூறுவர். சிவனிபெருமானிடமிருந்து தோன்றிய வீரபத்திரனும், பத்திரகாளியும் தனித்தனியே உலாவித் தக்கன் வேள்வியை அழித்தனர் என்று கந்தபுராணம் கூறுகின்றது.

"சிவபெருமான் உமையம்மையிடமிருந்துத் தோன்றியவர்களே வீரபத்திரனும், பத்திரகாளியுமாவார். இச்சக்தியே அங்காளியாவார். இவர் அர்த்தநாரி வடிவினராகவும் காட்சியளிப்பார்."(50)

அங்காளப் பரமேசுவரிக்கு மயானக் கொள்ளை என்ற விழா வருடாவருடம் நடைபெறும் விழாவாகும். கள ஆய்வில் திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் அமைந்துள்ள இவ்வாலயத்தில் கொண்டாடப்படவில்லை. மற்ற வட்டாரங்களில் மயானக் கொள்ளை என்ற விழா நடை பெற்றாலும் இங்கு மட்டும் காணப்படவில்லை.

அங்காள தேவியைக் "குந்தினாளாம் கூவத்தூர்"[51] என்ற படி உயர்ந்தச் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பாள். மேலும் அங்காள தேவியை மணி விளக்காய் உருவகம் செய்கின்றனர்.

"மங்காத ஞான மணிவிளக்காய் வந்தருளும்
அங்காள தேவி என்னை ஆதரிக்க வந்திடுவாய்"[52]

என்று துதி பாடுகின்றனர். திருவில்லிப்புத்தூரிலிருந்து வன்னியம்பட்டி செல்லும் சாலையில் சுமார் ஒரு கல் தொலைவில் மாதாங்கோயில் தெருவில் இவ்வாலயம் அமைந்துள்ளது. 200 ஆண்டுகட்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது. ஆசாரி இனத்தவர்கள் கொண்டாடுகின்றனர். ஆனால் திருவிழாவின் போது ஊர் மக்கள் அனைவரும் வழிபாடு செய்கின்றனர்.

கோயிலமைப்பு

நான்குப் பக்கச் சுவர் அமைப்புடன் சிறிய கோயிலாக இருந்தது. அதன்பின்பு 1984-இல் பெரிய கோயிலாகக் கட்ட ஆரம்பித்தார்கள். ஆனால் சில பிரச்சினைகளின் காரணமாக அப்படியே நின்றுவிட்டது. பின்பு 1998இல் தான் குடமுழுக்கு நடைபெற்றது.

பெரிய கட்டட அமைப்புடன் முன்பகுதிச் சற்றுத் தாழ்வாக வெட்ட வெளியாகக் காணப்படுகின்றது. முன் பகுதிப் பெரியக் கோபுர அமைப்புடன் காணப்படுகின்றது. வாயிற்கதவு பெரியதாகவும் கருவறைக்கு எதிரேப் பெரிய கொடிமரமும் அமைந்துள்ளன. அதற்குப் பக்கத்தில் விநாயகர் மற்றும் முருகன் சிலைகள் உள்ளன. சாமியை அலங்காரம் செய்வதற்காகத் தனியறை அமைக்கப்பட்டுள்ளது. ஐந்துத் தலைப் பாம்பு பெரிய உருவத்துடன் காணப்படுகிறது. ஐந்துத் தலைப் பாம்பிற்குப் பக்கத்தில் தொட்டில் கட்டுகின்ற அமைப்பு காணப்படுகின்றது. ஆலயத்தின் உட்பகுதியாகிய கருவறையில் லிங்கமாகக் காட்சியளிக்கின்றாள்.

கல்வெட்டுக்கள்

"விபவ வருஷம் கார்த்திகை மாதம் 6-ம் தேதி 21.11.98ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது."(53)

தேவி கருமாரியம்மன்

"உலகத்தில் மக்களைப் படைப்பதற்காகத் தானே கருவாகி அம்மனாகக் காட்சியளிக்கின்றாள் தேவி கருமாரியம்மன்."(54) குழந்தைப் பேறு இல்லாதவர்கள் இந்த அம்மனை வணங்கி வழிபாடு செய்தால் குழந்தைப் பாக்கியம் உண்டாகும் என்பது ஐதீகம். இக்கோயிலானது 400 ஆண்டுகட்கு முன்பு உருவானது இராமலிங்காபுரம் என்ற ஊரில் இந்த அம்மன் சுயம்புவாக உதித்தார். அகில உலகத்துக்கும் படியளக்கும் சக்தியான நான் கொஞ்சக் காலம் இந்த இடத்தில் அவதாரமெடுத்து நின்று எனது சக்தியை இங்குள்ள மக்களுக்கு அருள் பாலிக்க வேண்டி உள்ளது. குழந்தைப் பேறு கிடைப்பதற்காகச் சுயம்புவாக இவ்வூரில் உதித்தார்.

கோயிலமைப்பு

ஆலயத்தின் இடதுபக்கச் சுற்றில் வடக்கு நோக்கி கருப்பண்ணசாமி அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு நோக்கிப் பேச்சியம்மன் கோயிலுள்ளது.

ஆலயத்துக்கு வெளியே வடப்புறத்தில் இருக்கும் வேப்ப மரத்தின் நிழலில் விநாயகர் உள்ளது.

வடப்புறத்தின் எதிரே மண்டபம் அமைந்துள்ளது.

"கோயிலுக்கு எதிரே அரசமரமும் வேப்ப மரமும் ஒரே இடத்தில் பின்னிப் பிணைந்து நிற்கின்றன."(55)

இம்மரத்தில் குழந்தை இல்லாதவர்கள் மரத்தொட்டில் மற்றும் மஞ்சள் துணியினால் தொட்டில் கட்டுகின்றனர். இக்கோயிலைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் காணப்படவில்லை.

குழந்தைப்பேறு கிட்டுவதற்காக நாட்டுப் புறவியலில் அம்மனின் திருவிளையாடல் பற்றிய பாடல் அமைந்துள்ளது. தோட்டுக்காரி அம்மன் கதையில் குழந்தையில்லா மந்திரம் பூமாலை ஒரு நாள் கனவு காண்கிறாள்.

> "தெய்வலோகப் பொற்கிளிதான்
> திருமடியில் வரவும் கண்டாள்
> பாம்பரவம் மடியேறிப் படம்
> விரித்தாடக் கண்டாள்
> மந்திரவாள் உறை கழற்றி
> மடிதனில் வைக்கக் கண்டாள்
> வேட்டாளியும் கூடுகட்டி
> விரைய குஞ்சு பொறிக்கக் கண்டாள்"(56)

இப்பாடல் அடிகள் கனவாக மட்டுமல்லாமல் அதை நிஜமாக்கியவள் என்று நம்புகின்றனர்.

முத்தாலம்மன்

முத்தாலம்மன் தென்பாண்டி நாட்டில் உழவர் பெருமக்களால் வணங்கப்படும் தெய்வம் சில சிற்றூர்களில் இவருக்குப் பெரிய கோயிலும், தேரும் திருவிழாவும் உண்டு. ஏழு கடலுக்குப் அப்பால் மணிநாகப் புற்றிலுள்ள நாகம் மூன்று முட்டைகளிட்டது. பார்வதியின் அருளால் முட்டைகளிலிருந்து மூன்று பெண்கள் தோன்றினர். அவர்கள் பிரம்மராக்கு, சின்னமுத்தார், பெரிய முத்தார் என்பவர்களாவர். அவர்கள் மூவரும் தவம் செய்து சக்தி முனியின் அருளால் குழந்தைகளையும் பெற்றார்கள். அனைவரையும் அழைத்துக் கொண்டு போய் கயிலையில் சிவபெருமானை வணங்கினர். நாட்டிலுள்ள கொடுமைகளை அழிப்பதற்கு மூவரும் கொடும் வியாதிகளையும் வரமாகக் கேட்டார்கள். பிரம்மராக்கு - சக்திக்குக் குணமாகாதப் பல நோய்களையும் சின்னமுத்தாருக்கும், பெரிய முத்தாருக்கும் சின்னம்மை பெரியம்மை என்ற வியாதிகளையும் கயிலையங் கடவுள் வரமாக அளித்தார். இவ்வாறு

கொடிய நோய்களை உண்டாக்கும் சக்திப் பெற்ற மூன்று சகோதரர்களும் தமிழ்நாட்டில் வந்து குடியேற்றினர்.

தென்பாண்டி நாட்டிலுள்ள ஒவ்வொரு ஊரிலும் முத்தாரம்மன் கோயில் கொண்டிருக்கின்றாள். ''பிற்காலத்தில் கன்னடியர் ஆந்திரர் படையெடுப்புகளின் போது தமிழ்நாடு புகுந்த மாரியம்மன் சிற்சில ஊர்களில் இவளோடு ஐக்கியமாகி விட்டாள்.''[57]

முத்தாலம்மன் தோற்றம் பற்றியச் செய்திகள் மற்றும் கருத்துக்கள் தமிழ் இலக்கியங்களிலும், சமயங்களிலும் நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் சார்ந்த வழக்குகளிலும் அடங்கியுள்ளன. இத்தெய்வம் பற்றியக் கருத்துரைகளில், "முத்தாலை ஒரு தொட்டியப் பெண், இவள் கற்புடையவளாகக் கருதப்படுகின்றாள். ஆனால் இவள் கற்பு இழந்தவள் எனச் சந்தேகித்து, இவள் தமையன்மார் இவளைக் கரும வசத்தால் கொல்ல இருக்கையில், இவள் குயவனை வேண்டி மட்கலம் சுடும் சூலையிற் புகுந்து வெந்து நீராகித் தெய்வமானவள். இவளை முத்தாலம்மன்"[58] என்பர் என்று அபிதான சிந்தாமணி கூறுகின்றது. "பார்வதி கைலயங்கிரியில் சிவனுடன் அமர்ந்திருக்கின்றாள். அப்போது மாமுனிவர்கள் வளர்த்த வேள்விப்புகை கைலயங்கிரியைச் சூழ்கிறது. இதைப் போக்க நினைத்தப் பார்வதி நடனமாடினாள். நடனமாடியதால் இவள் முகத்தில் முத்துப் போன்ற வியர்வைத் துளிகள் தோன்றின. இவற்றை அவள் அழித்து வேள்வியில் எறிய முத்தாரம்மன் பிறந்தாள் என்று இத்தெய்வத்தின் பிறப்பு பற்றிக் கூறப்படுகிறது."[59]

களப்பகுதியில் இத்தெய்வமானது திருவில்லிப்புத்தூரிலிருந்து ஆறு கல் தொலைவில் மேலூர் என்ற இடத்தில் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. மற்ற வட்டாரங்களில் முத்தாலம்மன் சிலையாகக் காட்சியளிக்கின்றாள். ஆனால் இங்கு மட்டும் விளக்குத் தூணாகக் காட்சியளிக்கின்றாள். இவ்வம்மன் 'அன்றே தோன்றி அன்றே மறையக் கூடியவள்'. குயவனை வேண்டி நின்றதால் அன்று மட்டும்

மக்களுக்குக் காட்சியளித்து விட்டு மறைந்து விடுகின்றாள். குயவனால் உருவாக்கப்பட்ட இத்தெய்வத்தைத் தெலுங்குச் செட்டியார் இனத்தவர்கள் திருவிழாவாகக் கொண்டாடுகின்றார்கள். ஆனால் எல்லா இனத்தவர்களும் வழிபாடு செய்கின்றனர்.

கோயிலமைப்பு

கோயில் நான்குப் பக்கச் சுவர் அமைப்புடன் வெட்டவெளி அமைப்புடன் காணப்படுகிறது. அம்மன் இருக்கின்ற இடத்தில் மட்டும் ஆட்டுக்குடில் உள்ளது. 'அன்றே தோன்றி அன்றே மறையக் கூடியவள்' என்ற காரணத்தால் உருவச் சிலை கிடையாது. சிலை வைக்கின்ற இடத்தின் மேல் பகுதி மட்டும் ஆட்டுக்குடில் அமைப்பில் காணப்படுகிறது. "வெள்ளாளர் மற்றும் இடையர், வண்ணார் முதலானோர் கொடுக்கும் அகத்திக்கம்பு, ஆட்டுக்குடில், பழைய துணி போன்றவற்றால் குடில் அமைப்பார்கள். கருவறையில் சிலை வைக்கின்ற இடத்தில் அதாவது கருவறையில் விளக்கேற்றுவதற்கு விளக்குத் தூண் மட்டும் உள்ளது."(60)

திரௌபதியம்மன்

தமிழகத்தில் குறிப்பாக விழுப்புரம், கடலூர் மாவட்டங்களிலும் புதுவையிலும் திரௌபதையம்மன வழிபாடுச் சிறப்பாக நடைபெறுகின்றது. திரௌபதை அக்கினியில் பிறந்தவள் என்பதனாலேயே வன்னியர்களால் குலதெய்வமாக வணங்கப்படுகின்றாள். வன்னி என்பது தீ எனும் பொருளைக் குறிக்கும் வடசொல்லாகும். திரௌபதை வழிபாடு பற்றி ஆய்வு செய்த ஆல்ப்ஹில்டாபிடல் என்பவர்,

"அன்பான பாஞ்சாலி எக்கியம் தன்னில்
அருமை பெண்ணாகப் பிறந்தவளும் நீ"

என வரும், பூசாரியின் பாடலைச் சுட்டிக்காட்டுவது ஒப்பு நோக்கத்தக்கது.(61) வன்னிமரம் பாரதக் கதையில் பாண்டவர்களின் ஆயுதங்களை ஓராண்டு காலம் மறைத்து வைக்கப் பயன்பட்டது

என்கிற கருத்தும் உண்டு. திரௌபதியைப் பற்றி ஏராளமான தொன்மங்கள் மக்களிடம் வழங்கி வருகின்றன.

"திருவில்லிபுத்தூரின் தெற்குத் திசையில் சுமார் ஒன்பது மைல் கல் தொலைவில் தர்மாபுரம் என்ற இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் தீமிதித்தல் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது."(62)

கோயிலமைப்பு

நான்குப் பக்கச் சுவர் அமைப்புடன் பெரிய கோயிலாகக் கட்டப்பட்டுள்ளது. கோயிலின் மேல் கூரை கோபுர (விமானம்) அமைப்புடன் காணப்படுகிறது. கோயிலின் முன்பகுதி தீ மிதித்தல் விழா நடைபெறுவதற்காக அகலமாகக் கட்டப்பட்டுள்ளது. கோயிலின் முன்பகுதியில் வலது பக்கம் விநாயகர் சிலை உள்ளது.

பெரிய மாரியம்மன்

பண்டைக் காலத்தில் சிவ வழிபாடும், சக்தி வழிபாடும் சேர்ந்து ஒரே கோயிலேயே நடைபெற்றுள்ளது. ஒரு காலத்தில் சிவபெருமான் பார்வதிதேவிக்கு ஆகமங்களை உபதேசிக்கும் போது சிவபூசை முறைகளையும் சிறப்புகளையும் எடுத்துரைத்தார். அதைப் பய பக்தியோடு கேட்ட பராசக்தி பார்வதிதேவி, அப்பூசையைத் தாமே செய்து அதன் பயனைப் பெற வரும்பினார். "சிவபெருமான் அருள் பெற்றுத் தாம் தவம் செய்து நித்தியப் பூசை செய்யும் இடமாககக் காஞ்சிபுரத்தைத் தேர்ந்தெடுத்தார். பூசைச் செய்து சிவனருள் பெற்றுக் காமாட்சியம்மனைக் கோயில் கொண்டார் என்று புராணம் கூறுகின்றது. இது முதல் அம்மை வழிபாடு, சக்தி வழிபாடு பிரசித்திப் பெற்றது. சக்திப் பூசைச் செய்பவர்களும் சக்தி உபாசகர்களும் தோன்றினார்கள்.

இது முதல் அம்மன் வழிபாடு தமிழகத்தில் பல்கிப் பெருகியது. இன்று எங்கும் பல்வேறு பெயர்களில் அம்மனை எழுந்தருளச் செய்து சிவ வழிபாட்டை விட அதிகமான பக்தர்களால் வழிபடப்படுகிறது.

அந்த முறையில் ஏற்பட்டதே மாரியம்மன் பார்வதியின் அம்சமான முழு முதல் தெய்வம் என்பதையும் அறியலாம். மாரி என்னும் மழையைக் கொடுத்து மக்களின் துன்பம் போக்கவும் வெப்பம் குறைக்கவும் பெரும்பாலான மாரியம்மன் கோயில்களில் பங்குனி, சித்திரை மாதங்களிலேயே பொங்கல் கொண்டாப் பெறுவதை அறியலாம். சில இடங்களில் மழை வேண்டிப் புரட்டாசி மாதம் பொங்கல் நடைபெறுகிறது. சிலர் பரசுராமனால் வெட்டுண்டு வீழ்ந்த தலையைப் பீடத்தில் எழுந்தருளச் செய்து வழிபடும் முப்பிடாதியம்மன், முத்தாலம்மன், எல்லையம்மன் போன்ற தெய்வங்களோடு மாரியம்மனையும் இணைத்துக் கூறுகிறார்கள். மாரியம்மன் சக்தி வாய்ந்த பராசக்தி பார்வதியின் அம்சம் என்பதே பொருத்தமாகத் தெரிகிறது.

மாரியம்மன் கோயில் இன்று எல்லா ஊர்களிலும் இருந்தாலும், ஆதியில் இக்கோயில் இவ்வட்டாரத்திலேயே மிகவும் சக்தி வாய்ந்த பழமையானத் திருக்கோயிலாக விளங்குகின்றது. திருவிழாவின் போது 12 நாட்கள் விரதம் இருப்பது இக்கோயிலின் சிறப்பாகும். படிப்பறிவு இல்லாப் பல தாய்மார்கள் பெரிய மாரியம்மன் மீது ஏட்டில் எழுதாத இலக்கியமாகத் தோத்திரப் பாடல்களை பாடிப் பரவசமடைகிறார்கள். கவிபாடும் எந்தத் தகுதியும் இல்லாதவர்கள் கவிதை இலக்கணமே தெரியாதவர்கள் மாரியம்மன் அருளால் சந்நிதானத்தில் அமர்ந்தவுடன் தோத்திரக் கவிமழைப் பொழிவதை இன்றும் காணலாம்.

இன்றும் பல ஊர்களிலிருந்தும் பல சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தீராத வியாதியைத் தீர்ப்பதற்கும், துன்பம் போக்குவதற்கும், பல்வேறுப் பிராத்தனைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் இத்திருக்கோயிலுக்கு வந்து மாவிளக்கு ஏற்றிப் பக்தியோடு வழிபடுவதைக் காணலாம். இவ்வாறு பல வகையாலும் சக்தியாலும் மேம்பட்டு விளங்குவதாலும் நிறையப் பேர் பூக்குழி இறங்கும் பெருமையாலும் பெரிய மாரியம்மன் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. இவ்வூரின் வடக்கு எல்லையிலுள்ள பட்டத்தரசியம்மன்

திருக்கோயிலுக்குச் சென்று பூக்குழிக்குரிய நெருப்பு வளர்த்துப் பூசாரியால் கொண்டு வரப்படுகின்றது. இதன் மூலம் பட்டத்தரசியம்மனுக்கும் மாரியம்மனுக்கும் ஏதோ தொடர்பு இருந்து, அவள் அனுமதியும் ஆசியும் பெற்று அக்கினி உண்டாக்கிக் கொண்டு வரப்பட்டு இங்கே பூ இறங்கும் இடத்தில் வளர்க்கப்படுவதாகக் கருதலாம்.

"வரங் கொடம்மா வரங்கொடம்மா
மாரியம்மன் தாயே
சாம்பிராணித் தூபங் கொண்டு
சரணஞ் செய்ய வாரோம்
அக்னிச் சட்டியால் கரகங்கள்
அம்(ன்)போடு எடுத்துச் செம்புடனே செலுத்தி"(63)

சிறுதெய்வ மரபில் மாலைத் தெய்வங்கள் என்ற ஒரு வகையுண்டு அத்தகைய தெய்வத்திற்குத் தீக்குழி வளர்த்து அதில் பாய்ந்து தெய்வத்தின் அருள் பெற்றுத் தெய்வமாகின்றார்கள். கன்னித் தெய்வங்களைப் பெரும்பாலும் இதனோடு தொடர்புடைய தெய்வமாகக் கருதுகின்றனர்.

இக்கோயிலில் பிரசித்திப் பெற்ற வேப்பமரமானது மாரியம்மனும்-வேப்பமரமும் இணைந்திருப்பதும் வேப்பமரத்தை மாரியம்மனாக மக்கள் வழிபடுவதும் பழங்காலத்து மரபு எனவும் கொள்ளலாம்.

வேப்பமரம் (வேம்பு) பொதுவாக அனைத்துப் பெண் தெய்வங்களோடு தொடர்புடையதாக இருப்பினும் குறிப்பாக மாரியம்மன் மற்றும் காளியம்மனோடு நெருங்கியத் தொடர்புடையதாக விளங்குகிறது. இதை, "தெய்வம் சேர்ந்த பராரை வேம்பு"(64) என்ற அகநானூற்றுப் பாடலடி உறுதிப்படுத்துகிறது. வேப்பிலைக்குப் பேய், பிசாசு போன்ற ஆவிகளை விரட்டும் ஆற்றலும், நோய்க் கிருமிகளை அழிக்கும் ஆற்றலும் உள்ளமையால், பெண் தெய்வங்களோடு வேப்பிலை

தொடர்புபடுத்தப்பட்டு வழிபடப்படுகின்றது. படைவீரர்கள் வேப்பிலைகளை வேலில் அணிவித்துக் கொண்டதை,

"வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்"(65)

என்ற நெடுநல்வாடைப் பாடல் வரியால் அறியப் பெறலாம். வேம்பின் சிறப்பாகப் பெரிய மாரியம்மன் கோயில் விளங்குகிறது. இக்கோயில் விருதுநகர் மாவட்டம் திருவில்லிப்புத்தூர் நகரில் பேருந்து நிலையத்தின் வடபகுதியில் இராசபாளையம்-மதுரை செல்லும் நெடுஞ்சாலையில் குறுக்குச் சாலையின் மேற்குப் புறமாக இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

கோயிலமைப்பு

அழகிய விமானத்துடன் கூடிய கர்ப்பக் கிரகத்தில் 'மாரி' என்னும் பெயர் கொண்டு எழுந்தருளியிருக்கும் பெரிய மாரியம்மன் அமர்ந்தத் திருக்கோலத்தில் நான்குத் திருக்கைகளுடன் முயலகனைக் காலடியில் மிதித்து காட்சியளிக்கின்றாள். கர்ப்பக்கிரகத்தை அடுத்தது அர்த்த மண்டபம், இம்மண்டபத்தின் கன்னி மூலையில் வீதி உலாவில் மக்களுக்கு அருள்பாலிக்கும் அன்னை மாரியும் அஸ்திர சக்தியும் உற்சவர்களாகக் காட்சித் தருகின்றனர்.

அர்த்த மண்டபத்தை அடுத்து மகாமண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் மேற்குப் புறமாக துர்க்கை, வனராக்கியம்மன் ஆகியோரும் கிழக்குப்புறமாகப் பெரிய பேச்சி, சின்னப் பேச்சி ஆகியோரும் சிலை உருவங்களில் அருள்பாலிக்கின்றனர். மகாமண்டபத்தை அடுத்தது கொடிமரம். இம்மண்டபத்தில் 21 அடி உயரத்தில் கொடிமரம் அமைக்கப்பட்டுள்ளது. கொடிமரத்தின் பின்புறமாகப் பலிபீடமும் முன்புறமாக நந்தி எம்பெருமானும் உள்ளனர். இம்மண்டபத்தில் 'ஆவுடைபார்வதி' புற்று வடிவத்தில் காட்சித் தருகிறாள்.

"சர்ப்பத் தோசம் விலகவும், தங்களுக்கு வந்தத் துன்பங்கள் உப்பாக உதிரிந்துப் போகவும் அன்னை ஆவுடைபார்வதியை

வேண்டி, இச்சன்னதியில் உப்புப் பொட்டலங்களையும், முட்டைகளையும் காணிக்கையாகச் செலுத்தி வணங்குகின்றனர்.'' (66)

கொடிமர மண்டபத்திற்கும் முன் மண்டபத்திற்கும் நடுநாயகமாக அழகிய வேலைப்பாடுகளுடன் கொலுமண்டபம் அமைந்துள்ளது. திருவிழாக் காலங்களில் அம்மன் அலங்காரத் தேவதையாக இம்மண்டபத்தில் ஊஞ்சலில் அமர்ந்து காட்சித் தருகிறாள்.

கொலுமண்டபத்திற்கு நேர் கிழக்கே பிரகாரத்தில் அருள்மிகு கருப்பசாமி சன்னதி உள்ளது. கொடிமர மண்டபத்தின் வெளிப்புறமாக 'சப்தகன்னியர்' சன்னதி உள்ளது. பிரகாரத்தைச் சுற்றி வரும்போது மேற்குப் புற ஈசான மூலையில் ஐந்து கரத்தான், ஆனைமுகத்தான் விநாயகப் பெருமான் மூஞ்சுறு வாகனத்தின் முன்புறமாக அரசமரமும் வேப்பமரமும் இணைந்த மரத்தடியில் வீற்றருள் புரிகின்றார்.

முன் மண்டபச் சுவர்களில் சக்தியின் அம்சங்களான பல்வேறு பெண் தெய்வங்களின் உருவங்கள் வர்ணங்களால் வரையப்பட்டுள்ளன. திருக்கோயிலின் நுழைவு வாயிலின் மேற்புறம் முகசாலை அமைக்கப்பட்டுள்ளது. அம்மன் சிங்க வாகனத்தில் வீற்றிருக்கிறாள். அம்மனின் இடது புறமாக பெண் பக்தை தீச்சட்டி ஏந்திவரும் கோலத்திலும், ஆண் பக்தன், 'மாராடி' கோலத்திலும் காட்சியளிக்கின்றார்கள். அம்மனின் அருகில் சுப்பிரமணியர் மயில் வாகனத்திலும் விநாயகர் மூஞ்சுறு வாகனத்திலும் காட்சியளிக்கிறார்கள்.

சன்னதி நுழை வாயிலின் நேர் எதிரே சுமார் ஐந்து அடி தூரத்தில் பலிபீடம் அமைந்துள்ளது. பலிபீடம் நேர் எதிரே சுமார் பத்து அடி தூரத்தில் 'பூக்குழி' அமைந்துள்ளது. சன்னதி நுழைவாயலின மேற்குப் புறமாக வீரபத்திரர் சன்னதியும், அதன் அருகாமையில் விநாயகர் சன்னதியும் அமைந்துள்ளது. பூக்குழி மைதானத்தின் வடபுறமாகத் தூண்டிக் கருப்பன் சன்னதி அமைந்துள்ளது.

கல்வெட்டுச் செய்தி

ரக்தாட்சி ஆண்டு தைத்திங்கள் 26-ம் நாள் 8.2.1985 வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஈஸ்வர வருடம் ஆனித்திங்கள் 11-ம் நாள் 25.6.1997 வெள்ளிக்கிழமை மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

திரு அம்மச்சியார் அம்மன்

''சிவனுக்குக் காவல் தெய்வமாகவும், முனீசுவரரைத் தன் குழந்தையாகவும் பாவித்த காரணத்தினால் இத்தெய்வத்திற்கு அம்மச்சியார் அம்மன் என்ற பெயர் வந்தது.''(67)

கோதைப் பிறந்த ஊரும், கோவிந்தன் வாழும் ஊருமான திருவில்லிப்புத்தூர் நகரின் தென்கோடியில் மடவார் வளாகம் காளையார் குறிச்சியில் அனைத்து உலகத்தையும் ஆண்ட ஏனைய சக்தி அவதாரங்களில் ஒன்றான எட்டுக் கரங்களைக் கொண்டு எட்டுத் திக்குகளிலும் ஏனைய சூனியக்காரர்களாகியச் சூரர்களையும், அண்டத்தையும் ஆள எண்ணி வீரநடை போட்ட அசுரர்களையும் அடக்கி ஆள வீரச் சலங்கையுடன் வெற்றி நடைபோட்டு வந்து வீற்றிருக்கும் திருஅம்மச்சியார் அம்மன், மதுரையை ஆண்ட பாண்டிய மன்னரால் போற்றி வணங்கப் பெற்ற அன்னை மீனாட்சியம்மாள்-சொக்கநாதர் இவர்களால் உண்டாக்கப்பட்ட கோயிலாகும்.

கோயிலமைப்பு

கோயிலின் வாயிற் கதவு பெரியதாக அமைந்துள்ளது. தெற்கு நோக்கி கரையடி முனியாண்டி ஆலயம் இடம்பெற்றுள்ளது. வடக்கு நோக்கி சக்கர செல்வ விநாயகர் மற்றும் அருள்மிகு செல்வ முத்துக்குமரன் ஆலயம் சிறிய கட்டட அமைப்புடன் காணப்படுகிறது.

கல்வெட்டுச் செய்தி

அருள்மிகு கரையடி நன்மைதரும் ஸ்ரீமுனிஸ்வரர் ஸ்ரீஅம்மச்சியார் அம்மன் திருக்கோயில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 1167-ம் ஆண்டு ஆங்கிரஸ் வருஷம் ஆனி மீ 22-ம் தேதி 6.7.1992 திங்கட்கிழமை சித்தியோகமும் சப்தமி திதியும் உத்திர நட்சத்திரமும் கூடிய சுபயோக வேளையில் காலை 9.15 மணிக்கு மேல் 10 மணிக்குள் சிம்ம லக்கனத்தில் காளையார் குறிச்சித் தெரு மக்களால் மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது.

முத்துமாரியம்மன்

வைத்தியலிங்காபுரம் என்ற ஊரில் இத்தெய்வம் குடிகொண்டுள்ளது. "முத்தாலம்மனுடன் மாரியம்மன் ஐக்கியமானதாக வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றது."(68) அதனால் இவ்விடத்தில் இரண்டு தெய்வங்களும் இணைந்து முத்துமாரியம்மனாகக் காட்சியளிக்கின்றார்கள்.

திருவில்லிபுத்தூரில் உள்ள பெரிய மாரியம்மன் கோயிலிருந்து பிடிமண் எடுத்து வந்து, பின்னர் மேலூரில் வீற்றிருக்கின்ற முத்தாலம்மன் ஆலயத்திலிருந்தும் பிடிமண் எடுத்து வைத்தியலிங்காபுரம் என்ற ஊரில் இத்தெய்வத்தை உருவாக்கினார்கள். இத்தெய்வமானது உருவச்சிலை அமைப்புடன் காணப்படுகின்றது. பரிவாரத் தெய்வமாக விநாயகர் சிலை உள்ளது.

கோயிலமைப்பு

நான்குப் பக்கச் சுவர் அமைப்புடன் கட்டடமாகக் காட்சியளிக்கின்றது. கோயிலைச் சுற்றி வருவதற்குச் சுற்றுப் பிரகாரம் அமைந்துள்ளது. வழிபாட்டின் போது இசைப்பதற்காக நவீன மேளதாளக் கருவிகள் அமைந்துள்ளன. நவீன மேளதாளக் கருவிகளை இசைக்கும் போது, பூசை செய்கின்றார்கள் என்று நினைத்து அவ்வூர் மககள் மாலை நேரத்தில் வீட்டில் வழிபாடு செய்கின்றனர்.

திருமலைப் பேச்சி

"திருமலை நாட்டிலிருந்து வந்ததாகக் கூறுகின்றார்கள்."[69] காரணம் அங்கிருந்து பிடிமண் எடுத்து வந்து கோயில் அமைத்துள்ளார்கள். இத்தெய்வமானது திருமலாபுரம் என்ற ஊரில் அமைந்துள்ளது. சுமார் 200 ஆண்டுகட்கு முன்புத் தோன்றியது. பரிவாரத் தெய்வங்களாக கருப்பசாமி, வீரபத்திரன் போன்ற தெய்வங்கள் உள்ளன. இத்தெய்வத்தை எல்லா இனத்தவர்களும் கொண்டாடுகின்றனர்.

கோயிலமைப்பு

கோயிலின் நடுவிலுள்ள தூணின் அருகில் சண்டேசுவரர் இருக்கின்றார். அம்மன் கோயிலுக்கு வலப்பக்கம் வீரபத்திரன் இருக்கிறார். கோயிலின் வெளியே வடக்கு வாயில் அருகே காக்கும் தெய்வமாகிய கருப்பசாமி உள்ளது. தெய்கு வாயிலின் முன் மக்கள் நேர்த்திக் கடனாக வழங்கிய யானைச் சிலைகள் உள்ளன. இக்கோயிலில் பெரிய நாகம் தங்கியிருக்கின்றது.

முத்துப் பேச்சியம்மன்

மம்சாபுரத்திற்கு மேற்கே இவ்வாலயம் 150 ஆண்டுகட்கு முன்பு தோன்றியது. "முத்துப்பேச்சியம்மனுடன் இராக்காச்சியம்மன், பேச்சியம்மன் ஆகியோர் உடன் பிறந்தவர் ஆவர். இவர்கள் வேட்டைக்காக வடதிசையில் இருந்து தென்திசை வந்தவர்கள். இவர்களுடன் பொம்மு நாயக்கர் அவர்தம் மனைவியர் நாகம்மாள், அழகம்மாள் ஆகியோரும் வந்திருக்கின்றனர்."[70] அவ்வாறு வந்தவர்கள் வாழைக் குளத்துக் கரையில் தங்கி மக்களுக்கு அருள்பாலிக்கின்றனர். இத்தெய்வத்தை எல்லா இனத்தவர்களும் வணங்கி வருகின்றனர்.

கோயிலமைப்பு

ஆரம்பக் காலக்கட்டடத்தில் சிறிய கோயிலாக இருந்தது. நாளடைவில் வளர்ச்சி அடைந்து காணப்படுகின்றது. கோயில் வாழைக் குளத்துக் கரையில், புழுகாண்டி சற்று மேற்கே அமைந்துள்ளது. கோயில் கரையின் அடிவாரத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. அம்மன் கோயில் மட்டும் தனிக் கட்டடமாகவும், அதனோடு இணைந்த ஒரு பெரிய கட்டடமும் உள்ளது. அம்மனுக்கு எதிரில் வடபகுதியில் கிழக்கு நோக்கி பொம்மு நாயக்கர் தம் இரு மனைவியருடன் இருக்கின்றார். அதே வரிசையில் தென்பகுதியில் அய்யனார் கோயில் உள்ளது. கோயிலின் தென்பகுதியில் கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு நோக்கிப் புழுகாண்டி, கருப்பசாமி, ஏழுகன்னியர், அங்காள ஈசுவரி, லாட தன்னாசி, மாடத்தி, மாடன் ஆகியோர் உள்ளனர்.

இசக்கியம்மன்

இசக்கியம்மன் சிறுதெய்வத்தைப் பற்றி நாட்டுப்புறக் கதை ஒன்றும் வழக்கிலுள்ளது. இந்த அம்மன் கொடுமைகளுக்கு அஞ்சாதவள். திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்ட சிற்றூர் மக்களால் போற்றப்படும் சிறு தேவதையாகும். ‘‘அகால மரணமடைந்த ஒரு பெண்ணே இச்சிறு தெய்வமானாள் என்று கருதப்படுகிறது. வஞ்சம் செய்தவரை அவர் வாழும் ஊரோடு அழித்தத் தன்மையே இவளைச் சிறு தெய்வமாக்கியது.’’(71) இயல்பான செவிவழிக் கதை இவளை ஒரு பொதுமகளாகச் சித்திரிக்கிறது. இவள் இயற்பெயர் ‘இலட்சுமி’ என்பதாகும். நகை மீது ஆசைக் கொண்டு இவளைக் கொன்று விடுகிறான் ஆசை நாயகன் ‘வேதியன்’. இவன் செல்லும் வழியில் பாம்பு கடித்து இறந்துவிடுகிறான். இலட்சுமியின் அண்ணன் தங்கையின் பிரிவு தாங்காது தீயில் விழுந்து இறந்து விடுகிறான். மூவரும் மறுபிறவி எடுக்கின்றனர். அண்ணனும் தங்கையும் சோழனுக்கு இரட்டைக் குழந்தையாகவும், வேதியன் காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு

வணிகனுக்கு மகனாகவும் பிறக்கின்றனர். இரட்டைக் குழந்தையாகப் பிறந்தவர்க்குப் பசி அடங்காது. இரவில் பேய் வடிவம் கொண்டு எருமை, பசு போன்ற விலங்குகளைத் தின்று பசிப் போக்கி விடியற்காலையில் பிள்ளையாக மாறித் தொட்டிலில் வந்து படுத்திடுவர். இச்செயலைச் சோழ மன்னன் உணர்ந்து இவர்களைக் காட்டில் விட்டுவிடச் செய்தான். அவ்வூர்க் காட்டு வேப்பமரத்தில் தங்கியிருந்த இலட்சுமியின் அண்ணன், அவ்வூர் மக்கள் மரத்தை வெட்டும் போது இறந்து விடுகிறான். இவள் மட்டும் தன் ஆசை நாயகனைப் பழி வாங்க அலைந்தாள்.

வணிக மகன் ஒருநாள் இவள் இருக்கும் வழியே வர நேர்ந்தது. கள்ளிக் கொம்பினைக் குழந்தையாக்கி, 'நான் உன் மனைவி' என்று குழந்தையைச் சாட்சியாகக் காட்டினாள். அவன் மறுக்கவே ஊர்ப் பஞ்சாயத்தைக் கூட்டி நியாயம் கேட்பேன் என்று கூறினாள். ஊர் மக்களும் இவளை நம்பினர். ஊர் மடத்தில் அன்று இரவு தங்கி இருந்த போது தான் எண்ணியதை முடித்தாள். பின்னர் வணிகனின் தாயாக வடிவம் எடுத்துத் தன் மகனைக் கொன்ற குற்றத்திற்காக ஊரார் அனைவரையும் அழித்துப் பழிதீர்த்துக் கொள்கிறாள். முடிவில் தென்னாட்டில் உள்ள 'முப்பந்தல்' என்னும் ஊரில் யாவரையும் நடுங்க வைக்கும் தெய்வமாக நிலை கொண்டாள்.

"குழந்தைக்காக இசக்கியிடம் நேர்ந்து கொண்டு பெண் குழந்தை பிறந்துவிட்டால், அம்மனுக்கு சிறப்பான சீர், சுளகு, கண்ணாடி, வளையல், சாந்து, மை, பொட்டு, பவுடர் பெட்டி போன்றவற்றைப் படையலாகப் படைக்கின்றனர். கள்ளிமரம் இசக்கியம்மனுக்குப் பிடித்த மரமாகும். ஒவ்வொரு கோயிலுக்கும் முன்னால் வெளிர் மஞ்சள் நிறத்தில் சின்னச் சின்னத் தொட்டில்கள் உள்ளன. சிற்றூர்ப் பெண்களின் குழந்தைகளுக்கான ஏக்கம் மற்றும் மங்கலான கனவுகள் போன்றவை தோன்றும். கையில் குழந்தையுடன் வீர்யம் காட்டும் இவ்வம்மன் குடும்பத்தில் பல தலைமுறைகளுக்கு முந்திய தாய் என்றும் அழைக்கின்றார்கள்."[72]

"சங்கொடு சக்கரம் தாங்கிடும் மாலவன்
சோதிரி ஆரலின் தேவியம்மா
கனி இல்லை என்றிட கடுஞ்சினம் கொண்டிட்ட
கந்தனின் எதிர்ப்புறம் இருப்பவளே
திருமகள் கலைமகள் மலைமகள் பெயரினைத்
தாங்கிடும் சக்தியே சாமுண்டி
ஜெய ஜெய சங்கரி பைரவி பூரணி
சாந்தஸ்வ ரூபிணி இசக்கியம்மா"(73)

என்று இசக்கியம்மனின் வரலாறு பற்றியச் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. திருவில்லிப்புத்தூரிலிருந்து எட்டு மைல் கல் தொலைவில் இத்தெய்வமானது அமைந்துள்ளது. சில இடங்களில் கட்டட அமைப்பில் இருக்கும். ஆனால் இக்கோயில் மரம் போன்ற அமைப்பில் காணப்படுகிறது.

கோயிலமைப்பு

கட்டட அமைப்பு இல்லாமல் மரத் தொட்டிலாகக் காணப்படுகிறது. ஒரு ஏக்கர் பரப்பளவில் வெட்டவெளியாகக் காணப்படுகிறது. தெய்வமாக வீற்றிருக்கின்ற மரத்தில் சுளகு, கண்ணாடி, வளையல், சாந்து, மை, பொட்டு, பவுடர் டப்பா போன்ற பொருட்கள் அமைந்து காணப்படுகிறது.

மேற்கண்ட தெய்வங்களின் வரலாற்றுச் செய்திகள் தாய்த் தெய்வங்களாக கருதப்பட்டாலும் அவை நீர்நிலை காவல் தெய்வமாகவும், பிடிமண் தெய்வமாகவும் கருதப்படுகின்றது.

கன்னித் தெய்வம்

பாம்பலம்மாள்

விருதுநகர் மாவட்டம் திருச்சுழிக்கு அருகிலுள்ள தாமரைக் குளம் என்னும் ஊரினைப் பூர்வீகமாகக் கொண்ட வீரநாக லட்சுமியும், அவருடைய மகள் வீரமத்தாளும், வீரமத்தாளின் முறை மாப்பிள்ளையும் பசுமாடுகளை மேய்த்துக் கொண்டு

பேயம்பட்டிக்கு வந்தனர். பேயம்பட்டி என்னும் ஊர் ஆலங்குளம் என்னும் ஊருக்கு அருகிலுள்ளது. இப்பகுதியில் பசுமாடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் பொழுது ஒருநாள் வீரமத்தாளின் முறை மாப்பிள்ளையைப் பாம்பு தீண்டியதால் இறந்து விட்டான். பாம்பு தீண்டியவரின் உடலை எரியூட்டுவதற்குப் பெரியோர்கள் மயானத்தில் கூடினர். அப்பொழுது வீரமத்தாள் எனக்கும் என்னுடைய முறை மாப்பிள்ளைக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றாலும் நான் அவரைக் கணவனாக நினைத்துவிட்டேன். அதனால் நான் உடன்கட்டை ஏறுவேன் என்று கூறினாள். ஊர்ப் பெரியோர்கள் தடுத்து விட்டுச் சிதைக்குத் தீமூட்டினார்கள். ஆனால் சிதையில் தீப்பற்றவில்லை. உடனே வீரமத்தம்மாள் ஊருக்குள் சென்று தன்னுடைய முந்தியில் நெருப்புக் கேட்டிருக்கின்றாள். மேல் சாதிக்காரர்கள் குடியிருக்கும் பகுதியில் நெருப்புத் தரமறுத்துள்ளனர். பின்னர் வீரமத்தம்மாள் ஆதிதிராவிடர்கள் குடியிருக்கும் பகுதிக்குச் சென்று தன் முந்தியில் நெருப்பு வாங்கிக் கொண்டு வந்துச் சிதைக்குத் தீ மூட்டினாள். சிதையில் தீப்பற்றி எரிந்தது. அதில் வீரமத்தம்மாள் உடன்கட்டை ஏறினாள்.

அவள் உடன்கட்டை ஏறியவுடன் சிதையிலிருந்து ஒரு சூலாயுதம் வெளியே வந்தது. சூலாயுதம் வெளியே வரும் பொழுதே வீர நாகலெட்சுமி இந்தச் சூலாயுதத்தை வைத்து வணங்கி வா; இரண்டு ஆண்டுகள் கழித்து உனக்கு ஒரு ஆண் வாரிசுப் பிறக்கும் என்று அசரீரி சொன்னது. அசரீரியின் படியே வீர நாகலெட்சுமிக்கு இரண்டு ஆண்டுகள் கழித்து ஓர் ஆண் குழந்தைப் பிறந்தது. அக்குழந்தையினைத் தூக்கிக் கொண்டு ஆலங்குளம் என்னும் ஊருக்கு அருகிலுள்ளப் பல்லாப்பட்டி என்னும் ஊரில் இப்பொழுது குடியிருக்கும் சடையாண்டித் தேவரின் முன்னோர்களிடம் சென்றாள். அவர்களிடம் தன்னுடைய குழந்தையினை ஒப்படைத்தாள். பின்னர் வீர நாகலெட்சுமி அவர்களுக்கு வாக்குக் கொடுத்தாள். இதுவரை உங்களுக்குக் குழந்தையில்லை.

என்னுடையக் குழந்தையை வளர்த்து வாங்க. உங்களுக்கு ஆண் குழந்தைப் பிறக்கும். நான் மகாலிங்க மலையில் ஒன்பது ஆண்டுகள் தவமிருக்கப் போகின்றேன். தவம் செய்து திரும்பி வரும் பொழுது என்னுடையக் குழந்தையை என்னிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று சொல்லி விட்டு தவமிருக்க மகாலிங்க மலைக்குச் சென்றுவிட்டாள்.

அவள் கூறியது போன்றே குழந்தையினை வளர்த்து வந்தவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்தது. இருவரின் குழந்தையினையும் வளர்த்து வந்தனர். ஒன்பது ஆண்டுகள் தவமிருந்து வரும்பொழுது வனபத்ரகாளி, பிலாவடி கருப்பன் ஆகியத் தெய்வங்களோடு வீரநாகலெட்சுமி அம்மாள் தன்னுடைய குழந்தையை வளர்த்துக் கொண்டிருப்பவரின் வீட்டிற்கு வந்தாள். அங்கு வந்து என்னுடைய குழந்தையைக் கொடுங்கள் என்று சடையாண்டித் தேவரின் முன்னோர்களிடம் கேட்ட பொழுது வீர நாகலெட்சுமி அம்மாளின் தோற்றம் மாறியிருந்ததனைப் பார்த்துத் தர மறுத்தனர்.

நான்தான் உங்களிடம் என்னுடைய குழந்தையைக் கொடுத்தேன். நீங்கள் வைக்கின்ற பெயரையே நான் கூப்பிடுகிறேன் என்றும் அவனை என்னோடு அனுப்பி வையுங்கள் என்றும் வீர நாகலெட்சுமி சொல்லியுள்ளாள். அதனை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதன்படி அவள் ராமசாமியை என்னோடு வாடா என்று சொல்லி அழைத்தாள். குழந்தை அவளோடு சென்றது. உடனே சடையாண்டித் தேவரின் முன்னோர்கள் சடைச்சியின் காலில் விழுந்து வணங்கி அடையாளம் மாறியிருந்ததனால் குழந்தையை அனுப்ப மறுத்தோம். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்றார். அவரை மன்னித்துவிட்டு நீ ஆண்டுதோறும் என்னுடைய குருபூசை நாளில் எனக்கு நேஞ்சிக்கட்டும் வனபத்ரகாளிக்கு ஒரு கிடாயும் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டாள். பின்னர் பேயம்பட்டிக்குச் சென்று

பாம்பலம்மாளுக்குக் கோயில் ஏற்படுத்தினாள். அதில் வனபத்ரகாளி பிலாவடிக் கருப்பினையும் இருக்கச் செய்தாள்.

"காயல்குடி ஆறும் பிள்ளையார்குளம் கண்மாயின் வடிகாலும் இணையுமிடமான கண்ணார்பட்டி என்னும் ஊர் நம்ம பாம்பலம்மாளின் கோயிலுக்கு ஏற்ற இடமாக இருக்கும் என்று எண்ணினார்."(74) அதன்பின்னர் ஊர் ஊராகச் சென்று வழிபாடு நடத்துவதால் ஊர்க் காவல் தெய்வமாகப் போற்றுகின்றனர்.

கோயிலமைப்பு

நான்குப் பக்கச் சுவர் அமைப்புடன் காணப்படுகிறது. மேல் பகுதி வெட்ட வெளியாகக் இருக்கின்றது. அம்மனின் சிலை பாம்பு வடிவத்தோடு உள்ளது. அம்மனின் இருபக்கமும் வனபத்ரகாளி, பிலாவடிக் கருப்பன் ஆகிய இரு தெய்வங்கள் இடம்பெற்றுள்ளன.

சேலைக்காரியம்மன் (செவிவழிக் கதைகள்)

இராமநாதபுரம் சமீன்தார் வீட்டில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு அண்ணன்மார்களும், ஒரு தங்கையும் வேலை செய்து வந்தனர். சமீன்தார் தன் தங்கையின் மீது ஆசைப்படுவதைப் பார்த்த அண்ணன்மார், தன் தங்கையையும் தங்களுடன் அழைத்துக் கொண்டு அத்திப்பட்டி என்ற சிற்றூருக்கு வருகின்றனர். இவ்வூர் மக்கள், தாங்கள் இவ்வூர் வந்த காரணம் என்ன? என்று கேட்டார்கள். இது நமக்கு அவமானத்தைத் தரும் எனக்கருதி, தன் அண்ணன்மார் வெளியில் போன சமயம் பார்த்து, இந்தப் பெண் ஒரு மரத்தில் தூக்குப் போட்டு இறந்துவிடுகிறாள். அவள் தூக்குப்போட்டு இறந்த மரத்தில் தெய்வ சக்திக்கு உண்டான அறிகுறிகள் காணப்படவே, அவ்வூர் மக்கள் அந்த இடத்தில் கோயில் கட்டி ஒரு பீடம் வைத்து இந்தப் பெண்ணைச் சேலைக்காரியம்மனாக வழிபடுகின்றனர்.(63)

சேலைக்காரி என்ற பெண்ணை அம்மனாக வழிபடுவதற்குக் காரணம்:

''கணவன் இறந்தவுடன் கணவனுடன் உடன்கட்டை ஏறியவள்; சந்தேகத்தின் பெயரில் வன்கொலை செய்யப்பட்டவள்; ஊரார்க்குப் பயந்து தற்கொலைச் செய்து கொண்டவள்.''[75]

மல்லிபுத்தூர் வட்டத்தில் மாயத்தேவன்பட்டியில் சேலைக்காரியம்மன் முத்தம்மாள் என்ற கோயில் 200 ஆண்டுகட்கு முன்பு தோற்றுவிக்கப்பட்டது. சிவகாசியிலிருந்து இரண்டு கல் தொலைவில் கோப்பைய நாயக்கன்பட்டியிலிருந்து பிடிமண் எடுத்து வந்து பீடம் அமைத்தனர். இத்தெய்வத்தை ''இறந்த ஒரு பெண்ணின்''[76] நினைவாக மாயத்தேவன்பட்டியில் வசிக்கின்ற ஆசாரி மற்றும் பிள்ளைமார் இனத்தவர்கள் வணங்கி வருகின்றனர். இறந்த பெண்ணின் நினைவாகத்தான் சேலைக்காரியம்மன் முத்தம்மாள் என்ற பெயரில் ஆலயம் அமைத்துள்ளனர்.

கோயிலமைப்பு

ஆரம்பத்தில் சிறிய பீடமாக இருந்தது. பின்னர் 1984இல் பெரிய கட்டட அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. பீடமானது கல்தூண் போன்றுள்ளது. அதில் தீபம் ஏற்றி வழிபாடு செய்கின்றனர்.

சீலைக்காரி அம்மன்

'' 'சேலை', 'சீலை', 'சீரை' என்ற சொற்கள் ஆதியில் பொதுவாகத் துணி என்பதையே குறித்தது என்று கலைக்களஞ்சியம்''[77] குறிப்பிடுகின்றது.

பிள்ளை இனத்தார்களுக்குச் சேலைக்காரியம்மன் குல தெய்வமாகும். சமீன் பரம்பரையில் வந்த நாயக்கர் ஒருவர் பிள்ளைமார் இனத்துப் பெண்ணை மணம் செய்ய முற்படுகிறார். இதனைத் தடுக்கும் முகத்தான் அலங்கரிக்கப்பட்ட அப்பெண் பூமி பூசையின் காரணமாக உயிரோடு குழி தோண்டிப் புதைக்கின்றார்கள். இதன் காரணமாக அப்பெண்ணைத் தெய்வமாக வழிபடுகின்றனர்.

"மகாராட்டிரத்தில் மட்டும் தேவாங்க முனிவனை அசுரர்களிடமிருந்து காப்பாற்றியவள். அவர் அசுரர்களை வென்ற நாள் அமாவாசை இரவாகும். ஆகையால் அந்நாளில் மட்டும் நெசவு செய்யாமல் அம்மனை வழிபடுகின்றனர்."[78]

"இளம் வயதில் இறந்தப் பெண்மணிகளைத் தெய்வமாக வழிபடும் வழக்கம் இருந்து வருகிறது. அவ்வழிபாட்டின் போது சேலை (சீலை) வைத்துக் கும்பிடுவதால் சீலைக்காரி என்றழைப்பர்."[79] இத்தெய்வத்தை வீட்டுத் தெய்வம் என்றும் கூறுகின்றனர். வீட்டுத் தெய்வமாக இருந்த போது அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் மட்டும் அம்மனை வணங்கி வந்தார்கள். இன்று நிலை மாறியுள்ளது. தங்களுக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் அமைத்தாலும், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இத்தெய்வத்தை வணங்கி வருகின்றனர். இக்கோயில் திருவில்லிப்புத்தூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் கம்மாபட்டி என்ற இடத்திலுள்ளது.

கோயிலமைப்பு

சிறிய கட்டட அமைப்புடன் காணப்படுகிறது. சிறிய கல்தூண் போன்ற அமைப்பில் உள்ளது. கல்தூணைச் சுற்றி மஞ்சள் நிறப் பட்டாடை அணிவித்துள்ளனர்.

பிடிமண் தெய்வம்

புலம்பெயரும் சூழலில் வாழுமிடத்தில் தங்களுக்கென்று ஒரு தெய்வம் வேண்டுமென்பதற்காகச் சில சமூகத்தினர் பிடிமண் எடுத்து வந்து வழிபட்டு வருகின்றனர். காளியம்மன், சமயபுர மாரியம்மன், திருவீரமாகாளியம்மன், திரு கோட்டைப்பட்டிக் காளியம்மன், மாரியம்மன், வடபத்ர காளியம்மன், அக்கினி மாரியம்மன் போன்றத் தெய்வங்கள் பிடிமண் தெய்வங்களாகும்.

காளியம்மன்

திருவில்லிப்புத்தூரிலிருந்து வன்னியம்பட்டி செல்லும் சாலையில் காளையார்குறிச்சிக்குப் பக்கத்தில் இவ்வாலயமானது 100 வருடத்திற்கு முன்பு தோற்றுவிக்கப்பட்டது. பரிவாரத் தெய்வங்கள் விநாயகர், முருகன், வள்ளித் தெய்வானையுடன் காட்சியளிக்கின்றார். இவ்வம்மனை இசைவேளாளர் இனத்தவர்கள் ஆரம்பக் காலக்கட்டத்திலிருந்து இன்றைய காலக் கட்டம் வரை அவர்கள் கொண்டாடுகின்றார்கள். வெக்காளியம்மன் கோயிலிருந்து பிடிமண் எடுத்து வந்து சிலை வடித்துள்ளனர்.

கோயிலமைப்பு

நான்குப் பக்கச் சுவர் அமைப்புடன் பெரிய கட்டடமாகக் காட்சியளிக்கின்றது. கோயிலின் முன் வாசலில் விநாயகர் சிலை உள்ளது. விளக்குப் பூசை நடைபெறுவதற்காகக் கருவறையின் முன்பகுதி சற்று அகலமாகக் காணப்படுகிறது. சிறப்பு வழிபாட்டின் போது அம்மனை வழிபடுவதற்காக வாசலின் உட்பகுதியில் ஊஞ்சல் அமைத்துள்ளனர்.

கல்வெட்டு

"அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகமும் ஸ்ரீசுப்பிரமணி, வள்ளி, தெய்வானை பிரதிஷ்டையும் 1167-ம் ஸ்ரீஆங்கிரஸ் ளு ஆனி மீ 18-ம் (2.7.1992) வியாழக்கிழமை தமிழ்நாடு சர்வோதைய சங்க பொருளாரும், இராமநாதபுரம் மாவட்ட சர்வோதய சங்க சேர்மனுமான திரு த. ரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது."(80) என்கின்றனர்.

சமயபுர மாரியம்மன்

மம்சாபுரத்திலிருந்து மேலூருக்குச் செல்லும் வழியில் 15 வருடத்திற்கு முன்பு இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளது. மம்சாபுரத்தில் நாடார் இனத்தவர்கள் மாரியம்மனைத் தெய்வமாக

வழிபட்ட போது மறவர் தாங்களும் வழிபட அனுமதி தர வேண்டும் என்று கூறினர். ஆனால் அதற்கு அவர்கள் மறுப்புத் தெரிவித்துக் கொண்டே வந்தார்கள். இதனால் வெறுப்படைந்த மறவர் இனத்தவர்கள் தங்களுக்கென்று தெய்வம் வேண்டுமென்பதற்காகச் ''சமயபுரம் சென்று அங்கிருந்து பிடிமண் எடுத்து வந்து மேலூர் செல்லும் சாலையில் அமைத்துள்ளனர்.''(81)

கோயிலமைப்பு

ஆரம்பக் காலக்கட்டத்தில் சிறிய மேடையின் மேல் பீட அமைப்புடன் காணப்பட்டது. பிற்காலத்தில் சிலை வடித்துள்ளனர். அதற்குப் பக்கத்தில் விளக்கேற்றுவதற்குச் சிறிய கல்தூண் விளக்கு அமைத்திருந்தார்கள். இன்றைய நிலையில் நான்குப் பக்கச் சுவர் அமைப்பில் கதவுடன் கோயிலாகக் காட்சியளிக்கின்றது.

ஸ்ரீவீரமாகாளியம்மன்

அத்திக்குளம் என்ற சிற்றூரிலிருக்கும் காளியம்மன் கோயிலிருந்து பிடிமண் எடுத்து வந்து பீடம் அமைத்தனர். இக்கோயில் ''திருவில்லிப்புத்தூரிலிருந்து சிவகாசி செல்லும் சாலையில் தைலாகுளம் என்ற சிற்றூரில் உள்ளது. இவ்வம்மனை மறவர் இனத்தவர்கள் வழிபட்டு வருகின்றனர்.''(82) 122 ஆண்டுகட்கு முன்பு தோன்றியது. பீடம் அமைப்பில் காணப்படுகின்றது. இக்கோயில் பரிவாரத் தெய்வங்களான வீரபத்ரசுவாமி, கருப்பசாமி, விநாயகர் போன்றவை காணப்படுகின்றன. கோயிலுக்கு மானியம் (மானம் பாரிகாடு) உண்டு. பூசாரி திருவேங்கடத் தேவர் பாடுபட்டு வருகின்றார்.

கோயிலமைப்பு

சிறிய பீடத்தில் அம்மன் மட்டும் நிற்கின்ற உருவத்தில் காட்சியளிக்கின்றார். நான்குப் பக்கச் சுவர் அமைப்புடன் மண்டபம் அமைந்துள்ளது. இரண்டரை ஏக்கர் பரப்பளவில் உள்ள ஆலயமானது தற்போது (26.1.2008) சுமார் 4½ லட்சம் செலவில்

கோயில் திருப்பணிக் கோபுரத்துடன் கூடிய பெரிய குடமுழுக்கு நடைபெற்றது. கோயிலின் முன் தோற்றம் இரண்டு சிங்க வாகனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வலதுபக்கம் விநாயகரும், இடதுபக்கம் முருகனும் வீற்றிருக்கின்றார்கள். இவ்வாலயத்திற்குக் காவல் தெய்வமாக வீரபத்ரசுவாமியும், கருப்பசாமியும் உள்ளனர். கோயிலின் உட்புறம் நான்குப் பக்கமும் சலவைக் கற்களைப் பதித்துள்ளனர்.

கோட்டைப்பட்டிக் காளியம்மன்

மங்காபுரத்திலிருக்கும் பத்ர காளியம்மன் கோயிலிருந்து பிடிமண் எடுத்து வந்து பீடம் அமைத்துள்ளனர். இக்கோயில் திருவில்லிப்புத்தூரிலிருந்து செண்பகத் தோப்புக்குச் செல்லும் வழியில் கோட்டைப்பட்டி என்ற சிற்றூரில் அமைந்துள்ளது. இக்கோயிலில் அம்மன் உருவமைப்பில்லாமல் பீடமாகக் காட்சியளிக்கின்றாள். 40 ஆண்டுகட்கு முன்பு வாரம் ஒரு முறை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மட்டும் பூசை நடைபெறும். இக்கோயிலில் பீடமாகக் காட்சியளிக்கின்ற அம்மனை 1981ஆம் ஆண்டு மட்டும் வழிபட்டனர். அதன் பின்னர் தனக்குச் சிலை அமைக்க வேண்டும் என்று கோயில் பூசாரியிடம் கனவில் வந்து கூறிய போது அதைத் தேவேந்திர குல வேளாளர் இனத்தவர்கள் மறுத்துவிட, அங்குள்ள மக்களுக்கு நோயை உண்டாக்கி அதைக் குணப்படுத்த எனக்குச் சிலை வைக்க வேண்டும் என்று கூறியது. மக்கள் அந்நோயைக் குணப்படுத்தினால் உடனே ஏற்பாடு செய்கின்றோம் என்று கூறினார்கள். அதன் பின்பு 1982ஆம் ஆண்டு சிலை வைத்துப் பூசைகள் நடைபெற்றது. “இக்கோயிலில் ‘நல்ல பாம்பு’ குடி கொண்டுள்ளது. இதை வணங்கினால் தனக்குத் தீங்கு நீங்கும் என்று நம்பி பால், முட்டை போன்றவற்றைப் படைக்கின்றனர்.[83]

கோயிலமைப்பு

ஆரம்பக் காலக்கட்டத்தில் பீடமாகக் காட்சியளித்தது. இன்றைய நிலையல் சிலை அமைப்புடன் காணப்படுகிறது. கோயிலின் முன்பு கல்யாண விநாயகர் சிலை உள்ளது. கோயிலின் மொத்த பரப்பளவு இரண்டு ஏக்கர் அமைப்புடையது. கோயிலின் முன்பு பாம்புப் புற்று உள்ளது.

மாரியம்மன்

"மாரியம்மன் சிலை கழுத்திற்கு மேலுள்ள முகத்தில் ஒருவித தேஜசும், ராஜவம்சக் களையும் கழுத்திற்குக் கீழுள்ள உடம்பில் ஒரு ஏழ்மையும், பாமரத்தனமும் காணப்படும். இருவேறு மாறுபட்ட அம்சங்கள் சேர்ந்ததுதான் மாரியம்மன்."[84]

"கரகம் பிறந்தது கண்ணனூர்
வேம்பு பிறந்தது விசய நகர்ப்பட்டணம்
சூலம் பிறந்தது துலங்குமணி மண்டபம்
சிலம்பு பிறந்தது சிவாலிங்கப் பாறை
அலகு பிறந்தது அயோத்தி நகர்ப் பட்டணம்
பிறம்பு பிறந்தது பிச்சாண்டி சந்நிதி
உடுக்கைப் பிறந்தது உருத்திராசடி பூமி
பம்பைப் பிறந்தது பளிங்கு மண்டபம்"[85]

போன்ற காட்சியமைப்புடன் அம்மன் காட்சியளிக்கின்றாள். "மாரியம்மன் மற்றும் அய்யனார் போன்ற தெய்வங்கள் இடைநிலைப் பட்ட தெய்வங்கள் என்றும் கூறுவர்."[86]

இக்கோயில் திருவில்லிபுத்தூரில் திருமுக்குளத்துக்குப் பக்கத்தில் சந்தியக் கிணறு என்ற இடத்தில் அமைந்துள்ளது. யாதவ (கோனார்) இனத்தவர்கள், "திருவில்லிப்பூத்தூரில் உள்ள பெரிய மாரியம்மன் கோவிலில் இருந்து பிடிமண் எடுத்து வந்து அம்மன் சிலையை உருவாக்கினார்கள். பொதுவான பிடிமண் எடுத்து வந்து பீடம் அமைத்தப் பின்னர் சில வருடங்களுக்குப் பிறகுச் சிலை

வடிப்பார்கள். ஆனால் இக்கோயிலில் ஆரம்பக் காலக்கட்டத்திலிருந்தே சிலை அமைப்புடன் காணப்படுகிறது''[87] இதற்குப் பரிவாரத் தெய்வங்கள் கிடையாது. இவ்வாலயம் மூன்று தெருக்கள் இணைகின்ற இடத்தில் கிணறு உள்ளதால் சந்தியக் கிணறு என்ற பெயர் பெற்றுள்ளது.

கோயிலமைப்பு:

நான்குப் பக்கச் சுவர் அமைப்பின் நவீன ஓடு (Tiles) அமைப்புடன் காணப்படுகிறது.

கல்வெட்டுச் செய்தி

மாரியம்மன் மகா கும்பாபிஷேக குடமுழுக்கு விழா 11.5.1990 கொல்லம் ஆண்டு 1165 சித்திரை 28ம் தேதி வெள்ளிக்கிழமை அனுஷ நட்சத்திரத்தில் யாதவர் இன மக்களால் அமைக்கப்பட்டுள்ளது.

வடபத்ர காளியம்மன்

ஆத்துக்கடைப் பகுதியில் நாயக்கர் இனத்தவர்கள் தங்கள் குல தெய்வமாகக் கொண்டாடுகின்ற ''வடபத்ர காளியம்மன் கோயிலிருந்து குறவர் இனத்தவர்கள் பிடிமண் எடுத்து வந்து திருமுக்குளப் பகுதியில் தங்களுக்கென்று கோயில் அமைத்துள்ளனர்.'' இககோயிலில் மூல தெய்வமாக வடபத்ர காளியம்மன் காட்சியளிக்கின்றாள். பரிவார தெய்வங்கள் இல்லை. பிற கோயிலுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது. ஆரம்பத்தில் பீடம் அமைத்து வழிபட்ட குறவர் இனத்தவர்கள் பின்னர் சிலை வடித்து வழிபாடு செய்கின்றனர்.

கோயிலமைப்பு

கோயில் சிறியதாக உள்ளது. திருவிழாக் காலங்களில் மட்டும் கோயிலின் அருகே வெட்ட வெளியாக உள்ள இடத்தில் விழா கொண்டாடுகின்றார்கள். இக்கோயிலைச் சுற்றி குறவர்

இனத்தவர்கள் மட்டும் வசித்து வருகின்றனர். ஆகையால் விழாவினை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். இவர்களின் தொழில் கூடை முடைதல், பாசிமணி (கோர்த்தல்) தயாரித்தல் போன்றவையாகும்.

அக்னி மாரியம்மன்

மம்சாபுரத்தில் அமைந்துள்ள அக்னி மாரியம்மன் கோயிலில் இருந்து பிடிமண் எடுத்து வந்து திருவில்லிப்புத்தூரிலிருந்து மூன்று கல் தொலைவில் கீழூர் என்ற இடத்தில் அக்னி மாரியம்மன் கோயில் அமைத்தனர். இவ்வம்மனைப் பறையர் சமூகத்தினர் வழிபட்டு வருகின்றனர். நினைத்த காரியம் நல்லபடியாக நடந்தால் இவ்வினத்தவர்கள் இக்கோயிலில் அன்னதானம் செய்கின்றனர்.''[89] இக்கோயிலில் உள்ள அம்மன் பார்ப்பதற்குப் பார்வதிதேவி சிங்க வாகனத்தில் அமர்ந்திருப்பது போல் காட்சியளிக்கின்றாள். பிற இனத்தவர்கள் வழிபட்டாலும் தங்கள் இனத்தவர்கள் மட்டுமே திருவிழாக் கொண்டாட வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

கோயிலமைப்பு

நான்குப் பக்கச் சுவர் அமைப்புடன் காணப்படுகிறது. கருவறையின் மேல் தளம் மட்டும் மூடப்பட்டுக் காணப்படுகிறது. மற்றப் பகுதிகள் வெட்ட வெளியாக இருக்கின்றன. நுழைவாயிலின் முன் பகுதியில் பெரிய இரும்புக் கதவு அமைத்துள்ளனர். குடிநீர் வசதியும் உள்ளது. சலவைக்கற்களாலான நவீன ஓடு தளம் போடப்பட்டுள்ளது.

பேமலையம்மன்

மம்சாபுரத்தில் பேமலையம்மன் மேற்கு மலைத் தொடரில் தோன்றியவர் என்று கூறுவர். இவ்வாலயம் 130 ஆண்டுகட்கு முன் தோன்றின. புறம் போக்கு நிலத்தில் அம்மன் இருப்பதை விரும்பாத கோயில் கொண்டாடிகள் வேறு இடத்தில் அம்மனை வைத்து வணங்க விரும்பியிருக்கின்றனர். ''பிள்ளைமார் இனத்தைச் சேர்ந்த

ஐந்து பேர் இத்தெய்வத்தைத் தூக்கி வண்டியில் வைத்துக் கொண்டு வேறு இடத்திற்குக் கொண்டு சென்றனர். அப்பொழுது செவல்காடு பகுதிக்கு வரும் முன்பு இரண்டு கல் தொலைவில் உள்ள ரெங்கப்ப நாயக்கர் குளத்துக் கால்வாய்ப் பகுதிக்கு வந்ததும் மாடுகள் நின்றுவிட்டன. எவ்வளவோ முயன்றும் வண்டியை நகர்த்த முடியவில்லை. எட்டாம் நாள் சின்ன முத்துப்பிள்ளை என்பவர் மீது அருள் வந்து முதலில் தன்னை வணங்க வேண்டும் எனவும், தன் இருப்பிடத்தைக் காட்டவே அவ்வாறு செய்ததாகவும் கூறிச் சித்தன்புதர் என்னும் இடத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அப்புதருக்குள் ஒரு சிவலிங்கம் இருக்கின்றது என்று மருளாடி கூறியது போன்றே முதலில் அங்குப் பூசை செய்யவே வண்டிகள் நகர்ந்து விட்டன. மீண்டும் அவ்விடத்தில் பூசை செய்து தற்பொழுது கோயிலுள்ள இடத்தில் சாமிகளை வைத்து விட்டனர். பேமலையம்மன் கோயில் தற்போது சித்தன் புதரிலிருந்து சுமார் 100 மீட்டர் தூரத்தில் உள்ளது.'[90]

கோயிலமைப்பு

கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. தென் வடமாக மூன்று கோயில்கள் உள்ளன. வடபகுதியில் உள்ள கோயிலில் பேமலையம்மனும் அதற்கு அடுத்துத் தெற்கே அமைந்துள்ள கோயிலில் லாட தன்னாசியும் அதற்கும் தெற்கே உள்ள கோயிலில் சபரி மலையும் இருக்கின்றனர். கோயிலின் சற்றுக் கிழக்கே தெற்கிலும் வடக்கிலும் எதிர் எதிராக இரு கோயில்கள் உள்ளன. இவ்விரு கோயில்களையும் தகரக் கொட்டகை இணைக்கின்றது.

வடதிசையில் உள்ள கோயிலில் புதியவன் சாமியும், தென்திசையில் உள்ள கோயிலில் வைரவன்சாமியும் ஒருவரை ஒருவர் நோக்கி இருக்கின்றனர். அதற்கும் கிழக்கே மேற்கு நோக்கி ஒரு கோயில் இருக்கின்றது. இக்கோயிலில் சின்ன முத்துப்பிள்ளையின் பிள்ளைகள் சித்தன்நாதன், பொன்னையா ஆகியோர் தெய்வங்களாக உள்ளனர்.

சந்தன மாரியம்மன்

திருவில்லிப்புத்தூர் அருகே உள்ள திருமலாபுரம் மற்றும் ரெங்கநாதபுரத்திற்கும் பாத்தியப்பட்ட இக்கோயில் பெரியகுளம் கண்மாயின் கரையில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் சித்திரை மாதத்தில் அமாவாசை அன்று தீ மிதித்தல் (பூக்குழி) விழா வெகுச் சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்விழாவிற்குச் சுற்றி இருக்கும் "பட்டி, தொட்டி சிற்றூர்களிலிருந்து சுமார் 10,000 பேர் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டுச் செல்வார்கள்."[91] இவ்வாலயம் பிறக் கோயிலாகிய மம்சாபுரத்திலுள்ள சந்தன மாரியம்மன் கோயிலுடன் தொடர்புடையது. இங்கு விழா ஆரம்பமாகும் போது இங்கிருந்து மம்சாபுரத்திலுள்ள சந்தன மாரியம்மன் ஆலயத்திற்கு அம்மனை ஊர்வலமாகக் கொண்டு வருவார்கள். இக்கோயில் பழமையானக் கோயிலாகக் காணப்படுகிறது.

கோயிலமைப்பு

கோயிலின் வாயிற்கதவு பெரியதாக அமைந்துள்ளது. கருவறை நேராக பெரிய கொடிமரம் அமைந்துள்ளது. கிழக்குப் பக்கமாகக் குதிரையில் அமர்ந்தபடி அய்யனார் சிலை உள்ளது. கோயிலின் முன்பு குளம் ஒன்று உள்ளது. அக்குளத்தில் பூக்குழி இறங்கும் இடம் அமைந்துள்ளது. குளத்தின் நடுப்பகுதியில் சொல் கேட்டான் விநாயகர் சிலை தற்பொழுது அமைத்துள்ளனர்.

காவியம்மன்

கோட்டைப்புறம் சைவ செட்டியார் இனத்திற்குப் பாத்தியப்பட்டது. இவ்வாலயம் 400 வருடத்திற்கு முன்புத் தோன்றியது. "இத்தெய்வமானது சுயம்புவாக நிலத்தில் புதைந்துக் கிடந்ததாக அக்காலச் செப்பேடுகள் கூறுகின்றன."[92] ஆரம்பக் காலக்கட்டத்தில் அந்தச் செப்பேடுகள் பாதுகாக்கப்பட்டது. இத்தெய்வமானது செட்டியக்குடித் தெருவில் உண்டானதால் அந்த

இனத்தவர்கள் கொண்டாடுகின்றனர். இவ்வாலயமானது 'இராணி மங்கம்மாள் காலத்தில் உருவானது' என்றும் கூறுகிறார்கள்.

கோயிலமைப்பு

இராணி மங்கம்மாள் காலத்திலிருந்து இக்கோயில் சிறியதா உள்ளது. கோயில் விரிவுப்படுத்தப்படவில்லை.

கல்வெட்டுச் செய்தி

1176-ம் ஆண்டு ஸ்ரீவிக்ரம வருடம் கார்த்திகை மாதம் 23-ம் தேதி 8.12.2000 வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது என்று குறிப்பிடுகிறது.

செவல் பேமலையம்மன்

தென்தமிழ் நன்னாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதியில் மம்சாபுரத்திற்கு மேற்கே உலக மக்களைக் காக்கும் பொருட்டு "அன்னை ஆதிபராசக்தியின் அம்சமாக இவ்வுலகில் அவதரித்தது அருள்மிகு ராக்காச்சியம்மன். பளிச்சி, பெரிய மலையம்மன் என்னும் திருநாமங்களைக் கொண்டு விளங்கும் அன்னை, பரம்பொருளாகிய சிவபெருமானின் அருளைப் பெரும் பொருட்டுச் சதுரகிரி மலையில் தவமிருந்து பின் சிவபெருமானின் ஆணைப்படித் தென்திசை நோக்கி வந்து மம்சாபுரத்திற்கு மேற்கே அடர்ந்த மரங்களின் புதருக்குள் சுயம்புவாக அவதரித்தார்."[93] இக்கோயில் 300 ஆண்டுகட்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டது. பரிவார தெய்வங்களாக விநாயகர், பைரவர், புதியசுவாமி, தன்னாசி போன்ற தெய்வங்கள் உள்ளன. பிள்ளைமார் இனத்தவர்கள் மட்டும் திருவிழா கொண்டாடுகின்றனர். புதருக்குள் சுயம்புவாக அவதரித்ததால் புதையுண்டத் தெய்வமாகக் கருதுகின்றனர்.

கோயிலமைப்பு

கோயிலின் கன்னி மூலையில் விநாயகர் ஆலயம் அமைந்து உள்ளது. தென்கிழக்கு மூலையில் செவல் பேமலையம்மன் ஆலயம்

இருக்கின்றது. ஆலயத்தின் வாயிற் பகுதியில் பைரவர், புதிய சுவாமி சிலை அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் முன் பகுதியில் 36 அடி அகலமும் 37 அடி நீளமும் கொண்ட முன் மண்டபம் உள்ளது. ஆலயத்தின் அனைத்துக் கருவறைகளிலும் சலவைக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. தற்போது குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது.

செவல் பேமலையம்மன் துதி

"தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பாரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் செவல் பேமலையம்மன்
கடைக்கண்களே"

கல்வெட்டுச் செய்தி

நாளது மங்களகரமான ஸ்ரீசர்ஜித்து வருடம் ஆவணி மாதம் 14ந் தேதி (31.08.2007) வெள்ளிக்கிழமை திரிதியை திதியும் ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக தினத்தில் அன்று காலை 9 மணிக்கு மேல் 9.30 மணிக்குள் நடைபெற்றது.

காளியம்மன்

காளியின் தோற்றம் மற்றும் வளர்ச்சிப் பற்றிப் பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன. இவற்றில் "தக்கனின் வேள்வியை அழிப்பதற்காகத் தேவியின் சினத்தீயில், காளி தோன்றினாள் என்றும் இவள் வீரபத்திரனை மணந்தாள் என்றும், சப்த மாதர்களில் ஒருத்தி"(94) என்றும் கலைக்களஞ்சியம் காளியின் நிலைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

காளியின் தோற்றம் குறித்து மற்றொரு கதையும் வழங்கி வருகிறது. "துருவாச முனிவரின் சாபத்தின்படி மதலோலை என்ற தேவருலகப் பெண் அம்பரன், அம்பன் என்னும் இரு அசுரர்களை மக்களாகப் பெற்றாள். அம்பரனும் அம்பனும் அசுரர்களானமையால்

திருமணம் செய்யாமலேயே பல திசைகளிலும் சென்று அழகான மகளிரை அடைந்து களித்தனர். அவர்களின் செயல்களைக் கண்டு வெகுண்ட தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். அவ்விரு அசுரர்களையும் அழிக்க சிவன் தன் துணைவியாகிய உமாதேவியையும் தம் மைத்துனராகிய திருமாலையும் அனுப்பி வைத்தார். உமாதேவியார் அவ்வசுரர்களை அழிக்கத் தம் அம்சமாகக் காளியைப் படைத்தார்.''[95]

''சக்தியையும் - காளியையும் தொடர்புப்படுத்தி மற்றொரு கதையும் வழங்கி வருகிறது. பிரம்மா சிவன் என்ற இரு கடவுளருடைய சினமும் அதிகமாகிடவே திருமாலின் முகத்திலிருந்து பெரிய ஒளி உண்டாயிற்று. அதன்பின் சிவனிடமிருந்து சக்தி ஒளியும், பிரம்மா மற்றும் எல்லாத் தேவர்களின் அம்சங்களிலிருந்தும் அவரவர் சக்திகளும் தோன்றின. இச்சக்திகளின் ஒளிகள் ஒன்றாயின. அவ்வொளி தனது பொலிவினாலேயே பெண் உருவாயும் மூவுலகிலும் பரந்து நிற்கின்ற தாயாகவும் காணப்பட்டது. சிவனது ஒளியினால் காளியின் முகம் உண்டாயிற்று. எமனது ஒளியினால் கூந்தலும், திருமாலின் ஒளியினால் கைகளும் உண்டாயின. நிலவின் ஒளியினால் இரு கொங்கைகளும், இந்திரனின் ஒளியினால் இடையும் தோன்றின. வருணனின் சக்தி முழங்காலாகவும், தொடையாகவும் ஆயிற்று. அதன்பின் பூமியின் தன்மையில் புறப்பாகம் ஏற்பட்து. பிரம்மனின் நிலையில் கால்கள் வரப்பெற்றன. கதிரவனால் கால் விரல்களும், எட்டு வசுக்களால் கைவிரல்களும் எழுந்தன. குபேரனின் வழியாக மூக்கும், பிரசாபதியால் பற்களும், அக்கினியால் மூன்று கண்களும் உண்டாயின. சந்தியாநிலை புருவங்களையும், காற்று காதுகளையும் கொடுத்தன. இன்னும் பல தேவர்களது உதவிகளும் காளியின் தோற்றத்திற்குக் காரணமாகும்.''[96]

சங்க இலக்கியங்களில் 'காளி' என்ற சொல் காணப்படவில்லை. சிலப்பதிகாரத்தில் 'காளி' என்னும் பெயர் காணப்படுகிறது.

"அடர்த்தெழு குருதி யிடங்காப் பசுந்துணிப்
பிடர்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக கொற்றவையல்லள்
அறுவர்க்கிளைய நங்கை இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி[71]

என்ற பாடலடிகள் கொற்றவை மற்றும் காளி என்ற பெயர்களை அறிமுகப்படுத்துகின்றன.

காளியம்மன் ஊரைக் காக்கும் தெய்வமாகக் கருதப்படுவதால் திருவில்லிப்புத்தூரிலிருந்து ஆறு கல் தொலைவில் இடையன்குளம் என்ற சிற்றூரில் மூல தெய்வமாக வீற்றிருக்கின்றாள். இச்சிற்றூரில் மேய்த்தல் தொழிலைச் செய்கின்ற இடையர்கள் வசித்து வந்ததால் இடையர்குளம் என்ற பெயர் பெற்றது இடையன்குளமாக மாறிவிட்டது. ஆரம்பக் காலக்கட்டத்தில் சுமார் 400 ஆண்டுகட்கு முன்னர் கோனார் இனத்தவர்கள் இப்பகுதியில் வாழ்ந்து வந்து போது அவ்வூர் பெரியவர் ஒருவர் கனவில் வந்து இவ்விடத்தில் புதையுண்ட அம்மனை வெளியே எடுத்து வைத்து வழிபாடு செய்ய வேண்டும் என்று கூறியது. காரணம் அவ்வூர் சமீன்தாரின் கனவில் அம்மன் தோன்றியதால், ஊர் மக்கள் அத்தெய்வத்தை வழிபாடு செய்து வந்தனர். நாளடைவில் அத்தெய்வமானது சக்தி வாய்ந்த அம்மனாகத் திகழ்ந்ததால் வருடந்தோறும் விழாக் கொண்டாடினார்கள். அதன்பின்னர் சமீன்தார் இறந்தவுடன் அவர்களால் வழிபாடு செய்ய முடியவில்லை. காரணம் அவ்விடத்தில் வசித்து வந்த கோனார் இனத்தவர்களைத் தேவேந்திர குல வேளாளர்கள் விரட்டி விட்டனர். அதன் பின்னர் அத்தெய்வத்திற்கு வழிபாடு செய்ய வேண்டும் என்று நினைத்து விழா எடுத்த போது அவர்களை ஆலயத்துக்குள் செல்லவிடாமல் தடுத்துவிட்டது. இதனை அறிந்த தேவேந்திரகுல வேளாளர்கள் வருதி (அருள்) கேட்ட போது கோனார் இனத்தவர்கள் எனக்கு வழிபாடு செய்ய வேண்டும் இல்லையென்றால் வேறுயாரும்

வழிபாடு செய்யக்கூடாது என்று கூறியது. இதனை இவ்வினத்தவர்கள் பூசைச் செய்வதற்கு மட்டும் கோனார் இனத்தவரை அனுமதித்தனர். விழாவினை மட்டும் இவ்வினத்தவர்கள் வருடந்தோறும் கொண்டாடுகின்றனர். இவர்கள் யாரும் கோயிலுக்கு உள்ளே செல்ல அனுமதி இல்லை. வெளியே நின்று தான் சாமி கும்பிடுகின்றார்கள்.

“குழந்தைப் பேறு இல்லாதப் பெண்களுக்கு அக்கோயிலில் சாமியாடுகின்ற பெண் சாமியார் அம்மனின் அருள் (வருதி) வாக்கு தந்த பிறகு ஐந்து வெள்ளிக்கிழமை அக்கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வதால் குழந்தை பிறக்கும் என்பது தனிச் சிறப்பாகும்.”[98]

குழந்தை இல்லாதப் பெண்கள் ஈரச் சேலையுடன் அக்கோயிலை மூன்றுமுறை வலம் வந்து, பெண் சாமியார் கொடுக்கின்ற வேப்பிலைச் சாறினைக் கிழக்குப் பார்த்து அருந்த வேண்டும். இதே போல் ஐந்து வெள்ளிக்கிழமைச் செய்தால் குழந்தைப் பாக்கியம் உண்டாகும் என்பது அவ்வூர் மக்களின் நம்பிக்கை. அக்கோயில் மரத்திலிருந்து வேப்பிலையைப் பறித்து ஆலய வாசலில் வைத்து அரைத்து, அதில் எலுமிச்சைச் சாறினைப் பிழிந்து அம்மனின் பிரசாதத்தைச் (விழுதி) சேர்த்து அருந்தச் சொல்கின்றார்கள். ஆலயத்தின் பூசாரியாக கோனார் இனத்தவர்கள் இருப்பதால் அவ்வினத்தவர்களின் குடும்ப வாரிசு மட்டும் தான் பூசாரியாக இருந்து வருகின்றனர்.

கோயிலமைப்பு

இக்கோயிலானது ஆரம்ப காலக்கட்டத்தில் சிறிய கோயிலாக இருந்தது. பின்னர் நான்குப் பக்கச் சுவர் அமைப்புடன் பெரிய கோயிலாக அமைத்துள்ளனர். அம்மனின் சிலையானது 13¾ அங்குலம் உள்ளது. வடக்கு வாசல் பார்த்து அமைந்துள்ள ஆலயத்தில் விநாயகர் மட்டும் கிழக்கு நோக் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கி ஆலயத்தின் வெளிப்பகுதியில் நாகர் சிலையும் உள்ளது. சிலையின் மேற்பகுதியில் முள் மரம் குடையாக

அமைந்துள்ளது. குழந்தை இல்லாதவர்கள் இம்மரத்தில் தொட்டில் கட்டினால் விரைவில் குழந்தைப் பிறக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

ஆலயத்தின் வெளிப்பகுதியில் இரண்டு பக்கக் கல்தூணின் நடுவே மணி தொங்கவிடப்பட்டுள்ளது. ஆரம்பக் காலக்கட்டத்தில் விழாவின் போது மட்டும் மேளதாளக் கருவிகளைப் பயன்படுத்தினர். ஆனால் தற்பொழுது பூசை செய்கின்ற ஒவ்வொரு நாளும் இசைக் கருவிகள் இசைக்க வேண்டும் என்பதற்காக நவீன இசைக் கருவி பொருத்தப்பட்டுள்ளன.

I. ஆண் தெய்வங்கள்

சிற்றூர் தெய்வங்கள்

1. இரணவீரன்
2. சுடலைவீரன்
3. வேடப்பசாமி
4. கற்குவேல் அய்யனார்
5. முனியாண்டி

II. அகால மரணமடைந்த தெய்வம்

வண்ணாரமாடன்

III. இனத்தெய்வங்கள்

முதன்மைத் தெய்வங்கள்	**துணைத் தெய்வங்கள் (பரிவாரத் தெய்வங்கள்**
1. புதியவன்சாமி	மாடன்
2. நிறைமடை அய்யனார்	பத்திரகாளி, பாடைதெய்வம்
3. பொன் இருளப்பசாமி	காளியம்மன்
4. கரையடி முனியாண்டி	செல்வவிநாயகர்
5. நிறைகுளத்து அய்யனார்	சங்கிலி மாடசாமி
6. வண்ணான்மாடன்	புதுமாடன், உருதமாடன்
7. கோட்டை கருப்பசாமி	ஆண்டிச்சாமி
8. கருப்பசாமி	
9. கற்குவேல் அய்யனார்	லாடசன்னாசி

10. அளிசோடை புழுகாண்டி மாடன், மாடத்தி

11. மதுரைவீரன்

12. முனியாண்டி காளியம்மன்

13. கொன்றையாண்டி அய்யனார் இராக்காச்சியம்மன்

14. சுந்தரசுவாமி பாலசுப்பிரமணியன்

IV. குல தெய்வங்கள்

புதையுண்ட தெய்வங்கள்

செக்கடி முனியாண்டி

தூண்டில் கருப்பசாமி

சுடலைமாடன்

வெயில்முத்து அய்யனார்

இரணவீரன்

திருவில்லிப்புத்தூரிலிருந்து இராசபாளையம் செல்லும் சாலையில் 12 கி.மீ. தூரத்தில் வன்னியம்பட்டி என்ற சிற்றூரில் இக்கோயில் அமைந்துள்ளது. "சுமார் 400 ஆண்டுகட்கு முன்பு தோன்றியது. இச்சிற்றூரில் கோயில் ஆரம்பக் காலக்கட்டத்தில் கட்டிட அமைப்புடன் காணப்பட்டாலும், திருவிழா நடத்த யாரும் முன் வரவில்லை. காரணம் இக்கோயிலுக்கு யார் பூசை செய்து வழிபாடு நடத்துவது என்ற பிரச்சினை வந்த போது தேவர் இனத்தவர்கள் நாங்கள் திருவிழா கொண்டாடுகிறோம் என்று கூறினார்கள்."(99) அதன்பின்பு திருவிழா கொண்டாட அனைவரும் ஒப்புக் கொண்டனர். கடந்த 10 வருடங்களாகத்தான் திருவிழா கொண்டாடப்படுகின்றது. பரிவாரத் தெய்வங்களாக மாடன், மாடத்தி, ஆண்டிச்சாமி போன்ற தெய்வங்கள் உள்ளன.

கோயிலமைப்பு

கோயிலில் மூல தெய்வத்திற்கு மட்டும் ஆரம்பக் காலக் கட்டத்தில் கட்டிடம் அமைத்திருந்தனர். தற்பொழுது பரிவாரத் தெய்வங்களாகிய மாடன், மாடத்தி, ஆண்டிச்சாமி

போன்றவற்றிற்குக் கட்டிடம் அமைத்துள்ளனர். பலியிடுவதற்கு மேடை போன்ற திண்ணையும் அமைத்துள்ளனர்.

சுடலைவீரன்

"தீக்குளித்தவர் தீரமாதாகவே
வேள்வி தன்னில் ஒன்றாய்
பிறந்திட்ட சுடலைமாடன்"(100)

என்பர். சுடலைவீரனின் தோற்றம் கம்பீரமான உடம்பும், உருட்டிய விழிகளும் கனத்த மீசையுமாகும். இத்தெய்வத்தைப் 'பேய்த் தெய்வம்','திராவிடத் தெய்வம்'(101) என்றும் இதனை அழைப்பர்.

திருவில்லிப்புத்தூரிலிருந்து ஏழு கி.மீ. தூரத்தில் அமச்சியார்பட்டி என்ற சிற்றூரில் இத்தெய்வம் காணப்படுகிறது. இத்தெய்வத்தை தேவேந்திரகுல வேளாளர்கள் வழிபடுகின்றனர். "சுடலைவீரன் பீடமைப்பில் காணப்படுகின்றார். திருவிழாக் காலங்களில் விலங்கு வெட்டிவிடும் வழக்கம் உள்ளது. ஆரம்பக் காலக்கட்டத்தில் உள்ளது போல் இன்றைக்கும் மாற்றம் இல்லாமல் காணப்படுகிறது".(102) திருவிழாக் காலத்தில் மட்டும் சுத்தம் இல்லாத பெண்கள் அங்குச் செல்ல மாட்டார்கள். ஏனென்றால் இத்தெய்வம் கோபமடைந்தால் தங்களைத் துன்புறுத்தும் என்று மக்கள் நம்புகின்றனர்.

கோயிலமைப்பு

ஒவ்வொரு கோயிலும் அதன் பொருளாதாரம், திருப்பணி செய்வோர் மனநிலைக்கேற்ப அமைக்கப் பெற்றிருக்கும். "அமச்சியார்பட்டி சிற்றூரில் காட்டுப் பகுதியில் சிறிய மேடை போன்ற திண்ணையில் பீடமாகக் காட்சியளிக்கின்றனர். இதற்குப் பரிவாரத் தெய்வங்கள் கிடையாது."

வேடப்பசாமி

கோவை மாவட்டத்தில் பூச்சியூர் கோயிலில் இத்தெய்வம் காணப்படுகிறது. "பலநூறு ஆண்டுகட்கு முன்பு சகோதரன்

சகோதரிக்கிடையில் இருந்த நெருக்கமும் மனதில் ஊடுருவுகின்றன. பூசாரி அருள் வந்த நிலையில் காலில் முட்பாதக் குறடை மாட்டிக் கொண்டு கோயிலுக்கு முன்னால் வரிசையாகக் கவிழ்ந்து படுத்திருக்கிறார்கள். பிள்ளை இல்லாத பெண்கள் பூசாரி பாதக் குறடுகளுடன் அவர்கள் மீதேறி நடந்தால் பிள்ளை பிறக்கும் என்பது அவ்வூர் மக்களின் நம்பிக்கை இத்தெய்வத்தை வணங்குவது மூலம் வீரம் மற்றும் சகோதர, சகோதரிகளின் அன்பு நிலை வெளிப்படும்.''(103) அண்ணன், தங்கைக்குள் மனக்குறை இருந்தால் இக்கோயிலுக்குச் சென்று வழிபடலாம்.

திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் ''மல்லிபுத்தூர் என்ற சிற்றூரில் வெவ்வேறு இனத்தவர்களாக இருந்தாலும் சகோதரத் தன்மையுடன் காணப்பட்டார்கள். அவர்கள் தொழில் வேறுவேறாக இருந்தாலும் உறவு முறையில் சகோதரர்களாக இருந்தனர். ஆசாரி, பண்டாரம், பகடை ஆகிய மூன்று பேரும் ஊருக்குக் கிழக்கேயுள்ள ஐந்து கண்ணி பாலத்தருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது டி.மானகசேரி கண்மாய்க்குச் செல்லும் கால்வாயிலில் ஒரு பேழை (பெட்டி) மிதந்து வருவதைக் கண்டு மூன்று பேரும் அதை வெளியே எடுத்து உடைக்க முற்பட்ட போது அப்பெட்டியிலிருந்து ஒரு ஒளியானது மூன்று பேரில் ஒருவரை மட்டும் தாக்கியது. இதனை அறிந்து மற்ற இரண்டு பேரும் அப்பெட்டியைத் திறக்காமல் உள்ளூர் பெட்டியில் வைத்து வணங்க ஆரம்பித்தார்கள். இதனால் பல தலைமுறையாகத் தொன்றுதொட்டு வணங்கி வருகின்றார்கள்.''(104)

கோயிலமைப்பு

கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. பீடமா மூல தெய்வத்திற்கு இரு பக்கத்தில் இருளப்பச்சாமி, கருப்பசாமி சிலை அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் எதிரே சிறிய கிணறு உள்ளது.

கற்குவேல் அய்யனார்

''அய்யனாருக்குச் 'சாதவாகன்', 'சாத்தன்', 'கோழிக் கொடியோன்' போன்ற பெயர்கள் இருந்ததைத் திவாகர நிகண்டு குறிப்பிடுகின்றது.''[105] சாத்தன் என்பது பழமையன பெயர் என்பதைச் ''சிலப்பதிகாரத்தில் 'பாசண்ட சாத்தன்' என்று குறிப்பிடப்படுவதிலிருந்து அறியமுடிகிறது.''[106]

கருக்கு+உவா என்ற மரத்தில் அய்யன் தோன்றி அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார். எனவே இங்கு எழுந்தருளியுள்ள அய்யன் கருக்கு + உவா + அய்யன் = கருக்கு உவா அய்யன் என்றழைக்கப்பட்டார். இச்சொல் நாளடைவில் மருவிக் கருக்குவாலய்யன், கற்குவேல் அய்யன், கருக்கு வாலை அய்யன், கற்கோலய்யன், கருக்கு வாள் அய்யன் என்ற பெயரில் இன்று அழைக்கப்படுகிறார். அத்திக்குளம் பகுதியில் கற்குவேல் அய்யனார் காவல் தெய்வமாக விளங்கினார். இக்கோயில் அய்யனாரின் செல்வங்களைத் திருடர்கள் கொள்ளையடித்துச் செல்லும் பொழுது அய்யனாரே கள்வர்களைக் கொன்று செல்வங்களை மீட்டு வந்தார். இந்தப் பகுதி நாடார் சமுதாய மக்களின் காவல் தெய்வமாகக் கற்குவேல் அய்யனாரை வழிபடுகின்றனர். ''கள்வர்களைக் கொல்லும் நிகழ்ச்சியாக இக்கோயில் எழுந்ததாகக் கூறுகின்றார்கள்.''[107] நாடார் இனத்தவர்களில் ஐந்து குடும்பங்கள் மட்டும் வணங்கி வந்தனர். ஆரம்பக் காலக்கட்டத்தில் வாரத்தில் ஒருநாள் பூசை மட்டும் நடந்தது. தற்பொழுது தான் இக்கோயிலில் மூன்று நாட்கள் திருவிழா நடத்துகின்றார்கள். தங்கள் வியாபார வேலையாக வெளியூர் செல்லும் காவல் தெய்வமாமகிய கற்குவேல் அய்யனாரை வணங்கிவிட்டுச் செல்லுவார்கள். இக்கோயில் 100 ஆண்டுகட்கு முன்பு தோன்றியது. பரிவாரத் தெய்வங்கள் மாடன், மாடத்தி போன்றவை உள்ளன. இக்கோயில் வழிபாட்டில் மாற்றம் எதுவுமில்லை.

கோயிலமைப்பு

நான்கு பக்கச் சுவர் அமைப்புடன் வெட்ட வெளியாகத்தான் காணப்படுகிறது. கற்குவேல் அய்யனார் மட்டும் சிலை அமைப்பில் காணப்படுகிறது. பரிவாரத் தெய்வங்களாகிய மாடன், மாடத்தி இரண்டும் பீடமைப்பில் காணப்படுகிறது.

வண்ணார மாடன்

தேவேந்திரகுல மக்களும், நாடார் சமுதாய மக்களும் சுடலை மாடனுடன் வண்ணார மாடனையும் வழிபடுகின்றனர். "திருமலாபுரம் என்ற ஊரில் தேவேந்திரகுல வேளாளர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் தங்களுடைய ஆடைகளை வெளுத்துக் கொடுக்கச் சலவைத் தொழிலாளர்கள் வேண்டும் என்று வில்லிபுத்தூர் மன்னரிடம் வேண்டுதல் விடுக்க, மன்னர் உடனே ஒரு வண்ணார் குடும்பத்தை அந்த ஊரில் அமர்த்தினார்."(108) வண்ணார் குடும்பத்தில் கணவனும் மனைவி மட்டும் இருந்தனர். அவர்களுக்குக் குழந்தைப்பேறு இல்லாமல் இருக்கவே கணவனும் மனைவியும் சேர்ந்து பல கோயில்கள் சென்று வணங்கி வந்தனர். பின்னர் கனவில் தோன்றி உங்களுக்குப் பிறக்கும் குழந்தையானது மந்திரத் தன்மையிலிருக்கும். ஆனால் 18 வயது வரைதான் அவன் இப்பூமியில் வாழ்வான். பின் மேலிடம் வந்துவிடுவான் என்றார். அதன்படி அவர்களுக்குக் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு மந்திரமூர்த்தி என்று பெயர் வைத்தனர். அவன் இளைஞனாக இருக்கும் பொழுது அவ்வூர் பெண்ணின் மீது காதல் கொண்டான். இதை அறிந்த அவ்வூர் மக்கள் அவனைக் கொல்ல முயற்சித்தப் போது பாம்பு வடிவெடுத்துத் தப்பி ஓடினான். அப்பவும் அவனை விட்டு வைக்கவில்லை. இறுதியில் அவனைக் கொல்லும் போது அவ்வூர் மக்களிடம் நான் இறந்தபிறகு என் காலிலுள்ள தகட்டை எடுத்து விட்டு என்னைத் தெய்வமாக வழிபடுங்கள் என்று கூறினான். அதே நேரத்தில் எந்த இனத்தவர்களாக இருந்தாலும் என்னை வழிபடுவோருக்கு நன்மை அளிப்பேன் என்று கூறினான். இன்றும்

அவ்வூர் மக்கள் மந்திரமூர்த்தியைத் தடிவீரன் என்று அழைத்து வழிபடுகின்றனர். நாடார், தேவேந்திர குலவேளாளர், வண்ணார் முதலிய சமுதாய மக்கள் தங்கள் குழந்தைக்கு மந்திரமூர்த்தி என்று பெயர் வைக்கின்றனர். வழிபாட்டின் மூலம் உயர்வு, தாழ்வு என்ற மனப்பான்மையில்லாமல் வண்ணார மாடனை வழிபடுவதால் இன்றைய இன மோதல் காலத்திலும் இவ்வழிபட்டினை பார்க்க முடிகின்றது. சுடலைமாடனும், வண்ணார மாடனையும் துணைத் தெய்வமாக வழிபடுகின்றனர்.

கோயிலமைப்பு

வேப்பமரத்தடியில் சிறிய மேடை போன்ற அமைப்புக் காணப்படுகிறது. துணைத் தெய்வமாக சுடலைமாடனும் உள்ளது. மரத்தடியின் கீழ் உள்ளதால் கோயிலில் மேல் பக்கச் சுவர் எழுப்பாமல் அப்படியே விட்டுவிட்டார்கள். பல இனத்தவர்கள் கொண்டாடுவதால் திருமலாபுரத்துச் சிற்றூர் தெய்வம் என்றும் கூறுவார்கள்.

புதியவன்சாமி

திருவில்லிப்புத்தூரிலிருந்து சுமார் பத்து கி.மீ. தூரத்தில் இராஜபாளையம் செல்லும் சாலையில் மேலபாட்டக் கரிசல்குளம் என்ற இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. இது 180 ஆண்டுகட்கு முன்பு தோன்றியது.

திருவில்லிப்புத்தூரிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்லும் பாதையில் நாற்பது கி.மீ. தூரத்தில் கரிவலம் வந்த நல்லூர் என்னும் ஊர் உள்ளது. இங்கு பால்வண்ணநாதன் கோயில் இருக்கின்றது. இவ்வூரின் மேற்கே ஐந்து கி.மீ. தூரத்தில் பனையூர் என்னும் சிற்றூர் இருக்கின்றது. புதியவன் சாமியின் மூலக் கோயில் இங்குதான் உள்ளது. இங்கிருந்து பிடிமண் எடுத்து வந்து மேலபாட்ட கரிசல்குளத்தில் கோயில் அமைத்தனர். பனையூரில் புதியவன் சாமியைத் தாழ்த்தப்பட்ட இனத்தவர் மட்டுமே வணங்கி

வந்திருக்கின்றனர். இன்றும் அவர்களே வணங்கி வருகின்றனர். ''இராசபாளையத்திலிருந்து பிழைப்பதற்காகக் கரிவலம் வந்த நல்லூருக்குச் சென்றவர்கள் சிவசங்கரன்பிள்ளை, சுப்புபிள்ளை ஆகியோர். இவர்கள் புதியவன்சாமி விழாவைக் காணும் பொருட்டுப் பூசைக்கான தேங்காய், பூ, பழம், கற்பூரம், பத்தி, வெற்றிலைப் பாக்கு ஆகிய பொருட்களுடன் பனையூர் சென்றுள்ளனர். இரவில் விழா சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது 12 மணியளவில் கொட்டு மேளம் முழங்கிச் சாமி வந்தியிருக்கின்றனர். மருளாடி மீது சாமி வந்து தன்னை வணங்க வேறு இனத்தவர் இருவர் வந்து இருப்பதாகவும் முதலில் அவர்கள் கொண்டு வந்த பூசைப் பொருள்களைக் கொண்டு பூசை செய்யுமாறும் கூறவே பூசாரியும் சிவசங்கரன் பிள்ளை, சுப்புபிள்ளையை அழைத்துப் பூசைப் பொருட்களைப் பெற்றுப் பூசை செய்திருக்கின்றார்.''(109)

அப்பொழுது சாமி அருள் வந்து தான் அவ்விடத்திலிருந்து வடதிசை செல்ல விரும்புவதாகவும் அவ்விருவரிடமும் பிடிமண் எடுத்துக் கொடுக்குமாறும் கூறவே பூசாரி ஒரு புதிய மண்சட்டியில் பிடிமண் எடுத்துக் கொடுக்க, அதனைக் கொண்டு வந்து இராசபாளையம் கொண்டையன் கொண்ட தெருவில் வைத்து வழிபட்டனர். பின்னர் அங்குத் தொடர்ந்து வணங்க முடியாத காரணத்தால் அங்கிருந்த மேலபாட்ட கரிசல்குளத்திற்குக் கொண்டு வந்தனர். அதன்பின்பு நிலையானக் கோயில் அமைக்க விரும்பி பிள்ளைமார் இனத்தவர்கள் சேர்ந்து வணங்க ஆரம்பித்தனர்.

இங்கு முதன்மைத் தெய்வமாக புதியவன்சாமியும், துணைத் தெய்வங்களாக முருகன், பத்திரகாளி, மாடன், சத்தியக்கம்பு போன்றவை உள்ளன.

கோயிலமைப்பு

கோயில் சுட்டச் செங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயில்

கொண்டாடிகளுக்கு மூல தெய்வம் முருகன். ஆகையால் கோயிலின் நடுவில் முருகன் சிலையும், முருகனுக்குத் தெற்கே புதியவன்சாமியும், அதற்கும் தெற்கே பத்திரகாளியும் இருக்கின்றனர். தெற்குப் பகுதியில் மாடனும், வடக்கே சத்தியக்கம்பும் இருக்கின்றது. கோயிலிலுள்ள சாமி சிலைகள் அனைத்தும் கற்சிலைகளே.

நிறைமடை அய்யனார்

சங்ககாலம் தொட்டே காணப்படுகின்ற தெய்வமாகும். "அய்யனாரைப் பாசாண்ட சாத்தன், புறம் பனையான், காரி என்று இலக்கியங்கள்" குறிக்கின்றன.

"குடகுநாட்டில் வாழும் கொடவர்களுக்கு அய்யனார் வேட்டைத் தெய்வமாக இருப்பதைக் காணலாம். இரவு நேரங்களில் வேட்டை நாய்களுடன் இவர் காடுகளில் உலவுவதாக நம்புகின்றனர். வேட்டை தொடங்குமுன் அய்யனாருக்குப் பூசை செய்கின்றனர். எனவே அய்யனார் முதலில் வேட்டைத் தெய்வமாக விளங்கினார். குதிரை வாகனமுடை ஐயனாரைச் சமணர்களும் வணங்கினர். கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த சூரம்பேட்டை ஐயனாரே கிடைத்துள்ள ஐயனார் சிற்பங்களில் காலத்தால் முற்பட்டது."[10] ஐயனார் அர்த்த பரியங்காசனத்தில் அமர்ந்து இரண்டு கைகளுள் ஒன்றில் பூச்செண்டு வைத்திருப்பார். இரண்டு பக்கங்களிலும் இரண்டு நாய்கள் காணப்படும்.

அத்திக்குளம் என்ற சிற்றூர் திருவில்லிப்புத்தூரிலிருந்து பத்து கி.மீ. தூரத்தில் உள்ளது. இச்சிற்றூரில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட போது அங்குள்ள அய்யனாரை வேண்டி தங்களைக் காக்க வேண்டும் என்று கூறினார்கள். அதன்படி அத்தெய்வமானது ஊர்மக்களைக் காத்து வந்தது. அச்சிற்றூரிலுள்ள மக்கள் தங்கள் தொழிலின் காரணமாக வெவ்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டி இருந்தது. இதனால் அடிக்கடி அங்குச் செல்ல இயலவில்லை. இதன் காரணமாகத் தாங்கள் இருக்கின்ற இடத்திலே கோயில் அமைக்க வேண்டும் என்று எண்ணி சாமியிடம் வரம் கேட்டார்கள்.

அப்பொழுது கோயில் பூசாரி மீது அருள் வந்து இந்த ஊரிலுள்ள குளத்தில் பிடிமண் எடுத்துக் கொண்டு செல்லுங்கள் என்று கூறியது. ஆனால் குளம் முழுவதும் நீர் நிரம்பி இருப்பதால் எடுக்க முடியவில்லை.

குளம் முழுவதும் நீர் நிரம்பிய இருந்த காரணத்தினால் தண்ணீர் வெளியேறுகின்ற இடமான மடையில் மண்ணெடுத்து திருவில்லிபுத்தூர் வட்டத்தில் அமைந்துள்ள மம்சாபுரத்தில் பீடமாக வைத்து வழிபட்டனர். தண்ணீர் வெளியேறுகின்ற இடம் மடை என்பதால் இத்தெய்வத்திற்கு நிறைமடை அய்யனார் என்றே பெயரிட்டு வணங்குகின்றனர். இக்கோயில் 200 ஆண்டுகட்கு முன்பு தோன்றியதாக இருந்தாலும் வளர்ச்சிப் பெறாமல் இருந்தது. தற்பொழுது சிலை வடித்து வழிபாடு செய்கின்றனர். இத்தெய்வத்தைப் பனைய நாடார் இனத்தவர்கள் மட்டும் வணங்கி வருகின்றனர்.

கோயிலமைப்பு

“நிறைமடை அய்யனார் கருவறையும் கோபுரமும் கோயிலின் முன் வாசல் கோபுர அமைப்பு போல் காணப்படுகிறது. இக்கோயில் பத்து பரிவாரத் தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ளன.[(111)]

கல்வெட்டுச் செய்தி

இக்கோயில் குடமுழுக்கு நிகழ்ந்ததை 1183-ம் ஆண்டு ஸ்ரீசர்வஜித்து வருடன் பங்குனி மாதம் 10-ம் தேதி (23.3.2008) ஞாயிற்றுக்கிழமை சித்திரை நட்சத்திரமும் கிருஷ்ணபட்ச துவிதியை திதியும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

பொன் இருளப்பசாமி

நாடார் இனத்தவர்கள் தங்களுக்கென்று தெய்வம் வேண்டும் என்பதற்காகக் கரிசல்குளத்திலிருந்து பிடிமண் எடுத்து வந்து

திருமலாபுரம் என்ற இடத்தில் பீடம் அமைத்துள்ளனர். ஆரம்பக் காலக்கட்டத்தில் பீடம் அமைத்து வழிபட்ட போது தனக்கென்று சிலை வடித்து வழிபட வேண்டும் என்று சாமியாடி மீது அருள் வந்து கூறியதால் 20 வருடத்திற்கு முன்பு தான் சிலை வைத்துள்ளனர்.

இக்கோயிலில் ''சிவநாயகி, சிவபெருமான், காளியம்மன் போன்ற தெய்வங்கள் பீட அமைப்பிலும் பொன் இருளப்பசாமி மட்டும் சிலை வடிவிலும் அமைந்துள்ளது.''(112) தனக்கென்று கோயில் அமைத்தாலும் திருவிழா வெகுச் சிறப்பாக நடைபெறவில்லை. இதனால் கவலையுற்ற நாடார் இனத்தவர்கள் சாமியாடி வரிதி (குறி) கேட்ட போது சிலை வடித்து கும்பிடுங்கள் எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று கூறியது. அதன்பின்பு கடந்த இரண்டு வருடங்களாகத்தான் திருவிழா கொண்டாடப்படுகின்றது. திருவிழாவின் போது அந்த இனத்தைச் சார்ந்த முத்துராசு என்பவர் மீது சாமி வந்து அருள் வழங்குகிறார்.

கோயிலமைப்பு

நான்குப் பக்கச் சுவர் அமைப்புடன் வெட்ட வெளியாக அமைந்துள்ளது. மூன்று தெய்வங்கள் பீடமைப்பிலும் ஒரு தெய்வம் சிலை வடிவிலும் அமைந்துள்ளது. பின்பு நாளடைவில் கட்டிட அமைப்புடன் காணப்படுகின்றது.

கரையடி முனியாண்டி

அமச்சியார் அம்மனுக்கு முன்னோடித் தெய்வமாக விளங்கியது. கரையோரப் பகுதியில் அமைந்துள்ளதால் கரையடி முனியாண்டி என்ற பெயர் வந்தது.

''மதுரை ஆண்ட பாண்டிய மன்னரால் போற்றி வணங்கப் பெற்ற அன்னை மீனாட்சியம்மன். சொக்கநாதர் இவர்களால் உண்டாக்கப் பட்ட இத்தெய்வமானது, மதுரை மொட்டை கோபுரத்திலுள்ள முனிசுவரரின் பிடிமண் எடுத்து வந்து பீடமைத்தனர். ஆகையால்

இதற்கு மொட்டைக் கோபுரத்து முனிசுவரர் என்றும் அழைப்பர்.''(113)

முனிசுவரரை அன்னை அமச்சியார் அம்மன் தன் குழந்தையாகப் பாவித்து தன் முன்னிலையில் இருந்து இத்தரணியை ஆளும் நல்லவரை வாழவைத்து பில்லி, சூனியம், பேய், பிசாசுகளை விரட்டியடிக்குமாறு கூறி முனிசுவரரை கரையோரத்தில் அமரச் செய்தார்.

கோயிலமைப்பு

பீட அமைப்பில் காணப்பட்டாலும் அப்பீடத்தை அகற்றி விட்டு அங்குச் சிலை வடித்து வழிபாடு செய்வார்கள். ஆனால் இக்கோயிலில் பீட அமைத்துள்ளனர். பின்பு சிலை வேண்டும் என்பதற்காக அப்பீடத்தின் முன்னால் சிலை வடித்துள்ளனர். இச்சிலை 15 வருடத்திற்கு முன்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்சிலையின் மேல் புலித்தோல் போர்த்தப்பட்டுள்ளது. பிற கோயிலுடன் தொடர்புடையது.

கல்வெட்டுச் செய்தி

அருள்மிகு கரையடி நன்மை தரும் ஸ்ரீ முனீசுவரர் திருக்கோயில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 1167-ம் ஆண்டு ஆங்கிரஸ வருஷம் ஆனி மாதம் 22-ம் தேதி 6.7.1992 திங்கட்கிழமை சித்தியோகமும் சப்தமி திதியும் உத்திர நட்சத்திரமும் கூடிய சுபயோக வேளையில் காலை 9.15 மணிக்கு மேல் 10-மணிக்குள் சிம்மலக்கனத்தால் காளையார் குறிச்சியில் சிறப்பாக நடைபெற்றது.

நிறைகுளத்து அய்யனார்

"அய்யனார் பல ஆண்டுகளுக்கு முன்பு மதுரை அருகே உள்ள 'வேப்பத்தூர் பச்சேரி' என்ற சிற்றூரில் பிறந்தவராம். அவர் பள்ளர் இனத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை விரும்பியதாகவும், அதனால் அவர்கள் இருவரை வெட்டிக் குளத்தில் விட்டுவிட்டதாகவும்

கூறப்படுகின்றது. நாளடைவில் கல் விக்கிரகம் ஒன்று அய்யனார் உருவில் இக்குளத்தில் இருந்து தோன்றியதாகக் கூறப்படுகின்றது.”(114) இதனால் கல் விக்கிரகத்தைத் தெய்வமாக வழிபட்டார்கள். தைலாகுளத்தில் வாழும் தேவர் இனத்தவர்கள் தங்களுக்கென்று கோயில் வேண்டும் என்பதற்காக மனிதனாக வாழ்ந்து மடிந்த அந்தக் கல் விக்கிரகத்திலிருந்து பிடிமண் எடுத்து வந்து கோயில் அமைத்தனர்.

இக்கோயில் திருவில்லிபுத்தூரிலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் தைலாகுளம் என்ற இடத்தில் உள்ளது. இக்கோயிலை இனாம் நாச்சியார் கோயில் என்றும் அழைப்பர். இதில் அய்யனார் தனது இருமனைவியுடன் காட்சி அளிக்கின்றார். (பூர்ணாதேவி, புஷ்கலாதேவி) மூன்று தலைமுறைக்கு முன்னதாக உள்ளது. அதாவது 300 ஆண்டுகட்கு முன்புத் தோன்றியது.

இத்தெய்வத்தின் வரலாற்றினை அறிந்த தேவர் இனத்தவர்கள் அக்காலத்திலிருந்து இன்றுவரை திருமண முறையில் உள்ள சமுதாயக் கட்டுப்பாட்டு நிலையினையும், அதிலிருந்து மீறும் போது ஏற்படுகின்ற சமுதாய விளைவினையுமே அடிப்படையாகக் கொண்டு வழிபாடு அமைந்திருக்கின்றது.

கோயிலமைப்பு

கோயிலின் முன் தோற்றத்தில் கன்னி விநாயகர் சிலை அமைந்துள்ளது. இச்சிலை அரசமரத்தடியின் நடுவில் அமைந்துள்ளது. ஒன்பது அடி உயரத்தில் பெரிய குதிரையுடன் அய்யனார் சாமி வேட்டைக்குச் செல்வது போன்று கையில் சாட்டையுடன் காட்சி அளிக்கின்றார். 22 பரிவார தெய்வங்கள் காணப்பட்டது. ஆனால் இன்று ஆறு பரிவாரத் தெய்வங்கள் மட்டுமே உள்ளன. அவை காளியம்மன், பாடைத் தெய்வம், சங்கிலி மாடசுவாமி சிவபெருமாள்சுவாமி, இருளப்பச்சாமி, தடிமாட சுவாமி போன்றவையாகும். ஆரம்பக் காலக்கட்டத்தில் வளர்ச்சி அடையாமல் இருந்தது. தற்பொழுது 2000ஆம் ஆண்டில் திருப்பணி

முடிந்தது. இராஜபாளையத்தைச் சேர்ந்த திரு தங்கசாமித் தேவர், பாக்கியம்மாள் தங்கும் விடுதி (மண்டபம்) கட்டி உள்ளனர். இக்கோயில் பெரிய கண்மாய்கரை ஓரத்தில் அமைந்துள்ளது.

கல்வெட்டுச் செய்தி

கல்வெட்டில் கஜலட்சுமி மட்டும் பொருத்தப்பட்டள்ளது.

வண்ணான்மாடன்

“திருநெல்வேலி மாவட்டத்தில் ஏர்வாடி என்ற சிற்றூரில் யாதவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அப்பொழுது துலுக்கர்கள் அங்கு வந்து அவர்களிடம் பெண் கேட்டபோது அவர்கள் கொடுக்க மறுத்துவிட்டார்கள். உடனே அவர்களை விரட்டி அடிக்க நினைத்த போது யாதவ இனத்தவர்கள் அச்சிற்றூரிலிருந்து வெளியேறி விட்டார்கள். அங்கிருந்து வருகின்ற வேளையில் தாமிரபரணி ஆற்றைக் கடக்க முற்பட்ட போது அவர்களால் ஆற்றைக் கடக்க முடியவில்லை. ஆற்றின் கரையோரப் பகுதியில் ‘மதுராமரம்’ என்ற மரம் இருந்தது. அந்த மரத்தைப் பார்த்து வேண்டிக் கொண்டார்கள். அதன்படி அம்மரமானது ஆற்றின் பாலமாக அமைந்தது.”(115) அதனால் அவர்களால் ஆற்றைக் கடந்து திருவில்லிப்புத்தூரில் கம்மாப்பட்டி என்ற இடத்திற்குச் சென்று குடிபெயர்ந்தார்கள்.

இதனால் தன்னைக் காத்த தெய்வத்திற்கு நன்றி செலுத்த விரும்பி அங்கிருந்து பிடிமண் எடுத்து வந்து திருமலாபுரம் என்ற சிற்றூரில் பீடம் அமைத்து வழிபாடு செய்தனர். இதே போல் மதுரை, கல்லுப்பட்டி, திருமங்கலம் போன்ற ஊர்களிலும் அமைத்துள்ளனர். இக்கோயில் 100 ஆண்டுகட்கு முன்பு தோற்றுவிக்கப்பட்டது. இத்தெய்வத்தை யாதவர், தெலுங்குச் செட்டியார், வண்ணார் ஆகியோர் வழிபட்டு வருகின்றனர்.

கோயிலமைப்பு

நான்குப் பக்கச் சுவர் அமைப்புடன் மேல் பக்கச் சுவர் இல்லாமல் வெட்ட வெளியாக உள்ளது. இக்கோயிலில் 21 பீடங்கள் அமைந்துள்ளது. அவை கருப்பசாமி, மாடசாமி, சுடலைமாடன், காசமுத்து, சின்னத்தம்பி, வன்னியராஜ், நலபாரை சாஸ்தா, புதுமாடன், வண்ணான்மாடன், செல்வி, உருதமாடன், கருப்பாயி, மாடத்தி, தமிழ்ச்செல்வி, புதுமாடி, செல்லிகிழவி, முத்துலட்சுமி, அய்யாவு, உருதமரபு, புதியசாமி, பால்சாமி ஆகிய பரிவாரத் தெய்வங்கள் பீட அமைப்புடன் காணப்படுகின்றது.

கோட்டைக் கருப்பசாமி

திருவில்லிபுத்தூரிலிருந்து இரண்டு கி.மீ. தூரத்தில் பொன்னாங்கன்னி சிற்றூரிலிருந்து பிடிமண் எடுத்து வந்து இராசபாளையம் செல்லும் சாலையில் நாச்சியார்புரம் எனற இடத்தில் இக்கோயில் அமைத்துள்ளனர். 50 வருடங்களுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்டது. இத்தெய்வத்தைப் பிள்ளைமார், தேவர் இனத்தவர்கள் கொண்டாடுகின்றனர். இக்கோயிலில் ‘‘காணிக்கையாக அரிவாள்களைச் செலுத்துகின்றனர்.’’(116) தான் நினைத்த காரியம் நடந்துவிட்டால் கிடாவெட்டி பொங்கல் படைத்து வழிபாடு செய்கின்றனர்.

கோயிலமைப்பு

இக்கோயில் வெட்ட வெளி அமைப்பில் காணப்படுகின்றது. இக்கோயிலைச் சுற்றி மரங்கள் நிறைய உள்ளது. அவையெல்லாம் கோயிலுக்குச் சொந்தமானவை ஆகும். தோட்டத்திற்கு நடுவில் திண்ணை போன்ற மேடை அமைந்துள்ளது. அம்மேடையின் மேல் சிலை அமைத்துள்ளனர். கோயிலின் எல்லை ஆரம்பிக்கும் இடத்தில் இரண்டு பக்கமும் தூண் அமைந்துள்ளது. ஆண்டிச்சாமி பரிவாரத் தெய்வமாக உள்ளது.

கருப்பசாமி (கருப்பண்ணன்)

"கருப்பசாமி அல்லது கருப்பணசாமியைப் பொறுத்த வரையில் எட்டு வேறுபட்டு பெயர்களை அறிந்ததாக ஸ்டீபன் எங்கில்ஸ் என்பவர் குறிப்பிடுகிறார்."(117) "கருப்பணன் என்ற தெய்வத்தை ஈசுவரியையும், கன்னிமார் தெய்வங்களையும் காப்பதற்கு மாயவன் உண்டாக்கி அனுப்பினான் என்னும் கதை அண்ணன்மார் சுவாமி கதையில் கூறப்பட்டுள்ளது."(118)

கருப்பு நிறமாக உள்ளவர் என்பதால் கருப்பசாமி என்ற பெயர் வந்துள்ளது என்பதை ஆயவு செய்யும் வகையில் கருப்பசாமி, திருமாலின் கூறாகக் கருதப்படுவதையும் ஆராய வேண்டிய தேவை உள்ளது. இராமனைக் கரிய செம்மல் எனக் கம்பராமாயணம் கூறுவதும் கருதத்தக்கது. திருமாலுக்கும் கருப்பண்ணசாமிக்கும் தொழில் காத்தலாகும். மலை மீது திருமாலுக்குக் கோயில்கள் அமைந்திருத்தலைக் காணமுடிகின்றன. கருப்பண்ணன் ஊரின் எல்லையில் நின்று ஊரைக் காத்து வருவது போல் திருமாலும் மலை மீது நின்று ஊரைக் காப்பதாகக் கருதலாம்.

"கருப்பசாமி வட மலையாளத்திலிருந்த ஒரு கள்வன் ஆவன். இவன் அழகர் மலையிலுள்ள பெருமாள் கோயிலில் அணிகலன்கள் மிகுதியாக இருந்ததைக் கேள்வியுற்று அவற்றைக் களவு செய்யும் பொருட்டுத் தன் கூட்டாளிகள் பதினேழு பேர்களுடன் அழகர் மலைக்குச் சென்றான். இவனோடு வந்த பதினேழு பேர்களையும் அழகர் மலைப்பெருமாள் பதினேழு படிகளில் பலியிட்டார். கருப்பசாமியைப் பலியிடாமல் பதினெட்டாம் படியிலிருந்து தம்முடைய கோயிலைக் காவல் காக்குமாறு செய்தார். அய்யப்பன் கோயிலுக்குச் செல்பவர்கள் முதலில் கருப்பனை அழைத்தப் பின்பு அய்யப்பனை வழிபாடு செய்கின்றனர். கோட்டைக் கறுப்பு, நொண்டிக்கறுப்பு, மடைக்கறுப்பு, எல்லைக்கறுப்பு, விலங்குக் கறுப்பு, சப்பாணிக் கறுப்பு என்று பல பெயர்களில் கருப்பசாமி வழங்கப் பெறுகிறது."(119)

கருப்பசாமி மக்களைக் காக்கும் தெய்வமாக விளங்குவதுடன் தெய்வங்களைக் காக்கும் தெய்வமாகவும் விளங்குகின்றார். இவர் ''சிவன், திருமால் ஆகியோரின் அவதாரம் எனக் கூறுகின்றனர். தருப்பைப்புல்லில் வால்மீகி முனிவரால் தோற்றுவிக்கப்பட்டவர் எனவும் கூறுவர்.''(120)

இக்கோயில் திருவில்லிப்புத்தூர் அருகில் உள்ள பொன்னாங்கன்னி சிற்றூரில் அமைந்துள்ளது. இத்தெய்வத்தை நாடார் இனத்தவர்கள் வணங்கி வருகின்றனர். சின்னக் கருப்பசாமி ''இராமநாதபுரம் மாவட்டத்தில் சிப்பிப்பாறை, மைப்பாறை என்னும் பகுதியில் வாழ்ந்து திருட்டுத் தொழில் செய்து அப்பொருட்களை ஏழை, எளிய மக்களுக்குக் கொடுத்து மகிழ்வார்.'(121) அவ்வாறு இருக்கும் காலத்துத் தென்திசையில் உள்ள சொக்கம்பட்டியில் வரிவசூல் செய்த பணம் கருவூலத்திற்குக் கொண்டு செல்லப்படுவதை அறிந்து அதைக் கொள்ளையடிக்க முயற்சி செய்திருக்கின்றார். ஆனால் காவலர்களால் குத்தப்பட்டு இறந்துவிட்டார். இறந்தப் பிறகும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்னும் சிறந்த எண்ணம் கொண்டு மதுரையிலிருந்து இருப்பிடம் தேடி அலைந்திருக்கின்றார். இவரின் ஆடம்பரத்தைக் கண்ட தெய்வங்கள் அனைத்தும் இவருக்கு இருப்பிடம் கொடுக்க மறுத்துவிட்டன. இறுதியாக மறவன் குளம் அய்யனார் கோயில் அருகில் வந்து தங்கியிருக்கின்றார். இவரை நாடார் இனத்தவர்கள் வணங்கி வருகின்றார்கள். பெரிய கருப்பசாமியின் வரலாறு கம்பராமாயணத்துடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. இவர் வால்மீகி முனிவரால் தோற்றுவிக்கப்பட்டவர் என்பர். இராவணனிடமிருந்து சீதையைச் சிறைமீட்ட இராமன் தன் நாட்டைச் சீரும் சிறப்புமாக ஆட்சி செய்திருக்கின்றார்.

இரவு நேரங்களில் காவலர்களை அனுப்பி நாட்டின் நிலை அறிந்திருக்கின்றார். நாட்டின் ஒரு பகுதியில் சலவைத் தொழில் செய்யும் ஒருவன் தன் மனைவி, தாயுடன் வாழ்ந்து வந்தான். அவன் மனைவி அவனுடன் கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டிற்குச்

சென்று விட்டாள். உடனே சலவைத் தொழிலாளியின் தாய் தன் மகனிடம் அவன் மனைவியைச் சமாதானம் செய்து அழைத்து வரக் கூறியிருக்கிறாள். அதற்கு அவன் வாய்த் துடுக்காக இராமன் சீதையை மீட்டு வந்தது போன்று தன் மனைவியை அழைத்து வர இயலாது எனக் கூறிவிட்டான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த ராமன் காவலன் வேடமணிந்து சென்றிருக்கின்றார். அன்றும் அச்சலவைத் தொழிலாளி முன்பு போலவே கூறியிருக்கிறான். அதைக் கேள்வியுற்ற இராமபிரான் இனிச் சீதையுடன் வாழ்வது பெருமையாகாது என எண்ணி சீதையைக் காட்டில் விட்டு விடுமாறு இலக்குவனிடம் கூறவே அதற்கு அவன் உடன்பாடது மறுத்துவிட்டான். உடனே இராமபிரான் தான் இனி உயிர் வாழ்வதில் பயனில்லை என எண்ணி நெருப்பை வளர்த்து அதில் தம் உயிரைப் போக்க முற்படவே இலக்குமணன் சீதையைக் காட்டில் விட்டுவிட ஒப்புக் கொண்டான். மூன்று மாத கர்ப்பிணியாக இருந்த சீதையிடம் நடந்ததைக் கூறி அவளை வனத்தில் விட்டுவந்தனர்.

இதன் காரணமாக அயோத்தியில் மழையின்றி கொடிய பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. அப்பொழுது வசிட்டர் அங்கு வரவே உண்மை அறிந்து வறட்சி நீங்க அசுவமேத யாகம் செய்து அதில் தோன்றும் குதிரையை பல திக்கிற்கும் அனுப்ப வேண்டும் எனக் கூறியிருக்கின்றார். இதற்கிடையே வனத்தில் சீதைக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குக் குசன் எனப் பெயரிட்டு வளர்த்தனர். வால்மீகி முனிவர் சீதைக்குத் துணையாக இருந்தார். ஒருநாள் தியானத்தில் இருந்த பொழுது சீதை தண்ணீர் கொண்டு வர ஆற்றிற்குச் சென்றிருக்கிறாள். அங்கு குரங்கு ஒன்று தன் குட்டியை நீரில் குளிப்பாட்டுவதைக் கண்டு தன் குழந்தையையும் குளிப்பாட்ட விரும்பி குழந்தையை எடுத்துச் சென்றுவிட்டாள்.

தியானம் நீங்கியதும் குழந்தையைக் காணாத முனிவர் வருந்தி மிக அவசரப்பட்டு தர்ப்பைப் புல்லைக் குழந்தையாக்கித் தொட்டிலில் கிடத்திவிடுகிறார். ஆற்றிலிருந்து திரும்பிய சீதை மற்றொரு குழந்தையைக் கண்டு வியப்புற்று முனிவரைக் கேட்க,

முனிவர் தன் தவறை உணர்ந்து வழியறியாது அதுவும் சீதை குழந்தைதான், பெயர் இலவன் எனக் கூறிவிட்டார். இரு குழந்தைகளுக்கும் அனைத்துப் பயிற்சிகளையும் கற்றுக் கொடுத்தார். அவர்களும் பயிற்சிகள் அனைத்திலும் சிறந்த தேர்ச்சிப் பெற்றனர்.

அசுவமேத யாகத்தில் தோன்றிய குதிரை இலவன், குசன் ஆகியோர் வாழ்ந்த காட்டுப் பகுதிக்குள் வரவே அதை இலவன் அடக்கிக் கட்டிவிட்டான். சத்ருக்கனன் அங்கு வந்து இலவனிடம் யார் எனக் கேட்கவே தாய் சீதை, தந்தை வால்மீகி முனிவர் எனக்கூறி குதிரையைக் கொடுக்க மறுத்துவிட்டான். குதிரையைப் பிடிக்கச் சென்ற வீரனையும் அம்பெய்து கொன்றுவிட்டான். உடனே சத்ருக்கனன் அயோத்தி சென்று நடந்ததைக் கூறவே இராமபிரான் அங்கு வர தந்தைக்கும், பிள்ளைகளுக்கும் போராட்டம் நடைபெற்றது. அதனைக் கண்ட சீதை மனம் மிக வருந்தி தன் கற்பை மெய்ப்பிக்கத் தானும் குழந்தைகளும் தீயில் இறங்கப் போவதாகக் கூறினாள். தீ அமைக்கப் பெற்று அதில் முதலில் சீதையும் பின் குசனும் சென்றனர். தீ அவர்கட்குத் தீங்கு செய்யவே இல்லை. இறுதியாக இலவன் தீயில் இறங்கவே உடம்பு கருகிவிட்டது. வேதனை தாங்காது துடிக்க முனிவர் அவனை வருந்த வேண்டாம் எனவும், அன்று முதல் பதினெட்டுப் படிகளுக்கும் காவலனாய், பதினெட்டாம்படிக் கருப்பன் என்றப் பெயருடன் வாழக் கூறவே அன்றுமுதல் மக்களைக் காத்து வருகின்றார்.

இந்தச் சின்னக் கருப்பசாமி, பெரிய கருப்பசாமியைக் கொன்னையாண்டி அய்யனார் கோயில் சென்று வணங்குவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாகப் பிடிமண் எடுத்து வந்து திருவில்லிப்புத்தூர் அருகிலுள்ள பொன்னாங்கன்னி சிற்றூரில் வைத்து வணங்கி வருகின்றனர்.

கோயிலமைப்பு

முதலில் இக்கோயிலுக்குக் கட்டிடம் கிடையாது. ஆனால் தற்பொழுது நன்கு வளர்ச்சியுற்ற நிலையில் கோயில் கட்டிடம்,

கம்பிக்கதவு முதலியன அமைக்கப்பட்டுள்ளது. கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. சின்னக்கருப்பசாமி, பெரிய கருப்பசாமி சிலைகள் கையில் வாளுடன் இருக்கின்றன. ஒவ்வொருவரும் தனித்தனியே இருக்கின்றனர். ஆனால் கொன்னையாண்டி அய்யனார் கோயிலில் இருவரும் சேர்ந்தே இருக்கின்றனர். இருவரும் சேர்ந்து இருக்கும் இடம் இது ஒன்றாகத்தான் இருக்கும் எனக் கூறுவர்.

கற்குவேல் அய்யனார்

திருச்செந்தூர்- திருநெல்வேலி நெடுஞ்சாலையில் திருச்செந்தூரிலிருந்து நான்கு கி.மீ. தூரத்தில் தெற்கு நோக்கி ஒரு கிளைச் சாலை பிரிகிறது. அதில் எட்டு கி.மீ. தூரத்திலுள்ள தேரிக் குடியிருப்பு, சிவப்பு மணற் பரப்புடன் காணப்படும் இந்தச் சிற்றூரின் மேற்கு எல்லையில் தான் கற்குவேல் ஐயனாரின் அரசாட்சி நடைபெறுகிறது.

''முடியாட்சிக் காலத்தில் தேரிக்குடியிருப்பையும் அதைச் சுற்றியுள்ளப் பகுதிகளையும் ஆட்சி செய்த மன்னன் அதிவீர இரணசூர பாண்டியன். இவருக்கு ஆலோசனை கூறிய மந்திரி கையனார். பெண் உருவிலிருந்த விஷ்ணு மீது சிவபெருமான் காதல் கொள்ள, அதன் விளைவாகப் பிறந்த தெய்வப்பிறவி இவர். மானுட உருவில் பாண்டியனுக்குச் சேவகம் செய்து வந்தார்.''(122)

பாண்டியன் கோட்டைக்குப் பக்கத்தில் ஒரு தடாகம். அதன் கரையில் இருந்த அபூர்வ சக்தி கொண்ட மாமரம் ஒன்று. 12 வருடங்களுக்கு ஒருமுறை. ஒரு காய் மட்டுமே காய்க்கும். அது கனிந்து தடாகத்தில் விழும்போது அதை எடுத்து உண்பவர்களுக்கு அபூர்வ சக்திகள் பெருகும் என்பது ஐதீகம். அந்த மாங்கனியைத் தான் எடுத்துப் புசிப்பதற்காக, சிப்பாய்கள் சிலரைக் காவல் போட்டிருந்தார் மன்னர்.

தேரிக்குடியிருப்பில் ஆண்களின் கண்ணில் படாமல் விதவைப் பெண் ஒருத்தி வாழ்ந்து வந்தாள். ஊர் அடங்கிக் கிடக்கும் நடுநிசிப்

பொழுதில் தடாகத்துக்கு வந்து தண்ணீர் எடுத்துச் செல்வது அவளது வழக்கம். ஒருநாள் அவள் தடாகத்தில் தண்ணீர் எடுத்த போது மரத்திலிருந்த விழுந்த அபூர்வ மாங்கனி அவளையும் அறியாமல் குடத்துக்குள் போனது.

பொழுது விடிந்தது. மரத்தில் மாங்கனியைத் தேடினார்கள் சிப்பாய்கள். அது அங்கே இல்லாதது கண்டு பதறினர். பயத்துடனே போய் செய்தியை மன்னரிடம் சொன்னார்கள். கடும் கோபம் கொண்ட மன்னர் தேரிக்குடியிருப்பில் இருந்த அத்தனை வீடுகளையும் சோதனையிடுமாறு உத்தரவிட்டார்.

அதன்படி சோதனை செய்ய வந்த சிப்பாய்கள் பத்தினித் தெய்வமாக வாழ்ந்த விதவையின் வீட்டுக்குள் நுழைய முற்பட்டனர். அப்போது அவர்களைத் தடுத்து நிறுத்தினார் மந்திரி கையனார். அரண்மனைக்கு வந்த அவர் அந்தப் பெண்ணின் பத்தினித் தன்மைக்கு பங்கம் விளைவித்து விடாதீர்கள் எனறு பாண்டியனிடம் வேண்டினார்.

அதைச் செவி மடுக்காத மன்னன், அவள் வீட்டுக்குள்ளும் சென்று மாங்கனியைத் தேடுமாறு சிப்பாய்களிடம் சொன்னார். அப்படியேச் செய்த சிப்பாய்கள் குடத்து நீரிலிருந்து மாங்கனியைக் கண்டுபிடித்து எடுத்து வந்தார்கள். அந்த விதவைப் பெண்ணே மாங்கனியைத் திருடியதாக முடிவு செய்த பாண்டியன். அவளுக்கு மொட்டை அடித்து கரும்புள்ளி செம்புள்ளி குத்தி அவளை சுண்ணாம்புக் கால்வாயில் வைத்து எரிக்குமாறு உத்தரவிட்டான். அப்போதும் குறுக்கிட்ட கையனார், ‘மன்னா அவசரப்பட்டு அந்தப் பெண்ணைத் தண்டித்து விடாதீர்கள், தீர விசாரித்து நடவடிக்கை எடுங்கள்’ என்று மன்றாடினார்.

ஆனால் மன்னன் மறுத்துவிட்டான். தண்டனையை உடனடியாக நிறைவேற்றும்படி கட்டளையிட்டான். அதுவரை பொறுமையாக இருந்த விதவைப் பெண் பொங்கி எழுந்து கோட்டை வாசலில் மண்ணை அள்ளித் தூற்றி, நின்று நிலைத்து நீதி

கேட்காத இந்த பூமி தீ காற்றுக்கும், தீ மழைக்கும் இரையாகக் கடவது என்று சாபமிட்டாள். சாபம் உடனே பலித்தது. தேரிக்குடியிருப்பு கோட்டையும் அதைச் சுற்றியிருந்த குடிகளும் தீப்பிழம்புகளால் சூழப்பட்டுத் தீக்கிரையாயின. தப்பியோடிய கையனார் தன் தெய்வ சக்தியால் எதிரே தென்பட்ட கற்குவா என்கிற மரத்தைப் பிளந்து அதற்குள். ஐக்கியமானார். பின்பு சில ஆண்டுகள் கழித்து அம்மரத்தடியில் கையனார் குடியிருப்பதை மக்கள் நம்பினர். பின்பு அவ்விடத்தில் கோயில் எழுப்பியுள்ளார்கள். ஒருநாள் கோயில் கருவறைக்குள் ஒருவன் சாமி அணிந்த நகையைத் திருடிய குற்றத்திற்காக அவளது கண்ணை குருடாக்கி விட்டது.

அதன் பின்னர் அவ்வூர் மக்கள் எந்த வித பயமும் இல்லாமல் நிம்மதியாக வாழ்ந்து வந்தார்கள். இக்கோயிலின் பெருமையினை அறிந்த வடக்கில் வசிக்கும் தைலாகுள மக்கள், தாங்கள் வியாபார வேலையாகச் செல்வதால் தங்கள் ஊருக்குப் பாதுகப்பு வேண்டும் என்று நினைத்து தேரிக்குடியிருப்பில் உள்ள கற்குவேல் அய்யனாரின் கோயிலிருந்து பிடிமண் எடுத்து வந்து பனைய நாடார் இனத்தவர்கள் வழிபட்டு வருகின்றார்கள்.

கோயிலமைப்பு

மரத்திற்குள் ஐக்கியமானதால் கற்குவா மரத்தின் கீழ் பீடமைத்தனர். பீடமானது பீடம் போல் இல்லாமல் அய்யனாரே நிற்பது போல் காட்சியளிக்கும். லாட சன்னாசி பரிவாரத் தெய்வமாக இருக்கின்றது.

அளிசோடை புழுகாண்டி

அளிசோடை புழுகாண்டி கோயில் எப்பொழுது தோன்றியது எனத் தெரியவில்லை. பூசாரியும் ஏனையோரும் இக்கோயிலில் தோன்று ஏழு தலைமுறை ஆகின்றது எனக் கூறுகின்றனர். இக்கோயில் மம்சாபுரம் வட்டாரத்தில் ஒன்று தான் உள்ளது. ‘‘அளிசோடை புழுகாண்டி, பேச்சியம்மன், இராக்காச்சியம்மன்

ஆகியோர் உடன்பிறந்தவர் ஆவர். காவலுக்காகவும், வேட்டைக்காகவும் வடதிசையிலிருந்து தென்திசை வந்தவர்கள்.'[123] அவ்வாறு வந்தவர்களில் அளிசோடை புழுகாண்டி மம்சாபுரத்திற்கு மேற்கே நான்கு கி.மீ. தூரத்தில் மலையடிவாரத்தில் வாழைக் குளத்திற்கு நீர் வரும் கால்வாயில் தங்கிவிட்டார். முதலில் அவர் கால்வாயில் தங்கியதால் நீர் மிகுதியாக வரும்பொழுது அவரை வணங்க இயலாத நிலை ஏற்பட்டு இருக்கின்றது. எனவே வணங்குவதற்கு வசதியாக சாமி சிலையை எடுத்துக் கால்வாய்க் கரையில் வடக்கே வைத்துவிட்டனர். கோயில் கட்டடம் ஏதுமின்றி இருந்த இக்கோயில் இன்று நன்கு வளர்ச்சிப் பெற்ற நிலையில் உள்ளது. இக்கோயிலுக்கு நல்ல செங்கற் கட்டிடமும் கிணறும் நீரேற்றும் பம்பும் அமைக்கப்பட்டுள்ளன.

கோயிலமைப்பு

கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலின் மேற்குப் பகுதி முப்பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதில் தென்பகுதிக் கோயிலில் பேச்சியம்மனும் வடக்குப் பகுதிக் கோயிலில் இராக்காச்சியம்மனும், நடுப்பகுதிக் கோயிலில் சொரிமுத்துவும் சிலையாக இருக்கின்றனர். இதனையடுத்துத் தென்பகுதியில் உள்ள ஓர் அறையில் சாமிக்கு அலங்காரம் செய்யும் ஆடை முதலிய பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. அதனை அடுத்துத் தென்திசையில் வடக்கு நோக்கி ஒரு கோயில் உள்ளது. அதில் அளிசோடை புழுகாண்டி கம்பீரமாக நிற்கிறார். புழுகாண்டியின் அருகில் வலப்பக்கம் கருப்பசாமியும் அவரை அடுத்து இருளப்பசாமியும் இருக்கின்றனர். இவர்களை அடுத்துச் சின்ன முத்தம்மாள், பெரிய முத்தம்மாள் இருக்கின்றனர்.

புழுகாண்டி கோயிலுக்கு நேர் எதிரே வடதிசையிலும், தென்திசை நோக்கி உள்ள கோயிலில் இரண வீரனும், அவருக்கு இடப்பக்கத்தில் சீத்தாராமும் இருக்கின்றனர். இரணவீரனுக்குப் பின்பகுதியிலும், சின்னமுத்தம்மாள், பெரிய முத்தம்மாள்

ஆகியோர்க்குப் பின்பகுதியிலும் வளர்ச்சி எனப்படும் வளைவு உள்ளது.

இக்கோயிலின் முன்பு ஒரு பெரிய குதிரைச் சிலை உள்ளது. இது செங்கல், சுண்ணாம்பு ஆகியவற்றால் உருவாக்கப்பட்டது. அதன் முன் கால்களை ஒரு பூதம் தாங்கிக் கொண்டு இருக்கின்றது. குதிரையில் கருப்பசாமி கையில் சாட்டையுடன் கம்பீரமாக அமர்ந்திருக்கின்றார். குதிரையின் அருகில் ஒரு வேட்டை நாய் சிலையும் சிறியதாக இருக்கின்றது.

இதன் தென்பகுதியில் திறந்த வெளியில் கமுக மரமும் உள்ளது. அதனை அடுத்துக் கோட்டை மலைக் கருப்பசாமி இருக்கின்றார். அவருக்குப் பின ஐயன்பந்தி அறுபத்தொன்று எனக் கூறப்படும் சாமி சிலைகள் உள்ளன. இக்கோயிலின் வடக்கே புதியவனும், தெற்கே மாடன், மாடத்தியும் இருக்கின்றனர். கோயிலின் அருகில் வடபக்கத்தில் தூண்டில் மரமும் அதற்கும் வடக்கே காலாடி கோயிலும் உள்ளன. பெரும்பாலும் இக்கோயிலில் இரவு தங்கமாட்டார்கள். ஏனெனில் அளிசோடை புமுகாண்டி இரவில் வெள்ளைக் குதிரையில் உலா வருவார். அதனால் இக்கோயிலுக்கு அக்கரையாக உள்ள வாழைக்குளத்தில் தங்குவார்கள். இரவில் பூட்டிய அக்கதவினை மறுநாள் காலையில் திறப்பார்கள். சாமி அலங்காரப் பொருட்களைப் பாதுகாப்பதற்காக மம்சாபுரம் சிற்றூரில் கோயில் வீடு ஒன்று கோயில் நிருவாகத்தினரால் அமைக்கப்பட்டிருக்கின்றது. தற்பொழுது கோயிலின் மேற்குப் பகுதியில் உணவுக்கூடம் மற்றும் ஓய்வு அறை அமைப்பதற்குப் பக்தர்களின் நன்கொடை மூலம் பணம் பெற்று முடித்துள்ளார்கள். அன்னதானக் கூடமும் அதனுடன் கட்டப்பெற்றுள்ளது.

மதுரை வீரன்

"முற்பிறப்பில் எமக்களித்த
மொழிப்படியே பிறந்து நான்

இப்பிறப்பில் வினைகள் எல்லாம்

ஒழித்து விட்டேன்"[124]

மதுரை வீரன் வளம்மிக்க, அழகுமிக்க காசி என்னும் நாட்டில் பிறந்தவர்.

"இன்னவள மிகுந்த வெழிற்காசி நன்னாடு

தன்னையுரைக்கச் சேடன் நன்னாவ மாகாதே"[125]

என்பர் புகழேந்திப்புலவர். "காசி நாட்டைத் துளசி மகாராசன் அறங்கள் பல செய்து சிறப்பாக ஆட்சி செய்து வந்தான். அவன் மனைவி பேரழகு படைத்த கற்பு நெறி மிக்க கற்பூரவல்லியாவாள். இவ்விருவருக்கும் பிறந்தவரே மதுரைவீரன். மதுரைவீரன் கொடி சுற்றிப் பிறந்ததால் குலத்துக்காகா"[126] என்பர். எனவே காட்டில் விடப்பட்டார்.

அக்குழந்தையை அக்காசி நகரத்தில் வாழ்ந்த சின்னானும் அவன் மனைவியும் எடுத்து வளர்த்தார்கள். அவன் சிறந்த வீரனாக விளங்கினான். பொம்மன நாயக்கர் அவனை வேலைக்கு அமர்த்திக் கொண்டார். மொம்மியைக் காவல் காக்க மதுரை வீரன் செல்லவே இருவருக்குமிடையே காதல் ஏற்பட்டு இருவரும் மணம் புரிந்து கொள்கின்றனர். திருச்சிக்குச் சென்று விஜயரங்கனிடம் வேலைக்கு அமர்ந்து அங்கிருந்து கள்ளர்களை அடக்கும் பொருட்டு மதுரைக்கு வந்தான்.

"விஜயரங்கச் சொக்கலிங்க வேந்த ரெனையழைத்து

மதுரைக்குச் சென்று வண்டரெனுங் கள்ளர்களை

மடக்கி வா வென்று மதித்து யெனையனுப்ப"[127]

மதுரை வந்து திருமலை மன்னரிடம் பணியலமர்ந்தான். "மதுரையில் வெள்ளையம்மா தன்னை மணக்குமாறு மதுரைவீரனை வேண்டவே மதுரைவீரன் மீது பகைமை கொண்டவர்கள் மன்னரிடம் வெள்ளையம்மாளுக்கும் மதுரைவீரனுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறினர். மன்னர் அவன் மீது பல குற்றங்களைச் சுமத்தி, கானகத்திற்குக் கொண்டு போய்க் கைகாலை வாங்கு என்றார்.[128]

அதன்படியே மதுரைவீரனும் கொல்லப்பட்டான். இத்தகைய சிறந்த வீரனை மக்கள் தெய்வமாக வணங்கி வருகின்றனர்.

''மதுரை நாயக்கர் காலத்தில் மதுரைவீரன் வழிபாடு தோன்றியது. அக்காலத்தில் மதுரையில் கொலை, கொள்ளை முதலிய தொல்லைக் கொடுத்து வந்த கள்ளர்களைக் கருவறுத்து நன்மை செய்த காரணத்தால் மக்கள் அவனைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். இவன் திருமலை நாயக்கர் காலத்தில் தோன்றியதாகவும் கருதப்படுகின்றது.''(129) மதுரை வீரனைக் கருப்புசாமி என்று அழைப்பதும் உண்டு. ஐயனார், அம்மன் கோயில்களில் சிறுதெய்வமாக வணங்கப்படும் வீரனுக்குத் தனிக்கோயில் இல்லை. சில இடங்களில் மதுரைவீரன் பதினெட்டாம்படிக் கருப்பன் என்று அழைக்கப்படுவதாகவும் தெரிகிறது.''

கோயிலமைப்பு

மதுரைவீரன் சிலை ஐந்து அடி உயரத்திலும், பொம்மி, வெள்ளையம்மாள் சிலைகள் மூன்றடி உயரத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோயில் தோன்றிச் சுமார் 300 ஆண்டுகள் இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இக்கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. மதுரைவீரன் நடுவிலும், பொம்மி, வெள்ளையம்மாள் பக்கத்திற்கு ஒருவராகவும் இருக்கின்றனர். ''மதுரைவீரனின் தோற்றமானது தலையில் கொண்டை, கனத்த மீசை, கட்டான உடல் கொண்ட வீரனின் வலக்கையில் வாள், இடக்கையில் கதை, அவனுக்கு முன்பாக ஒரு வேட்டை நாய், எதிரில் ஒன்று அல்லது பல மண்குதிரைகள், இந்த நிலையில் சிலைகள் காட்சி அளிக்கின்றன.''(130)

முனியாண்டி

இல்லற வாழ்க்கையை விடுத்துத் ''துறவு மேற்கொண்டவர்களைச் சாமியார் என்றும், ஆண்டி என்றும்,

பண்டாரம் எனறும், முனிவர் என்றும் அழைப்பர். இவர்கள் சிற்றூர் மடங்களில் தங்கியிருப்பர். இதனால் இவர்களுக்கு மடத்துச் சாமியார் எனறும், மடத்தாண்டி என்றும் பெயரிருக்கும். முனிவர் என்ற சொல் கடுந்தவம் மேற்கொண்டவர்ளையே குறிக்கும்.''[131]

தவம் மேற்கொள்ளும் கடுந்துறவிகள் நினைவாகச் சாலைகளும் கற்கள் நிறுவப்பெறுகின்றன. அம்முனிவர்களது வாழ்த்துப் பெற முனியன், முனியசாமி, முனியாண்டி என்ற பெயர்கள் குழந்தைகளுக்கு இடம் பெறுகின்றன என்று சோமலே கூறுவது குறிக்கத்தக்கது.

''துறவும் தவமும் மேற்கொண்ட சிலர் சித்தர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் இறந்தும் அவர்கள் நினைவாக முனியாண்டி என்று பெயர் வைத்து மக்கள் வணங்கி வருவதாகக் கருதலாம்.''[132]

மேற்கு மலைத்தொடரின் அடிவாரத்தில், அதற்கு எதிரே சிறிய மலை உள்ளது. இம்மலையானது திருவில்லிப்புத்தூரிலிருந்து மதுரைக்குச் செல்லும் சாலையில் சுமார் 15 கி.மீ.தூரத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. மேற்கு மலைத்தொடரின் அடிவாரத்தில் மலைப் பகுதியை ஆட்சிச் செய்த குறவர்கள் இத்தெய்வத்தை வணங்கி வருகின்றனர். இப்பகுதியில் இவர்கள் கோட்டை கட்டி வாழ்ந்திருக்கின்றனர். இவர்களில் இறந்தவர்களைப் பெரிய மண் தாழிக்குள் வைத்துப் புதைத்து விடுவர். உடல் கெடாதிருக்குமாறு தாழியினுள் உமியைப் போடுவர். ''குறவன் கோட்டை கண்மாய்ப் பகுதியில் தற்பொழுது தோண்டினாலும் இத்தகைய தாழி அல்லது ஆயுதம் கிடைப்பதாகக் கூறப்படுகின்றது. இங்கு வாழ்ந்த மக்களில் முனியாண்டி மட்டும் இங்கு தங்கி விட்டதாகவும் அவ்விடமே முனியாண்டி கோயில் எனவும் கூறுகின்றார்கள். மேற்கு மலைத் தொடரின் எதிரில் உள்ள சிறிய மலையின் அடிவாரத்தில் புளிய மரமாகக் காட்சி அளிக்கின்றனர். ஆகையால் இத்தெய்வத்திற்குக் கோயிலாகக் கட்டிடம் கிடையாது.

சிலை பீடம் எதுவும் இல்லை. ஒரு பெரிய புளியமரம் உள்ளது. இம்மரத்தின் அடியில் முனியாண்டி தங்கியிருப்பதாகக் கருதுகின்றனர்.''[133]

மேலும் கருப்பசாமி அடுத்த நிலையில் வைத்துப் போற்றி வழிபடத்தக்கவர் இவர். இவரை ''ஊர்த் தெய்வமாகவும் வழிபடுகின்றனர். அய்யனார் கோயிலில் இருந்து கருப்பசாமி துணைத் தெய்வமாக இல்லாத ஊர்களில் முனியசாமி ஊர்த் தெய்வமாக வழிபடப்படுகின்றது என்ற கருத்தும் காணப்படுகிறது.''[134]

கொன்றையாண்டி அய்யனார்

அய்யனார் கோயில்கள் பல இருப்பினும் அவற்றுள்ளும் மறவன் குளம் கொன்றையாண்டி அய்யனார் கோயிலே அமைப்பிலும் வழிபாட்டிலும் சிறப்புற்று விளங்குகிறது. ''அய்யனாருக்குச் சாத்தன், சாதவாகன், கோழிக்கொடியோன் போன்ற பெயர்கள் திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது.'' சிலப்பதிகாரத்தில் பாசண்ட சாத்தன் என்ற பெயர் குறிப்பிடப்படுகிறது. ''பச்சை நிறக் குதிரையை ஊர்தியாக உடைய பரியூர்தியென்றும், பச்சைப் பரியுள்ளோன் என்றும் இலக்கியங்கள் சுட்டுகின்றன. வெள்ளை யானை வாகனன் என்று பிங்கலம் குறிப்பிடும்.''[135] ''கிராமத் தெய்வங்களில் முதன்மையாகக் கருதப்படும் ஆண் தெய்வம் அய்யனார் ஆவார். தாருகா வனத்து இருடிகளின் ஆணவ இருமாப்புகளை அடக்கும் பொருட்டு அரியும் அரனும் எழுந்தருளிய காலத்து மோகினியாக நின்ற அரிக்கும் அரனுக்கும் பிறந்தவரே அய்யனார் எனக் கூறுவர். அய்யனார் அனைத்துக் கிராமங்களிலும் காவல் தெய்வமாக இருக்கின்றார். இவர் காக்கும் தெய்வமாகையால் இவர் அருகில் குதிரை, நாய் வீரர்கள் சிலை இருக்கும். வீரர்கள் தங்கள் தலைவரைக் காப்பதற்காக நிற்கின்றார்கள். மிருக வாகனங்கள் இரவில் ஊரைக் காக்கச் செல்வதற்குரிய வகையில் இருக்கின்றன என்பர். இவர் ஈஸ்வரனின்

கையில் பிறந்தமையால் கையகனார் எனவும் அழைக்கப்படுகிறார்.”(136)

இக்கோயில் தோன்றி சுமார் நானூறு ஆண்டுகட்கு மேல் இருக்கும் எனக் கூறப்படுகின்றது. இவ்வய்யனார் புளியமரங்களின் அடியில் இருப்பதால் புளிய மரத்தடி காத்தவர் எனவும், மாட்டுத் தலையை மான் தலையாக மாற்றியதால் மாட்டுத் தலையை மான் தலையாக மாற்றியதால் மாட்டுத் தலையை மான் தலையாக்கிய அய்யனார் எனவும் அழைக்கப்படுகிறார்.

மறவன்குளம் பகுதி திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயிலுக்கு உரிமையுடையது. இக்குளத்தை மராமத்துப் பார்க்கும் பொருட்டு அரிசன இன மக்கள் அப்பகுதியிலேயே தங்கியிருந்திருக்கின்றனர். “ஆண்டாள் கோயிலைச் சேர்ந்த மாடுகள் மேய்ச்சலுக்காக மறவன் குளத்துக்கு கொண்டு வரப்படும் அவ்வாறு இருக்கும் பொழுது ஒருநாள் மாலையில் ஒரு மாடு மட்டும் தப்பிப் புதருக்குள் தங்கிவிட்டது. இரவு நேரத்தில் புதர் அசைவதைக் கண்ட அரிசன இனத்தவர், அது மானாக இருக்கும் எனக் கருதி அடித்துக் கொன்று விட்டனர். பின்பே அது கோயில் மாடு என உணர்ந்திருக்கின்றனர். வேறு வழியின்றி அம்மாமிசத்தையும் அதன் தலையையும் பனை ஓலையில் தட்டிக் கொண்டனர். மறுநாள் மாட்டைக் காணாது காவல் நிலையத்தில் புகார்க் கொடுக்கவே காவலர்கள் மராமத்து வேலைக்கு வந்தவர்களை மாமிசப் பொட்டலங்களுடன் காவல் நிலையத்துக்கு அழைத்து வந்துள்ளனர். தங்கட்கு உறுதியாகத் தண்டனை கிடைக்கும் என எண்ணிய அரிசன இனத்தவர் அய்யனாரிடம் தங்களைக் காக்குமாறு வேண்டவே அவர் மாட்டுத் தலையை மான் தலையாகவும், மாமிசத்தை மான் மாமிசமாகவும் மாற்றி அவர்களைத் தண்டனையிருந்தும் காத்திருக்கின்றார். எனவே தான் இவர் மாட்டுத் தலையை மான் தலையாக்கிய அய்யனார் என அழைக்கப்பட்டார்.”(137)

கோயிலமைப்பு

கோயில் ஆரம்ப நிலையில் சிறியதாக இருந்திருப்பினும், இன்று பெரிய கோயிலாக வளர்ச்சியுற்ற நிலையில் இருக்கின்றது. அய்யனாருக்கு மட்டுமல்லாமல் சுற்றிலும் இருக்கும் வேறு தெய்வங்கட்கும் கோயில் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலுக்கு வருவோர் தங்கவும், உணவு உண்ணவும் வசதியாக மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. நடுப்பகுதியில் அய்யனார் கோயில் உள்ளது. ஒரு விநாயகர் கோயிலும் உள்ளது. விநாயகர் கோயிலின் பின் மூன்று கோயில்களில் சின்னமுத்து மாடன், பெரிய முத்துமாடன், இருளப்பசாமி ஆகிய சாமிகள் உள்ளன. அதற்குத் தென்திசையில் உள்ள சிறிய கோயில்களில் மாடன், மாடத்தி, சப்த கன்னியர்கள், புழுகாண்டி சிலைகள் உள்ளன. அதனை அடுத்துக் கருப்பசாமி இருக்கின்றார்.

வாயிலில் நுழைந்ததும் இடப்பக்கத்தில் உள்ள மூன்று கோயில்களில் முறையே பேச்சியம்மன், இராக்காச்சியம்மன், சின்னக் கருப்பசாமி, பெரிய கருப்பசாமி முதலியோர் உள்ளனர். கோயிலின் பின்பகுதியில் சற்று தூரத்தில் பதினெட்டாம்படிக் கருப்பசாமி கோயில் உள்ளது. அய்யனாருக்கு எதிரில் திறந்த வெளியில் யானைச் சிலைகள் உள்ளன. அதற்கும் முன் கிழக்கு நோக்கி இரண்டு பெரிய சிலைகள் இருக்கின்றன. இவை ஆவி என அழைக்கப்படுகின்றன. இக்கோயிலில் உள்ள சாமி சிலைகள் அனைத்தும் கற்சிற்பங்களாகவே அமைந்துள்ளது.

சுந்தரசுவாமி

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் இக்கோயிலுள்ளது. இக்கோயில் பிற கோயிலுடன் தொடர்புடையது. கம்மாப்பட்டி என்ற இடத்தில் காளியம்மன், இருளப்பசாமி மற்றும் சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலில் ''சிவனுக்குச் சூடுகின்ற மாலையானது திடீரென காணாமல் போகின்றது. ஏதோ ஒரு குறை இருப்பதாக

ஊர் பொது மக்கள் நம்புகின்றனர். அப்பொழுது பூ கட்டும் தொழில் செய்கின்ற (பண்டாரம்) ஒரு பெண்மணி கனவில் சிவன் தோன்றி எனக்குக் கோயில் கட்ட வேண்டும் என்று கூறியது. ஆனால் அது எந்த இடம் என்று அறிய முடியவில்லை. அதே சமயத்தில் சிவன் கோயிலில் பூசாரியாக இருக்கின்றவர் கனவில் தோன்றி இக்கோயிலில் சூடுகின்ற மாலை எந்த இடத்தில் குவிந்து இருக்கின்றதோ அந்த இடத்தில் எனக்குக் கோயில் எழுப்புங்கள் என்று கூறியது. அப்பொழுது திருவில்லிப்புத்தூரை வில்லிப்புத்தூர் என்ற மன்னன் ஆட்சி செய்ததால் அவரிடத்தில் இச்செய்தியை கூறியவுடன் அவர் காவலர்களை அனுப்பிப் பூ மாலை அதிகமாக உள்ள இடம் எது என்பதை கண்டுபிடித்து வாருங்கள் என்று கூறினார்.”[138] அதன்பிறகு அவ்விடத்தில் கோயில் எழுப்பி பூ கட்டும் தொழில் செய்தவர்களையே (பண்டாரம்) கோயில் பூசாரியாக நியமனம் செய்தார். ஆகையால் இக்கோயில் வில்லிபுத்தூர் மன்னர் ஆட்சிக் காலத்தில் தோன்றிய கோயிலாகும்.

கோயிலமைப்பு

இக்கோயில் கட்டிட அமைப்புடன் ஆரம்பக் காலக் கட்டடத்திலிருந்து காணப்படுகின்றது. கோயிலின் இரு பக்கத்தில் விநாயகர் மற்றும் பாலசுப்பிரமணியர் சிலைகள் உள்ளன.

கல்வெட்டுச் செய்திகள்

கூனங்குளம் என்ற ஊருக்கு பாத்தியப்பட்ட சுந்தரசுவாமி திருக்கோயில் பண்டாரக் குழு இனத்தவர்களால் 19.2.1984 ஆண்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

செக்கடி முனியாண்டி

“சல்லிக்கட்டுக்கு மூலக்காரணமே முனியாண்டி சாமிதான். காரணம் மதுரை மாவட்ட அலங்காநல்லூரில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில் காலரா நோயினால் நிறைய உயிர்கள் பலியாயின. இதனால் கவலை அடைந்த அவ்வூர் மக்கள்

இத்தெய்வத்திடம் வந்து தங்கள் குறைகளைச் சொல்லும் போது அருள்வாக்குச் சொல்லியிருக்கிறார். இந்நோயை தடுக்க வேண்டுமென்றால் இவ்வூரில் சல்லிக்கட்டு நடத்துங்க பார்க்க வருகின்றவர்களை நான் பலியேற்றுக் கொள்கிறேன் என்று கூறியதால், இவ்வூர் மக்களுக்கு எந்த அபாயமும் ஏற்படாது என்றும் கூறியது.''[139]

பேய், பிசாசுகளை விரட்டுவதற்கு மட்டும் இத்தெய்வத்தை வணங்கி வந்தவர்கள் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் இத்தெய்வத்தை வணங்கி வருகின்றனர். ''வாணியர் குலத்தைச் சேர்ந்தவர்கள் இராமகிருஷ்ணாபுரம் என்ற இடத்தில் வசித்து வருகின்றார்கள். அவர்கள் காலரா நோயினால் பாதிக்கப்பட்ட போது தங்கள் குல தெய்வமாகிய முனியாண்டியை வணங்கி வந்தனர். இச்சூழ்நிலையில் எல்லா இடங்களிலும் முனியாண்டி கோயில் இருப்பதால் தாம் வணங்குகின்ற தெய்வத்தின் பெயர் சற்று மாறுதல் பெற வேண்டும் என்பதற்காகத் தங்கள் தொழிலை குல தெய்வமாகப் போற்றுகின்ற அவர்கள், அதன் நினைவாக செக்கடி முனியாண்டி என்று பெயர் சூட்டினார்கள்.''[140]

கோயிலமைப்பு

நான்குப் பக்கச்சுவர் அமைப்புடன் மேல் பகுதி வெட்ட வெளியாக அமைந்துள்ளது. இத்தெய்வமானது அத்தி மரத்தின் கீழ் அமைந்துள்ளது. தரைப்பகுதித் தகட்டுக் கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் காலக்கட்டத்திலிருந்தே சிலை அமைப்புடன் காணப்படுகிறது.

தூண்டில் கருப்பசாமி

திருவில்லிப்புத்தூரிலிருந்து இராசபாளையம் செல்லும் சாலையில் ஆறு கி.மீ. தூரத்தில் கரிசல்குளத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் 100 ஆண்டுகட்கு முன் தோன்றியது. ''இக்கிராமத்தில் வாழும் மக்கள் சத்தியத்திற்குக்

கட்டுப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். காரணம் அவர்கள் ஏதாவது தவறு செய்து விட்டால் இக்கோயிலுக்கு வந்து தங்கள் உண்மையை ஒத்துக் கொள்வார்கள். இல்லையென்றால் இத்தெய்வம் அவர்களைத் தண்டித்துவிடும் என்பது நம்பிக்கை.''[141] காரணம் முன்னோர் காலத்தில் திருவில்லிப்புத்தூரிலிருந்து சிவகாசிக்குச் செல்லும் வழியில் ஒரு திருடன் அங்குள்ள சில பொருட்களைக் கொள்ளையடித்துக் கொண்டு கரிசல்குளத்திற்கு வந்திருக்கின்றான். அப்பொழுது தூண்டில் கருப்பசாமி கோயில் எல்லைக்குள் திருடன் புகுந்ததால் அவனை இத்தெய்வமானது தண்டித்துவிட்டது. இதனை அறிந்த அவ்வூர் மக்கள் இத்தெய்வத்தின் மீது நம்பிக்கை வைத்தனர். அவ்வூர் மக்கள் யாராவது தவறு செய்தால் உடனே இக்கோயிலுக்கு அழைத்து வந்து சத்தியம் செய்யச் சொல்லுவார்கள். ஆகையால் தவறு செய்தால் தெய்வம் தண்டித்துவிடும் என்று மக்கள் நம்புகின்றனர். இதனால் ஊர்மக்கள் அனைவரும் ஒன்றுகூடி இத்தெய்வத்திற்குக் கோயில் அமைக்க வேண்டும் என்று தீர்மானித்த போது, கோயில் கட்ட வேண்டாம் என்று வரிதி கூறியது. இதனால் கரிசல் குளத்தில் தேவேந்திரகுல வேளாளர் இனத்தவர்கள் மட்டும் தங்கள் குல தெய்வமாகக் கொண்டாடுகின்றனர்.

கோயிலமைப்பு

மாந்தோப்பின் நடுவில் வெட்ட வெளி அமைப்பில் காணப்படுகின்றது. திண்ணை போன்ற மேடையில் இருபக்கக் கம்பிக்கு நடுவில் சங்கிலி போன்று காணப்படுகின்றது. பரிவாரத் தெய்வங்களாகிய மாடன், மாடத்தி ஆகிய இருவரும் பீடமைப்பில் காணப்படுகின்றார்கள்.

சுடலை மாடன்

''தமிழகத்தில் பெரும்பான்மையாகத் தென் மாவட்டங்களில் வழிபடப்படும் சுடலைமாடன் இலங்கையில் கழிப்புச் சடங்கின் மூலம் வழிபடப்படுவதாக மௌனகுரு (1992-16) தனது ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு என்ற நூலில் குறிப்பிடுகிறார். கே.கே.பிள்ளை

கூறுவது போன்று சுடலை மாடன் தொடக்கக் காலத் திராவிடத் தெய்வம், பிற்காலத்தில் சிவன் சுடலையின் இடத்தைப் பிடித்துக் கொண்டான். சுடலைமாடன் சிவனோடு தொடர்புப் படுத்தப்பட்டுச் சிவனது வடிவமாகவும் மகனாகவும் கருதப்படுகிறான். அசைவ பலி கொண்ட சிவன் சுத்த சைவமாகப் பிற்காலத்தில் மாற்றப்பட்டது போலச் சுடலையின் வழிபாட்டிலும் சைவம், அசைவம் என்னும் படிநிலை சாதி, இடம், காலம், சடங்கு ஆகியவற்றின் அடிப்படையில் உயர்வு, தாழ்வு எனும்படி நிலை அடைந்துள்ளது.[142]

''சுடரொளியில் பிறந்ததால் பார்வதிதேவி சுடலையென்று பெயர் வைத்ததாகக் கூறுகின்றார்கள். பார்வதியின் வேண்டுதலுக்கு ஏற்ப சிவபெருமான் சுடலை மாடன் பிறப்புக்கு வரம் தருகிறார். சுடலையும் பால பருவத்திலேயே பூலோகத்தில் சுடுகாட்டுப் பிணங்களையெல்லாம் தின்கின்றான். பூலோகத்தில் பிணங்களே இல்லாமல் போகவே நாரதரும் பார்வதியிடத்தில் வந்து சொல்ல பார்வதி சுடலையிடம் தன்னுடன் வந்திருக்குமாறு வேண்டுகிறாள். ஆனால் சுடலை மாடன் பார்வதியிடம் வேண்டிச் சில வரங்களைப் பெறுகிறார். பிறகு சொரிமுத்தையன் சன்னதியில் சில காலம் வீற்றிருந்துப் பின்னர் மலையாள தேசம் செல்கிறார். அங்குள்ள பயிர்களையெல்லாம் அழித்து சேதம் செய்து காளிப்புலையன் என்கிற மந்திரவாதியிடம் சில நிபந்தனைகளுடன் பிடிபடுகிறான். மலையாள தேசத்தில் அனைவரும் அவருக்குப் பலி கொடுத்து விழா (கொடை) நடத்துகின்றனர். சுடலை படையலையும் பலியையும் பெறுவதோடு மட்டுமல்லாமல் புலையனின் மகனையும், புலையனையும் கூடப் பலி கொள்கிறார். பிறகு திருவனந்தபுரம் வந்து அங்கு சில காலம் வாழ்ந்து விட்டுப் பிறகு வள்ளியூரில் கம்பத்தடி மாடன் என்கிற பெயரில் வணங்கப் பெற்றார்.''[143] பின்னர் திருவில்லிப்புத்தூர் - மதுரை வழியே மீண்டும் சொரிமுத்தையன் சன்னதியை அடைந்து சொரிமுத்தையனைப் பணிந்து நின்றார். இக்கோயில் 200 ஆண்டுகட்கு முன்புத் தோன்றியது.

இத்தெய்வத்தைத் தேவேந்திர குல வேளாளர் இனத்தவர்கள் தங்கள் குலதெய்வமாக வணங்குகின்றனர். இக்கோயில் துலுக்கன்குளம் என்ற ஊரில் அமைந்துள்ளது. பரிவாரத் தெய்வமாகக் கருப்பசாமி உள்ளது.

கோயிலமைப்பு

நான்குப் பக்கச் சுவர் அமைப்பில் மேல்பகுதி வெட்ட வெளியாகக் காணப்படுகிறது. ஆலமரத்து விழுதுகளுக்குக் கீழ் சிறிய மேடை போன்ற அமைப்பில் பீடமாகக் காட்சியளிக்கின்றார். கோயிலின் எதிர்ப்புறத்தில் சிறிய குளம் காணப்படுகிறது.

வெயில்முத்து அய்யனார்

திருமால் மோகினி அவதாரம் எடுத்த காலத்தில் ''சிவனுக்கும் திருமாலுக்கும் இடையில் பிறந்தவர் என்ற புராணக்கதையும், கேரளாவில் உள்ள சாஸ்தா வழிபாட்டை 'அய்யனார் வழிபாடு' என்றும் கூறுவார்.''[144]

அகநானூற்றிலும், சிலப்பதிகாரத்திலும் ஐயை என்ற பெண் தெய்வத்தின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

"மையது சிறப்பின் ஐயை கோயில்"[145] -சிலம்பு

"இழையணி பணைத்தோள் ஐயை தந்தை"[146] -அகநானூறு

"ஐயன் என்ற சொல்லே மரியாதைக்குரிய ஆர் விகுதி பெற்று (ஐயன்+ஆர்) ஐயனார் ஆகியிருக்க வேண்டும். ஐயன் என்ற சொல் சங்க காலத்து வழக்குச் சொல் என்றும், ஐயனார் என்ற சொல் பிற்காலத்து வழக்குச் சொல் என்றும் கருதலாம். 'புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியரின் பெயர் ஐயன் ஆரிதனாரா? ஐயன் இதனாரா? என்று அறிந்து கொள்ள முடியவில்லை."[147]

''சங்க காலத்தில் 'சாத்தான்' புகழுக்குரியத் தெய்வமாக விளங்கியது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. சிலப்பதிகாரத்தில்

'சாத்தான் பிராமணக் குழந்தையாக்கப்பட்டான் என்றும் சபரிமலை சாஸ்தா கதையும், விக்கிரமாதித்தன் கதையும், சாத்தான் பிராமணக் குழந்தை என்று கருதுகின்றனர்.'[148]

"பார்த்தனுக் கருளும் வைத்தார் பரம்பரையாட வைத்தார்
சாத்தனை மகனாகக் கொண்டார்"[149]

வெயில்முத்து அய்யனார் கோயில் இராமலிங்கபுரத்தில் அமைந்துள்ளது. இத்தெய்வம் தோன்றி சுமார் 400 ஆண்டுகள் இருக்கும் எனக் கூறுகின்றனர். இத்தெய்வத்தை மூன்று இனத்தவர்கள் வணங்கி வருகின்றனர். இத்தெய்வத்திற்குக் கோயில் எழுப்பாமல், திருவிழா மட்டும் கொண்டாடுகின்றனர்.

கோயிலமைப்பு

கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலினுள் நேர் எதிரில் மாடன், மாடத்தி மற்றும் புழுகாண்டிச் சிலைகள் உள்ளன. "அய்யனார் சிலை உயர்ந்தோங்கிய நிலையில் வெட்ட வெளியில் அமைந்துள்ளது. வெயில் படுகின்ற நிலையில் உள்ள ஐயனாரை வெயில்முத்து அய்யனார் என்று'[150] அழைத்ததாகக் கூறுகின்றனர்.

தொகுப்புரை

சிறுதெய்வங்கள், பெருந்தெய்வக் கோயில்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட பல அமைப்பினைக் கொண்டிருக்கின்றன. சிற்சில தெய்வங்களில் சில மாற்றங்கள் காணப்பட்டாலும் அடித்தளத்தில் மாற்றம் பெறவில்லை என்றே கூறலாம்.

களப்பகுதியில் உள்ள சிறு தெய்வங்கள் மரத்தினை இருப்பிடமாகக் கொண்டும் அமைந்துள்ளன. இது இயற்கை வழிபாட்டோடு சேர்ந்தவையாகும். காலப்போக்கில் உருவ வழிபாடும் அமைந்துள்ளன என்ற கருத்தினை வலியுறுத்துவதாக அமைகின்றது எனலாம்.

அய்யனார் என்ற தெய்வம் களப்பகுதியில் நிறைமடை அய்யனார், நிறைகுளத்து அய்யனார், கொன்றையாண்டி அய்யனார் என்ற பெயர்களில் இடத்தைப் பொறுத்து அமைந்துள்ளன. இம்மூன்று அய்யனார்களும் நீர்நிலைக்கு அருகிலேயே கோயில்கள் கொண்டுள்ளன. வடிவமுள்ள தெய்வங்களில் அய்யனார், கருப்பணசாமி, மதுரைவீரன், புதியவன்சாமி, போன்ற தெய்வங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்தும் அம்மன் தெய்வங்களாகக் காணப்படுகின்றன. வடிவமுள்ள அம்மன் கோயில்களில் காளியம்மன், அம்மச்சியார் அம்மன், பெரிய மாரியம்மன், பிடாரியம்மன், திரௌபதியம்மன் ஆகிய தெய்வ அமைவிடங்களில் மட்டும் பெருந்தெய்வங்களாகிய விநாயகர், முருகன் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இவை செல்வாக்கைப் பெற்ற சிறுதெய்வக் கோயில்களுடன் பெருந்தெய்வங்களை இணைக்கும் ஒரு முயற்சியாகக் கருதலாம்.

மரத்தின் கீழுள்ள தெய்வங்கள் பெரும்பாலும் குலதெய்வங்களாக இருக்கின்றன. இந்த மரங்களாக புளியமரம், அத்திமரம், பனைமரம், வேப்பமரம், அரசமரம், ஆலமரம் ஆகியவை காணப்படுகின்றன. இம்மரங்கள் நீண்ட காலம் வாழும் தன்மை பெற்றவைகளாக இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மேடையிலுள்ள தெய்வங்களில் தூண்டில் கருப்பசாமி, சமயபுர மாரியம்மன், காளியம்மன், பாம்பலம்மாள் போன்ற தெய்வங்களுக்கு உருவச்சிலை அமைப்புகள் காணப்படுகின்றன. ஏனைய தெய்வங்களான சுடலைமாடன், பொன் இருளப்பசாமி, வண்ணான்மாடன், போன்ற தெய்வங்களுக்கு உருவ அமைப்பு இல்லை.

ஓலைக் கூரையினால் அமைந்த தெய்வங்கள் மாரியம்மன், முத்தாலம்மன், அக்னிமாரியம்மன் போன்றவை காணப்படுகின்றன.

ஏனைய தெய்வங்கள் அங்காள பரமேசுவரி, பத்ரகாளியம்மன் போன்றவை சிலை அமைப்பில் காணப்படுகின்றன.

களப்பகுதியில் கோயில் அமைப்பைப் பெற்ற தெய்வங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இத்தெய்வங்கள் அனைத்தும் பெரும்பாலும் பெருந்தெய்வ அமைப்பினை நோக்கி செல்லக் கூடியவைகளாகக் காணப்படுகின்றன.

களப்பகுதியில் மக்கள் மனதில் வைத்து வழிபடும் தெய்வங்களைத் தவிர்த்து, ஏனைய தெய்வங்கள் அனைத்தும் கிழக்குத் திசையை நோக்கியே அமைப்பினைப் பெற்றவைகளாக உள்ளன. இது களப்பகுதி தெய்வங்களின் பொதுமைத் தன்மையாக அமைகின்றது.

அடிக்குறிப்புகள்

1. சீ.பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.493.

2. மேலது, ப.504.

3. துளசி இராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், ப.6.

4. வீ.கோபால், சிறுதெய்வ வழிபாட்டில் குறியீடுகள், தொகுதி-3, ப.116.

5. சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல், ப.160.

6. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறவியல் ஆய்வுமுறைகள், ப.209.

7. தொ.பரமசிவம், தெய்வங்களும் சமூக மரபுகளும், பக்.109-110.

8. ஆ.சிவசுப்பிரமணியன், தமிழக நாட்டார் சமய ஆய்வு, பக்.201-202.

9. க.சண்முகசுந்தரம், சுடலைமாடன் வழிபாடு - சமூக மானிடவியல் ஆய்வு, ப.11.

10. Henry, The village Gods in South India, p.28.

11. துளசி இராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், ப.5.

12. கோ.இராசாமணி, காரைக்காலில் சிறு தெய்வ வழிபாடு ஓர் ஆய்வு, ப.27.

13. தே.ஞானசேகரன், மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள், ப.35.

14. சு. சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.229.

15. இரா.பாலசுப்பிரமணியன், நாட்டுப்புற வாழ்வியல், ப.46.

16. கே.ஏ. குணசேகரன், நாட்டுப்புற நடனங்களும் பாடல்களும், ப.123.

17. ச.பிலவேந்திரன், தமிழ்ச் சிந்தனை மரபு, நாட்டுப்புறவியல் ஆய்வுகள், ப.65.

18. மேலது, ப.65.

19. டாக்டர் கு. கதிரேசன், சிறுதெய்வ வழிபாட்டுச் சடங்குகள், ப. 9.

20. மேலது, ப. 10.

21. மேலது, ப. 11.

22. மேலது, ப. 11.

23. மேலது, ப. 12.

24. மேலது, ப. 15.

25. மேலது, ப. 16.

26. மேலது, ப. 17, 18.

27. W.T. Elmore, Dravidian Gods in Modern Hinduism.,pp.152-153.

28. தகவல்: 05.10.2007.

29. தகவல்: 11.08.2007.

30. கழனியூரன், குறுஞ்சாமிகளின் கதைகள், ப.81.

31. சு. சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.226.

32. கலைக்களஞ்சியம், தொகுதி II, பக்.95-96.

33. மேலது, VIII, ப.247.

34. தகவல்: கிருட்டிணன், 05.08.2007

35. அ.நா.பெருமாள், நாட்டுப்புறவியல் சிந்தனைகள், பக்.172-173.

36. மேலது, ப.173.

37. மேலது, ப.174.

38. தகவல்: கந்தம்மாள், 06.10.2007.

39. தகவல்:அ.ராமுத்தேவர், 24.09.2007.

40. வாழ்வியற் களஞ்சியம், பக்.297-298.

41. தகவல்: எஸ்.முத்துச்சாமி, 17.10.2007.

42. நாட்டுப்புறக் கலை இலக்கியம், தொகுதி I, ப.350.

43. ஜெகாதா, கிராம தேவதைகள், ப.18.

44. குள.சண்முகசுந்தரம், எல்லைச் சாமிகள், பக்.196-197.

45. தகவல்: காளியப்பன், 31.07.2007.

46. க.சாந்தி, நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம், ப.198.

47. .Tamil Lexicon-அம்tkali in her terrible froma village goddess vol-I, Part -I, p.21.

48. அகநானூறு, களிற்றுயானை நிரை, (6:1), ப.17.

49. சிலம்பு, மங்கல வாழ்த்துப் பாடல் வரி 63, ப.49.

50. கலைக்களஞ்சியம், தொகுதி I, ப.24.

51. கோ.மு.முத்துசாமிபிள்ளை, கோயிற் களஞ்சியம், ப.150.

52. டாக்டர் சு.சண்முகசுந்தரம், தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள், ப.172.
53. தகவல்: சீனி செட்டியார், 08.08.2007.
54. தகவல்: அழகப்பன், 04.08.2007.
55. தகவல்: அழகப்பன், 04.08.2007.
56. சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புறவியல் உளவியல் பார்வை, ப.71.
57. நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.50.
58. ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப.1330.
59. கு.நாடார் ஆறுமுகப்பெருமாள், சுடலைமாடன் சுவாமி கதை, ப.12.
60. தகவல்: திருமலை செட்டியார், 07.08.2007.
61. அரங்க மு.முருகையன், காலந்தோறும் சாதி, ப.180.
62. தகவல்: பழனியப்பன், 31.3.2008.
63. டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன், நாட்டுப்புற வாழ்வியல், ப.20.
64. அகநானூறு, 309.
65. நெடுநல்வாடை, 176.
66. தகவல்: முனீஸ்வரன், 28.07.2007.
67. தகவல்: வரதராஜன், 30.07.2007.
68. தகவல்: சொ. அழகப்பன், 21.08.2007.
69. தகவல்: மா. முத்தையா, 17.08.2007.
70. தகவல்: பேச்சிமுத்த, 16.08.2007.
71. வாழ்வியற் கலைக்களஞ்சியம், தொகுதி I, பக்.816-817.
72. மணா, தமிழ் மண்ணின் சாமிகள், ப.31.
73. அ.கா.பெருமாள், குமரி நாட்டுப்புறவியல், ப.131.
74. தகவல்: சடையாண்டித் தேவர், 27.07.2007.
75. தகவல்: சங்கரர், 23.11.2007.
76. தகவல்: சங்கரர், 23.11.2007.
77. கலைக்களஞ்சியம், தொகுதி IV, ப.216.
78. இரா.பாலசுப்பிரமணியன், நாட்டுப்புற வாழ்வியல், பக்.49-50.
79. தகவல்: தென்னரசு, 24.11.2007.

80. தகவல்: எஸ்.கந்தசாமி, 30.08.2007.

81. தகவல்: மாரியப்பன், 04.09.2007.

82. தகவல்: திருவேங்கடத்தேவர், 09.09.2007.

83. தகவல்: க.பாதமுத்து (எ) கண்ணன், 15.09.2007.

84. தகவல்: கழனியூரன், குறுஞ்சாமிகளின் கதைகள், ப.81.

85. இரா.பாலசுப்பிரமணியன், நாட்டுப்புறவியல், ப.58.

86. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.226.

87. தகவல்: கிருஷ்ணன், 03.11.2007.

88. தகவல்: நா.கருப்பன், 14.11.2007.

89. தகவல்: கணேஷ், 26.11.2007.

90. தகவல்: குருசாமி, 06.08.2007.

91. தகவல்: ந.மாயாண்டி, 19.09.2007.

92. தகவல்: எஸ்.இராமகிருஷ்ணன், 26.08.2007.

93. தகவல்: வே. முத்துவேல், 02.08.2007.

94. தி.சு. அவினாசிலிங்கம், கலைக்களஞ்சியம், தொகுதி III , ப.625.

95. முத்துப்பிள்ளை, மூ.நூ.பக்.137-138.

96. இரா.சீனிவாசன், சக்தி வழிபாடு, பக்.61-62.

97. சிலம்பு. 20:34-39.

98. தகவல்: காசி (எ) காளிமுத்து, 01.08.2007.

99. தகவல்: சங்கிலி, 08.07.2008.

100. மணா, தமிழ் மண்ணின் சாமிகள், ப.58.

101. மேலது, ப. 59.

102. தகவல்: சுடலைமுத்து, 06.07.2008.

103. மணா, தமிழ் மண்ணின் சாமிகள், ப.42.

104. தகவல்: செல்வி, 15.04.2008.

105. டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன், நாட்டுப்புறவியல், ப.51.

106. மேலது, ப.52.

107. தகவல்: காசிமுத்து, 29.04.2008.

108. தகவல்: மந்திரமூர்த்தி, 24.05.2008.

109. தகவல்: தர்மலிங்கம், 19.07.2008.

110. தகவல்: தர்மலிங்கம், 19.07.2008.

110. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி VII, ப.351.

111. தகவல்: பி.பிள்ளை, 06.05.2008.

112. தகவல்: சிவசாமி, 10.05.2008.

113. தகவல்: எம். ராஜசுந்தரம், 17.07.2008.

114. தகவல்: சுப்பிரமணியம், 17.06.2008.

115. தகவல்: பால்ராஜ், 24.07.2008.

116. தகவல்: செல்வமுத்து, 05.06.2008.

117. Stephen, Inglish - A Village Art of south India, p.6.

118. சக்திக்கனல், அண்ணன்மார் சுவாமிகதை, ப.20.

119. ராஜபகதூர், மதமாற்றம் என்னும் மயக்கம், ப.159.

120. துளசி இராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், ப.34.

121. தகவல்: சு.திருப்பதி, நாள்: 04.04.2008.

122. தகவல்: தங்கவேல், 03.05.2008.

123. தகவல்: குருசாமி, 19.03.2008.

124. ஜெகதா, கிராம தேவதைகள், ப.92.

125. புகழேந்திப்புலவர், மதுரைவீரன் சாமி கதை, ப.5.

126. மேலது, ப.14.

127. மேலது, ப.53.

128. மேலது, ப.59.

129. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 13, ப.452.

130. தகவல்: சேவுகன், நாள்: 23.03.2008.

131. கலைக்களஞ்சியம், தொகுதி VIII, ப.1181.

132. சோமலே, தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், ப.50.

133. தகவல்: பொ.ராமையா, நாள்: 27.03.2008.

134. துளசி இராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், ப. 40.

135. டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன், நாட்டுப்புறவியல், ப.52.

136. துளசி இராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், ப. 29.

137. தகவல்: சு.சங்கிலித் தேவர், 29.3.2008.

138. தகவல்: சு.அழகர்சாமி, 24.03.2008.

139. மணா, தமிழ் மண்ணின் சாமிகள், ப.17.

140. தகவல்: தர்மராஜ், 19.05.2008.

141. தகவல்: க.பேச்சிமுத்து, 10.6.2008.

142. சு.சண்முகசுந்தரம், தன்னானே, பக்.2-5.

143. தகவல்: சு.கந்தப்பன், 24.6.208.

144. டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன், நாட்டுப்புறவியல், ப.52.

145. புலமை வேங்கடாசலம், சிலம்பு, ப.104.

146. அகநானூறு (பா. 6) வரி:3, ப. 17.

147. எம்.சுந்தரேசம்பிள்ளை, புறப்பொருள் வெண்பாமாலை, ப.4.

148. பி.எல்.சாமி, சாத்தன் வழிபாடு, ப.156.

149. அப்பர் தேவாரம்

150. தகவல்: கந்தையா, 14.07.2008.

இயல் - 4

வழிபாடும் திருவிழாக்களும்

இயல் - 4

வழிபாடும் விழாக்களும்

முன்னுரை

ஒவ்வொரு வட்டாரத்திலும் தனித்தன்மைகள் இருக்கும் என்பதனடிப்படையில் திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் சிறுதெய்வ வழிபாட்டுக் கோயில்களில் நடைபெறும் பூசைகள், வழிபாட்டு முறைகள், படையல்கள் திருவிழாக்கள் போன்றவற்றை இவ்வியல் சுட்டுகின்றது.

வழிபாடு

''வழிபாடு என்ற சொல்லுக்கு வணக்கம், கோட்பாடு, பூசனை, பின்பற்றுதல், வழக்கம் எனப் பல பொருள்கள் இருப்பினும் கடவுளையோ, உயிர் இல்லாதவற்றையோ, உயிர் உள்ளவற்றையோ, வாயால், மணத்தால் வழிபடுவதே வழிபாடு எனத் தமிழ் லெக்சின் விளக்கம் தருகிறது. குறிப்பிட்ட ஒரு வெற்றிடத்தை வழிபடல், பீடத்தை வழிபடல், உருவத்தை வழிபடல், நடுகல்லை வழிபடல் என வழிபாட்டில் பல நிலைகள் இருந்து வருகின்றன''(1) என்பர்.

''இறைவன் உண்மையின் வடிவாகவும் உறைவிடமாகவும் விளங்குகின்றான். மனக் கலக்கங்களும் வேறு பல துன்பங்களும் நீங்கச் சிறந்த கருவியாக வழிபாடு அமைகிறது''(2) என்கிறார் இராசமாணிக்கனார்.

நமது உள்ளத்தில் இறைவனைக் குடியேற்ற வேண்டும். அதற்கு நம் உள்ளத்தைத் தூய்மையாக வைப்பதுடன் திறந்தும் வைத்திருக்க வேண்டும். வழிபாடு என்பது அடிப்படையில் ஒருவகை விருப்பத்தின் வெளிப்பாடே என்பர். ''ஆன்மீகக் கூட்டு வழிபாட்டை இன்று இச்சொல் உணர்த்தினாலும் ஒரு மதிப்புமிக்க

வேண்டுதலையே வெளிப்படுத்துவதாகச் சமயமும் அறமும் பற்றிய கலைக்களஞ்சியம் கூறுகிறது.''[3]

வழிபாட்டின் வகைகள்

வழிபாடு பல வகைகளில் அமைகின்றது. இதனைப் பொது வழிபாடு, சிறப்பு வழிபாடு, தனி வழிபாடு, கூட்டு வழிபாடு என வகைப்படுத்துவார். ஒவ்வொரு நாளும் வழக்கம் போல் இறைவனை எண்ணி வழிபடுவது பொது வழிபாடு எனவும், சிறப்பு நாட்களில் திருவிழாக் காலங்களில் இறைவனை வழிபடுவது சிறப்பு வழிபாடு எனவும் தனிநபர் வழிபாட்டைத் தனிவழிபாடு என்றும் பலர் சேர்ந்து பொதுநோக்கில் வழிபடுவதைக் கூட்டு வழிபாடு எனவும் கூறுவர்.

திருவாசகத்தில் பல வழிபாட்டு முறைகள் உள்ளதாக ஆய்வாளர் சுட்டுவர். "பக்தியால் கூத்தாடுதல், பாடுதல், பதைத்தல், பணிதல், சிவன் எங்குற்றான் என்று தெருதோறும் அலறித்தேடுதல், நல்ல மலர் புனைதல், நாத்தழும்ப ஏற்றுதல், சிந்தனையைப் பிரானுக்கு ஆக்குதல், சிந்தை, செய்கை, கேள்வி வாக்கு - இவை அனைத்தையும் அவருக்கே ஆக்குதல், சிவன் எம்பெருமான் என்று இயம்பி ஊற்று மணல் போன்று நெக்கு-நெக்கு உள்ளம் உருகி ஓலமிட்டுப் போற்றி நிற்றல் திருக்கோயிலைப் பெருக்குதல், மெழுகுதல், பெருமானை மலரிட்டு முட்டாது இறைஞ்சுதல், பூமாலை புனைந்து ஏத்துதல் போல்வன திருவாசகத்தில் காணப்படும் வழிபாட்டு முறைகளாகும்.''[4] இவ்வழிபாட்டினை வீட்டு வழிபாடு, கோயில் வழிபாடு எனவும் இருவகையாகப் பகுப்பர்.

பூசை

இறைவனுக்கு ஏதாவது பொருட்களைப் படைத்து மனதார வணங்குதல் பூசை எனப்படும். பெருந்தெய்வக் கோயில்களில் பூசை முறைகளில் ஓர் ஒழுங்கு முறை உண்டு. நாள் ஒன்றுக்கு மூன்று, ஐந்து அல்லது ஆறு காலப் பூசைகள் தவறாது நடைபெற வேண்டும். இப்பூசைக்கு நெய்வேத்தியம் செய்து அதனை இறைவனுக்குப்

படைக்கின்றனர். அதற்கென ஒவ்வொரு கோயிலிலும் மடப்பள்ளியும் இருக்கிறது. பூசை முடிந்ததும் பக்தர்கட்குப் பிரசாதம் வழங்கப்படுகின்றது. சைவக் கோயில்களில் திருநீறும் குங்குமமும் வழங்கப்படுகின்றன. வைணவக் கோயில்களில் துளசி, தீர்த்தம், குங்குமம் கொடுக்கப்படுகின்றன.

சிறுதெய்வக் கோயில்களில் ஓர் ஒழுங்கான முறையைக் காண்பது அரிதாகும். சில கோயில்களில் தினம் ஒரு வேளையும், சில கோயில்களில் வாரம் இருநாட்களிலும், சில கோயில்களில் வாரம் ஒருமுறையும் பூசைகள் நடைபெறுகின்றன. சிறப்பு நாட்களிலும் தாங்கள் விரும்பும் நாட்களிலும் மட்டும் பூசை நடைபெறும் கோயில்கள் மிகுதியாக உள்ளன. பூசை நேரங்களில் எல்லாம் பொங்கலிடுவதில்லை. மடப்பள்ளியும் கிடையாது. பூசை முடிந்ததும் அனைத்துக் கோயில்களிலும் திருநீறு வழங்கப்படுகின்றது. அம்மன் கோயில்களில் குங்குமம் வழங்கப்படுகின்றது. சிறுதெய்வக் கோயில்களில் அக்கோயில் கொண்டாடிகளில் ஒருவரே பூசாரியாக இருந்து பூசை செய்கிறார்.

பூசைக்கான தேங்காய், பழம், பத்தி, சூடம், வெற்றிலைப் பாக்கு, பூ முதலியவற்றைப் பயன்படுத்துகின்றனர். தேங்காய் உடைத்து இறைவனை வழிபடுவது இந்து சமய வழிபாட்டு முறையின் சிறப்பாகும். தேங்காயில் அமைந்துள்ள மூன்று கண்களும் நமது ஆன்மாவை மூடியுள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களைக் குறிக்கும்.

“தேங்காய் உடைக்கும் போது ஆன்மாவை மூடிக் கிடக்கும் மும்மலங்கள் அகன்று தேங்காயின் சுவையான ஆன்மா வெளிப்படுகின்றது என்பது தத்துவம் என இதனைக் குறித்துக் கருத்துத் தெரிவிப்பர்.”[5] இப்பூசை, தினப்பூசை, வாரப்பூசை, வருடப்பூசை எனப் பல வகைகளில் அமைகின்றது.

தினப்பூசை

ஒவ்வொரு நாளும் காலை, மாலை ஆகிய இருவேளைகளில் அல்லது ஏதாவது ஒரு வேளையில் பூசை நடத்துவதே தினப் பூசையாகும். பூசை செய்வதற்கு முன் சாமியை நீராட்டி அலங்காரம் செய்து தேங்காய் உடைத்துப் படையல் வைத்து பூசை செய்வர்.

திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் மாரியம்மன், காளியம்மன் கோயில் ஆகியவற்றில் தினப்பூசை நடைபெறுகின்றது. மார்கழித் திங்கள் மட்டும் பேமலையம்மன், பேச்சியம்மன், கொன்றையாண்டி அய்யனார், இருளப்பசாமி ஆகிய கோயில்களில் தினமும் ஒரு வேளைப் பூசை நடைபெறுகின்றது.

வாரப்பூசை

சில சிறுதெய்வக் கோயில்களில் வருமானமின்மையால் தினப்பூசை நடத்த இயலாது. வாரம் ஒருமுறை அல்லது வாரம் இருமுறை பூசை நடைபெறும். இப்பூசைக்காக பொருட்களைப் பக்தர்களில் எவரேனும் வாங்கிக் கொடுப்பர். தினப்பூசை முறையிலே வாரப்பூசையும் நடைபெறும்.

பேமலையம்மன் கோயில், பேச்சியம்மன் கோயில், இடையன் குளத்திலுள்ள மாரியம்மன் கோயில் ஆகியவற்றில் செவ்வாய், வெள்ளி ஆகிய இரு நாட்களிலும் பூசை நடைபெறுகின்றன. பிற ஊர்களிலுள்ள காளியம்மன் கோயிலில் பூசை செய்யாது; செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் தீபம் ஏற்றுகின்றனர்.

கொன்றையாண்டி அய்யனார் கோயிலில் புதன், சனி ஆகிய நாட்களில் பூசைகள் நடைபெறுகின்றன. அலிசோடை புழுகாண்டி கோயிலில் வெள்ளிக்கிழமை மட்டும் பூசை நடைபெறுகின்றது.

மாதப்பூசை

மாதத்தின் ஒருநாள் மட்டும் பூசை செய்வது மாதப்பூசையாகும். திருமலைப் பேச்சியம்மன் கோயில் மாதம் ஒரு வெள்ளிக்கிழமை மட்டும் பூசை நடைபெறுகின்றது.

சிறுதெய்வ வழிபாடு

''சிறுதெய்வங்கள் பெரும்பாலும் ஊர் எல்லையிலும் சிறுசிறு மடங்களிலும் சிறிய கோயில்களிலும் காணப்படுகின்றன. சிறு தெய்வங்களின் வழிபாட்டு முறைகள் ஊருக்கு ஊர் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. ஆயின் அடிப்படை நம்பிக்கைகள் பெரும்பாலும் ஒன்றியிருப்பதைக் காணலாம்''[6] என்பர்.

இவ்வழிபாட்டின் மூலம் மக்கள் நோய்களிலிருந்து குணமடைவதும், சமுதாய பொருளாதார மாற்றங்கள் காரணமாக உயர்நிலையை அடைகின்ற சூழல்களையும் கண்டு அம்முறைகளைத் தாங்களும் பின்பற்றி பயனடைந்த சூழலும் இந்நிலை மாற்றத்திற்குக் காரணமாக இருக்கலாம். நோய் நீங்கவும், பிள்ளை வரம் பெறவும், பேய், பிசாசு ஓட்டவும், மழை வரச் செய்யவும், மேற்கண்ட வினை இனிது முடியவும், சமூக நன்மைக்கெனவும் நம்பிக்கையுடன் இறை வழிபாட்டையும் திருவிழாக்களையும் நடத்துகின்றனர்.

விழாக்களின் மூலம் சமுதாயம் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு மகிழும் சூழல் ஏற்படும். சமுதாயம் ஒன்றுபடும் நிகழ்ச்சிகளும் திருவிழாக்களும் தெய்வ வழிபாடு எனலாம். "நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடும் நிலையைச் சிறுதெய்வ வழிபாடு என்பதைவிடத் 'தொல்பழம்' வழிபாடு என்று கூறுவதுதான் பொருத்தமானது"[7] என்று ஆ.கா.பெருமாள் கூறுகின்றார்.


தமிழ்க் கலைக்களஞ்சியம் கூறுவதைப் போன்றே ஒயிட் கெட்டும் (White Head) ''கிராம தேவதை வழிபாடு என்றே குறிப்பிடுகின்றார்.''[8]

சமூகத்தின் சமூக பொருளாதார, சமய வேறுபாடுகளைக் காட்டக் கூடியதாக உள்ளன. ‘‘சிறுதெய்வங்கள் மனிதனுடன் நெருக்கமான தொடர்புடையவை. அவை மக்களின் அன்றாடத் தேவைகளைத் தருவனவாகக் கருதப் பெறுவதால் அவை என்றும் வழிபடப் பெற்று வருகின்றன.’’[9] என்பர்.

வழிபாட்டு மரபில் பூசை செய்கின்றவர்களும் பல இனத்தவர்கள் ஆகையால், பூசை மரபில் பலி முறைக்குச் சிறப்பிடமிருப்பதை காணலாம். எனவே, பழமை மரபு சிறு தெய்வ வழிபாட்டில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகள், பண்பாட்டுச் சிறப்புப் பெற்றவை. ‘‘வில்லுப்பாட்டு, கணியான் கூத்து, தெருக்கூத்து, கரகாட்டம் போன்றவை இவ்வகை மரபின் வழி காணப்படுகின்றது.’’[10]

மனித மனத்தில் தோன்றிய அச்சம், குற்றவுணர்வு போன்ற மனவியல் பண்புகளின் பரிணாம வளர்ச்சியே வழிபாட்டு நெறிக்கு வித்திட்டது. ‘‘அஞ்சியாகினும் அன்பு பட்டாகினும் தெய்வத்தை நினை’’ என்று அப்பர் கூறியுள்ளார்.[11]

வழிபாடானது இயற்கை மற்றும் சமுதாய அமைப்பின்படி பிரிக்கப்பட்டுள்ளது.



வீட்டுத்தெய்வம் முன்னோர் வழிபாட்டுடன் தொடர்புடைதாகும். கன்னி கழியாமல் அகால மரணமடைந்தவர்களும், நோய்வாய்ப்பட்டு (அம்மை)

இறந்தவர்களும் தெய்வமாக்கப்படுகின்றனர். இத்தெய்வத்தை இல்லுறை தெய்வம் எனறும் கூறுவர்.

"நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது
மல்ல லாணை யல மயைரா"[12] (நெடுநல்வாடை:42-43)

வீட்டுத் தெய்வங்களின் வளர்ச்சியே காலப்போக்கில் குலதெய்வமாக மாறுகிறது. ஒரு குடும்பம் பல குடும்பங்களாகப் பிரிந்து வாழத் தொடங்குவது காலத்தின் விளைவாகும். அக்குடும்பங்கள் உறவு முறையாகும் போது குலமாகிறது. வடமொழியில் இதனைக் 'கோத்திரம்' என்றும் கூறுகின்றனர். ஒரு கோயிலை அல்லது தெய்வத்தினை வணங்கும் முறையிலிருந்து ஓரினத்தை அடையாளம் காணலாம்.

ஒவ்வொரு குலதெய்வத்திற்கும் பழங்கதையின் தொடர்பு இருக்கும். "பழங்கதையோடு நேரடித் தொடர்புப் பெற்ற இடத்தில் உள்ளக் கோயில் மூலக் கோயிலாகும். இதனைத் தங்கள் வசதிக்கேற்றவாறு பிடிமண் எடுத்து வந்து கோயில் கட்டிக் கொள்கின்றனர்.'[12]

"குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்
குலதெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி"[13]

என்ற கும்மிப்பாட்டு தெரிவிக்கிறது.

வழிபாட்டு முறைகள்

1. சிற்றூர்த் தேவதைகளுக்குச் சிலர் காணிக்கை மட்டும் செலுத்துவதுண்டு. சிலர் காசுகளைத் துணியில் முடிந்து கோயிலுக்குச் சென்று காணிக்கைச் செலுத்துகின்றனர். இதனை 'முடிந்து போடுதல்' என்று கூறுவர்.

2. தேவதைகளுக்கு எண்ணெய்யும் மாலையும் வாங்கிக் கொடுப்பார்கள். அதைக் கோயில் பூசாரி எண்ணெயுடன் மஞ்சளையும் சேர்த்து உருவங்களில் பூசி மாலையிடுவார்.

3. பெண் தெய்வங்களுக்குச் செவ்வாய்க் கிழமையும், ஆண் தெய்வங்களுக்கு வெள்ளிக்கிழமையும் பொங்கலிடுவர்.

4. திருவிழாவின் போது திருவீதி ஊர்வலம் வரும் உற்சவர்க்கு தேங்காய், பழம், பன்னீர், ஊதுபத்தி, சூடம், சாம்பிராணி, வெற்றிலைப் பாக்கு ஆகியவற்றை அளிப்பர். இதனை 'சொர்ணப்பம் சாத்துதல்' என்பர்.

5. ஊர்மக்கள் எல்லோரும் சேர்ந்து வரிப்பணம் பிரித்து மூன்று நாட்கள் விழாக் கொண்டாடுவர். இதனைக் கொடை விழா என்பர். ஆண் தேவதைகளுக்கு வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாட்களும் பெண் தேவதைகளுக்கு திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களும் விழா நடத்துவர்.

6. "தென்னார்க்காட்டிலுள்ள குறிஞ்சிப்பாடியில் புற்று மாரியம்மன் கோயிலில் 'செடல் குத்திக்' கொண்டு ஆடுகின்றனர்."(14)

நாட்டுப்புற வழிபாட்டின் இயல்புகள்

"1. வேத நெறிக்கும் ஆகம முறைக்கும் அப்பாற்பட்டவை.

2. அண்டத்தைப் பற்றிய தத்துவார்த்தங்களோடு தொடர்பு கொள்ளாமல் சிற்றூர் வாழ்வோடு தொடர்பு கொண்டவை.

3. குடும்பத்தில் அல்லது குலத்தில் இறந்தோர், கொலை செய்யப்பட்டோர், ஆவிகள், மூத்தோர், கன்னிகள் போன்றோரும், மரங்கள், கற்கள், ஆயுதங்கள் போன்றவையும் தெய்வங்களாக வழிபடப்படும்.

4. கோயில்கள், மரத்தடி, குளக்கரை, இடுகாடு, ஏரி, கண்மாய் போன்ற இடங்களில் இடம்பெறும்.

5. விழாக்கள் செய்யக் குடும்ப, குல, சாதிய ஊர் அமைப்புகள் இருக்கும்.

6. ஆண்டுக்கு ஒருமுறை அல்லது சில ஆண்டுக்கு ஒருமுறை விழா நடைபெறும்.

7. உயிர்ப்பலிகள் இருக்கும் என்று டாக்டர் தே.லூர்து அவர்கள் பகுத்துக் கூறுகிறார்."(15)

சிறுதெய்வ வழிபாட்டு முறைகள்

மக்கள் தெய்வங்களுக்குச் செய்யும் சடங்குகளும் வழிபாட்டு நெறிகளும் வழிபாட்டு முறை எனப்படும். சிறுதெய்வ வழிபாடுகள் எந்தவித மதக் கோட்பாடுகளுக்கும் உள்ளடங்காமல் ஆகம விதிகளுக்கு உட்படாமல் சம்பிரதாய (காலங்காலமாகச் செய்யப்பட்டு வரும்) வழிபாட்டு முறைகளைப் பின்பற்றாமல் சிற்றூர் மக்கள் விரும்பிய வண்ணம் நிகழ்த்தப்படுகின்றன. சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் தெய்வங்களுக்குத் தகுந்தவாறு வேறுபடும். ஒவ்வொரு தெய்வமும் தனித்த வழிபாட்டு முறைகளைக் கொண்டிருக்கும்.

சிறுதெய்வ வழிபாடுகளில் தெய்வங்களை அலங்கரித்தல், பூசை செய்தல், படையல் போடுதல், நேர்த்திக்கடன் செலுத்துதல் ஆடியும் பாடியும் துதித்தல் போன்றவை வழிபாட்டு முறைகளாக அமைகின்றன.

1. பெரிய கும்பிடு

"ஊர்த் தெய்வங்களுக்குச் சிற்றூர் மக்கள் எடுக்கும் திருவிழா பெரிய கும்பிடு எனப்படும். பெரிய கும்பிடை அடிப்படையாகக் கொண்டே சடங்குகளும் நேர்த்திக் கடன்களும் மேற்கொள்ளப்படுகின்றன. சிற்றூர்களில் பஞ்சம், வறட்சி, நோய் தொற்று போன்றவை ஏற்பட்டால் பெரிய கும்பிடு நடத்தப்படுகிறது."(16)

சிறு தெய்வங்களுக்கான வழிபாடு ஆண்டிற்கு ஒருமுறையோ இரண்டாண்டுகளுக்கு ஒருமுறையோ, மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையோ நடைபெறும். இது பெரிய கும்பிடு, சாமி கும்பிடு, ஊர்த் திருவிழா என்று பல பெயர்களில் குறிப்பிடப்படும்.

பெரிய கும்பிடு வழிபாட்டு முறைகளைக் கீழ்க்கண்டவாறு பகுத்துரைக்கலாம்.

பெரிய கும்பிடு வழிபாட்டு முறைகள்

ஆய்த்த நிலைச் செயல்பாடுகள்	வழிபாட்டுநிலை செயல்பாடுகள்	நிறைவுநிலைச் செயல்பாடுகள்
சாமி உத்தரவு	கரகமெடுத்தல்	பள்ளயம் பிரித்தல்
சாமி சாட்டுதல்	சிலையெடுத்தல்	சாமிப்பெட்டியைக் கோயிலில் வைத்தல்
காப்புக் கட்டுதல்	சாமிப்பெட்டி தூக்குதல்	
கம்பம் நடுதல்	சக்திக்கெடாய் வெட்டுதல்	வரவு, செலவு பார்த்தல்
முளைப்பாரி போடுதல்	பொங்கல் வைத்தல்	
வரிவசூல் செய்தல்	நேர்த்திக்கடன் செலுத்துதல்	
வேப்பிலைத் தோரணம் கட்டுதல்	முளைப்பாரி எடுத்தல்	
	மஞ்சள் நீராடுதல்	
	சிலை அழிப்பு	
	கலை நிகழ்ச்சிகள்	

(பள்ளயம் பிரித்தல் - கோயில் வழிபாட்டிற்கு வரி கொடுத்தோருக்குச் செய்யும் மரியாதை)

மேற்கண்ட படிநிலைச் செயல்பாடுகள் எல்லாம் பெரிய கும்பிட்டிற்கான வழிபாட்டு முறைகளாகும்.

வழிபடு கடவுளர் இயல்பு

பெண் தெய்வங்களில் "பகைவரால் கொல்லப்பட்டோர், பாலியல் வன்முறையை எதிர்க்கும் முயற்சியில் இறந்தோர், பாலியல் வன்முறையிலிருந்து தப்பிக்கவும், அதை எதிர்க்கவும் தற்கொலை செய்து கொண்டோர், கணவனோடு உயிர்நீத்தோர் ஆகியோரை வீர வழிபாட்டிற்கு உரியவர்கள் எல்லாம் தங்கள் இறப்பிற்கு உரிய காலமில்லாத காலத்தில் தங்கள் இறப்பினைச் (அகால மரணத்தை) சந்தித்தவர்கள் ஆவர்.

வீர வழிபாட்டு நெறியில் இரண்டு சாரார் ஒரே தெய்வத்தை வழிபடுவதும் உண்டு. கொல்லப்பட்ட வீரனைச் சார்ந்த பிரிவினர் அவன் வீரத்தையும், பிற வரங்களையும் வேண்டி வழிபடுபவர். கொன்ற பிரிவினர் கொல்லப்பட்ட வீரனின் ஆவியால் தாங்கள் பழிவாங்கக் கூடாது என்பதற்காக சமாதானம் (சாந்திச் சடங்குகள்-Propititatory rites) செய்து வணங்குவர்."(17)

வழிபாட்டு முறை (தொத்து மந்திரம்)

பொருள் ஒருமுறை ஒன்றாகச் சேர்ந்திருந்துவிட்டால் அவற்றில் எவ்வளவுதான் வேறாகப் பிரித்தாலும் அவை என்றும் ஒன்றாகவே இருக்கும். ஒன்றுக்கு ஏதாவது நடந்துவிட்டால் அது மற்றவற்றையும் அதுபோல் பாதிக்கும் என்ற அளவுக்கு அவற்றில் உறவுகள் உறுதியாக நிலை பெறுகின்றன என்பது (Frazer) தொத்து மந்திரத்தின் அடிப்படையாகும். நோயால் பிடிக்கப்பட்டவர்களின் தலையைக் கோழிமுட்டையால் மூன்று முறை சுற்றிப் பின்னர் அதனை வீதியில் எறிவது தமிழகத்தில் பரவலாகக் காணப்படும் மந்திரச் சிகிச்சை முறையாகும். "ஹைட்டில் என்னும் ஆப்பிரிக்கர்களிடையே இதுபோன்ற சிகிச்சை முறை பிரபலமாகவுள்ளது. Pass-Poul (Pass the Chicken) என்ற இச்சிகிச்சை முறையில் 'தூய்மைக் குறையும்', 'அசுத்த ஆவிகளும்' விலகும்."(18) இறைவனை வணங்கத் தொடங்கிய மனிதன் இறைவனின் சக்தியை அருளைப் பெற வழிபாடுகள் நடத்தினான். ஒவ்வொருவருக்கும் வழிபாடுகள் இன்றியமையாதனவாக

இருக்கின்றன. சங்ககாலத்தில் "உயிர்பலியிடுதல்",[19] "குருதி கலந்து உணவினைப் படைத்தல்",[20] "வீடுகளில் நீராடி விளக்கேற்றுதல், பூவும் புகையும் இட்டு மாலை அணிவித்தல்"[21] போன்ற வழிபாடுகள் இருந்தமையை அறியமுடிகின்றது.

திருவிழா

"விழா என்னும் திறந்த வாசல் வழியே
தான் நம்நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும்"[22]

என்பர் தாகூர்.

சங்ககாலத்திற்கு முன்பிருந்த விழாக்களில் மக்கள் கொண்ட ஈடுபாட்டினை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. சங்க இலக்கியங்கள் "விழா"[23], "விழவு"[24] "சாறு"[25] போன்ற சொற்களால் விழாக்களைக் குறிக்கின்றன. பழந்தமிழகத்தில் இந்திர விழா 28 நாட்கள் நடந்தமையைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். திருவிழாக்கள் ஒவ்வொரு பகுதி மக்களின் தொழில்களையும் பண்பாட்டையும் ஒற்றுமையுணர்வையும் வெளிப்படுத்துகின்றன.

விழாக்களின் தத்துவங்கள்

"அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்து நெஞ்சத்தில்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி"[26]

கொடியேற்றிய முதல்நாள் விழா தூல உடம்பை நீக்குவதற்காகவும், இரண்டாம் நாள் தத்துவமான உடம்பு நீங்கும் பொருட்டும், மூன்றாம் நாள் மூவினை, முக்குணம், மும்மனம், முக்குற்றம், முப்பிறப்பு, முப்பற்று முதலியன நீங்குவதற்கும், நான்காம் நாள் நாற்கரணம், நால்வகைத் தோற்றம் நீங்கவும், ஐந்தாம் நாள் விழா ஐம்பொறிகள், ஐந்தவத்தை, ஐந்து மலங்கள் நீங்கவும், ஆறாம் நாள் விழா உட்பகை ஆறும், கலைகள் ஆறும், கன்மகுலம் ஆறும், பதமுத்தி ஆறும் நீங்கவும், ஏழாம்நாள் விழா எழுவகைப் பிறப்பும்

எழுவகைத் தத்துவங்களாகிய மலகுணமேழும் நீங்குதற் பொருட்டும், எட்டாம் நாள் விழா எண் குணங்கள் விளங்கவும், ஒன்பதாம் நாள் விழா மூவடிவும், மூக்கிருந்திறம், மூவிடத்து உறைதலிலை என்றற் பொருட்டும், பத்தாம் நாள் விழா சிந்தையும் மொழியும் செல்லா நிலைத்தாய் என்று கூறுகின்றனர்."(26)

வரி

வழிபாடு ஆரம்பிப்பதற்கு முன்னால் ஊர் மக்களுக்குச் 'சாட்டுதல்'(27) மூலம் நிகழும். விழாவிற்காக ஆகும் செலவுகளை வரி வசூல் செய்து ஊர் பெரியவர்கள் முன்னிலையல் நடத்துவார்கள். குடும்பம் ஒவ்வொன்றிற்கும் போடப்படும் வரி தலைக்கட்டு வரி எனறும் கூறுவர். தலைக்கட்டு வரி வசூலித்து மேளக்காரருக்கும், குசவர்க்கும் அச்சாரம் கொடுப்பர்.

பூசாரி

பண்டைத் தமிழர்கள் "பூசாரியின் பணியினைக் குயவர்கள் ஆற்றியதாகச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகினறன."(28) நாட்டுப்புற வழிபாடுகளில் சிற்றூர் மக்களே பூசாரிகளாக உள்ளனர். நாட்டுப்புறத் தெய்வங்களுக்குப் பூசை செய்பவரை ஐயர், குருக்கள், அர்ச்சகர் என்ற பெயர்களிலும் மக்கள் வழங்குகின்றனர். அங்காளம்மன், மாரியம்மன், திரௌபதியம்மன், பிடாரியம்மன் போன்ற தெய்வங்களுக்கு நாடார், பிள்ளைமார், வன்னியர் போன்ற சாதியினர் பூசாரிகளாக இருக்கின்றனர். ஆதிதிராவிடர்கள் வசிக்கும் இடங்களில் இப்பூசாரிகள், தோற்றத்தில் மேல் ஆடையின்றி பெரும்பாலும், தாடி வைத்துக் கொண்டு ஐம்பது வயதிற்கு மேல் உள்ளவர்களாக இருப்பதைக் களப்பகுதியில் காணமுடிகின்றது.

உத்தரவு கேட்டல்

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர் பிறர் கூறும் சொற்களைச் சகுனமாகக் கொள்ளும் வழக்கம் பண்டைய காலத்தில் இருந்துள்ளதை " 'விரிச்சி கேட்டல்' என்று பழந்தமிழ் இலக்கியங்கள்

கூறுகின்றன.''[29] விரிச்சி என்பதற்குப் பின்பு ''வருங்காரியத்தை விரிவாக முன்னரே தெரிவிப்பதாகும்.''[30] விரிச்சி கேட்டல் என்பதைத்தான் தற்போது உத்தரவு கேட்டல் என்கின்றனர். தெய்வம் கனவில் தோன்றி தனக்குக் கோயில் எழுப்ப வேண்டும் என்று கூறுவதன் பேரிலும் வழிபாட்டிடங்கள் தோன்றியுள்ளன. இவ்வழிபாட்டிற்குரிய ஒரு சில இடங்கள் வழிபடச் செல்லும் போது தான் சுத்தம் செய்யப்பட்டு வழிபாட்டிடங்களாக உருவாக்கப்படுவதைக் காணமுடிகிறது.

மாதங்கள்

சிறு தெய்வங்களை வழிபடுவதற்கு என்று வருடத்தில் சில மாதங்களை மட்டும் மக்கள் தேர்ந்தெடுத்து கொள்கின்றனர். தெய்வங்களுக்குத் திருவிழா நடத்துவதற்குப் புரட்டாசி, பங்குனி, சித்திரை, ஆனி, ஆடி, தை மாதங்களிலும், குல தெய்வங்களுக்கு மாசி மாதத்திலும் திருவிழா நடத்துகின்றனர்.

ஊர்க் கூட்டம்

களப்பகுதியிலுள்ள சிற்றூர் தெய்வங்களில் ஊர்க் கூட்டம் என்பது திருவிழாவிற்குச் சுமார் இருபது நாட்களுக்கு முன்னர் நடத்தப்படுகின்றது. இதற்காக ஊர் மக்களால் கூட்டப்படும் கூட்டம் ஊர்க் கூட்டம் எனப்படும். இக்கூட்டத்திற்குப் பறையர் ஒருவர் மூலம் பறையடித்துச் செய்தி அறிவிக்கப்படுகின்றது. எத்தெய்வக் கோயிலின் திருவிழாவோ அத்தெய்வத்தைச் சொல்லி சிற்றூர் மக்கள் கலந்து கொள்ளும் முகமாக அவ்வறிவிப்பு அமைகின்றது. பின்னர் அன்று மாலை கோயிலின் முன் சிற்றூர் மக்கள் கோயில் சமயத்தார்கள் (நேர்த்திக் கடனை செய்பவர்கள்) கோயில் தர்மகர்த்தாக்கள், ஊர் நாட்டாமைகள் முன்னிலையில் கூடித் திருவிழாவிற்கு ஒவ்வொரு தலை கட்டுக்கும் (ஒரு குடும்பம்) வரி வசூல் செய்கின்றனர். உத்தரவு கேட்டல் என்ற செயல் பொதுவாக அனைத்து வழிபாடுகளிலும் காணப்படுகின்றது. உத்தரவு கேட்டல் என்பது தெய்வத்திடம் திருவிழா அல்லது

படையல் இடுவதற்குச் சம்மதம் கேட்பதாகும். இந்த உத்தரவு கேட்டல் குலதெய்வங்களின் வழிபாட்டில் பங்காளி வழி குடும்பத்தார், வழிபடும் தெய்வத்திடம் சென்று உத்தரவு கேட்கின்றனர். வெவ்வேறு நாளில் குங்குமம், திருநீறும், பூவும் மடித்து தெய்வத்தின் எதிரில் போட்டு குழந்தையை விட்டு எடுக்கச் செய்வர். குங்குமம் வந்தால் நல்ல சகுனமாகவும் உத்தரவு கிடைத்துவிட்டதாகவும் நம்புகின்றனர். வேறு திருநீறு, பூவோ வந்துவிட்டால் சகுனம் சரியில்லையென்று திருவிழாவை ஒத்திப் போடுகின்றனர். இதனைப் பூப் போட்டு பார்த்தல் என்றும் கூறுகின்ற வழக்கமும் களப்பகுதியில் காணப்படுகின்றது.

கொடிக் கட்டுதல்

பழந்தமிழகத்தில் ஊரிலோ அல்லது கோயிலிலோ விழாத் தொடங்கியதற்கு அறிகுறியாக கொடி ஏற்றுதல் மரபாகப் பின்பற்றி வந்ததைச் "சாறயர்ந் தெடுத்த உருவப் பல்கொடி"[31] என்றும்,

"தங்கிய கொள்கைத் தெருநிலைக் கோட்டத்து
மங்கல நெடுங்கொடி வானுறு வெடுத்து"[32]

என்றும் சங்க இலக்கியங்கள் மற்றும் காப்பியங்களின வழி அறிய முடிகின்றது. குல தெய்வ வழிபாட்டில் கொடி ஏற்றுதல் என்பது கிடையாது. ஊர்த் தெய்வ வழிபாட்டில் கொடிக் கட்டுதல் மரபாகப் பின்பற்றி வருகின்றனர். திரௌபதி அம்மனுக்கு அமாவாசை பஞ்சமி திதி அன்று கொடிக் கட்டுவதற்கு ஏற்ற நாளாகக் கருதுகின்றனர். சிற்றூர் தெய்வ வழிபாட்டில் பண்டைய சமுதாயத்தின் எச்சத்தின் தொடர்ச்சியாக விழாத் தொடக்கத்தில் கொடி ஏற்றி அதனை விழா நாட்கள் முடியும் வரை அவிழ்க்காது பாதுகாக்கும் மரபை இன்று வரை நாட்டுப்புற மக்கள் கடைபிடித்து வருவதைக் காணமுடிகின்றது. கொடி ஏற்றியப் பிறகு அவ்வூர் மக்கள் வெளியூருக்குச் செல்வதில்லை. வெளியூரிலிருந்து வந்தவர்கள் திருவிழா அன்று கண்டிப்பாக ஊர் வந்து விடுவர். அப்படி வரவில்லையென்றால் தெய்வக் குற்றமாக தெய்வத்தால் தண்டிக்கப்படுவர் என்று மக்கள் நம்புகின்றனர்.

காப்புக் கட்டுதல்

திருவிழாக்களின் தொடக்க நிலை சடங்காகக் காப்புக் கட்டுதல் சடங்கு நடைபெறுகின்றது. கொம்பு மஞ்சள் ஒன்றினை மஞ்சள் நூலில் சுற்றி வலதுகை மணிகட்டில் கட்டிக் கொள்வது காப்புக் கட்டுதல் எனப்படும். இக்காப்புக் கட்டுதல் முதலில் தெய்வத்திற்குக் கட்டிய பிறகு கோயில் சமயத்தார்கள் கட்டிக் கொள்கின்றனர். அடுத்துச் சிற்றூர் மக்கள் கட்டிக் கொள்கின்றனர். இக்காப்புக் கட்டுதல் அய்யனாருக்குக் குதிரை எடுப்பதற்கும், திரௌபதயம்மனுக்குத் தீ மிதித்தலுக்கும், மாரியம்மனுக்குக் கரகம் எடுப்பதற்கும் முன்பும் நடைபெறுகின்றது. காப்புக் கட்டியவர்கள் திருவிழா முடியும் வரை அதனை அவிழ்க்கக் கூடாது என்ற மரபு காணப்படுகின்றது. காப்புக் கட்டியவர்கள்;

♦ வெளியூர் பயணம் செல்லக் கூடாது

♦ மாமிச உணவு உண்ணக்கூடாது

♦ தினமும் இருவேளை குளித்துத் தூய்மையுடன் இருக்க வேண்டும்

♦ திருமணமானவர்கள் உடலுறவைத் தவிர்த்தல் வேண்டும்.

♦ பாய், தலையணையை இல்லாமல் வெறுந்தரையில் படுக்க வேண்டும்.

♦ மஞ்சள் ஆடை அணிய வேண்டும்

♦ அண்டை அயலார் இல்லங்களில் உணவு உண்ணக்கூடாது.

♦ தினமும் இருவேளை இறைவனை வழிபட வேண்டும்

போன்ற நெறிமுறைகளைத் தினமும் பின்பற்றுவதைக் களப்பகுதியின் மூலம் அறிய முடிகின்றது.

சாமியாடியின் தோற்றம்

"சாமியாடுவோர் ஆண்களாக இருப்பின் வேட்டியை வரிந்து கட்டியும், பெண்களாக இருப்பின் தலைமுடியை விரித்துப் போட்டும் சாமியாடுவர். ஆடும் தெய்வத்திற்குரிய ஆயுதங்களான

அரிவாள், வாங்கரிவாள், சிறு பிரம்பு, பூண் கட்டிய தடிக்கம்பு, சாட்டை, வாள், கட்டாரி ஆகியவற்றில் ஒன்றை ஏந்தி ஆடுவர். தீப்பந்தம், தீச்சட்டி ஏந்தியும் ஆடுவர், மதுரை, நெல்லை, மற்றும் குமரி மாவட்டங்களில் நீர்க்கரக் எடுத்துத் தெய்வப் பிரதிநிதியாக ஆடுவர். அவருக்குக் 'கோமறத்தாடி' எனப்பெயர்.''(33) ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஏற்ப சமியாடுபவர்களின் பெயர் வேறுபடும். விருதுநகர் மாவட்டத்தில் சாமியாடுபவர்களை 'மருளாடி' என்றும் ''சாமியாடி'' என்றும் அழைப்பதாகக் கள ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது.

சாமியாடுதல்

பண்டையக் காலத்தில் முருக வழிபாட்டில் ''நாட்டுப்புற இசைவுடன் கூடிய 'சாமியாட்டம்' இடம்பெற்றது பற்றித் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது.''(34) பூசாரிகளும், சாமியாடிகளும் தெய்வமேறிய நிலையில் ஆடும் ஆட்டம் சாமியாடுதல் அல்லது சாமியாட்டம் எனப்படுகின்றது. குலதெய்வ வழிபாட்டில் சாமியாடுதல் சிறப்பான ஒன்றாக நடத்தப்படுகின்றது. தெய்வம் மனிதனுள் புகுந்து கொண்டு ஆவேசத்துடன் ஆடுவதனால் சாமியாடுபவர்கள் தற்காலிகக் கடவுள்களாகக் கருதப்படுகின்றனர். குலதெய்வ வழிபாடுகளில் சாமியாடுவதற்கான உரிமை பெற்றவர்கள் மட்டுமே (பரம்பரை பரம்பரையாக) சாமியாட முடியும். இவ்வகையில் எத்தெய்வத்தைக் குலதெய்வமாக வழிபடுகிறார்களோ அக்குடும்பத்திலுள்ள மூத்தவருக்கே உரிமை அளிக்கப்படுகின்றது. களப்பகுதியில் சாமியாட்டம் நடைபெறுகையில் அவர்கள் காலில் விழுந்து, தமது குறைகளைச் சொல்லி வேண்டுகின்றனர். இதற்குச் சாமியாடி பதிலுரைப்பதை அருள்வாக்குச் சொல்லுதல் என்கின்றனர்.

அருள்வாக்கு

''வேட்டுவர்களின் தெய்வ வழிபாட்டின் போது 'சாலினி தெய்வமேறியாடிக் குறி' சொன்னதுப் பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.''(35) தெய்வத்தால் பிடிக்கப்பட்டுச்

சாமியாடுபவரை மக்கள் கடவுளாகக் கருதித் தங்கள் குறைகளைச் சொல்லி நிவர்த்தி கேட்கின்றனர். இது காப்புக் கட்டுதல் என்ற நிகழ்விலிருந்தே நடத்தப்படுகின்றது. அச்சமயத்தில் சாமியாடுபவர் எதைக் கூறினாலும் அதனைத் தெய்வத்தின் வாக்காகவே சிறுதெய்வத்தை வணங்குகின்ற மக்கள் எடுத்துக் கொள்கின்றனர். இவ்வாறு அருள் வாக்குச் சொல்பவர் குறி சொல்பவர் என்றும் கூறப்படுகின்றது.

கூழ் ஊற்றுதல்

ஊர்த் தெய்வ வழிபாட்டில் மாரியம்மனுக்குக் கூழ் ஊற்றுதல் நிகழ்வு நடத்தப்படுகின்றது. மாரியம்மன் திருவிழாவின் போது தத்தம் வீடுகளிலிருந்து காலையில் கஞ்சி அல்லது கூழ் எடுத்துச் சென்று கோயிலின் எதிரிலுள்ள திடலான இடத்தில் இருக்கும் பாத்திரத்தில் ஊற்றி விட்டுத் தீபாராதனைச் செய்துவிட்டுச் செல்கின்றனர். அந்தக் கஞ்சி ஊர் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மாரியம்மனுக்குப் பொங்கல் வைக்காதவர்கள் கூழ் ஊற்றுகின்றனர்.

பலியிடுதல்

பலியிடுதலைச் சங்க இலக்கியங்கள்,

“சிறு தினை மலரொடு விரை மறியறுத்து”[36]

“மறிக் குரவறுத்துத் தினைப் பரப்பி”[37]

“மலைவான் கொள்கென உயிர்பலி தூஉய்”[38]

“கொழுப்பர் யெறிந்து குருதி தூஉய்”[39]

என்று கூறுகின்றன. முருகனுக்கு உயிர்பலியிடுட்டதை,

“அணங்கறி கழுங்கிற் கோட்டங் காட்டி
வெறியென வுணர்ந்த வுள்ளமொடு மறியறுத்து
அன்னை யயரு முருகு நின்
பொன்னேர் பசலைக் குதவா மாறே”[40]

எனவரும் சங்கப் பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது. சிறு தெய்வ வழிபாட்டின் தனித்தன்மைகளுள் ஒன்று அத்தெய்வங்களுக்கு

உயிரினங்களைப் பலியிடுவதாகும். தெய்வங்களுக்குப் பலியிடுதல் செய்வதனால், மக்கள் தமக்கு நன்மை உண்டாகுமென்று நம்பிச் செய்கின்றனர். தெய்வ வழிபாட்டில் பலியிடலும் மாமிசப் படையலும் முக்கிய இடம் வகிக்கின்றன. பலியிடல் என்பது தொன்று தொட்டு இருந்து வரும் சடங்கு முறையாகும். ஓர் உயிரைக் கொடுப்பதன் மூலம் இன்னொரு உயிர் காப்பாற்றப்படுகிறது என்ற நம்பிக்கை அவ்வட்டார மக்களிடம் காணப்படுகிறது.

கும்பம் கொட்டுதல்

கும்பம் கொட்டுதல் என்பது ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் அரிசியைப் பெற்று அதனை உணவாகச் சமைத்து அதனோடு காய்கறியும் சேர்த்துத் தெய்வங்களுக்குப் படையல் போட்டுப் பின்னர் அச்சோறினை ஒன்றாகக் கிளறி அனைவருக்கும் பிரசாதமாகத் தருகின்றனர். இவ்வாறு அனைத்து வீடுகளிலும் இருந்து பெறப்பட்ட அரிசியை உணவாகச் சமைத்துக் குவியலாகக் குவித்து வைப்பதையே ‘கும்பங் கொட்டுதல்’ அல்லது ‘கும்ப வள்ளயம் விடுதல்’ என்று கூறுகின்றனர்.

கம்பம் திருவிழா

இது அய்யனாருக்கு எடுக்கும் விழாவாகும். “அலரிப் பூவைப் பறித்து அய்யனாருக்குப் படைத்து வேப்ப மரத்தின் மூன்று கொம்புள்ள கிளையைக் கோயில் வாயிலில் ஊன்றுவர். மாலைப் பொழுதில் அக்கம்பத்தைச் சுற்றி மகிழ்ச்சிக் கூத்தாடுவர். செவ்வாய்க் கிழமையன்று பொங்கலும் புதனன்று தேரோட்டமும் நடைபெறும். வியாழக்கிழமையன்று உடலில் ஊசிகளைக் குத்திக் கொண்டு (அலகு) ஊர்வலம் வருவர். அன்றிரவு சாமி ஊர்வலம் வரும். மறுநாள் திருவிழா முடிவடையும். அன்று கோயிலில் ஊன்றியக் கம்பத்தைக் கிணற்றுக்குள் போடுவர். பத்தாம் நாளில் மீண்டும் மாவிளக்குக் காணிக்கையாகச் செலுத்திக் கும்பத்தைக் கிணற்றுக்குள் போடுவர். பண்டாரம் தன் கையில் கட்டிய காப்பையும் கிணற்றில் எறிவார். அன்றிரவு தெருக்கூத்தோ அல்லது

சதிராட்டமோ நடைபெறும்.''[41] களஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்டதில் இராமலிங்காபுரம் என்ற ஊரிலுள்ள வெயில் முத்து அய்யனார் கோயிலில் இத்திருவிழா நடத்தப்படுகின்றது. இதில் தேரோட்ட நிகழ்ச்சி மட்டும் நிகழ்த்தப்படவில்லை.

கும்மி

கும்மிக் கொட்டுதல் என்பது "கும்முதல் என்ற சொல்லோடு தொடர்புடையது. பழமொழி, சீவகசிந்தாமணி, நைடதம் முதலான பழந்தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளது. சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களில் மழை வேண்டி அம்மனுக்கு நிகழ்த்தப்படும் முளைப்பாரிச் சடங்குகளின் போது பெண்கள் கும்மி கொட்டுகின்றனர். இதனை முளைக் கொட்டு என்றும் சுட்டுகின்றனர். மற்ற மாவட்டங்களில் பொழுது போக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது."[42]

கரகம் எடுத்தல்

கரகத்திலுள்ள நீர் மாரியாகவும், புனித நதியாகவும் கருதப்பட்டது.

"ஒன்றாங் கரகமடி - கன்னீ
ஓகோ - என் தாயே
ஓடியாந்து பூசை வாங்கு இப்போ - தாயே
நாலாங் கரகமடி - கன்னீ
ஓகோ - என் தாயே
நாடி வரும் பூங்கரகம் இப்போ - தாயே
அஞ்சாங் கரகமடி கன்னீ
ஓகோ - என் தாயே
அசைந்தாடும் பொன் கரகம் இப்போ - தாயே"[43]

ஊட்டுக் கொடுத்தல்

''தெய்வங்களுக்கு ஊன் கலந்த சோறினைப் படைப்பதை 'ஊட்டுக் கொடுத்தல்' ''[44] என்பர். இவை போன்று விருதுநகர்

மாவட்டத்தில் புழுகாண்டி, பாதாள பேச்சியம்மன் போன்ற தெய்வங்களுக்கு ஊட்டுக் கொடுத்தல் படையல் உள்ளதாக கள ஆய்வின் மூலம் அறியமுடிகின்றது.

பிரசாதத்தின் பெருமை

"பேதமில் சங்க மத்தின் பிரசாத மிலங்கத்துக்கு
காதலா லாடுமாதே கருதிய தென்ன தென்னிற்
கோதிலா முன்ன மந்தக் குருலிங்க சங்க மத்தின்
பாதநீர் பிரசாதத்தைப் பருகுத லாத லாலே"(45)

பிரசாதத்தினால் நீங்கும் பிணிகள்

"மனத் தாபங் குமர கண்டன மாதண விஷரோகங்கள்"(46) மனத்தினால் வரும் துன்பங்கள், பேயினால் பிடிக்கப்பட்டு அதனால் வரும் துன்பங்களாகிய விஷ நோய்களைப் பிரசாதத்தின் மூலம் நீக்கி விடலாம்.

உருவ அமைப்பு

சிறுதெய்வங்கள் பலவற்றிற்கும் வழிபாட்டின் போது மட்டுமே புதிதாக உருவ வடிவங்கள் செய்யப்படுகின்றன. வழிபாடு முடிந்த நிலையில் அவற்றைச் சிதைத்துவிடும் வழக்கம் பல சிறு தெய்வக் கோயில்களில் காணப்படுகிறது. அம்மன் கோயில்களில் சக்திக் கரகம் தெய்வ உருவமாகக் கருதி வழிபடப்படுகிறது. சிறுதெய்வங்களின் பெயரை மட்டுமே நினைவில் கொள்ள முடியுமே தவிர, அந்தத் தெய்வங்களுக்கான உருவங்களைக் கற்பனை செய்து பார்ப்பது கடினம். அதையும் தாண்டிச் சிறுதெய்வங்களுக்குச் சிலையெடுக்கப்பட்டிருந்தால் அவை பிரமாண்டமான உருவங்களைக் கொண்டிருக்கும், திறந்த வெளியில் குதிரையும் குதிரையின் மீது அமர்ந்திருக்கும் தெய்வமும் தனித்து நின்றோ, அமர்ந்தோ இருக்கும்.

பெரிய உருவம், பிதுங்கிய நிலையில் உள்ள பெரிய கண்கள் கையில் சூலாயுதம், வேல், சாட்டை, கதாயுதம், அரிவாள், சிறியதும்

பெரியதுமான பரிவாரத் தெய்வங்கள், வேட்டை நாய்கள் என்று பார்ப்போரைப் பயத்தில் ஆழ்த்துவனவாக அச்சம் ஊட்டுவனவாகக் காணப்படும். தனி நபர் இரவு நேரங்களில் எளிதாகக் கோயிலின் பக்கம் சென்று விட முடியாது. ஆண் தெய்வங்கள் மட்டுமின்றிப் பெண் தெய்வங்களுக்கும் இத்தகைய பூதாகர வடிவம் ஏற்றுக் கொள்ளப்படுவதுண்டு.

பாதாளப் பேச்சியம்மன் திருவிழா

திருவில்லிப்புத்தூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கம்மாபட்டியில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் “சிவராத்திரிக்கு முதல்நாள் இரவு 12 மணிக்குப் பாதாளப் பேச்சிக்கு ஊட்டுக் கொடுக்கும் நிகழ்ச்சி நடக்கிறது. கோயில் பூசாரிகள் மட்டுமே இருந்து இந்தப் பூசையை நடத்துகிறார்கள். அந்த நேரத்தில் மற்ற யாரும் கோயிலுக்குள்ளே இருக்க மாட்டார்கள். நடுநிசி வேளையில் இரண்டு மாதத்துக் கடாகுட்டி ஒன்றைப் பேச்சியின் காலடியில் வைத்துக் காவு கொடுக்கிறார்கள். ஆட்டுக்குட்டியின் உதிரத்தை ஏற்கெனவே வைத்து இறக்கிய வெண் பொங்கலில் விட்டுப் பிசைந்து உருண்டைகளாகப் பிடித்துக் கோயிலின் நாலா திசைகளிலும் வீசுகிறார்கள்.”[47]

கடாக்குட்டியின் தலையைக் கோயிலுக்கு வெளியே அதற்கென உள்ள பிரத்தியோக இடத்தில் புதைத்துவிட்டு உடம்பை மட்டும் கோயில் சம்பந்தப்பட்ட ஒரு பிரிவினரிடம் கொடுக்கிறார்கள்.

பூசையின் போது கோயில் வாசலில் கொட்டுச் சத்தம் முழங்குகிறது. கொட்டு அடிப்பவர்களை ஓரிடத்தில் நிறுத்தி அவர்களைச் சுற்றி பூசாரி ஒரு வட்டம் போடுவார்.

ஊட்டுக் கொடுக்கும் நேரத்தில் அவர்கள் அந்த வட்டத்துக்குள் நின்றுதான் கொட்டடிக்க வேண்டும். அதைவிட்டு அணு பிசகி நின்றாலும் பேச்சி அடித்துவிடும் என்று நம்புகின்றனர்.

இப்படி ஒரு நம்பிக்கை நம்பப்படுவதால் ஊட்டுக் கொடுக்கும் போது ஊருக்குள் யாரும் வீட்டை விட்டு வெளியில் வரமாட்டார்களாம். ஊட்டுக் கொடுக்கும் போது நாலா திசைகளிலும் எறியப்படும்.

உதிரச் சோற்றை வானத்திலிருந்தபடியே பேச்சி பிடித்துக் கொள்ளுமாம். அப்படிப் பிடித்துக் கொள்ளாமல் மேலே போன சோறு திரும்பவும் பூமிக்கு வந்து விழுந்தால் பேச்சி அந்த இடத்தை விட்டு வேறெங்கோ போய் விட்டதாகக் கருதுகின்றனர்.

மறுநாள் சிவராத்திரி அன்று அம்மனுக்கு அலங்காரம், அன்னதானம் என்று சிறப்புச் செய்கிறார்கள். அன்றைய தினம் சாதிக்கு ஒருவர் வீதம் 19 மருளாடிகள் கோயில் வாசலில் அங்கி, சலங்கை கட்டி அருள் வந்து ஆடி அருள்வாக்குச் சொல்கிறார்கள். அன்றிலிருந்து அடுத்து வரும் ஏழு நாட்களும் பாதாள பேச்சியம்மன் வாசலில் விலக முடியாத கூட்டம் தான். பக்தர்கள் அனைவரும் அருள்வாக்குக் கேட்டுச் செல்கிறார்கள்.

முத்தாலம்மன் திருவிழா

கோயில் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் தைமாதம் வளர்பிறையில் கொண்டாடப்படும். இவ்விழாவை 24 மனை தெலுங்குச் செட்டியார்கள் கொண்டாடுவர். தைமாதம் வளர்பிறையில் செவ்வாய்கிழமை விழாவை ஆரம்பிக்கும் பொருட்டு நன்னிமித்தம் காணவும் அம்மன் அருள்வாக்கைப் பெறவும் செட்டியார் இன மக்களும் பிற இனத்தவரில் குழந்தையப்ப நாடார், காளிமுத்து நாடார், பாலையத் தேவர், மீனாட்சித் தேவர், பெருமாள் நாயக்கர், பொன்னுச்சாமி நாயக்கர் ஆகியோரும் செல்வர்.

அம்மன் கோயிலில் பூசை செய்யும் பொழுது அம்மன் அருள் கிட்டிய பின்பே விழாக் கொண்டாட முடிவு செய்வர். புதன் கிழமை காலையில் விழாக் குழுவினரும் பிற இனத்தவர்களில்

முக்கியமானவர்களும் பூசாரி வீட்டிற்குச் சென்று அம்மனை உருவம் செய்ய வேண்டுவர்.

அம்மனை உருவாக்குபவர் பூசாரியே ஆவார். பூசாரி மண் எடுத்து அதில் பசுங்கோமியம், பால் முதலியன ஊற்றிப் பிசைவார். அன்று முதல் விழா முடியும் வரை பூசாரி விரதம் இருப்பார். அன்று அம்மனை உருவாக்க ஆரம்பித்து மறு திங்கட்கிழமை உருவத்தை முடித்து அம்மன் வாகனமாகிய சிங்க வாகனத்தையும் செய்து முடிப்பர். செவ்வாய்க்கிழமை அம்மனை எடுத்தச் செல்ல அலங்காரத்தேர் அமைக்கப்பட்டு இரவு பத்து மணி அளவில் விழாக் குழுவினர் ஊர் பெரியவர்களுடன் பூசாரி இல்லத்திற்கு வருவர். பூசாரி வீட்டிற்கு முன் இருக்கும் வேப்ப மரத்தடியில் அம்மனை வைத்துக் கண் திறப்பர். தேங்காய் உடைத்துப் பூசை செய்வர்.

''திருமலைச் செட்டியார் அம்மனைத் தலையில் தூக்கிக் கொண்டு வந்து அலங்கரிக்கப்பட்ட தேரின் நடுப்பகுதிக்கு வருவார். அலங்காரத் தேர் போன்ற பகுதி வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். கொட்டு மேளத்துடன் நேராக மாரியம்மன் கோயிலுக்கு வந்து மாரியம்மன் மாலையை முத்தாலம்மனுக்கும் முத்தாலம்மன் மாலையை மாரியம்மனுக்கும் அணிவிப்பர்.''[48]

திருமலைச் செட்டியார் மடம் வரும் பொழுது திருமலைச் செட்டியார் மீது அம்மன் அருள் இறங்கும் இப்பகுதியிலிருந்து வேட்டைக்காரன் கோயில் வரை குழிப்பிள்ளை தாண்டும் நிகழ்ச்சி நடைபெறும். அம்மன் கோயிலுக்கு வந்ததும் அம்மனைக் கோயிலுக்குள் வைத்து இடையர்கள் கொண்டு வந்த ஆட்டைப் பலிகொடுத்து அந்த இரத்தத்தால் அம்மனுக்குத் திலகமிடுவர். ஆட்டைப் பூசாரி எடுத்துக் கொள்வார்.

அதிகாலையில் பிள்ளைமார் இனப் பெண்கள் பொங்கலிடுவர். பின் அட்டவணை இனம் நீங்கலாக வேண்டுதல் பொருட்டுப் பிற இனத்தவர் கொண்டு வந்த சோறு, முட்டை, கொழுக்கட்டை

ஆகியவற்றைக் கீழே அளிக்கப்பட்ட துணியில் படைப்பர். அம்மனுக்குப் பூசை செய்து படையலைப் பிரித்து அனைவருக்கும் கொடுப்பர். புதன்கிழமை மாலை மூன்று மணியளவில் ஊரின் கிழக்கு எல்லையிலிருந்து கொட்டு மேளத்துடன் ஊர்வலம் வரும் பெண்கள் மஞ்சள் நீர் கொண்டு வருவர். அம்மனுக்குச் சிறப்புப் பூசைகள் நடைபெறும். பூசை முடிந்தவுடன் அம்மனைத் திருமலை செட்டியார் தூக்கி வந்து கோயிலை மும்முறை வலம் வந்து மேற்காகச் செல்வார். அப்பொழுது மக்கள் மீது மஞ்சள் பாலை ஊற்றுவர். அம்மனைக் கொண்டு சென்று வாளாங் குளக்கரையருகில் அம்மனை அழிக்கும் இடத்தில் வைத்து நகைளை எடுத்துக் கொண்டு பூசாரி வந்து விடுவார்.

அங்கிருக்கும் அம்மனை அட்டவணை இனத்தவர் அம்மனை அழித்து விடுவர். ஆரம்பக் காலகட்டத்திலிருந்து இன்றுவரை மம்சாபுரத்திலிருந்து திருவில்லிப்புத்தூர் செல்லும் சாலையில் இவ்வம்மனை அட்டவணை இனத்தவர் அழிக்கின்றனர்.

பாம்பலம்மாள் திருவிழா

பாம்பலம்மாள் கோயிலில் குரு பூசை தைமாதம் தைப்பொங்கல் கழித்து ஒரு செவ்வாய்க் கிழமை நடக்கும். குருபூசையில் முதல் கிடாய் புல்லாப்பட்டி சடையாண்டித் தேவரின் கிடாயாக வெட்டப்படும். அம்மனின் கட்டளைப்படி நேஞ்சிக் கட்டினைத் தான் பூசாரி கட்டிக் கொண்டிருப்பார். பின்னர் பூசாரி வெட்டியப் பின்பு மற்றவர்களின் கிடாய்கள் வெட்டப்படும். வெட்டிய கிடாய்களை உப்பில்லாமல் சமைத்து, அத்தப் புழுங்கல் அரிசியோடு சமைத்துப் பிலாவடிக் கருப்பனுக்கும், வனபத்ர காளிக்கும் படப்பேத்துவார்கள். வழிபாடு முடிந்த பிறகு அந்தப் படைப்பினை மற்றவர்களுக்குக் கொடுக்கின்றனர்.

குருபூசை முடிந்த பின்னர் மாசி, பங்குனி, சித்திரை ஆகிய மாதங்களுள் 30 நாட்கள் ஊர் விளையாடச் செல்வார்கள். ஊர் விளையாடும் பொழுது உருமிக் கொட்டுடன் அக்கினிச் சட்டி ஏந்தி

விபூதிக்கப்பறை ஏந்திச் செல்வார்கள். ஊர் விளையாடும் ஊர்களில் காலையில் சென்ற தெருவுக்கு மாலையிலும், மாலையில் சென்ற தெருவுக்கு காலையிலும் செல்வார்கள்.

ஒரு தெருவில் ஓரிடத்தில் அமர்ந்து அக்கினிச்சட்டி எடுத்து விபூதிக்கப்பறையுடன் உருமிக் கொட்டடித்து அமர்ந்திருப்பார்கள். ''பாம்பலம்மாளுக்குக் காணிக்கையாக நெல் மற்றும் பிற தானியங்கள், காசு, முட்டை, மஞ்சள் ஆகியவற்றைக் கொடுத்துவிட்டுப் பூசாரியிடம் தீர்த்தம் மஞ்சள் காப்பினைப் பெற்றுக் கொண்டுச் செல்வார்கள். இவ்வாறு காணிக்கை பெற்றுச் செல்வதே ஊர் விளையாடல் ஆகும். ஊர் விளையாடல் தொடர்ந்து 30 நாட்கள் என்றில்லாமல் சில நாள் கழித்து பத்து நாட்களாக மூன்று முறை சென்று வருகின்றனர்.

ஊர் விளையாடியதில் பெற்ற காணிக்கைகள் பாம்பலம்மனுக்கு வெள்ளிக்கிழமை பூசைக்குப் பயன்படுத்தப்படுகின்றன.''(49)

மாரியம்மன் திருவிழா

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் பௌர்ணமி ஒட்டிய செவ்வாய் மற்றும் புதன்கிழமை மட்டும் திருவிழா நடக்கும். செவ்வாய்க் கிழமை அன்று இரவு ஆயிரங்கண் பானை எடுத்தல், உருவம் செலுத்துதல் (பிள்ளை), உருண்டு கொடுத்தல் (அங்கப் பிரதட்சணம்), தீச்சட்டி எடுத்தல், கோடு கீறி கும்பிடுதல், முளைப்பாரி எடுத்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. புதன்கிழமை மாலை கயிறு குத்துதல், மற்றும் கடா வெட்டுதல் நிகழ்வுக்குப் பின்னர் கோயிலிருந்து கரகம் எடுத்த வந்து அதனைக் காயக்குடி என்ற ஆத்தில் கரைப்பார்கள். அவ்வாறு கரைப்பதற்கு முன்னர் யாதவ (கோனார்) இனத்தவர் “ஓர் இளம் குட்டி ஆட்டினை ஓட விட்டு அடித்துக் கொல்கின்றனர். இதற்கு ஓடு கடா அடித்தல் என்று அழைப்பர்.

அதன் பின்னர் கரகத்தைக் கடா வெட்டிய அந்த ஆற்றில் கரைத்துப் பின்னர் மஞ்சள் நீராட்டு விழா நடைபெறும்.''[50] இந்நிகழ்வானது இரவு பத்து மணிக்கு நடைபெறும். அவ்வூரில் கரகம் எடுத்து வருகின்றவர்கள் வைக்கின்ற பொங்கலைத் தான் அம்மனுக்குப் படைக்கின்றனர். இக்கோயிலில் ஆண்கள் யாரும் சாமியாடுவதில்லை. பா.இலட்சுமி, சின்ன அம்மன் ஆகிய இருவர் மட்டும் திருவிழாவின் போது வரிதி (அருள்வாக்கு) கூறுகின்றனர்.

இக்கோயில் திருவிழாவில் நடைபெறுகின்ற நிகழ்வுகள் எல்லாம் கோயிலிருந்து காயக்குடி ஆற்றங்கரை வரை மட்டும் நடைபெறும். சில கோயில்களில் ஊரினைச் சுற்றி வந்து தங்கள் நேர்த்திக் கடனைச் செலுத்துவார்கள். இக்கோயிலில் அம்மன் வீற்றிருக்கக் கூடிய கோயிலிருந்து காயக்குடி என்ற ஆற்றங்கரை வரை தான் நடைபெறும். இதில் முதல் நாள் நடைபெறுகின்ற திருவிழாவில் காலையில் உருண்டு கொடுத்தல், தீச்சட்டி எடுத்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும். மாலையில் உருவம் செலுத்துதல், ஆயிரங்கண் பானை மற்றும் கோடு கீறி கும்பிடுதல் நிகழ்வு என்பது தரையில் ஒரு கோட்டினை கீறி அதை வணங்குதலே கோடு கீறி கும்பிடுதல் ஆகும். திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் இக்கோயிலில் மட்டும் தான் கோடு கீறி கும்பிடுதல் நிகழ்வு நடைபெறுகின்றது. மற்ற மாரியம்மன் கோயிலில் இந்நிகழ்வு காணப்படவில்லை. இரவு நேரத்தில் முளைப்பாரி எடுத்து வந்து கோயிலில் வைப்பார்கள். மறுநாள் காலையில் காயக்குடி ஆற்றில் அதனைக் கரைத்து விடுவார்கள். புதன்கிழமை காலையில் அம்மனுக்கு அலங்காரம் செய்து சிறப்புப் பூசைகள் நடைபெறும். அதன் பின்பு சாமியாடுகின்ற இரு பெண்கள் வருகின்ற பக்தர்களுக்குப் பிரசாதம் கொடுத்து அருள்வாக்குக் கூறுகின்றனர். மாலையில் கயிறு குத்துதல் விழாவும், கடா வெட்டு விழாவும் சிறப்பாக நடைபெறுகின்றன. கடா வெட்டு நிகழ்வு முடிந்தவுடன் கரகத்தை ஆற்றில் கரைத்து மஞ்சள் நீராட்டு விழாவுடன் திருவிழா முடிவடைகின்றது.

பெரிய மாரியம்மன் திருவிழா

"ஒவ்வொரு தமிழ் மாதம் கடைசி வெள்ளிக்கிழமை உற்சவ அம்மன் அலங்காரக் கோலத்தில் கொலு மண்டபத்தில் வீற்றிருக்கிறாள். ஆடிமாதம் ஒவ்வொரு வெள்ளியன்றும் உற்சவ அம்மன் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலில் அருள்பாலிக்கிறாள். பூக்குழி உற்சவம் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் அமாவாசை அன்று நடைபெறுகிறது. கார்த்திகை மாதம் பொங்கல் சாட்டப் பெறுகின்றது. பொங்கலுக்கு முதல் நாள் திருக்கோயிலிருந்து அம்மனை எழுந்தருளச் செய்து "கீழப்பட்டியும் ஊருணிப்பட்டியும் சந்திக்கும் இடத்திலுள்ள தெரு மைதானத்தில் பந்தல் கோயில் அமைத்து அங்கே இறங்கச் செய்து வழிபாடுகள் நடைபெறும். நடு இரவில் ஆட்டுக்குட்டி ஒன்றைக் காவு இடுவார்கள். அன்று அம்மனுக்குப் பொங்கிப் பொரித்துப் படைப்பார்கள். அதன் பிறகே வீடுகளில் மாமிச உணவை உண்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறும்."(51)

பின்னர் அம்மனுக்கு அதிகாலையில் அபிசேகம் நடைபெறும். அபிசேகத்திற்குப் பின்னர் அலங்காரம் செய்யும் பொழுது காளியம்மன் போன்று காட்சியளிக்கும். அம்மனை நான்கு ரத வீதியில் நகர்வலம் வந்து மறுநாள் திருக்கோயிலுக்கு வந்து சேரும் சாந்த சொரூபியான பெரிய மாரியம்மன் திருக்கோயிலிருந்து புறப்பட்டு ஊருக்குள் கோயில் கொண்டு இறுதியாகக் காளியம்மனாகத் திருக்கோயில் மண்டபத்தில் வந்து இறங்கும். புதிய கோலம் கலைக்கப்பட்டு மீண்டும் மாரியம்மனாகக் காட்சியளிக்கின்றது. இக்கோயில் தினமும் காலையில் ஒரு காலப் பூசை மட்டும் நடைபெறும். விசேட காலங்களில் இரவில் பூசை நடக்கும்.

கோட்டைப்பட்டி காளியம்மன் திருவிழா

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் பௌர்ணமி அன்று முப்பழப் பூசை நடைபெறும். இப்பூசையைப் பங்காளிகள்

அனைவரும் சேர்ந்து நடத்துவார்கள். "ஆடி மாதம் கடைசி வெள்ளிக் கிழமை அன்று ஆடு வெட்டி இரத்தப் பலி கொடுத்து சுமார் இரண்டாயிரம் நபர்களுக்கு அன்னதானம் செய்வார்கள்."(52) இவ்விழாவானது இத்தெய்வத்தை வணங்குகின்றவர்களிடம் வரி பெற்று ஒவ்வொரு ஆண்டும் நடத்துகின்றனர்.

பேமலையம்மன் திருவிழா

ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதம் சூலாட்டுப் பூசை எனப்படும் சிறப்புத் திருவிழா கொண்டாடப்பெறும். இப்பூசை செவ்வாய், புதன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் ஏதாவது ஒரு நாள் நடைபெறும். விழாக் கொண்டாட நாள் குறித்தவுடன் அதற்கு எட்டு நாட்கள் முன்னதாக மம்சாபுரத்தில் உள்ள மந்தையில் ஐயப்பனை வணங்குவர். கடா பலி கொடுக்கப்படும் அன்று முதல் மருளாடிகள் விரதமிருப்பர். "சூலாட்டுப் பூசைக்குப் பலி கொடுக்கக் கூடிய கடாக்கள், சூலாடு ஆகியவற்றை வாங்கக் குறி கேட்பர். அப்பொழுது ஒவ்வொரு சாமிக்கும் உரிய கடா இருக்கும் இடம் விலை முதலியன கூறப்படும்.

சித்தநாதனுக்குச் செங்கடாவும், சபரிமலைக்குக் கருங்கடாவும், தன்னாசிக்குச் செங்கடாவும், வைரவனுக்கு மூன்று நிறங்களையுடைய செம்மறியாட்டுக் கிடாவும் புதியவன்சாமிக்கு அடிவயிற்றில் வெள்ளை நிறமும் நான்கு கால்களில் கீழ்ப் பகுதியைச் சுற்றிலும் வெள்ளை நிறமும் நெற்றியில் வெள்ளை நிறமும் உள்ள வெள்ளாட்டங் கடாவும் பேமலை அம்மனுக்குச் சூலாடும் உகந்தது."(53)

மாலையில் புறப்பட்டு செல்லும் பொழுது ஐயப்பனை வழிபட்டு விட்டுக் கோயிலுக்குச் செல்வர். விழா ஆரம்பிக்க முதலில் சித்தநாதனுக்குக் கொண்டு சென்ற கடாவைப் பலி கொடுத்து வணங்கி உத்தரவைப் பெறுவர். அதற்குப் பின் விழாவைத் தொடங்குவர். விழா தொடங்கியதும் எல்லா சாமிக்கும் கடாவினைப் பலி கொடுப்பர். பின்னர் பேமலையம்மன் கோயில்

முன் சூலாட்டை நிறுத்தி அதன் அடிவயிற்றை அறுத்து வயிற்றினுள் இருக்கும் குட்டியை எடுத்துவிட்டு ஆட்டின் வயிற்றை நன்கு துணியால் கட்டி விடுவர். பின் ஆட்டின் குட்டியை அம்மன் கோயிலுக்கு முன் கட்டப்பட்ட தொட்டிலில் கிடத்தித் தாலாட்டுப் பாடல் பாடித் தொட்டிலை ஆட்டுவர். பின் சிறிது நேரம் கழித்துக் கோயிலுக்கு முன் அக்குட்டியைப் புதைத்து விடுவர். ஆடு மறுநாள் சுமார் நான்கு கி.மீ தூரம் நடந்து வந்து பூசாரி வீட்டில் பழைய சோற்று நீர் குடித்ததும் இறந்துவிடும். அதனை அனைத்துத் தலைக்கட்டினரும் பிரித்துக் கொள்வர்.

வைரவன் சாமிக்குரிய போர்க் கடாவை (மூன்று நிறம்) வைரவன் கோயிலுக்கு முன் ஒரு துணியை விரித்து அதில் படுக்க வைப்பர். கடாவும் அசையாது படுத்து விடும். பின் சாமியாடி ஓர் எரிகின்ற தீப்பந்தத்தை அதன் மேல் படுக்கையாக வைப்பர். அப்பொழுது கூட வெப்பத்தால் அசையாது எழுந்திருக்காது படுத்திருக்கும். பின் கற்பூரத்தீபம் காட்டி வணங்கித் தீப்பந்தத்தை எடுத்து விடுவர். உடனே கடா எழுந்து விடும். அப்பொழுது அதனை வெட்டிப் பலி கொடுப்பர்.

இதேபோல் புதியவன்சாமிக்குப் பலி கொடுப்பர். பின்பு காலாடிக்குச் சேவலைப் பலி கொடுப்பர். பலி கொடுக்கின்ற ஆட்டின் இரத்தத்தை எடுத்து அதனோடு பூ, எலுமிச்சம்பழம், சந்தனம், குங்குமம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு இரத்தத்தை மட்டும் சோறுடன் பிசைந்து மேலே எறிவர். அதனைக் காவு பிசைந்து மேலே எறிவர். அதனைக் காவு என்றும் ஊட்டுப் போடுதல் என்றும் கூறுவர். அப்பொழுது யாரும் தூங்க மாட்டார்கள்.

ஸ்ரீசந்தன மாரியம்மன் திருவிழா

கோயில் திருவிழா சித்திரை மாதம் வளர்பிறை நாளில் கொண்டாடுகின்றனர். இத்திருவிழாவில் பூக்குழி (தீமிதித்தல்) மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அம்மன் வழிபாட்டு முறையில் பூக்குழி இறங்கும் வழக்கமும் உண்டு.

“பக்தியுள்ளவர்களுக்கு நெருப்புச் சுடாமல் பூப்போல குளிர்ச்சியைத் தரும் என்ற பொருளில் பூக்குழியென்ற சொல்லாட்சி அமைகிறது. தீப்பிழம்பில் நடந்து செல்லுதல் வழிபாட்டு மரபின் முறையாகும்.”(54) பக்தியுள்ளவர்களின அன்பையும் தெய்வத்தின் கருணையும் தீயென்ற இயற்கை சக்தியின் வழியாக வெளிப்படுவதைக் காண முடிகிறது. இவை பெரும்பாலும் பெண் தெய்வ வழிபாட்டில் இடம் பெறுகின்றன. இவ்விழாவில் பூக்குழி இறங்குவதற்கு முதல் நாள் இக்கோயிலோடு தொடர்புடைய சந்தனமாரியம்மன் கோயிலுக்கு உலா வந்து அங்கு வழிபாடு நடந்த பிறகு, மறுநாள் இக்கோயிலில் பூக்குழித் திருவிழா நடைபெறும். யாதவ இனத்தவர்கள் திருவிழா நடத்துகின்றனர். ஆனால் இவ்விழா இவ்வூருக்குப் பக்கத்தில் உள்ள (பட்டி தொட்டி) அனைத்து ஊர்களில் இருந்தும் மக்கள் பூக்குழி இறங்குகின்றனர். மாலை நேர வழிபாட்டின் போது பாசுரம் பாடுவது இக்கோயிலின் வழக்கமாகும்.

தங்கமலை காளியம்மன் திருவிழா

கோயில் திருவிழா மாசி மாதம் சிவராத்திரி அன்று திருவிழா கொண்டாடப்படுகின்றது. இத்திருவிழா அனைத்துச் சமூகத்தினரும் இணைந்து நடத்தும் திருவிழாவாகும். திருவிழாக் காலங்களில் கடாவினைப் பலி கொடுத்தல் மற்றும் சேவலினைக் கழுவேற்றுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும். கழுவேற்றுதல் என்பது அம்மன் சன்னதி நேர் எதிர்த்திசையில் கூர்மையான கம்பம் உள்ளது. அக்கம்பத்தில் சேவலினைக் கழுவேற்றுகின்றனர். பின்னர் பயிறு (ஒன்பது தானியங்கள்) வகைகளைப் படைத்து வழிபாடு செய்கின்றனர். வழிபாடு முடிந்தவுடன் படையலை (பயறு வகைகளை) அனைத்து சமூகத்தினருக்கும் பகிர்ந்து கொடுக்கின்றனர். இதனைப் பல்லயம் பிரித்தல் என்றும் கூறுகிறார்கள்.

திருப்பேச்சியம்மன் திருவிழா

இக்கோயில் திருவிழாவில் ஆடிமாதம் குருபூசை விழாக் கொண்டாடுகின்றனர். குருபூசையின் போது அம்மனுக்குக் காவு கொடுத்து, கறியினைச் சமைத்து அனைத்துச் சமூகத்தினருக்கும் பகிர்ந்து கொடுக்கின்றனர். திருவிழாக் காலங்களில் மட்டும் அம்மனுக்கு நேர்த்திக் கடனாகக் கடாவினை வெட்டிக் கறி சமைத்து கோயிலுக்கு வருகின்ற அத்தனை பேருக்கும் உணவினை அளித்து தங்களது வேண்டுதலை நிவர்த்தி செய்கின்றனர். மேலும் தங்களுக்கு ஏதாவது துன்பம் வந்தால் மொட்டை போடுவதாக வேண்டிக் கொள்வார்கள். அதன்படி திருவிழாக்களில் பந்தி போடுவது மட்டுமல்லாமல், மொட்டையும் அடித்துக் கொள்கின்றனர்.

அம்மச்சியார் அம்மன் திருவிழா

அம்மச்சியார் அம்மன் கோயில் திருவிழா வைகாசி மாதம் செவ்வாய் மற்றும் புதன்கிழமை நடைபெறும். செவ்வாய்க் கிழமை அம்மனுக்குப் பூச்சொரிதல் விழா நடைபெறும். இவ்விழாவில் அம்மனுக்குப் பூக்களால் அர்ச்சனை செய்து வழிபடுகின்றனர். "திருவிழாவின் போது பெண்கள் காணிக்கையாகக் கொண்டு வரும் பூக்களால் அம்மனை வழிபடுகின்றனர். மறுநாள் புதன்கிழமை பொங்கல் பெருவிழாவும் நடைபெறும். இவ்விழாவின் போது பொங்கல் வைத்து, கோழி, கருவாடு, முருங்கைக்கீரை போன்றவற்றைப் படைக்கின்றனர்."(55) இப்படையலுக்கான உணவினை ஆரம்பக் காலக்கட்டத்தில் வயதான பெண்கள் மண்பானையில் சமைத்துப் படைத்தார்கள். தற்பொழுது காலத்திற்குத் தகுந்தவாறு அம்முறையினை மாற்றியுள்ளனர். திருவிழாவின் போது ஆரம்பக் காலகட்டத்தில் வழிபாடு மட்டும் தான் நடைபெற்று வந்தது. இன்று திருவிழாவின் போது நடனம் மற்றும் பொழுதுபோக்குச் சாதனங்களைப் பயன்படுத்துவதால் பெண்கள் அம்மனுக்கான உணவினைச் சமைப்பது இல்லை. ஆகையால் திருவிழாக் காலங்களில் ஆண்கள் அவ்வுணவினைச்

சமைத்துப் படைக்கின்றனர். வருடத்தில் ஒரு முறை அருள் வாக்கும் கூறுகின்றனர்.

வடபத்ர காளியம்மன் திருவிழா

ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதம் வளர்பிறை நாளில் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று நாட்கள் பெருவிழாவாகக் கொண்டாடுகின்றார்கள். மூன்று நாள் திருவிழாவில் முதல் நாள் அம்மனுக்குப் பொங்கலிட்டு படையல் படைக்கின்றனர். மறுநாள் கடா, கோழி போன்றவற்றைத் தெய்வம் முன் இருக்கும் பீடத்தில் வைத்துத் தீர்த்தம் தெளிப்பார்கள். அதாவது ஆடு, கோழி போன்றவற்றைப் பலியிடுவதற்கு முன் ஒவ்வொரு கோயிலின் முன் பரண் அமைத்தல் அமைப்பு இருக்கும். இந்த அமைப்பினைப் பலி செய்ய அமைக்கப்படும் மேடை என்று கூறுவர். இம்மேடையின் மீது கடா, கோழி போன்றவற்றைப் பலி கொடுப்பர். இவ்வாறு பலி கொடுத்த கடா மற்றும் கோழியினை அம்மனுக்குப் படைக்காமல் வீட்டிற்கு எடுத்துச் செல்வார்கள். அம்மனுக்குப் பொங்கலை மட்டும் படைப்பார்கள். மூன்றாவது நாள் அம்மனை நன்கு அலங்கரித்து திருமுக்குளத்தில் உள்ள அம்மனுக்கு வழிபாடு செய்த பின்பு இக்கோயிலில் ஆராதனை முடிந்தவுடன் கப்பறையில் உள்ள திருநீற்றினை வருகின்றவர்களுக்குப் பிரசாதமாகக் கொடுக்கிறார்கள். வாரத்தில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமை மாலை நேர பூசை நடைபெறும்.

இராக்கச்சி அம்மன் திருவிழா

முதலியார்புரத்தில் அமைந்துள்ள இக்கோயிலில் ஆடி மாதம் முதல் வெள்ளிக்கிழமை இவ்விழா நடைபெறும். “திருவிழாவின் போது மூன்று அடி நீளத்திலுள்ள அரிவாளை இரண்டு பேர் முனைப் பக்கமும், ஒருவர் கைபிடிப் பக்கமும் பிடித்துக் கொண்டு சாமியாடி ஒருவர் அந்த அரிவாள் மீது ஏறி வருவார். அப்பொழுது அரிவாளைப் பிடித்து வரும் இருவர் தலைமுடியைப் பிடித்துக்

கொண்டு ஏழு கிலோமீட்டர் வரை வருவார்கள். அரிவாள் கூர்மையுடன் இருக்கும். அதில் காலை வைத்து வருவார்.''[56]

சாமியாடி மம்சாபுரத்திலுள்ள தேவர் இனத்தைச் சார்ந்தவர் வண்டி கட்டிச் செல்வார்கள். இக்கோயிலுக்கு எதிர்புறமாக உள்ள சங்கிலி பூதத்தான் கோயிலுக்கு மறுவாரம் செல்வதுண்டு.

சங்கிலி பூதத்தான் கோயில் வடகரை என்ற ஊரில் அமைந்துள்ளது. இக்கோயிலுக்குச் சுமார் 23 குடும்பங்கள் வண்டி மாடு கட்டிச் செல்வது வழக்கம். இன்றும் இவ்வழக்கம் நடைபெற்று வருகின்றது.

தேவி கருமாரியம்மன் திருவிழா

ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதம் பதினான்கு நாட்கள் திருவிழா நடைபெறும். ஆனி மாதத்தில் முளைப்பாரி திருவிழா இங்கு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இரண்டு வார காலம் நடைபெறும் இந்தத் திருவிழாவில் முக்கிய நிகழ்ச்சி 13-ஆம் நாளன்று நடைபெறுகின்றது. அன்று காலை அம்மனுக்கு அலங்காரம் செய்து பூசை நடைபெறும். அன்று இரவு ஒன்பது மணிக்கு முளைப்பாரி திருவிழா நடைபெறும். மறுநாள் காலை இரண்டு மணிக்குப் பொங்கல் வைக்கிறார்கள். பின்பு முளைப்பாரி எடுத்து வருகின்றவர்களைப் பூசாரியும் பொதுமக்களும் மேளதாளத்துடன் கோயிலுக்கு அழைத்து வருவார்கள். கோயிலுக்கு கொண்டு வந்த முளைப்பாரிகளில் இரண்டை மட்டும் அம்மனுக்கு முன்னால் வைத்து விட்டு மற்றவற்றை கோயிலின் முன் மண்டபத்தில் வைக்கிறார்கள். மறுபடியும் அம்மனுக்குத் திரைபோட்டு விட்டு காவல் தெய்வமான கருப்பனசாமிக்குக் கிடாவெட்டுப் பூசைகள் நடைபெறுகின்றன. நல்ல நேரம் பார்த்து அம்மனுக்கு காப்புக் களைந்து அனைத்து முளைப்பாரிகளையும் குளத்தில் செலுத்தி விட்டு அவரவர்கள் வீடுகளுக்குத் திரும்பி விரதம் இருக்கின்றனர். அவ்வாறு விரதமிட்ட பின்பு உற்றார் உறவினர்களுக்கு விருந்தளிக்கின்றனர்.

சமயபுர மாரியம்மன் திருவிழா

மம்சாபுரத்தில் தேவர் இனத்தவர்களுக்காக உருவாக்கப்பட்ட கோயில் என்பதால் திருவிழா கடந்த ஐந்து வருடமாகக் கொண்டாடுகின்றார்கள். இக்கோயில் திருவிழா சித்திரை மாதம் கடைசிநாள் அன்று தொடங்கி பத்து நாட்கள் திருவிழா நடைபெறும். செவ்வாய்க்கிழமை அன்று காலையில் கொடியேற்று விழா நடைபெறும். பின்னர் மறு வியாழன் திருவிழா முடிவடையும். இவ்விழாவன்று திங்கள் இரவு மாவிளக்குகளுடன் அம்மன் காமதேனு வாகனத்தில் பவனி வருவார். செவ்வாய் அன்று இரவு கரகம் எடுத்து வந்து பின்னர் முளைப்பாரி அழைத்தல் விழா நடைபெறும். புதன்கிழமை மாலை முளைப்பாரியை எடுத்து ஊர்வலம் வருவார்கள். பின்னர் அம்மனைப் புதிய குதிரை வாகனத்தில் அமர்த்தி ஊர்வலம் வரும் சாராட்டு நிகழ்ச்சி நடைபெறும். அம்மனைப் பல்லாக்கில் அமர்த்தி முன்பும் பின்புமாகத் தூக்கிக் கொண்டு வருவார்கள். வியாழன் அன்று மாலை மஞ்சள் நீராட்டு விழா நடைபெறும் போது அம்மன் சிங்க வாகனத்தில் பவனி வருவார். பின்பு இரவு ஆடல் பாடல் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

திருமலைப்பேச்சித் திருவிழா

ஒவ்வொரு ஆண்டும் மாசி மகா சிவராத்திரி அன்று இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர். சிவராத்திரி அன்று மதுரையிலிருந்து வரும் மக்கள் குன்னத்தூர் கோயிலுக்குச் சென்று அம்மனை வணங்கி அம்மனுக்குரிய “சாற்றுக்கால், சாற்றுக்கை”[57] ஆகியவற்றை எடுத்து வந்து திருவில்லிப்புத்தூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் வீற்றிருக்கக்கூடிய திருமலைப்பேச்சிக்கு அணிவிப்பார்கள். அதற்கு முன்பு சிவராத்திரி அன்று இரவு ஒரு மணியளவில் விழா ஆரம்பித்தவுடன் அம்மனை நன்கு அலங்கரித்துப் பின்னர் சமைத்த உணவினை அம்மனுக்குப் படையலாகப் படைத்துவிட்டுப் பூசை செய்து வழிபடுகின்றனர். மதுரையிலிருந்து

வரும் மக்கள் புதிய சட்டியில் பாலும், முட்டைகளையும் கொண்டு வந்து இக்கோயிலில் உள்ள புற்றிற்கு வைத்து வழிபடுகிறார்கள். அப்படையலை நாகம் உண்டால் தாம் நினைத்த காரியம் நடக்கும் என்று மக்கள் முழுவதுமாக நம்புகின்றனர். ஆரம்பக் காலகட்டத்தில் திருவிழா மட்டும் நடத்தி வந்த மதுரை மக்கள் தற்பொழுது திருவிழாவுடன் கலைநிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றனர்.

அருள்மிகு மாரியம்மன் திருவிழா

ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் முளைப்பாரித் திருவிழா நடைபெறும். இத்திருவிழாவின் போது காப்புக் கட்டிய நாளில் ஒவ்வொரு வீட்டிலும் முளையினைப் பதியம் போடுவார்கள். அப்படி போடுகினற முளையினைத் தினமும் மாலை நேரம் நீர் தெளித்து வழிபாடு செய்வார்கள். இவ்வழிபாடு அக்குடும்பத்தில் உள்ளவர்கள் மட்டும் செய்வார்கள். ஒன்பது வகையான தானியங்களைப் போடுவதை முளைப்பாரி அல்லது முளைப்பாலிகை என்று கூறுகின்றார்கள். ஏழு நாட்கள் முடிந்து எட்டாவது நாளில் உயர்ந்தோங்கி வளர்ந்து காணப்படும். அதனை அம்மன் கோயிலுக்குக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். பின்பு அதனைக் கோயிலின் முன் வைத்து கும்மி அடித்துப் பாட்டுப் பாடுவார்கள்.

> "வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
> கொட்டி இசைத்திடுமோர் கட்டமுதப் பாட்டு"(58)

என்று கும்மியாட்டத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்கள். கும்மி கொட்டுதல் கற்றவர்களிடையே பரவலாகக் காணப்படுகிறது. கை கொட்டுதல் என்று பொருள்படும். இது இப்பகுதியில் வேளாண்மை நன்கு செழித்து வளர வளமை நோக்கில் செய்யப்படும் நிகழ்வாகும்.

கார்த்திகை மாதம் கூழ் காய்ச்சி ஊற்றுதல் நடைபெறும். மாரியம்மனுக்குக் கரகம் எடுத்தல் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. கரகத்திலுள்ள நீர் மாரியாகவும், புனித

நதிகளாகவும் கருதப்படுகின்றது. பக்தி கொண்ட பாமர மக்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்தும் நிகழ்வாக மாரியம்மனுக்குக் கரகம் எடுத்து ஆடுகின்றனர். கரகப் பானையைத் தலையில் வைத்து ஆடும் போது மாரியம்மனைச் சிறப்பித்துப் பாடுவார்கள்.

"வரங்கொடம்மா வரங்கொடம்மா
மாரியம்மன் தாயே
சாம்பிராணித் தூபங் கொண்டு
சரணஞ் செய்ய வாரோம்
அக்கினிச் சட்டியால் கரகங்களா
அம்போடு எடுத்து செம்புடனே செலுத்தி"(59)

இவ்வாறு கரகம் எடுத்து வரும் போது கோயிலின் முன்னால் உள்ள பலி பீடத்தில் கோழி, ஆடுகளைப் பலியிடுகின்றனர். மறுநாள் பொங்கல் வைத்துப் படைக்கின்றனர். இக்கோயிலில் வழிபாடு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமை மாலை நேரங்களில் நடைபெறும்.

திரௌபதி அம்மன் திருவிழா

இவ்வம்மன் வழிபாட்டில் தீ மிதித்தல் சடங்கு முக்கியச் சடங்காக நிகழ்கின்றது. தீ மிதித்தல் சடங்கை நெருப்பு மிதித்தல், பூக்குழி இறங்குதல் என்றும் கூறுகின்றனர். தொடக்கக் காலத்தில் இவ்வழிபாட்டுச் சடங்கில் பூசாரிகள் மட்டுமே கலந்து கொண்டுள்ளனர். காலப்போக்கில் நேர்த்திக்கடன் என்ற பெயரில் அனைத்துச் சாதியினரும் இதில் கலந்து கொள்கின்றனர். தீ மிதிப்பவர்கள் கையில் காப்புக் கட்டிக் கொள்கின்றனர்.

புராணக் காலத்தில் பதினெட்டு நாள் போர் முடிந்ததும் தர்மன் கிருட்டிணனைப் பார்த்து கிருட்டிணா போரில் கணவனை இழந்து கதறிப் புலம்புகின்ற மக்களிடையே அழைத்துத் தீயில் பிறந்ததை நினைவுபடுத்தி இதன்மூலம் நீ தீயில் புகுந்து மீண்டு வா! நீ அப்படி செய்வதால் அழுது புலம்புகின்ற அத்தனை பேரும் அவ்வாறு

செய்யட்டும். நம்பிக்கை உள்ளவர்கள் தீயில் புகுந்து திரும்ப வந்தால் அவர்களுக்கு ஆட்சியைத் திருப்பித் தருவோம் என்று கூறினான். திரௌபதைத் தீயில் இறங்கி மீண்டும் திரும்பினாள். மற்றவர்கள் தீயிலேயே இறந்து போயினர். இதன் காரணமாகவே மக்கள் தீ மிதிக்கின்றனர் எனக் கூறுகின்றனர்.

தீ மிதித்தல் சடங்கு ஆறாம் நாள் சடங்காக நிகழ்த்தப்படுகிறது. அன்று மாலை ஐந்து மணிக்குக் குளக்கரைக்குச் சென்று கரகம் எடுத்து வந்து தீ மிதிக்கும் இடத்தில் மூன்று முறை சுற்றி வந்து வைக்கின்றனர். அன்று மாலை சுமார் 11 அடி நீளமும் ஐந்து அடி அகலமும் உடைய குழியை வெட்டி அதில் மரக்கட்டைகளை அடுக்கி வைத்துத் தீயைக் கொழுந்து விட்டு எரியச் செய்கின்றனர். நெருப்பு மிதிப்பதாக நேர்ந்து கொண்டவர்கள் காப்புக் கட்டியவர்கள் முன்னர் எரியச் செய்த நெருப்பின் அனல் மீது விரைந்து சென்று அங்குள்ள தெய்வத்தினை வணங்குவர். தீ மிதித்தவர்களின் உறவினர்கள் தீ மிதித்தவுடன் மிதித்தவருக்குப் பால் கொடுக்கின்றனர். அன்றிரவு அம்மன் வீதி உலா வரும் போது ஒவ்வொருவர் வீட்டின் வாசலில் அம்மனுக்காகக் கொழுக்கட்டை செய்து படைப்பார்கள். தீ மிதித்தல் சடங்கை ஆண், பெண் இருபாலரும் செய்கின்றனர். இச்சடங்கைச் செய்பவர்கள் மஞ்சளாடையும், மஞ்சள் கலந்த நீரையும் தலையிலிருந்து ஊற்றிக் கொள்கின்றனர். கையில் வேப்பிலையும் வைத்துக் கொள்வர். தீ மிதிப்பவர்களைக் களப்பகுதியில் ‘மருளை மக்கள்’ என்று அழைக்கின்றனர்.

நெருப்பைத் தூய்மையின் அடையாளமாகப் பழந்தமிழ் மக்கள் எண்ணி மனம் மற்றும் உடல் தூய்மையடைய தீ மிதிக்க வேண்டும் என்பது கோட்பாடாக இருக்கலாம்.

அருள்மிகு பத்ர காளியம்மன் திருவிழா

இக்கோயில் திருவிழா புரட்டாசித் திங்களில் கொண்டாடப்படுகிறது. (மம்சாபுரம் சிவந்திபட்டி நாடார் உறவின்

முறைக்குட்பட்ட ஈரோடு பாத்திர வியாபாரிகளால் நடத்தப்படும் 28-ஆம் ஆண்டு திருவிழா ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது)

முதல்நாள் திருவிழா

புரட்டாசித் திங்கள் ஐந்தாம் நாள் செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் உறவின்முறைத் தலைவர் மா.அய்யனார் நாடார் மற்றும் விழாக்குழுத் தலைவர் ஆ.சுப்பையா நாடாரின் தலைமையில் உறவின்முறைப் பெரியோர்கள் மற்றும் நிருவாகிகள் முன்னிலையில் 'கொடியேற்றம்' நடைபெற்று, அதன்பின் அம்மன் நாக வாகனத்தில் பவனி வருகிறார். அன்று மாலை 4.30 மணிக்கு விநாயகர் வழிபாடும், மாலை 5.00 மணியளவில் சிவந்திபட்டி பௌர்ணமி பூசைக் குழுவினர் சார்பாக திருவிளக்கு வழிபாடும் நடைபெறும்.

இரண்டாம் நாள் திருவிழா

புரட்டாசித் திங்கள் 16-ஆம் நாள் புதன்கிழமை இரவு ஏழு மணியளவில் மரம் ஏறும் தொழிலாளர்கள் சங்கத்தினரால் உருவாக்ப்பட்ட யானை வாகனத்தில் அம்மன் பவனி வருகிறார், இரவு பத்து மணியளவில் கரகாட்டம் நிகழ்ச்சி நடைபெறும்.

மூன்றாம் நாள் திருவிழா

புரட்டாசித் திங்கள் 17-ஆம் நாள் வியாழக்கிழமை இரவு ஏழு மணியளவில் சிவந்திபட்டி நாடார் உறவின்முறைப் பெண்கள் சார்பாகச் சிறுமிகளின் கோலாட்டம் முன் செல்ல அன்ன வாகனத்தில் அம்மன் பவனி வருதல் சிறப்பானதாகும். சிவந்திப்பட்டி நாடார் உறவின்முறைக்குப் பாத்தியப்பட்ட பெண்கள் குழு இவ்விழாவினை நடத்துகின்றனர்.

நான்காம் நாள் திருவிழா

"புரட்டாசித் திங்கள் 18-ஆம் நாள் வெள்ளிக்கிழமை இரவு ஏழு மணியளவில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூத

வாகனத்தில் அம்மன் பவனி வருவார். அன்று நண்பகல் 12 மணியளவில் அம்மனுக்கு வழிபாடு நடைபெறும். இவ்விழாவினையும் தேரடி கருப்பசாமி வழிபாட்டையும் சிவந்திபட்டி தரகன் வகையறாக்கள் நடத்துகின்றனர்.''[60]

ஐந்தாம் நாள் திருவிழா

அம்மன் புரட்டாசித் திங்கள் 19-ஆம் நாள் சனிக்கிழமை காலை பத்து மணியளவில் காளை வாகனத்தில் பவனி வருவார். மக்கள் நேர்த்திக் கடன்களைச் செலுத்தும் நாள் இதுவாகும். அம்மன் பவனி வந்து உறவின்முறை மகமை பண்டு வளாகத்தில் காட்சி தந்தருளல். மாலை நான்கு மணிக்கு அம்மன் உறவின்முறை பண்டு வளாகத்திலிருந்து புறப்பட்டு ரதவீதியில் பவனி வரும். இரவு ஏழு மணியளவில் மகளிர் மாவிளக்குடன் முன் செல்ல மின் அலங்காரம் செய்யப்பட்ட காமதேனு வாகனத்தில் அம்மன் பவனி வருகின்றார்.

ஆறாம் நாள் திருவிழா

புரட்டாசித் திங்கள் 20-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணியளவில் அம்மன் நாக வாகனத்தில் கரகம் எடுத்து ரதவீதியில் பவனி வருவார். இரவு பத்து மணியளவில் அம்மன் குதிரை வாகனத்தில் (சாலி ஓட்டம்) ரத வீதியில் பவனி வருதல் நடைபெறும்.

ஏழாம் நாள் திருவிழா

புரட்டாசித் திங்கள் 21-ஆம் நாள் திங்கட்கிழமை இரவு ஏழு மணியளவில் மேளதாளத்துடன் மின் அலங்காரம் செய்யப்பட்ட சிங்க வாகனத்தில் ரதவீதியில் அம்மன் பவனி வருதல் நடைபெறுகிறது.

எட்டாம் நாள் திருவிழா

புரட்டாசித் திங்கள் 22-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை ஐந்து மணியளவில் ஆயிரம்கண் பானை எடுப்பவர்களும், கயிறு

குத்துபவர்களும், முளைப்பாரி எடுப்பவர்களும் முன் செல்ல அம்மன் கண்ணாடிச் சப்பரத்தில் ரதவீதியில் பவனி வருதல் நடைபெறுகிறது.

ஒன்பதாம் நாள் திருவிழா

புரட்டாசித் திங்கள் 23-ஆம் நாள் புதன்கிழமை மாலை ஐந்து மணியளவில் மஞ்சள் நீராட்டு விழா நிறைவடைந்ததும், அம்மன் காளை வாகனத்தில் ரதவீதியில் பவனி வருதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பத்ரகாளியம்மன் திருவிழா

திருவில்லிப்புத்தூர் முதலியார்பட்டி தெருவில் இக்கோயில் அமைந்துள்ளது. இங்கு "ஆண்டுதோறும் மகாசிவராத்திரி விழா சிறப்பாக இரவு தொடங்கி மறுநாள் காலை வரை நடைபெறுகிறது. காலையில் பத்ரகாளியம்மனுக்குச் சிறப்புப் பூசை நடைபெறும். இதைத் தொடர்ந்து பக்தர்களை மெய்ச்சிலிர்க்க வைக்கும் நிகழ்ச்சியாக கொதிக்கும் நெய்யில் அப்பம் சுட்டு எடுக்கும் நிகழ்ச்சி இரவு நடைபெறுகிறது.

கோயில் முன்பு பெரிய அடுப்பு அமைக்கப்பட்டு அகலமான எண்ணெய்ச் சட்டி ஒன்று வைக்கப்படும். அதில் நெய் உருக வைத்து ஊற்றப்பட்டு, நெய் நன்றாகக் கொதித்ததும் இதில் அப்பம் சுட்டு எடுக்கும் நிகழ்ச்சி பக்தர்கள் முன்னிலையில் நடக்கும்."[61] ஒவ்வொரு ஆண்டும் அப்பம் சுட்டு எடுக்கும் ஊருணிபட்டித் தெருவைச் சேர்ந்த முத்தம்மாள் (71 வயது) என்ற மூதாட்டி அம்மனை வழிபட்டுக் கொதிக்கும் நெய்க்குள் கையை விட்டு அப்பத்தைச் சுட்டு எடுப்பார். நெய்யில் வெந்த அப்பங்களைக் கரண்டியைப் பயன்படுத்தாமல் வெறும் கையால் எடுப்பதைப் பார்த்ததும் அங்கு கூடியிருந்தது பக்தர்கள் பரவசம் அடைவர். அதன்பின் பத்ர காளியம்மனுக்குச் சிறப்புப் பூசை நடைபெறும். பூசைக்குப் பின் நெய்யால் சுட்ட அப்பம் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படும்.

சுடலை மாடன் திருவிழா

சுடலை மாடனை வழிபடும் மக்கள் வருடம் ஒருமுறை விழா எடுக்கும் நாளில் தங்கள் குடும்பத்துடன் வந்து வழிபாடு செய்கின்றனர். சில ஊர்களில் சுடலைமாடனைக் குல தெய்வமாகவும், குடும்பத் தெய்வமாகவும் வழிபாடு செய்கின்றனர்.

சுடலையை வழிபடும் மக்கள் அசைவப் படையலைப் படைத்து வழிபாடு செய்கின்றனர். ஆடு, சேவல், பன்றி, கருவாடு, சுருட்டு, சாராயம் வைத்தும் மரபு வழியாக வழிபடுகின்றனர். சுடலைக்குப் படைக்கும் படையலில் புழுங்கல் அரிசி, உணவு முட்டை, கத்திரிக்காய், முருங்கைக்காய், ஈரல் போன்ற சைவ, அசைவ பொருட்களையும் வைத்துப் பெரும் படையலாகப் படைக்கின்றனர். படையல் படைக்கும் போது வாயில் வெள்ளைத் துணி கட்டிக் கொள்கிறார்கள்.

சட்டி உணவு

"புதுமண் பாத்திரத்தில் சட்டிச் சோறு என்று அழைக்கப்படும் உணவை ஒரு மண்சட்டியில் அசைவ உணவுகளுடன் படைத்து அதில் ஒரு தீப்பந்தத்தை வைப்பார்கள். சட்டி உணவைக் கோயிலில் சாமியாடும் நபர்களே கடைசியில் சாப்பிடுவார்கள். சுடலை மாடனை வழிபடும் மக்கள் ஆடு, சேவல், பன்றி ஆகியவற்றைப் பலி செய்கின்றனர். இங்கு மற்ற வட்டாரங்களைக் காட்டிலும் மிக வித்தியாசமான முறையில் பலி செய்கின்றனர்.

பலி கொடுக்கும் ஆடுகளை 'ஊட்டுப் போடுதல்' என்று வட்டார வழக்கில் அழைக்கின்றனர். சுடலை மாடசாமிக்குப் படைப்புப் போடத் தொடங்கும் போது முதலில் ஒரு துவளக்குட்டி பலியிடப்படும். பின்னர் தொடர்ந்து பலிகளிடம் பெறும். முதலில் கழுத்தைக் கீறி இரத்தத்தை வடித்த பின் நெஞ்சைக் கீறி வகுந்து கழுத்துச் சங்கோடு சேர்த்து ஈரல்குலையோடு எடுத்துப் படைப்புப் போடுவர். பின்னர் உணவு சமைத்து எடுத்துக் கொண்டு திரளைக்

கொடுப்பதற்காகச் சுடுகாட்டுக்குச் செல்வர். திரளை கொடுத்து வரும் போது சுடலையின் எதிரில் ஆறு மாதம் வளர்த்த பன்றி அல்லது ஆட்டின் தொண்டையைக் கீறி நெஞ்சை வகுந்து இரத்தம் குடிப்பர். இதைத் தொடர்ந்து கணியான் தன் முன்கையை வெட்டி அதிலிருந்து குருதியை ஒவ்வொரு தெய்வத்தின் முன் விரிக்கப்பட்ட வாழை இலையில் ஒரு பொட்டு விடுவார். பின்பு திரளையிலும் குருதியைக் கலந்து திரளைப் பூசை கொடுப்பதும் இவ்வட்டாரத்தில் தனிச் சிறப்புப் பெற்றச் சடங்காகும்.''(62)

வேட்டைக்குச் செல்லுதல்

சுடலைமாடன் வேட்டைக்குச் செல்லும் போது தனியாகக் கருப்புநிற அங்கி, தலையில் அணிந்து கொள்ள மூன்று கொம்புகள் உள்ள குல்லாவும் இடுப்பில் மணியுடன் கச்சைக் கட்டிக் கொண்டும் கையில் வீச்சு அரிவாள், வல்லயம், மூங்கில் பிரம்பு எடுத்துக் கொண்டும், ஐந்து அடி உயரத் தீப்பந்தத்தையும் கை இடுக்கில் வைத்துக் கொண்டும், காலில் வேட்டைச் செருப்பு, இடுப்பில் திரளைப் பாத்திரம், கழுத்தில் வேட்டை மாலையுடன் தனது ஊரைச் சுற்றிச் சுடுகாடு செல்வார்கள். இந்த நிகழ்ச்சியை வேட்டைக்குச் செல்லுதல் என்று அழைக்கிறார்கள். வேட்டைக்குச் செல்லும் போது எதிரில் யாரும் வரமாட்டார்கள். வேட்டைக்குச் சென்று திரும்பி வந்த பின்னர் விழா நிறைவடையும். இதனைச் சாமத் திருவிழா என்றும் கூறுகிறார்கள்.

சுந்தர சுவாமி திருவிழா

மாரியம்மன் கோயிலில் முளைப்பாரி எடுப்பது போன்று இக்கோயிலிலும் முளைப்பாரி எடுக்கின்றனர். பூவால் அர்ச்சனை பெற்ற சுந்தரசுவாமிக்குப் பூ கட்டும் தொழில் செய்கின்ற (பண்டாரம்) அவர்கள் இக்கோயில் திருவிழாவைக் கொண்டாடுகின்றனர். வருடத்திற்கு ஒருமுறை ஆடிமாதம் பத்து நாள் திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர். இக்கோயிலில் ''முளைப்பாரித் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

கோயிலில் காப்புக் கட்டிய நாளிலிருந்து பத்து நாள் திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர். காப்புக் கட்டிய நாளில் முளையினைப் போட்டு வைப்பார்கள். பிற கோயிலில் அவரவர்கள் வீட்டில் பதியம் (முளை) போட்டு அவை வளர்ந்த பின்னர் கோயிலில் வைத்து வழிபாடு செய்வார்கள். கோயிலில் சாமியாடியாக இருக்கும் கந்தம்மாள் என்ற பெண்மணியின் வீட்டில் வைத்து முளை போட்டு; தினமும் காலை மற்றும் மாலை நேரத்தில் அதற்குத் தண்ணீர் தெளித்துப் பாட்டுப் பாடி வழிபடுவார்கள். இப்படியாக ஒவ்வொரு நாளும் இத்தெய்வத்தை நினைத்துப் பாட்டுப் பாடி ஒன்பது நாள் வரை கும்மியடிப்பார்கள். ஒன்பதாவது நாள் இரவு அதனை எடுத்துக் கொண்டு கம்மாப்பட்டியில் உள்ள பொன் இருளப்பசாமி கோயில் வரை சுற்றி வந்து பின்னர் இக்கோயிலுக்குக் கொண்டு வருவார்கள்.''(63) காரணம் இக்கோயிலுக்கும் சிவன் கோயிலுக்கும் தொடர்பு உள்ள காரணத்தினால் இக்கோயில் வலம் வந்து பின்பு அதனை அவ்வூர் பக்கத்திலுள்ள ஒரு குளத்தில் போட்டு விடுவார்கள். சாமியாடுகின்ற பெண் இறந்துவிட்டதால் தற்பொழுது முளைப்பாரியினை அக்கோயிலில் வைத்து வழிபாடு செய்கின்றனர்.

கற்குவேல் அய்யனார் திருவிழா

கற்குவேல் அய்யனார் கோயிலில் திருவிழா வைகாசி மாதம் கடைசி மூன்று நாள் நடத்தப்படுகின்றது. இக்கோயிலில் ஆரம்பக் காலக்கட்டத்தில் தினசரி வழிபாடு மட்டும் இருந்தது. திருவிழா நடத்த பொருளாதாரம் குறைவாக இருந்ததால் தினசரி வழிபாடு நடத்திய நாடார் இனத்தவர்களில் ஐந்து குடும்பங்கள், தங்கள் வியாபாரத்தில் வரும் இலாபக் கணக்கில் ஒரு பங்கினைக் கோயிலுக்குத் தருவதாக வேண்டுதல் விடுத்தனர். அதன் பின்னர் அவர்கள் வியாபாரம் நல்ல இலாபத்தைக் கொடுத்ததால் மூன்று நாள் திருவிழா நடத்த முடிவு செய்துள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளாகத் திருவிழா நடத்தி வருகின்றனர். இத்திருவிழாவை வைகாசி மாதம் கடைசி நாளில் பௌர்ணமிக்கு இரண்டு நாள் முன்பாக வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில்

நடத்தப்படுகின்றது. முதல் இரண்டு நாள் அசைவமும், அதற்கு அடுத்த நாள் சைவமும் படைக்கின்றனர். அசைவப் படையலாகக் கடா மற்றும் கோழியினை இத்தெய்வத்திற்குக் காவு கொடுக்கின்றனர். அதற்கு மறுநாள் பொங்கல் வைத்துச் சிறப்பு வழிபாடுகள் செய்து இத்திருவிழாவினை நிறைவடையச் செய்கின்றனர். திருவிழா கொண்டாட ஆரம்பித்த பிறகுதான் இக்கோயிலுக்கு என்று பூசாரியை நியமித்துள்ளனர். இக்கோயில் பூசாரியாக காசிமுத்து என்பவர் உள்ளார். சாமியாடியாக ஐந்து குடும்பங்களில் ஒருவரைப் பரம்பரை பரம்பரையாகத் தேர்வு செய்கின்றனர்.

புழுகாண்டி திருவிழா

புழுகாண்டிக் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆடித்திங்கள் இறுதி வெள்ளிக் கிழமையும் (மாசித் திங்கள்) சிவராத்திரி பூசையும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன்.

ஆடித்திங்கள் இறுதி வெள்ளிக்கிழமை முன்பு பன்றிப் பூசையும் நடைபெற்றிருக்கின்றது. அன்று சூலாட்டுப் பூசையும் நடைபெறும். இப்பூசை ஆரம்பக் காலக்கட்டத்தில் இருந்தது. தற்பொழுது இல்லை.

பன்றிப் பூசைக்கான பன்றியைவக் குட்டியிலேயே எடுத்துத் தனியாகக் காய்கறி முதலியவற்றை உணவாகக் கொடுத்து வளர்த்து வருவர். இராசபாளையத்தில் துரைச்சாமிபுரம் என்ற இடத்தில் வளர்க்கப்படும் இப்பன்றிக்குக் கருப்பசாமி எனப் பெயரிடுவர்.

விழாவன்று பன்றியை நன்கு நீராட்டிக் கோயிலுக்கு அழைத்து வந்து கோயில் பகுதியில் விட்டுவிடுவர். அதுவேறு எங்கும் செல்லாது.

சாமியை அலங்காரம் செய்து பூசைக்கான முன்னேற்பாடுகளுடன் பன்றியை நறுமண பொருட்களால் நீராட்டி மாலையிட்டுக் குங்குமம் இடுவர்.

பேச்சியம்மன் கோயில் முன் ஒரு துணியை விரித்து அதில் வாழைத் தண்டினை வைப்பர். உடனே பன்றி தானே கோயிலுக்குச் சென்று வாழைத் தண்டின்மீது தலையை வைத்துப் படுத்துக் கொள்ளும் எனக் கூறுகின்றனர். பூசை செய்து பன்றியை வெட்டுவர். வெட்டியதும் அதன் இரத்தத்தைச் சட்டியில் பிடித்து அதில் சோற்றைப் போட்டுப் பிசைந்து காவு கொடுப்பர்.

''பேச்சியம்மனுக்குச் சூலாடு அறுக்கப்படும் போது அவ்வாடானது மறுநாள் சுமார் எட்டு கி.மீ. தூரம் வரை நடந்து வந்து பூசாரி வீட்டில் இறக்கும்.''(64) தற்பொழுது பெரும்பூசை என்னும் பெயரில் உணவு படைத்து வணங்கி விடுகின்றனர்.

மகாசிவராத்திரி அன்று சுடலைச் சாமியின் முன் படைத்துப் பூசை செய்து பின் அப்பிரசாதத்தை மக்களுக்கு வழங்குவர்.

பிள்ளை இனத்தவர்கள் மட்டும் முப்பழப்பூசை நடத்துகின்றனர். இவர்கள் சிவராத்திரி அன்று விழா கொண்டாடாமல் ஆடிப்பெருக்கு அன்று விழா கொண்டாடுகின்றனர்.

புதியவன் சாமி திருவிழா

புதியவன் சாமி கோயில் விழா கொண்டாடுபவர்கள் சிவசங்கரன் பிள்ளை, சுப்புப்பிள்ளை, முத்து, வீரப்பப்பிள்ளை, கருவநாயகப் பிள்ளை, சீனியாபிள்ளை ஆகியோரின் வழித்தோன்றல்களாவர்.

தற்பொழுது இவர்கள் இராசபாளையம், சம்சிகாபுரம் வன்னியம்பட்டி, துலக்கன்குளம், இராமலிங்காபுரம், சத்திரப்பட்டி ஆகிய ஊர்களில் வசிக்கின்றனர்.

கோயிலில் ஆண்டுக்கு ஒருமுறை பெரும் பூசையும் அவர்கள் விரும்பும் நாட்களில் விழாவையும் நடத்திக் கொள்வர்.

விழாவன்று வரியாகப் பெற்ற அரிசியையும் காய்கறியும் சமைப்பர். இரவு பத்து மணியளவில் சாமியை அலங்காரம் செய்து கொட்டு மேளத்துடன் பூசை செய்வர்.

சாமியை வருவித்துப் படைப்பைப் பிரிக்க வரம் வேண்டுவர். சாமி வரம் கொடுத்ததும் படைப்பைப் பிரித்து மக்கள் அனைவருக்கும் உணவு வழங்குவர். சில நேரங்களில் சூலாட்டுப் பூசை நடத்துவர்.

ஐந்து ஆண்டுகட்கு ஒருமுறை பன்றிப்பூசை நடத்தப் பெறுகின்றது. இப்பூசையை அத்திக்குளம் குடும்ப இனத்தவர் நடத்துகின்றனர்.

பலியிடுவதற்குப் பன்றியைக் குட்டியிலேயே வாங்கி இரண்டு மூன்று ஆண்டுகள் வெளியே விடாது காய்கறிகளை உணவாக இட்டு வளர்ப்பர்.

பன்றிப் பூசைக்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக உணவு கொடுப்பதை நிறுத்திவிடுவர். பின்பு திருவிழாவின் போது அதனைச் சாமிக்குப் படையலிட்டு மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பர்.

தேவேந்திரகுல வேளாளர் மற்றும் பிள்ளைமார் இனத்தவர்கள் விழாக் கொண்டாடினாலும் பிள்ளை இனத்தவர்களே கோயில் பூசாரியாக இருக்கின்றனர்.

கொன்றையாண்டி அய்யனார் திருவிழா

கொன்றையாண்டி அய்யனார் கோயில் ஆனி மாதம் திருவிழாவில் முப்பழப் பூசை நடைபெறும். மாசிமாதம் சிவராத்திரி அன்று திருவிழா கொண்டாடுவார்கள். இத்தெய்வத்தை ஐந்து இனத்தவர்கள் (செட்டியார், யாதவர், சாலியர், தேவர், அட்டவணை இனத்தவர்) மட்டுமே கொண்டாடுகின்றனர். முப்பழப்பூசைக்கான மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளைத்

தர்மகர்த்தா வாங்கிக் கொடுப்பர். முப்பழப்பூசையின் போது இரவு இரண்டு காலப் பூசை நடைபெறும்.

சிவராத்திரி அன்று இரவு அய்யனாருக்குப் புளியோதரை படைக்கும் நான்கு வேளைப் பூசை நடைபெறும்.

ரெங்கநாதபுரம் யாதவர் இனத்தவர் சித்திரை மாதம் பௌர்ணமி அன்று விழாக் கொண்டாடுகின்றனர். அன்று ஊர் மக்கள் அனைவரும் வீட்டிற்கு ஒரு பொங்கல் வைத்துக் கடாவையும் பலியிடுகின்றனர். கடாவைக் கடலாடி கோயிலுக்குச் செல்லும் வழியில் பலியிடுவர். படைக்கப்பட்ட உணவினை அனைவருக்கும் வழங்குவர். பலி கொடுத்த கடாவின் தலையை மட்டும் பூசாரியிடம் கொடுத்துவிடுவர்.

''திருவில்லிபுத்தூர் கீழப்பட்டித் தெருவில் வசிக்கும் அட்டவணை இனத்தவர்கள் வைகாசித் திங்கள் அன்று கொண்டாடுகின்றனர். மாட்டுத் தலையை மான் தலையாக அய்யனார் மாற்றிய நாள் வைகாசித் திங்கள் ஆகும். வைகாசித் திங்கள் கடைசிச் சனிக்கிழமை, ஒற்றைப்படை எண்ணில் வந்தால் அன்று விழாக் கொண்டாடுகின்றனர். இல்லையெனில் கடைசிப் புதன்கிழமை விழாக் கொண்டாடுவார்கள்.''[(65)]

ஊர் வரி விதித்துப் பூசைப் பொருட்கள் மற்றும் கடா முதலியவற்றை வாங்கி விழாவன்று கொட்டு மேளத்துடன் கோயிலுக்குள் ஆண்கள் மட்டும் செல்வர். பெண்கள் கோயிலுக்குள் செல்வதில்லை. மற்ற இனத்தவர்கள் சிவராத்திரி அன்று விழாக் கொண்டாடுகின்றனர்.

மதுரைவீரன் திருவிழா

முப்பது தேவர் இனக் குடும்பத்தினர் சித்திரைத் திங்கள் வளர்பிறையில், வெள்ளி, சனி ஆகிய இரு நாட்கள் இவ்விழாக் கொண்டாடுகின்றனர்.

வெள்ளிக்கிழமை மாலையில் மக்கள் கோயில் வீட்டிற்குக் கொட்டு மேளத்துடன் செல்வர். சாமி கும்பிட்டுச் சாமி வருத்துவர். அதன்பின்பு சாமி ஆடிக் கொண்டே ஊர் சுற்றி வந்து மீண்டும் கோயில் வீட்டுக்கு வந்து விடுவர். இது முதல் நாள் திருவிழாவாகும்.

சனிக்கிழமை காலையில் மீண்டும் கோயில் வீட்டில் கூடிக் கொட்டு மேளத்துடனும், பொங்கல் பானைகளுடனும் கோயிலுக்குச் செல்வர். கோயிலில் பெண்கள் பொங்கலிட்டுதும் சாமியை அலங்காரம் செய்து கடா, சேவல் முதலியவற்றைப் பலியிடுவர். அதன்பின் பூசை நடத்தப்பெறும். இரண்டு நாட்களும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். கோயில் செயல்பாடுகளைக் கவனித்துக் கொள்ள ஆண்டுதோறும் நிருவாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

முனியாண்டி திருவிழா

முனியாண்டி கோயில் திருவிழா ஆண்டுதோறும் வைகாசித் திங்கள் வளர்பிறையில் நடத்தப்படுகின்றது. இரவு 12 மணியளவில் இவ்விழா நடைபெறும். பலியிடுவதற்காகக் கறி, கோழி, முட்டை ஆகியவற்றைச் சமைத்துப் படைப்பர். அப்படி படைக்கும் போது வாயில் துணியைக் கட்டிக் கொண்டு தேங்காய் உடைத்துப் பூசை செய்வார்கள். சமைத்த கறி உணவினை வீட்டிற்கு எடுத்து வரக் கூடாது. பூசாரி மட்டும் எடுத்து வரலாம்.

விழா நடைபெறும் போது ஆண்கள் மட்டுமே இருக்க வேண்டும். பெண்கள் வரக்கூடாது. இரவு முழுமையும் பூசை நடைபெறும். பூசையின் போது பூசாரி மீது அருள் வரும். அருள் வந்த பின்னர், தன் காலில் ஆணியால் செய்யப்பட்ட செருப்பினை அணிந்து அருள் வாக்குக் கூறுகின்றார்.

வேடப்பசாமி திருவிழா

வேடப்பசாமி கோயிலிலுள்ள பெட்டியானது (பேழை) ஆற்றின் வழியே தங்கன்னிடி மானகச்சேரிக்குப் போய் அடைந்தது.

பின்னர் இத்தெய்வம் மானகச்சேரியில் இருக்க விருப்பம் தெரிவித்ததால் மாசிமாதம் அமாவாசையை ஒட்டி மூன்று நாட்கள் திருவிழா இன்றும் நடைபெற்று வருகின்றது. முதல் நாள் இப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு உள்ளூர் பட்டியில் வைத்துத் திருவிழா நடத்துகின்றனர். பின்னர் மறுநாள் இப்பெட்டியை மானகச்சேரிக்குக் கொண்டு போய் சேர்ப்பார்கள். மூன்றாவது நாள் நகர்வலம் வந்தும், ஊர் விளையாடியும் விழாக் கொண்டாடுகின்றனர்.

கருப்பசாமி திருவிழா

சின்னக் கருப்பசாமி, பெரிய கருப்பசாமி கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆனிமாதம் வளர்பிறையில் சனிக்கிழமை விழா நடைபெறுகின்றது. விழாச் செலவிற்கு வரி வாங்கிச் செலவு செய்கின்றனர். இக்கோயிலில் கந்தசாமி நாடார், இருளப்ப நாடார் ஆகிய பரம்பரையினரும் வடக்குத் தெரு நாடார் இனத்தவரும் வணங்கி விழாக் கொண்டாடுகின்றனர். விழாவன்று கொட்டு மேளத்துடன் கோயிலுக்குச் சென்று சமையல் செய்து உணவை சாமிக்குப் படைப்பர். பின் சாமியை அலங்காரம் செய்து பூசை செய்து வணங்குவர். படையல் பிரிக்க சாமியை வேண்டுவர். சாமி அருள் கிட்டியவுடன் படையலைப் பிரித்து மக்கட்கு வழங்குவர். மாலையில் வீடு திரும்புவர். இக்கோயிலில் தாயாதிக்காரர்கள், சம்பந்தக்காரர்கள் ஆகிய இருவரும் வெவ்வேறு நாட்களில் விழாக் கொண்டாடுகின்றனர். ஒவ்வொரு இனத்தவரும் தனித்தனியே பூசாரி அமர்த்தியுள்ளனர். இரண்டு பூசாரிகள் உள்ளனர். இதே போன்று கோட்ட மலைக் கருப்பசாமி கோயிலிலும் திருவிழா சித்திரை மாதம் நடத்தப்பெறுகின்றது.

செக்கடி முனியாண்டி திருவிழா

திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் இராமகிருஷ்ணாபுரம் என்ற இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் திருவிழாவை வைகாசி மாதம் ஒருநாள் திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர்.

இருபது வருடத்திற்கு முன்பு தான் இக்கோயில் உருவாக்கப்பட்டது. ஆகையால் அக்கோயிலுக்கு வாணியர் (செட்டியார்) இனத்தவர்கள் மட்டும் விழாக் கொண்டாடுகின்றனர். திருவிழாவின் போது பொங்கல் கடா (ஆடு), கோழி போன்றவற்றைப் படைக்கின்றனர். சாமியடுவதற்கென்று தனி ஆள் இல்லை. பூசை செய்கின்ற பூசாரி தான் சாமியாடுகின்றார். இக்கோயிலின் சிறப்பு தீயசக்திகளை மட்டுமல்லாமல் தீய நோய்களையும் நீக்குகின்றது. அதற்குப் பரிகார மாகத்தான் இதனைச் செலுத்துகின்றனர். வாணியர் இனத்தவர் மட்டும் ஒருநாள் திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர். கோயில் சிறியதாக உள்ளதால் வெகு விமர்சையாகக் கொண்டாட முடியாமல் ஒருநாள் திருவிழாவாகக் கொண்டாடுகின்றனர்.

தூண்டில் கருப்பசாமி திருவிழா

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் கரிசல்குளம் என்ற சிற்றூரில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் திருவிழா மாசிமாதம் மகாசிவராத்திரி அன்று நடைபெறும். இத்திருவிழா முதல்நாள் இரவு தொடங்கி மறுநாள் மாலை வரை நடைபெறும். பெரும்பாலான குலதெய்வக் கோயில்களில் சிவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இத்திருவிழாவைத் தேவேந்திரகுல வேளாளர் கொண்டாடுகின்றார்கள். இக்கோயிலில் தவறு செய்பவர்களை அழைத்து வந்து இத்தெய்வத்தின் முன்னால் நிறுத்தித் தண்டனை கொடுப்பார்கள். இக்காட்சியைக் காண்பதற்காக வெளியூர் மக்கள் இக்கோயிலுக்கு வந்து பார்த்து, தாங்களும் தவறு செய்யக்கூடாது என்பதை மனத்தில் கொண்டு வழிபட்டுச் செல்வார்கள். திருவிழாவின் போது சைவம் மற்றும் அசைவப் படையல் படைக்கின்றனர். பெரும்பாலும் கருப்பசாமி கோயில் அனைத்திலும் பௌர்ணமி பூசை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். வழிபடும் நாளாகச் செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் வழிபாடு செய்கின்றனர். சிவராத்திரி அன்று பேச்சிமுத்து என்ற மருளாடி வரிதி (அருள்வாக்கு) கூறுகின்றார்.

வெயில் முத்து அய்யனார் திருவிழா

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் இராமலிங்காபுரம் என்ற ஊரில் இக்கோயில் உள்ளது. இக்கோயில் திருவிழா ஆனி மாதம் முப்பழப் பூசையாகவும், மாசி மாதம் மகா சிவராத்திரியாகவும் கொண்டாடுகின்றனர். சித்திரை மாதம் சித்திரா பௌர்ணமி பூசையும் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். பெரும்பாலும் சித்திரா பௌர்ணமி பூசை சிவனுக்கு உகந்த பூசை ஆகும். ஆகையால் தான் திருவண்ணாமலையில் வீற்றிருக்கக் கூடிய சிவனைச் சித்திரா பௌர்ணமி அன்று கிரிவலம் வருகின்றனர். அவ்வாறு கிரிவலம் வந்தால் தான் நினைத்த காரியம் நடக்கும் என்பது நம்பிக்கை. அதே போல் அய்யனாருக்குச் சித்திரை மாதம் பௌர்மணமி அன்று சிறப்புப் பூசை செய்கின்றனர். காரணம் "அய்யனார் சிவனுக்கும் திருமாலுக்கும் இடையில் பிறந்தவர் என்றும் கூறுவர். வழிபாடானது தினசரி வழிபாடாக இல்லாமல் பௌர்ணமி நாளில் மட்டும் சிறப்புப் பூசை நடைபெறுகிறது."(66) இத்தெய்வத்தை மூன்று இனத்தவர்கள் கொண்டாடுகின்றனர். பனைய நாடார், மறவர், சாலியர் ஆகிய மூவரும் வெவ்வேறு விதமாகக் கொண்டாடுகின்றனர். பனைய நாடார் இனத்தவர்கள் பதநீர், கருப்பட்டி போன்றவற்றைப் படைத்து வழிபடுகின்றனர். சாலியர் இனத்தவர்கள் பொங்கலை வைத்து படையிலிடுகின்றனர். மறவர் இனத்தவர்கள் கடா வெட்டி படையலிடுகின்றனர். இவ்வாறாக, மூன்று இனத்தவர்களும் வெவ்வேறு விதமாகத் திருவிழா கொண்டாடுகின்றனர். விழாக் காலங்களில் மட்டும் மேள தாளத்துடன் திருவிழா கொண்டாடுகின்றனர்.

இரணவீரன் திருவிழா

வன்னியம்பட்டி என்ற சிற்றூரிலுள்ள இக்கோயலில் திருவிழாவானது ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் வளர்பிறையில் வெள்ளிக்கிழமையன்று விழா கொண்டாடுகின்றனர். இத்திருவிழா இரவு பன்னிரண்டு மணியளவில் தொடங்கி மறுநாள் காலை வரை

மட்டும் திருவிழா நடைபெறும் இக்கோயிலில் கடாவினை வெட்டிக் கறி சமைத்துச் சாமிக்குப் படைப்பர். படைத்த உணவினை யாருக்கும் கொடுக்க மாட்டார்கள். சாமிக்குப் படையல் வைத்த பிறகு சாமியாடி என்ற மருளாடி வருதி (அருள்வாக்கு) கூறுவார். இரவு முழுவதும் மறவர் இனத்தைச் சேர்ந்த அத்தனை குடும்பங்களும் வருதி (அருள்வாக்கு) கேட்டு அதன்படி தான் நடப்பதாகவும் வாக்குக் கொடுப்பார்கள். சாமியாடுகின்றவர்கள் பூதத்தான், கூடலிங்கம் என்ற இருவரும் தன்னை நாடி வருகின்ற பக்தர்களுக்கு அருள் வாக்குத் தருவார்கள். இந்த வருடம் அழிவு மற்றும் பஞ்சம் ஏதுவும் உள்ளதா? என்பதையும் கூறுகின்றார்கள். இந்த அருள்வாக்குக் கேட்பதற்காகப் பக்கத்து ஊர்களில் உள்ளவர்கள் இத்திருவிழாவின் போது வந்து ஆசி பெற்றுச் செல்கிறார்கள்.

வண்ணான் மாடன் திருவிழா

திருமலாபுரம் என்ற ஊரில் இக்கோயில் திருவிழா மாசி மாதம் சிவராத்திரி அன்று ஒருநாள் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. திருவிழா ஆரம்பித்த பின்னர் சாமியை அலங்காரம் செய்து, சைவம் மற்றும் அசைவத்தினைப் படையலாகப் படைக்கின்றனர். வாழை, கரும்பு, பொங்கல், பச்சரிசி, பாசிப்பயிறு போன்றவற்றைப் புதுப்பானையில் படைப்பார்கள். இருபத்தொன்று கலையத்தில் பானைக்கறம் மற்றும் இளநீரைப் படைப்பார்கள். சேவலைக் காவு கொடுக்கிறார்கள். முட்டையினை நான்கு பக்கமும் வீசுவார்கள். பின்னர் ஆட்டினைக் காவு கொடுப்பார்கள். சாமியாடுகின்ற பொழுது ‘திமிரி’ என்னும் சிறிய வகை நாட்டுப்புற நாதசுர இசைக்கும் மேளத்திற்கும் ஏற்ப சாமியாடுவார்கள். சாமியாடுபவர்களை மருளாடி என்றழைக்கின்றனர். மருளாடி இருபத்தொன்று கலையத்தில் உள்ள பானைக்கறம் மற்றும் இளநீரை இருபத்தொரு பீடத்தின் மேல் தெளித்து ஆசி வழங்குவார். வருடத்தில் ஒருமுறை மட்டும் திருவிழா நடந்தாலும் ஒவ்வொரு மாதமும் வெள்ளிக்கிழமையன்று சிறப்பு வழிபாடு நடைபெறும்.

கோட்டை கருப்பசாமி திருவிழா

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் நாச்சியார்புரம் என்ற ஊரில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் தை மாதம் திருவிழா நடைபெறும். பௌர்ணமி நாளில் மாலை நேரத்தில் சிறப்புப் பூசை நடைபெறும். வாரத்தில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமை மாலை நேர பூசை நடைபெறும். தைமாதம் வளர்பிறையில் இரண்டு நாள் விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. முதல் நாளில் அசைவப் படையலும், மறுநாள் சைவப் படையலும் படைக்கின்றனர். இத்திருவிழாவை பிள்ளைமார் மற்றும் தேவர் இனத்தவர்கள் கொண்டாடுகின்றனர். பௌர்ணமி நாளில் மாலை நேரத்தில் சிறப்புப் பூசையான விளக்குப் பூசையும் நடைபெறும். இவ்விளக்குப் பூசை ஆரம்பிப்பதற்குப் முன்னால் சாமியாடி அருள்வாக்குக் கூறுகிறார். அதன் பின்பு பூசை நடைபெறும்.

நிறைமடை அய்யனார் திருவிழா

அய்யனாருக்குச் செய்யும் விழாவாகும். ஊரணிப் பொங்கல் சில இடங்களில் தை மாதமும், சிலவிடங்களில் ஆடி மாதமும் நடைபெறும். ஊர்மக்கள் அனைருவம் அய்யனார் கோயிலில் கூடிப் பொங்கல் வைத்துப் படைப்பர். ஊர்மக்கள் அனைவரும் ஒரே நாளில் ஒரே இடத்தில் செய்யும் விழாவாகும். பெரும்பாலும் அய்யனார் ஊரணிக் கரையில் வீற்றிருப்பதால் இப்பெயர் பெற்றுள்ளது. ஊரணிக்கரையில் அமர்ந்திருக்கின்ற நிறைமடை அய்யனாருக்கு ஒருநாள் மட்டும் திருவிழாக் கொண்டாடப்படுகிறது. அத்திருவிழாவில் ஊரணிப் பொங்கலும் அன்றிரவு பலியிடுதல் சடங்கும் நடத்தப்படுகின்றது. பலியிடுதலில் ஆட்டினைப் பலி கொடுக்கின்றனர். சக்தி வாய்ந்த அய்யனாராக இருப்பதால் மற்ற இனத்தவர்களும் சேர்ந்து பொங்கல் வைத்து வழிபாடு செய்கின்றனர். அய்யனாருக்கு உயிர்ப்பலி இடமாட்டார்கள். ஆனால் பலியிடுதலை பனைய நாடார் இனத்தவர் மட்டும் செய்து விழாவினை நிறைவடையச் செய்கின்றனர்.

பொன் இருளப்பசாமி திருவிழா

கம்மாப்பட்டியில் உள்ள பொன் இருளப்பசாமி கூனங்குளத்தில் உள்ள சுந்தரசுவாமி கோயிலுடன் தொடர்புடையது. பொதுவாக, இருளப்பசாமி கோயிலில் பொங்கல் வைத்துக் காவு கொடுக்கின்ற நிகழ்வு மட்டும் நடைபெறும். இக்கோயில் சுந்தரசுவாமி கோயிலுடன் தொடர்புடையதாக உள்ளதால் இக்கோயிலில் திருவிழா நடைபெறுகின்ற பொழுது இங்கும் சிறப்பான வழிபாடு மற்றும் திருவிழா கொண்டாடப்படுகின்றது. இத்திருவிழாவை ஆவணி மாதம் மூன்று நாள் கொண்டாடுகின்றனர். நாடார் இனத்தவர்கள் தங்கள் குல தெய்வமாக இத்தெய்வத்தை வழிபட்டு விழாவினைக் கொண்டாடுகின்றனர். இரவு தொடங்கி அதிகாலையில் வரை அலங்காரம் மற்றும் பூசை நடைபெற்ற பின்பு பொங்கல் வைத்துத் திருவிழாவை நிறைவு செய்கின்றனர். இத்திருவிழா கடந்த ஐந்து வருடங்களாகத்தான் நடைபெற்று வருகிறது. அதற்கு முன்பு பூசை மட்டும் நடைபெறும். சாமியாடி வருதி கூறுகின்ற நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை. பொன் இருளப்பசாமி பீடமாக இருந்த போது வழிபாடு மட்டும் நடைபெற்றது. இப்பொழுது அப்பீடமானது கற்சிலையாக மாற்றப்பட்டுத் திருவிழா கொண்டாட ஆரம்பித்தார்கள். இக்கோயிலில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரப் பூசை நடைபெறும். சுந்தரசுவாமி கோயிலில் முளைப்பாரி எடுத்து வரும் போதும் இக்கோயிலில் சிறப்பு வழிபாடு நடைபெறுன்கிறது.

காளியம்மன் திருவிழா

திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் சைவ செட்டியார் இனத்தவர்கள் வைகாசி மாதம் பொங்கல் திருவிழாவைப் பத்து நாட்கள் கொண்டாடுகின்றனர். புரட்டாசி மாதம் நவராத்திரி விழாவும் சித்திரை மாதம் சித்ரா பௌர்ணமி விழாவும் கொண்டாடுகின்றார்கள். இவ்வட்டாரத்தில் மற்றொரு

இனத்தவர்கள் இவ்வம்மனுக்கு விழா எடுக்கிறார்கள். இசை வேளாளர்கள் வருடத்தில் ஒரு முறை மட்டும் இத்தெய்வத்திற்கு விழா எடுக்கிறார்கள்.

பிற கோயில் விழாக்கள்

மல்லிபுத்தூர் வட்டத்தில் மாயத்தேவன்பட்டியில் சேலைக்காரி முத்தம்மாள் என்ற கோயில் உள்ளது. சங்கரன்கோயில் ஆடித்தபசு அன்று திருவிழா நடைபெறும் பொழுது இக்கோயிலிலும் இத்திருவிழா நடைபெறும். இத்தெய்வமானது குடும்ப வழிபாட்டோடு சேர்ந்ததாக இருந்தாலும் விழாக் கொண்டாடுகிறார்கள்.

கீழப்பொட்டல்பட்டி என்ற சிற்றூரில் முப்பிடாதி அம்மன் கோயில் திருவிழா பங்குனி மாதம் திருவிழா மூன்று நாள் நடைபெறும். இதில் முதல்நாள் அம்மன் கோயில் முன்னால் சேவலைக் கழுவேற்றுகின்றனர். இரண்டாம் நாள் பொங்கல் வைத்து மூன்றாம் நாள் அம்மன் வீதி உலா வருகின்றார்.

பாட்டக்குளம் என்ற சிற்றூரில் துர்க்கை அம்மன் கோயிலில் ஆடிமாதம் கடைசி வெள்ளிக் கிழமை விழா நடைபெறும். இதில் அன்னதானமும், முப்பழப் பூசையும் சிறப்பாக நடைபெறும்.

திருவில்லிப்புத்தூரில் திருமுக்குளம் என்ற இடத்தில் குறவர் சமூகத்திற்காக உருவாக்கப்பட்ட வடபத்ர காளியம்மன் கோயிலில் வைகாசி மாதம் ஒருநாள் திருவிழா கொண்டாடுகின்றனர். இத்திருவிழாவின் போது இரவில் அவர்கள் வருமானத்திற்குத் தகுந்தவாறு கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

வாழைக்குளம் முத்துப்பேச்சியம்மன் கோயிலில் மாசிமாதம் மகாசிவராத்திரி அன்று திருவிழாக் கொண்டாடுகின்றனர். இத்திருவிழாவைக் கம்பம், கூடலூர், சின்னமனூர் சித்தரேவு (சித்தூர்) மம்சாபுரம் ஆகிய ஊர்களிலிருந்தும் மக்கள் வந்து

கொண்டாடுகின்றனர். வாழைக் குளத்திற்குள் இருக்கும் முத்துமாரியை வணங்க மதுரை மக்கள் செல்வர். இவ்வம்மனுக்கு மாலையிட்டு விளக்கேற்றிப் புதிய ஓலைக் கொட்டானில் பாதியளவு அரிசிப்பொரி வைத்து வணங்குகிறார்கள். மகா சிவராத்திரி மறுநாள் பாதியளவு வைத்த பொரி கொட்டானில் நிறைந்து காணப்படும். இக்கோயில் திருவிழாவில் மிக முக்கிய நிகழ்ச்சி இதுவேயாகும்.

திருவில்லிப்புத்தூரில் மாதாங்கோயில் தெருவிலுள்ள அங்காள பரமேசுவரி கோயிலில் ஆடி மாதம் வளர்பிறைத் திங்கள் விழா ஆரம்பமாகும். ஒரு வாரத்திற்கு முன்பே காப்புக்கட்டி விடுவார்கள். பின்பு ஏழாவது நாள் முளைப்பாரியினை இக்கோயிலில் வைத்து வழிபட்ட பின்னர் அதனைக் கிணற்றில் போடுவதற்கு முன்னால் அவ்வழியே செல்லும் போது அங்குள்ள கோயில்களை வலம் வந்த பின்னர் கிணற்றில் போடுவார்கள். மறுநாள் இவ்வம்மனை வழிபட்டுச் செல்வார்கள்.

வைத்திலிங்காபுரத்தில் உள்ள முத்துமாரியம்மன் கோயிலில் ஒன்பது நாள் திருவிழா நடைபெறும். வைகாசி மாதம் முதல் செவ்வாய் கொடியேறி மறு செவ்வாய் திருவிழா முடிவடையும். அன்றிரவு ஆயிரங்கண் பானை மற்றும் கரகம் (உருவம்) எடுத்து ஆடுதல், மறுநாள் புதன்கிழமை மாலை கயிறு குத்துதல், கடாவெட்டு, சிலம்பாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இடையன்குளத்திலுள்ள காளியம்மன் கோயிலில் வைகாசி மாதம் மூன்று நாள் திருவிழா நடைபெறும். அம்மன் கோயிலில் கொடியேற்று விழா மற்றும் முடிவடைகின்ற நாள் எல்லாம் செவ்வாய், புதன், வியாழன் போன்ற கிழமைகளில் நடைபெறும். அதே போல் இக்கோயிலிலும் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று நாள் திருவிழாவில் பால்குடம் எடுத்தல், அம்மனின் உருவம் சாற்றுதல், மாவிளக்கு எடுத்தல், கடாவெட்டுதல், பொங்கலிடுதல் போன்றவை எல்லாம் நேர்த்திக் கடனுக்காகச் செலுத்தப்படுபவையாகும்.

அத்திக்குளத்திலுள்ள காளியம்மன் கோயில் திருவிழாவை வைகாசி மாதம் ஒருநாள் விழாவாகக் கொண்டாடுகிறார்கள். இவ்விழாவில் அம்மனுக்குப் பொங்கல் வைத்துப் பலி கொடுக்கின்ற நிகழ்ச்சிகள் மட்டும் நடைபெறுகின்றன. இக்கோயிலில் பூ கட்டிப் பார்க்கும் வழக்கம் உள்ளது.

நாகபாளையம் மாரியம்மன் கோயிலில் அம்மனுக்குப் பால்குடம் எடுத்து வந்து பாலால் அபிசேகம் செய்வதும் அப்பாலைப் பாம்பு குடிப்பதும் தனித்த நிகழ்வுகளாகும்.

பாப்பைய நாயக்கர்பட்டி என்ற ஊரிலுள்ள காளியம்மன் கோயிலில் பூக்குழி இறங்குதல் நிகழ்வு நடைபெறுகின்றது. இக்கோயிலில் ஒரு வாரத்திற்கு முன்பே காப்புக்கட்டி ஏழாவது நாள் தீமிதி உற்சவம் நடைபெறுகின்றது.

மல்லிபுத்தூரிலுள்ள காளியம்மன் கோயில் திருவிழாவில் அம்மனை அலங்கரித்து சிங்கவாகனத்தில் பவனி வரும் போது இளம் பெண்கள் திருவிளக்கேந்தி அம்மனை வழிபாடு செய்கின்றனர்.

முள்ளிக்குளத்திலுள்ள அய்யனார் கோயில் திருவிழாவானது இரண்டு நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அய்யனாருக்குப் பொங்கல் வைத்துப் படையல் போடுகின்றனர். பின்னர் அப்படையலைப் பிரித்து அந்த இனத்தவர்களுக்குப் பகிர்ந்து அளிக்கின்றனர். இக்கோயிலில் படையல் போடுதல் நிகழ்ச்சி அனைத்துத் தரப்பினராலும் மேற்கொள்ளப்படுகிறது.

சூடிபுதூர் என்ற ஊரிலுள்ள காளியம்மன் கோயிலில் பொங்கல் வைத்துப் படைக்கின்றனர். பலியிடுகின்ற வழக்கம் கிடையாது.

மேற்குத் தொடர்ச்சிமலையின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள செவல் பேமலையம்மன் கோயிலில் மகாசிவராத்திரி அன்று சிறப்புப் பூசைகள் நடைபெறும். பூசையின் போது சாமியாடிகள் (மருளாடி) சாமியாடி அருள்வாக்குக் கூறுகின்றனர்.

இவ்விழாவானது சிவராத்திரி அன்று இரவு தொடங்கி மறுநாள் மாலை வரை விழா நடைபெறுகிறது.

தைலாகுளத்திலுள்ள வீரமாகாளியம்மன் கோயிலில் மாசிமாதம் மகாசிவராத்திரி அன்று சிறப்புப் பூசை நடைபெறுகிறது.

கீழூரிலுள்ள அக்கினி மாரியம்மன் கோயிலில் வைகாசிமாதம் மூன்று நாள் திருவிழாக் கொண்டாடுகின்றார்கள். இவ்விழாவில் கரகம் எடுத்தல், பால்குடம் எடுத்தல், ஆயிரங்கண் பானை எடுத்தல் மற்றும் கயிறு குத்துதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

தொகுப்புரை

இதுகாறும் கூறியவற்றிலிருந்து பின்வரும் கருத்துக்களைத் தொகுக்கலாம்.

சிறுதெய்வங்களின் திருவிழாக்கள் என்பவை மக்கள் தொழில் அல்லாத ஓய்வு காலங்களில் ஒன்றாக நடத்தப்படுகிறது. இவை மக்களின் ஒற்றுமை உணர்வையும், பண்பாட்டு உணர்வையும், மகிழ்ச்சி உணர்வையும் வெளிப்படுத்தக்கூடியவையாக இருக்கின்றன எனலாம். எல்லா இனத்தவர்களிடமும் இப்பகுதியில் குறிப்பிட்ட வழிபாடுகள் நடைபெறுகின்றன. சமூக நல்லிணக்கத்திற்கு இப்பகுதிச் சிறு தெய்வக் கோயில்களும், வழிபாடுகளும் துணை செய்கின்றன.

களப்பகுதியில் புரட்டாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி ஆகிய மாதங்களில் சிறு தெய்வ வழிபாட்டு விழாக்கள் நடைபெறுவதைக் காணமுடிகிறது.

திருவிழாக்களில் வழிபாடுகளும் பல்வேறு நிகழ்வுகளாக செய்யப்படுகின்றன. இவை காலம் காலமாக மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்ற நிலையினைக் களப்பகுதி செய்திகள் தெளிவுபடுத்துகின்றன. நாட்டுப்புற தெய்வங்களில் சிற்றூர் தெய்வங்களுக்கு ஊர் கூட்டம் நடத்தி விழாக்கள் நடத்துகின்ற முறைமை காணப்படுகின்றன. குலதெய்வம், இனத் தெய்வங்களுக்கு

இத்தகைய ஊர்க்கூட்டம் நடைபெறுவதில்லை. மாறாக அந்தந்தக் கோயில்கலில் வழிபடக்கூடிய குழுவினர் மற்றும் பங்காளி வகையறாக்கள் கலந்து பேசி விழா தொடர்பாக முடிவெடுப்பதைக் களப்பகுதியில் காணமுடிகிறது.

கொடிக்கட்டுதல், காப்புக்கட்டுதல் ஆகியவை பெரும்பாலும் நாட்டுப்புற சிற்றூர்த் தெய்வங்களிலேயே நடைபெறுகின்றன. தெய்வத்தைக் கழுவுதல், உத்தரவு கேட்டல் ஆகியவை சிற்றூர்த் தெய்வங்கள் மற்றும் குலதெய்வ வழிபாடுகளிலும் காணப்படுகின்றன.

தெய்வத்தைச் சுத்தம் செய்தல் என்ற அடிப்படையில் கிராம தெய்வங்களை திருவிழாவின் போது கழுவி விடுகின்றனர். குலதெய்வங்கள், இனத்தெய்வங்கள் ஆகியவற்றை வருடத்திற்கு ஒரு முறை இடத்தைச் சுத்தம் செய்யும் முறைகள் காணப்படுகின்றன.

நாட்டுப்புற தெய்வங்களின் பூசைப் பொருட்களாக பழங்கள், தானியங்கள், உணவு வகைகள், ஆடைகள் போன்றவை அமைகின்றன. இவற்றில் குலதெய்வங்கள் மற்றும் இனத் தெய்வங்களுக்கு மீன், கருவாடு, சாராயம், சுருட்டு, போன்றவை பூசைப் பொருட்களாக அமைகின்றன.

கரகம் எடுத்தல் என்பது ஊர் பொது தெய்வங்களாகிய சிற்றூர்த் தெய்வங்களுக்கு மட்டும் நடைபெறும். இதில் கும்பங் கட்டுதல் எனும் நிகழ்வு அம்மன் தெய்வங்களுக்கு மட்டுமே நடைபெறும். இது மக்களின் ஒருமைப்பாட்டைக் காட்டுகிறது.

பலியிடுதல் களப்பகுதியில் ஒரு சில தெய்வங்களை தவிர மற்ற அனைத்து தெய்வங்களுக்கும் நடைபெறும் நிகழ்ச்சியாகக் காணப்படுகிறது. மாரியம்மன் வழிபாட்டில் கழுவேற்றம் நிகழ்ச்சியும், ஓடு கடா கடித்தல் நிகழ்ச்சியும் நடத்தப்படுகிறது. இவ்வழிபாடு ஒரு சில கோயில்களில் மட்டும் நடத்தப்படுகிறது.

பாதாள பேச்சியம்மன், புழுகாண்டி ஆகிய இரு கோயில்களில் மட்டும் ஊட்டுக்கொடுக்கின்ற நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. திரௌபதியம்மன் வழிபாட்டுச் சடங்கு களப்பகுதி மகாபாரத செய்தியோடு இணைந்து நடத்தப்படுகிறது. திரௌபதி அம்மன் திருவிழாவில், தீ மிதித்தல் சடங்கு மக்களோடு மிக நெருக்கமான சடங்குகளாகக் காணப்படுகின்றன. தீ மிதித்தல் என்பது தொன்மைக் கால இயற்கை வழிபாட்டோடு தொடர்புடையதாக கருதலாம்.

களப்பகுதி நாட்டுப்புற தெய்வங்களில் திருவிழா மற்றும் சடங்குகளில் பலியிடுதல், தீ மிதித்தல் ஆகியவை தொன்மைச் சமுதாய வழிபாட்டின் எச்சமாகவும், பொங்கல் என்பது மக்களின் வளமை தொடர்புடைய சடங்காகவும் அமைகின்றன எனலாம்.

பத்ரகாளியம்மன் கோயிலில் நெய் அப்பம் சுடுகின்ற நிகழ்வு காணப்படுகின்றது.

எல்லா இனத்தவர்களிடம் இப்பகுதியில் குறிப்பிட்ட வழிபாடுகள் நடைபெறுகின்றன. சமூக நல்லிணக்கத்திற்கு இப்பகுதிச் சிறு தெய்வக் கோயில்களும், வழிபாடுகளும் துணை செய்கின்றன. வழிபாட்டு முறைகளில் மேல்நிலையாக்கம் பெற்றுக் காணப்படுகிறது. கோயில் அமைப்பில் நவீன முறைகள் காணப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. முனைவர் து. தியாகராஜன், சிறுதெய்வ வழிபாட்டில் நாட்டுப்புறக் கூறுகள் ப. 1.

2. மா. இராசமாணிக்கம், வழிபாடு, ப. 62.

3. In its simplext and most primitive from prayer is the expression of a desire, cast in the form expression of a desire, cast in the form of a request, to influence same force or power conceived as super natural. A part from the modern usage of the term which consists spiritual communion. It is usually understood to imply reverent entreaty.

4. வ.சு. செங்கல்வராய பிள்ளை, திருவாசக ஒளிநெறிக் கட்டுரை, ப. 310.

5. திருமருகல் சிங்கார வேலனார், இந்து மத தத்துவங்கள், ப. 108.

6. திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாய அமைப்பு, ப.210.

7. ஆ.கா.பெருமாள், தொல்பழம் சமயக்கூறுகள் (1990:1).

8. Henry whibe Head, The Village God of South India (1976:12).

9. ச.கணபதி இராமன், திருநெல்வேலிப் பகுதியில் சிறுதெய்வ வழிபாடு, ப.27.

10. டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன், நாட்டுப்புற வாழ்வியல், ப.45.

11. ஜெகாதா, கிராம தேவதைகள், ப.1.

12. டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன், நாட்டுப்புற வாழ்வியல், பக்.47-49.

13. டாக்டர் சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.225.

14. டாக்டர் சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புற இயல், பக்.163-165.

15. டாக்டர் தே.லூர்து, நாட்டார் வழக்காற்றாயியலில் சில அடிப்படைகள், பக்.162-163.

16. டாக்டர் கு. கதிரேசன், சிறுதெய்வ வழிபாட்டுச் சடங்குகள், ப. 1, 2.

17. மேலது, ப. 19.

18. Frazer. J.G. The Golden Bough. P. 134.

19. நற்.47:8-11.

20. அகம்.22:8-11.

21. சிலம்பு. 5:67-69.

22. டாக்டர் சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.235.

23. கலி.83:14-15.

24. அகம்.1:115.

25. குறுந். 41:1-2.

26. கோ.மு.முத்துசாமிபிள்ளை, கோயிற் களஞ்சியம், பக்.146-147.

27. டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன், நாட்டுப்புற வாழ்வியல், ப.232.

28. ஆ.திருநாகலிங்கம், புதுச்சேரி வட்டார நாட்டுப்புறக் கதைகள் காட்டும் சமுதாயம், ப.159.

29. க.காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.58.

30. மேலது, ப.117.

31. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.196.

32. மேலது, 366.

33. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள் ப.127.

34. திருமுருகாற்றுப்படை 245-248.

35. சிலம்பு. வேட்டுவவரி 7-8.

36. திருமுருகாற்றுப்படை 218.

37. குறுந். 263.

38. புறம். 143.

39. அகம். 309.

40. நற். 47, 8-11.

41. டாக்டர் சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.243.

42. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறக் கலைகள், ப.169-170.

43. முனைவர் அ.அறிவுநம்பி, நாட்டுப்புறக் களங்கள், ப.82.

44. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், ப.129.

45. மு. கருணாநிதி, சடத்தலம் ப. 117.

46. மேலது ப. 118.

47. தகவல்: காளியப்பன், 31.07.2007.

48. தகவல்: திருமலை, 07.08.2007.

49. தகவல்: சடையாண்டித் தேவர், 27.07.2007.

50. தகவல்: கோ. கிருஷ்ணன், 05.08.2007.

51. தகவல்: முனீஸ்வரன், 28.07.2007.

52. தகவல்: எஸ். இராமகிருஷ்ணன், 05.08.2007.

53. தகவல்: க. குருசாமி, 06.08.2007.

54. தகவல்: ந. மாயாண்டி, 19.09.2007.

55. தகவல்: வரதராஜன், 30.07.2007.

56. தகவல்: சந்திரபாபு (எ) முத்தையா 05.10.2007.

57. டாக்டர் பா.ரா. சுப்பிரமணியன், க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப. 425.

58. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறக் கலைகள், ப. 168.

59. டாக்டர் இரா. பாலசுப்பிரமணியன், நாட்டுப்புற வாழ்வியல், ப. 20.

60. தகவல்: ப. சிவராமன், 02.12.2007.

61. தகவல்: முத்தம்மாள், 06.02.2008.

62. தகவல்: கந்தப்பன், 24.06.2008.

63. தகவல்: அழகர்சாமி, 24.04.2008.

64. தகவல்: குருசாமி, 19.03.2008.

65. தகவல்: சங்கிலித்தேவர், 29.03.2008.

66.தகவல்: கந்தையா, 14.07.2008.

இயல் - 5

நம்பிக்கைகளும் நேர்த்திக்கடன்களும்

இயல் - 5

நம்பிக்கைகளும் நேர்த்திக்கடன்களும்

தமிழ்நாடு அரசின் இலச்சினையாகத் திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயில் ராசகோபுரம் திகழ்கின்றது. பெரியாழ்வாரும் அவரின் வளர்ப்பு மகளான ஆண்டாளும் அவதரித்த ஊர் திருவில்லிபுத்தூர். இவ்வட்டாரச் சிறு தெய்வ வழிபாட்டில் காணப்படும் நம்பிக்கைகள், நேர்த்திக் கடன்கள் போன்றவற்றை ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

நம்பிக்கைகள்

மக்கள் தன் துன்பங்களை இறைவனிடம் விண்ணப்பித்தால் அத்துன்பங்கள் நீங்கி உய்ய வழிகிட்டும் என நம்புகின்றனர். அதற்கான வழியை இறைவன் அமைத்துக் கொடுப்பான் என்னும் நம்பிக்கையில்தான் மக்கள் தெய்வத்தை வணங்குகின்றனர். மனிதனின் மூன்றாவது கை நம்பிக்கை. நம்பிக்கை இல்லையேல் வாழக்கையே இல்லை எனலாம். "வழிபாடு", பழக்கவழக்கங்கள் சடங்குகள் முதலியன நம்பிக்கையின் அடிப்படையிலேயே அமைகின்றனர் என்பர்.(1)

"சிற்றூர் மக்களுடைய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்களுடன் மிகுந்த தொடர்பு உடையனவாய் இருக்கின்றன. மக்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட பட்டறிவின் காரணமாக இச் செயலைச் செய்தல் தகும், இச்செயலைச் செய்தல் தகாது என உணர்ந்தனர். இவ்வெண்ணமே பிற்காலத்தில் நம்பிக்கையாகவும், வழக்கமாகவும் மாறிவிட்டது. ஆயினும் இத்தகைய நம்பிக்கைகள் என்று தோற்றம் கொண்டன என எவராலும் கூற இயலாது. இன்றைய நாகரிக மனிதனிடம் காணப்படும் பல நம்பிக்கைகள் நாகரிகமற்ற பழங்குடி மக்களிடமும் காணப்படுகின்றன"(2) என்கின்றனர். இந்நம்பிக்கையானது சமூக அமைப்பு, சமயம், சகுனங்கள்

ஆகியவற்றோடும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. சமயத்தின் மீது மக்கள் கொண்ட நம்பிக்கைக்கு அவர்கள் கூறும் காரணம் உண்மையாகவும் இருக்கலாம். பொய்யாகவும் கூட இருக்கலாம். ஆயினும் அவர்கட்குத் தெய்வத்தின் மீதுள்ள நம்பிக்கை மட்டும் உண்மையானது ஆகும்.

> "அன்று தொட்டுப் பாண்டிய நாடு மழைவறங் கூர்ந்து
> வறுமை யெய்தி வெப்பு நோயுங் குருவுந் தொடரக்
> கொற்கையிலிருந்த வெற்றி வேற் செழியன் நங்கைக்குப்
> பொற் கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வி
> யால் விழாவொடு சாந்தி செய்ய நாடு மலிய மழை
> பெய்து நோயும் துன்பமும் நீங்கியது"[3]

இதனால் சங்ககாலந் தொட்டு வழிபாட்டுணர்வு, சாந்தி செய்தல், பலன் பெறுதல், பலியிடுதல் போன்றவை பண்டைக் காலத்திலேயே இடம்பெற்றுள்ளது.

"நமது நாடு தெய்வ நம்பிக்கை மிகுந்த நாடு, குழந்தைப் பேறு இல்லாத மக்கள் தெய்வத்தை வணங்கினால் அப்பேறு கிட்டும் என நம்புகின்றனர். தங்கட்குத் துன்பம் நேருங்காலைத் தெய்வத்திடம் தன் துன்பத்தை முறையிட்டுப், பால், தேன் போன்ற பொருட்களைக் கொண்டு வந்து தெய்வ உருவத்தை வழிபாடு செய்தால் துன்பம் நீங்கும் என நம்பிக்கை கொண்டுள்ளனர். பால் தானம் செய்தால் குழந்தை பிறக்கும். பிச்சைக்கு வந்தோரைப் புறக்கணித்தால் குழந்தைப் பேறு இன்றிப் போகும் என்னும் நம்பிக்கை உள்ளது."[4]

"சமூகத்தின் பண்பாட்டு மரபினை அறிவிக்க வல்லது அச்சமுதாயத்தின் நம்பிக்கைகளேயாகும். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டுச் சமுதாயத்தில் பாதுகாக்கப்படுகின்றன. இந்நம்பிக்கைள் மரபுவழியில் காலம் காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்குப் பரவி வருகின்றனர் என்பர்."[5]

''ஒரு சமுதாயத்தின் நம்பிக்கைகளைக் கொண்டு அச்சமுதாயத்தின் அறிவுத்திறனை அளவிட்டுக் கூற இயலும். சிந்தனை வளர்ச்சி மிகுச் சமுதாயத்தில் நம்பிக்கைள் குறைவாகவும் சிந்தனைத் திறன் குறைவாக உள்ள சமுதாயத்தில் நம்பிக்கைகள் மிகுதியாகவும் உள்ளன. ஒரு வளர்ச்சி அடைந்த மனிதனிடம் பத்தாயிரக்கணக்கான நம்பிக்கைகளும் நூற்றுக்கணக்கான வழக்கங்களும் எண்ணிக்கைக்கு உட்பட்ட சில குறிக்கோள்களும் இருப்பதாகச் சமூக அறிவியல் கலைக் களஞ்சியம் கூறுகின்றது.''[6]

''திருவிழாவின் போது பூசாரியின் மேல் தெய் அருள் இரங்கி நேர்த்திக் கடனுக்காக வெட்டப்பட்ட ஆடுகளின் இரத்தத்தை பூசாரி குடித்துக் கொண்டே இருப்பார். பூசாரியின் வழியாகப் பலியிடப்படும் இரத்தத்தைத் தெய்வம் ஏற்றுக் கொள்வதாக நம்புகின்றனர்.''[7] ''பலியிடப்படும் ஆடுகள் தலை ஆடாக இருந்தால் நல்லது. மேலும் உடல் ஒச்சமில்லாமல் (குறை) இருத்தல் வேண்டும். ஒரே நிறமுடைய ஆடுகளைப் பலி கொடுத்தால் நினைத்தக் காரியம் நடக்கும். வழிபாட்டுச் செயல்கள் நம்பிக்கை அடிப்படையில் நிகழ்கின்றன. வழிபாட்டு முறையில் பலி முறைக்குச் சிறப்பிடம் உண்டு.''[8]

''தமிழ்நாட்டு மக்களிடையே தெய்வ நம்பிக்கையாக இருப்பவை, 1. சத்தியம் 2. பலித்திடும். 3. தகடுவைத்தல் 4. தொழுதால் துன்பம் நீங்கும் 5. பிள்ளைவரம் 6. தீ மிதித்தல் 7. இரத்தம் குடித்தல் 8. மஞ்சள் நீராடல், 9. மயானம் செல்லல் 10. சாட்டையால் அடித்தல் 11. மழை வருமென்றால் வரும். 12. நோய்கள் நீங்கும் 13. பேய்கள் விலகும் 14. நல்ல பலன் உண்டாகும்.''[9]

சிறு தெய்வங்கள் கதைகள், பழமொழிகள், பாடல்கள் நம்பிக்கைகள் என்று ஏராளமான வழக்காறுகளைக் கொண்டு விளங்குகின்றன. தெய்வங்கள் மனிதர்களாய்த் தோன்றி வாழ்ந்து மாண்ட கதை, பழி தீர்த்த கதை தெய்வம் தற்போதைய

இருப்பிடத்தில் வந்து அமர்ந்த கதை, அதன் அதீதச் செயல்கள் என்று தெய்வக் கதைகள் நிறைந்திருக்கும். கதைகளில்லாத சிறு தெய்வங்களே இல்லை. இக்கதைகள் அனைத்தும் நம்பிக்கையின் அடிப்படையில் தோற்றம் பெற்று வழிவழியாக மக்களின் வாய் மொழியாக வழங்கப்பட்டு வருகின்றன என்பன நோக்கத்தக்கன.

திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் தெய்வ நம்பிக்கை

மாரியம்மன், காளியம்மனை வணங்கினால் வெப்பத்தால் ஏற்படும் அம்மை, வாந்தி பேதி போன்ற நோய்கள் ஏற்படாது என்னும் நம்பிக்கைகள் திருவில்லிபுத்தூர் வட்டார மக்களிடம் மிகுதியாக உள்ளன. முத்தாலம்மனை விழா முடிவில் தடியால் அடித்து நொறுக்கினால் ஊருக்கு நன்மையும், நொறுக்க வில்லையானால் ஊருக்குத் தீமையும் ஏற்படும். அம்மன் உருவம் உடைந்து விழுகின்ற பகுதியில் விளைச்சல் பெருகும் என நம்புகின்றனர். மேலும் அம்மனின் கண் மலர் எங்கு விழுகின்றதோ அவ்விடமானது பஞ்சமில்லாமல் செல்வச் செழிப்பாக இருக்கும் எனவும் நம்புகின்றனர்.

“கோட்டைப்பட்டிப் பேச்சியம்மன் கோயிலில் உள்ள நாகம் கோயிலுக்கு முறை தவறி வருபவரை அச்சுறுத்தும். ஆயினும் எவரையும் கடித்ததாக நிகழ்ச்சி இல்லை. எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைக் கூறுவர். வன்னியம்பட்டி என்னும் ஊரிலிருந்து சிலர் பேச்சியம்மனைத் தரிசிக்க வந்திருக்கின்றனர். அவர்கள் பூசாரியை அழைத்துப் பூசை செய்யாமல் தாங்களே பூசை செய்து கொள்ளலாம் என எண்ணியிருக்கின்றனர். அதன்படிப் பொங்கலிட்ட பின் கோயிலுக்குள் நுழையும் பொழுது நாகம் தோன்றி எச்சரித்து இருக்கின்றது. பின் பூசாரியை அழைத்துப் பூசை செய்து அம்மன் அருள் பெற்றுச் சென்றிருக்கின்றனர். இது போன்று பல நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. கோயில்களில் பலியிடப்படும் ஆடு துடிக்க வேண்டும் துடிக்கவில்லையாயின் துன்பம் நேரும் என நம்புகின்றனர்.”[10] என நம்பிக்கைகள் பல வழக்கில் இருக்கின்றன.

திருமலைப் பேச்சிக் கோயிலில் நாகத்திற்குச் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமை பால், முட்டை வைத்து வணங்கினால் நாகதோசம் நீங்கும் என நம்புகின்றனர். அவ்வாறு நம்பிக்கை உடையவர்கள் வேண்டுதலை நிறைவேற்ற மறந்தால் அம்மன் பாம்பாகக் கனவில் வந்து காட்சியளிப்பதாகக் கூறுகின்றார்கள்.

தேவி கருமாரியம்மன் பிள்ளைவரம் கொடுப்பதாக மக்கள் நம்புகின்றனர். கற்பகரக்சாம்பிக்கையை நேரில் வணங்க முடியாதவர்கள் இராமலிங்கபுரத்தில் உள்ள தேவி கருமாரியம்மனை வணங்கினால் பிள்ளைவரம் கிடைக்கும் என நம்புகின்றனர். உலகத்தில் மனிதப் பிறப்புக்கு அடையாளமாகப் பிரம்மனின் பெருமையைக் கூறுகின்ற புராணத்தைப்போல். பூலோகத்தில் தேவி கருமாரியம்மனைக் கூறுகின்றனர்.

அம்மச்சியார் அம்மன் கோயிலில் பிள்ளைவரம் கிடைத்த பிறகு தனது வேண்டுதல்களை நிறைவேற்றுவார்கள். குழந்தை ஒரு தாய்க்குச் செய்ய வேண்டிய நன்றிக் கடனாக விளங்குகின்றார். குழந்தையைப் பெற்றெடுப்பவள் மட்டும் தான் அக்குழந்தைக்குத் தாயாக இருக்க முடியும். ஆனால் உலகத்திலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் தாயாக விளங்கியதால்தான் அம்மச்சியார் என்ற பெயர் பெற்றதாக நம்புகின்றனர். நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்கக்கூடிய பெண்களுக்கு வளைகாப்பு (சீமந்தம்) நடத்தும் போது இவ்வம்மனை வேண்டி வளையல் எடுத்து வைப்பார்கள். பின்பு குழந்தை பிறந்தவுடன் அதனை இவ்வம்மனுக்குக் காணிக்கையாகச் சாற்றுகின்றனர்.

தங்கமலை காளியம்மன் கோவிலிலுள்ள காளியம்மனுக்கு வருடத்தில் ஒரு முறை விளைகின்ற நவதானியங்களைப் படைக்கின்றனர். அவ்வாறு படைப்பதற்கு முன்னர் இவ்வம்மனை வணங்கி வயலில் விதையினை விதைத்தால் நன்கு விளையும் என நம்புகின்றனர். பின்பு நன்கு விளைந்த தானியங்களை முதலில் படைத்து நன்றிக் கடன் செலுத்துகின்றனர். தங்கமலை

காளியம்மனை வழிபடாமல் விதையினை விதைத்தால் சேதம் ஏற்படும் என தட்டான்குளம் மக்கள் நம்புகின்றனர்.

வடபத்ர காளியம்மன் கோவிலில் கடா, கோழி போன்றவற்றைக் காவு கொடுக்கும்போது அவை சரியாக வெட்டுப்படவில்லை என்றால் தங்கள் குடும்பத்துக்குத் தீங்கு விளையும் என நம்புகின்றனர். ஆகையால் அம்மனுக்குக் காவு கொடுக்கின்ற கடா, கோழியினைத் தீட்டுப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு தீட்டுப்பட்டவற்றைக் காவு கொடுத்தால் சரியாக வெட்டுப்படாமல் கீழே விழும்.

"சந்தன மாரியம்மன், பெரிய மாரியம்மன் போன்ற கோவிலில் பூக்குழி இறங்கும் சடங்கு உள்ளது. அம்மன் வழிபாட்டு முறையில் பூக்குழி இறங்கும் வழக்கம், பக்தியுள்ளவர்களுக்கு நெருப்புச் சுடாமல் பூப்போல் குளிர்ச்சியைத் தரும் என்ற பொருளில் பூக்குழியென்ற சொல்லாட்சி அமைகிறது. தீப்பிழப்பில் நடந்து செல்லுதல் வழிபாட்டு மரபின் முறையாகும். பக்தியுள்ளவர்களின் தெய்வத்தின் கருணையும் தீயென்ற இயற்கை சக்தியின் வழியாக வெளிப்படுவதைக் காண முடிகிறது. இவை பெரும்பாலும் பெண் தெய்வ வழிபாட்டிலே மிகுதியாக இடம் பெறும்."(11)

தமிழ்நாட்டில் மாரியம்மன் கோவில் இல்லாத ஊர்களே இல்லை என்று கூறலாம். சில வட்டராவிகளில் ஆயிரங் கண் பானை, கயிறு குத்துதல், கரகம் எடுத்தல் போன்றவை மட்டும் தான் காணப்படும். "திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் உள்ள மாரியம்மன் கோவிலில் மேற்கண்டவற்றுடன் முளைப்பாரி எடுத்தல், கோடு கீறி வணங்குதல் (கும்பிடுதல்) போன்றவையும் காணப்படுகின்றன. இதில் கோடு கீறி கும்பிடுதல் என்பது மாரியம்மன் கோவிலில் இருந்து அதன் எல்லை வரை கோடு கீறி அதனை வணங்கிச் செல்வார்கள். அவ்வாறு அவர்கள் செல்லும்போது அந்தக் கோட்டிற்கு முன்னால் நின்றே வணங்க வேண்டும். அப்படி வணங்காவிட்டால் கெடுதல் ஏற்படும் என்று நம்புகின்றனர். ஒரு குட்டி ஆட்டினை ஓட விட்டு

அதனை அடிப்பார்கள். அதனை அடிக்கும்போது ஒரே அடியில் அது இறந்துவிடும். அதனை ஒரு கடா அடித்தல் என்பர். அதாவது அம்மனின் எல்லைக் கோட்டைக்குள் அதனை அடித்து விட வேண்டும் இதனைப் பார்ப்பதற்கு மக்கள் திரளாக வந்து கண்டு ஆனந்தம் அடைவார்கள். அக்குட்டி அடிபடவில்லை என்றால் இவ்வூருக்குத் தீங்கு ஏற்படும் என்று மக்கள் நம்புகின்றனர்.’’[12]

காளியம்மன், முத்து பேச்சியம்மன், முப்பிடாரி அம்மன் வடபத்ர காளியம்மன் போன்ற கோயில்களில் தான் நினைத்த செயல் நடக்க வேண்டும் என்பதற்காக வழிபாடு நடத்துகின்றனர். இவ்வழிபாட்டின் மூலம் நல்லது நடக்கின்றது என்று இவ்வட்டார மக்கள் நம்புகின்றனர்.

‘‘சீலைக்காரி அம்மன், சேலைக்காரி முத்தம்மாள் போன்ற கோயில்களில் பொதுமக்கள் கொண்டாடாமல், குடும்ப இனத்தவர்கள் மட்டும் வழிபாடு செய்கின்றனர். வீட்டுத் தெய்வமாகிய இவ்வம்மனை அந்தக் குடும்பத்தார்கள் மட்டும் நல்ல காரியம் நடத்துவதற்கு முன்னர் இவ்வம்மனை வணங்கி வழிபாடு செய்தால் நல்லது நடக்கும் என நம்புகின்றனர்.’’[13]

துர்க்கை அம்மன் கோயிலில் திருமணம் ஆன மற்றும் ஆகாத பெண்கள் விளக்கு வழிபாடு செய்தால் திருமணம் நிகழ்வதோடு மாங்கல்யம் நிலைத்து நிற்கும் என நம்புகின்றனர். விளக்கு வழிபாட்டினை இராகுக் காலத்தில் செய்தால் நிச்சயம் நினைத்த காரியம் நடக்கும் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.

‘‘அங்காள பரமேஸ்வரி கோயிலில் குழந்தையில்லா பெண்கள் அக்கோயிலில் உள்ள மரத்தில் தொட்டில் கட்டினால் விரைவில் குழந்தை பாக்யம் கிடைக்கும் என நம்புகின்றனர். சிலருக்கு நாகதோஷம் இருந்தால் கூட இவ்வம்மனை வழிபட்டு நாகபூஜை செய்தால் விலகும் என நம்புகின்றனர்.’’[14]

திருமணம் ஆகாத பெண்கள் ஏழு வெள்ளிக்கிழமை ஈரப் புடவையுடன் அம்மனை வலம் வந்து தீபம் ஏற்றினால் விரைவில்

திருமணம் நடக்கும் என நம்புகின்றனர். இதே போன்று வைத்திலிங்கபுரம் என்ற ஊரில் உள்ள முத்துமாரியம்மனை வழிபட்டால் குழந்தை பாக்யம் உண்டாகும் என நம்புகின்றனர்.

"செவல் பேமலையம்மன் கோயிலில் வழிபட்டார் தீர்க்க முடியாத நோய்களை எல்லாம் இவ்வம்மன் தீர்த்து வைப்பதாக நம்புகின்றனர். மேற்குத் தொடர்ச்சி மழையில் தோன்றி பின்னர் இவ்வட்டாரத்தில் சுயம்புவாகக் காட்சியளித்ததால், இக்கோயிலில் உள்ள தீர்த்தத்தை அருந்தினால் நோயெல்லாம் தீரும் என நம்புகின்றனர்."(15)

"பாம்பலம்மாள் கோவிலில் பாம்பு கடிக்குக் கோயிலிலுள்ள கிணற்று நீரை எடுத்து, அதனைத் தீர்த்தமாக நினைத்து, பூசாரி அரவம் தீண்டப்பட்டவருக்குக் கொடுக்கின்றார். பின்னர் மஞ்சள் கலந்த காப்பினைத் தீர்த்தத்தோடு சேர்த்து நஞ்சு தீண்டப்பட்டவரின் தலையில் தேய்த்து விடுகின்றார்கள். இக்கோயிலிலுள்ள தீர்த்தத்தினை ஒரு வாரம் சாப்பிட்டால் நஞ்சுக்கடி முற்றிலும் குணமாகின்றது. பாம்புக் கடியினைத் தவிர வண்டு கடியினால் ஏற்படும் படை, பத்து, நமச்சல் போன்றவற்றிற்கும் தீர்த்தம் மற்றும் மஞ்சள் காப்பினைக் கொடுக்கின்றனர். நஞ்சுக்கடி நாள் பட்டதாக இருந்தால் அக்கினிச் சட்டியில் உள்ள சரியினை எடுத்து அதனோடு வேப்பிலை சிலவற்றையும் சேர்த்து தண்ணீர் விட்டு அரைத்துப் பின்னர் அதனைத் தலையில் தேய்த்துக் குளித்தால் நஞ்சுக்கடி நீங்கும் என நம்புகின்றனர்."(16)

"பேமலையம்மன் கோவிலில் தீப்பந்தம் வைக்கப்பட்ட கடா எழுந்திருப்பதில்லை. மேலும் அக்கோயிலில் வெட்டப்பட்ட கடா துடிப்பதும் இல்லை. பிற கோயில்களில் கடா துடிக்கவில்லையாயின் கெட்ட சகுனம் எனக் கூறுவார்கள். இக்கோயிலில் மட்டும் துடிப்பது இல்லை என நம்புகின்றனர். அவை வெட்டுப்படும் போது துடிக்கவும் கூடாது. வயிறு அறுக்கப்பட்ட ஆடு உடனே இறப்பதில்லை என்பது இவ்வட்டார மக்களின் நம்பிக்கையாகும்.

பாதாளபேச்சியம்மன் தன்னை நம்புகிறவர்களுக்கு வெள்ளை உருவமாகவும், நாய் உருவிலும் வந்து, பின்னர் நடக்கப் போவதை முன் கூட்டியே அறிவுறுத்திப் போவாராம். நோயைக் குணப்படுத்த மருத்துவச்சியாக இருக்கிறாள் பாதாளப் பேச்சியம்மன், உடம்பின் எந்தப்பகுதியில் குறை இருக்கிறதோ அந்தக் குறை போக்க வேண்டுபவர்கள் எலுமிச்சம் பழத்தை வாங்கி வந்து பேச்சியின் உடம்பில் வைத்துப் பூஜை செய்து எடுத்துச் சென்று அந்தப் பழத்தை நறுக்கி சாறு பிழிந்து குடித்தால் குறைகள் நீங்குவதாக நம்பிக்கை இருக்கிறது.''[17]

''மறவன்குளம் கொன்றையாண்டி அய்யனார் கோயிலில் பேச்சியம்மன் கோயிலுக்கும் புளிய மரத்தடிக்கும் இடையே புற்று உள்ளது. இப்புற்றினை முழுமையும் நீக்கினாலும் அதே இடத்தில் மீண்டும் புற்று உருவாகின்றது. இடம் மாறி உருவானது இல்லை. இதனை அய்யனார் செயல் என மக்கள் நம்புகின்றனர்.''[18]

''நிறைமடை அய்யனார் கோவிலில் நினைத்த வினைகள் நல்லபடியாக நடக்கும் என நம்புகின்றனர். காரணம் இக் கோவிலில் வேண்டுதல் நிறைவேற்றுவதற்காகக் குதிரைச் சாற்றுதல் வழக்கம் இருந்தது. இக்குதிரையினைச் செய்யும் போது அவை நல்லபடியாக அமைந்தால் நல்லது நடக்கும் என மக்கள் நம்புகின்றனர்.''[19]

கற்குவேல் அய்யனார் கோயிலில் கடா (ஆடு) பலிகொடுக்கும் போது ஒரே வெட்டில் தலை கீழே விழ வேண்டும். அப்படி இல்லையென்றால் அதைக் கெட்ட சகுனமாகக் கருதுகின்றார்கள். எனவே கடா (ஆடு) வினை வெட்டும் போது நல்ல சகுனம் பார்த்து வெட்டுவார்கள். இல்லையென்றால் தீங்கு விளையும் என்பது இவ்வட்டார மக்களின் நம்பிக்கையாகும்.

சுடலை வீரன் கோயிலிலுள்ள சத்தியக் கம்பின் முன் கொடுக்கல் வாங்கலில் குழப்பம், பிற பிரச்சனை உள்ளவர்கள் சத்தியம் செய்கின்றனர். பொய் சத்தியம் செய்தால் ஒரு வார காலத்தில் உறுதியாகத் தெய்வ தண்டனை கிட்டும் என நம்புகின்றனர்.

''புதியவன்சாமி கோவிலுக்கு முன்பாகப் பிற கோயில்களில் பலியிட வேண்டிய ஆடு, கோழி, பன்றி போன்றவற்றைக் கொண்டு செல்லுதல் கூடாது. மீறிக் கொண்டு சென்றால் அவை கோயிலைத் தாண்டியவுடன் இறந்து விடும். எனவே தான் சுடலை வீரனுக்குப் பலியிட வேண்டிய பன்றியை இராசபாளையத்திலிருந்து சுற்று வழியில் கொண்டு வருகின்றனர் என்பர். பிற விலங்கினங்கள் சென்றால் அவற்றிற்கு எவ்வித தீங்கும் ஏற்டுவதில்லை.''[20] என்கின்றனர்.

மதுரை வீரனை நம்பியவரை அவர் எப்பொழுதும் கைவிடுவதில்லை என நம்புகின்றனர். இக்கோயில் பொருளாளர் சேவுகனின் வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்று இதனைப் புலப்படுத்தும் என்பர். சேவுகன் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநராகப் பணியாற்றி வருகின்றார். 1981-ஆம் ஆண்டு பதினைந்து தினங்களுக்குள் இரண்டு விபத்துக்களுக்கு உள்ளாகி விட்டார். வழக்குத் தொடரப்பட்டு வழக்கும் மிகவும் கடுமையாகி விட்டது. வழக்குரைஞர் எவரும் இவருக்கு வாதாட முன்வரவில்லை. இறுதியாக மதுரை வீரனை வணங்கி வேண்டவே ஒரு வழக்குரைஞர் வாதாட ஒப்புக் கொண்டிருக்கிறார். வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்புச் சொல்லும் நிலையில் சேவுகன் தாய் மீது அருள் வந்து "பட்டாணியும் மதுரை வீரனும் பல இடப்பக்கமாக இருந்து பாதுகாப்பர். கவலை கொள்ளாதே"[21] என கூறியிருக்கின்றார். வழக்குச் சேவுகனுக்குச் சாதகமாக அமைந்தது. அன்று முதல் இன்று வரை எவ்வித விபத்தும் இன்றி வண்டி ஓட்டி இரண்டாண்டுகள் அதற்கான சிறப்புப் பரிசு பெற்றதாகவும் கூறுகிறார்.

தொற்று நோய் ஏற்பட்ட காலங்களில் மருளாயி சாமி ஆடி வீதியில் வந்தால் மதுரை வீரன் அந்நோயின்றிக் காப்பார் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது.

''முனியாண்டி கோவிலில் இருக்கும் புளியமரம் மிகுதியாக பூக்கும். ஆனால் காய்ப்பதே இல்லை. காரணம் காய் காய்த்தால்

மக்கள் அம்மரத்தில் ஏறுவர். கால்படும் பிறர் கால் தம்மீது படாதிருக்கவே முனியாண்டி இவ்வாறு செய்கின்றார் என நம்பிக்கை உள்ளது. குறவன் கோட்டை கண்மாயும் திருமலைப் பேரிக் கண்மாயும் அடுத்தடுத்து உள்ளவை. திருமலைபேரிக் கண்மாயில் மிகுதியாக அல்லி மலரும். ஆனால் அதனை ஒட்டியுள்ள குறவன் கோட்டைக் கண்மாயில் ஓர் அல்லி மலர் கூட மலர்வதில்லை. ஏனெனில் மலர் பறிக்கும் பொருட்டுச் சுத்தம் இல்லாத பெண்கள் அங்கு வந்து தண்டனை பெறலாகாது என்பதற்குத்தான் என்கின்றனர்.''[22]

தூண்டில் கருப்பசாமி உண்மைக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றவர்களை மட்டும் தண்டிக்காது. பொய் சொல்லியோ அல்லது தீங்கு செய்ய நினைப்பவர்களையோ தண்டித்து விடும் என்று நம்புகின்றார்கள். ஒருவர் சொன்ன பொய்யானது அவர் பலி கொடுக்கின்ற ஆட்டினை வெட்டும் போது சரியாக வெட்டுப்பட வில்லையென்றால்; தான் செய்தது குற்றம் என்று நம்புகின்றார்.

பித்தடியான் மனநிலை சரியில்லாதவர்களைக் குணப்படுத்துகின்ற தெய்வமாக உள்ளது. இத்தெய்வத்தை வணங்கி அரிவாள் சாற்றுவதாக நினைத்துக் (வேண்டிக்) கொண்டால் விரைவில் குணமாகும் என்பது மக்களின் நம்பிக்கையாகும். இத்தெய்வத்தை வணங்கும் போது எந்த தீய சக்தியும் தன்னை நெருங்காது என நம்புகின்றார்.

இரணவீரன் கோயிலில் வந்து வழிபாடு செய்கின்றவர்கள் இராணுவத்திற்கும் தங்கள் மகனோ அல்லது கணவனோ எந்தவித ஆபத்தில்லாமல் நல்லபடியாக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றனர். வருடத்திற்கு ஒருமுறை வந்து இக்கோயிலில் வழிபாடு செய்தால் அத்தெய்வமானது அவர்களுக்குப் பாதுகாவலராக இருப்பதாக நம்புகின்றனர்.

இருளப்பசாமி முன் ஒருவர்தான் செய்த தவறை மறைத்து தனக்குத் துன்பம் நேர்ந்து விட்டதே என்று சொன்னால் அவர்களை

அத்தெய்வமானது அவர்களைப் பார்த்து நீ செய்த தவறை தான் கூறுவதாகவும் உனக்கு மன்னிப்பு அளித்து நல்வழிப்படுத்துவதாகவும் நம்புகின்றனர்.

வேடப்பசாமி மரப்பெட்டியிலிருந்து வந்த காரணத்தினால் மாத்தொழிலைச் செய்கின்றவர்கள் முதலில் இத்தெய்வத்தை வணங்கி விட்டுப் பின்னர் தொழிலை ஆரம்பித்தால் நல்லபடியாக நடக்கும் என நம்புகின்றனர். பூ கட்டும் தொழிலைச் செய்கின்றவர்களும் இத்தெய்வத்திற்கு முதலில் பூ போட்டு வணங்கிய பின்னர் தொழிலை ஆரம்பிக்கின்றார்கள்.

"வடக்கத்தியான், பொன் இருளப்பசாமி கோயில்களில் வணங்கினால் நினைத்த காரியம் நடந்து விடும் என நம்புகின்றனர். கோட்டைமலையான், சங்கிலி வீரப்பன், கோட்டைக் கருப்பசாமி போன்ற கோயில்களில் குடும்பம் மகிழ்ச்சியாகவும் எந்தவிதப் பிரச்சினை இல்லாமல் இருப்பதற்காகவும் இத்தெய்வத்தை வணங்கினால் நல்லது நடக்கும் என நம்புகின்றனர்."[23]

"சுடலை மாடன் கோவிலில் வேட்டைக்குச் செல்லும்போது எதிரில் யாரும் வரக்கூடாது. அப்படி வந்தால் தீங்கு ஏற்படும் என்பது இப்பகுதி மக்களின் நம்பிக்கையாகும். வேட்டைக்குச் செல்லும்போது சிலர் தனியாகவும். சிலர் கணியானுடனும் வேட்டைக்குச் செல்வார்கள். வேட்டைக்குச் சென்று வந்த பின் அருள் வாக்குச் சொல்லும் நிகழ்ச்சியில் அனைத்து மக்களும் சுடலைமாடன் சாமியிடம் அருள் வாக்குக் கேட்டு விழதி வாங்கிச் சென்றால் இத்தெய்வம் சொன்னது நடக்கும் என நம்புகின்றனர்."[24]

செக்கடி முனியாண்டி, கரையடி முனியாண்டியிடம் வேண்டிக் கொண்டால் பிணி(நோய்)யை நீக்குவதாகவும் தீய சக்தியை விரட்டுவதாகவும் நம்புகின்றனர். இதனைச் தொத்து மந்திரம் என்றும் கூறுகின்றார்கள். ஒரு கன்னிப் பெண்ணின் மீது வருகின்ற தீய சக்தியை அகற்றுவதற்கு இக்கோயிலுக்கு வந்தால் பிணி நீங்கும் என்பது நம்பிக்கையாகும்.

“கருப்பசாமி ஊரின் எல்லையைக் காக்கின்ற தெய்வமாகக் கருதப்படுகின்றது. ஊருக்குள் எந்தவிதத் தீய சக்தியும் அண்டாமல் தங்களைக் காப்பாற்றும் எனவும் நம்புகின்றனர். ஊரின் எல்லைக் காக்கின்ற தெய்வமாகக் கருதுவது மக்களின் நம்பிக்கையாகும்.”[25]

நேர்த்திக் கடன்:

நாட்டுப்புறத் தெய்வங்களில் பல இறந்தவர்களின் சமாதிகள் என்பதால் இறந்தவர்கட்குப் பிரியமான பொருள்கள் படைக்கப்படுவது பொது மரபாகும். கீழ்க்கண்ட பாடலில் படையல் பொருட்களை,

“போதலைக் கூட்டாற்றுக் கருப்பனின்
புந்தி குளிர்ந்திடவே
கோதிலாக் குட்டி வெட்டிச்
சாராயம் ரொட்டி
கும்பிட்டு வையுங்கடா”[26]

எனப் பாடுகின்றனர். இவ்வாறு தெய்வங்களுக்கு நேர்த்திக் கடன் செலுத்துவதைப் படையல் என்றும் கூறுவர். “நேர்த்திக் கடன் மக்களுக்குத் துன்பம் ஏற்படும் பொழுது அல்லது நோய் ஏற்படும் பொழுது தெய்வத்தின் மீது கொண்ட நம்பிக்கை காரணமாகச் செய்யப்படும். தெய்வத்தை வணங்கும் பொழுது துன்பம், நோய் முதலியவற்றைக் கூறி அதை நீக்கினால் சில கடன்களைச் செய்வதாக வேண்டிக் கொள்கின்றனர். அதுவே நேர்த்திக் கடன் எனப்படும். தங்களின் துன்ப நிவர்த்திக்காகச் செய்யப்படுவதால் நிவர்த்திக் கடன் எனவும் தாங்கள் நேர்ந்து கொண்டதால் நேர்த்திக் கடன் எனவும் வழங்கப்படுகின்றன. மக்கள் தங்கள் வாழ்வில் இறப்புக்களையும் குறைகளையும் காணுகையில் அவற்றைப் போக்குமாறு தெய்வத்திடம் வேண்டுவர். அத்தெய்வங்கள் குறைகளைத் தீர்த்தால் அதற்கு ஈடாகத் தான் செய்வதாகக் கூறும் கடன்களை நிவர்த்திக் கடன் எனக் குறிப்பிடுவர்.”[27] இவ்வாறு நேர்த்திக் கடன் செய்வது மக்கள் வழக்கமாக இருக்கின்றது. “வழக்கம் என்பது குறிப்பிட்ட

நிலப்பகுதியில் வழங்கும் எழுதாச் சட்டம்[28] எனக் கலைக் களஞ்சியம் கூறுகின்றது.

இந்த நேர்த்திக் கடன் மக்களின் வாய்ப்பு வசதிகளுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளப்படுகிறது. நேர்த்திக் கடனை மக்கள் தவறாது செய்து விடுவர். செய்யவில்லையாயின் தெய்வ தண்டனை கிட்டும் என நம்புகின்றனர்.

நேர்த்திக் கடன்கள் செலுத்துவதில் பெருந்தெய்வத்திற்கும் சிறு தெய்வத்திற்கும் வேறுபாடுகள் உள்ளன. பெருந்தெய்வக் கோயில்களில் முடியிறக்குதல், பால்குடம் எடுத்தல், காவடி எடுத்தல், பட்டெடுத்துச் சாற்றுதல், மாடுகளைக் காணிக்கையாக்குதல் தங்கத் தேர் வடம் பிடித்து இழுத்தல் போன்றவை நேர்த்திக் கடன்களாக உள்ளன.

எது நடந்தாலும் அது தெய்வங்களின் மூலமே நடைபெறுகிறது என்று நம்பும் வழக்கம் கிராம மக்களிடம் மிகுதியாக இருந்து வருகிறது. இதனால் பலவிதமான வேண்டுதலை இறைவன் முன் வைக்கின்றனர். அவ்வேண்டுதல் நிறைவேறினால் அதற்குப் பிரதிபலனாக நேர்த்திக் கடன் செலுத்துகின்றனர்.

நம்பிக்கைகளுக்கும், நேர்த்திக் கடன்களுக்கும் மிகுந்த தொடர்புண்டு. தெய்வங்களின் மீது கொண்டுள்ள நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே நேர்த்திக் கடன்களும் அளிக்கப்படுகின்றன.

1. உடலை வருத்தும் நேர்த்திக் கடன்கள்
2. பொருளாக அளிக்கப்படும் நேர்த்திக் கடன்கள்
3. உயிர்ப் பலியாக அளிக்கப்படும் நேர்த்திக் கடன்கள்

என்றவாறு நேர்த்திக் கடன்களைப் பலவாறு பகுத்துக் காண முடியும.

ஆண் தெய்வங்களுக்கான நேர்த்திக் கடன்கள் வன்மைத் தன்மை உடையவையாகவும், பெண் தெய்வத்திற்கான நேர்த்திக் கடன்கள் மென்மை தன்மை உடையவையாகவும் அமைந்திருப்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

சிறு தெய்வக் கோயில்களில் பலியிடுதல். பொங்கலிடுதல், கயிறு குத்துதல், ஆயிரங்கண் பானை எடுத்தல், முளைப்பாரி எடுத்தல், அக்கினிச் சட்டி எடுத்தல், உப்பிடுதல், குழிப்பிள்ளை, தாண்டுதல், கூழ்க்காய்ச்சி ஊற்றுதல், தொட்டில் கட்டிப் போடுதல், குதிரையெடுப்பு, யானைச் சிலை வைத்தல், தீச்சட்டி எடுத்தல், தீமிதித்தல் (பூக்குழி), சூலாயுதம், அம்மனின் பாதம் உண்டியல் போன்றவற்றைச் செலுத்துதல், மாவிளக்கு எடுத்தல், அம்மனின் உருவம் செலுத்துதல், பால் குடம் எடுத்தல், சூலாடு குத்துதல். செரா குத்துதல். பட்டாடை செலுத்துதல். அன்னதானம் செய்தல். அரிவாள் சாற்றுதல். கரகம் எடுத்தல். கோடு கீறி கும்பிடுதல், நெய்விளக்கு ஏற்றுதல், தெய்வப் பொருட்கள் படையல் போன்றவை இவ்வட்டாரக் கோயில்களில் செலுத்தும் நேர்த்திக்கடன்கள் ஆகும்.

பலியிடுதல்:

"பெண் விலங்குகளையோ, பறவைகளையோ பலி கொடுக்கும் வழக்கம் வழிபாட்டு நெறிகளில் இல்லை. இரத்தப் பலியானது ஆண் விலங்குகளையும், பறவைகளையும் குறிக்கும். காரணம் உயிர் பெருக்கத்திற்குக் காரணமாகவுள்ள பெண் உயிர்களைப் பலி கொடுத்தால் தெய்வம் தண்டிக்கும் என்பது கருத்தாகும். நன்னன் என்னும் மன்னன் ஒருவன் பெண் கொலை செய்து பெரும்பழி ஏற்றதனைச் சங்க இலக்கியம் கூறுகின்றது." (23)

தங்கள் வேண்டுதலின் பொருட்டுச் சிறுதெய்வங்கட்கு ஆடு, கோழி, சேவல் முதலியவற்றைப் பலியிடுவது பலியிடுதல் எனப்படும். கோயிலின் முன் பலியிடுவர். திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் அனைத்துச் சிறு தெய்வக் கோயில்களிலும் இந்நேர்த்திக் கடன் நடைபெறுகின்றது.

முடியிறக்குதல்

முடியிறக்குதலை மக்கள் மொட்டை போடுதல் எனவும், மொட்டையடித்தல் எனவும் கூறுவர். என்னுடைய ஆணவத்தையும்,

அகங்காரத்தையும், இராசபோகத்தையும் உன் முன்னால் இறக்கி வைக்கிறேன் என்று நினைத்துக் கொண்டே மொட்டை போடுகிறார்கள்[31] என்பர் கண்ணதாசன். இம்மொட்டை போடுதல் கோயில் வேறுபாடின்றியும், வயது வேறுபாடு இன்றியும் நடைபெறுகிறது. உயிரைக் கொடுத்த சாமிக்கு மயிரைக் கொடு என்பது முதுமொழி. இதில் அறிவியல் காரணமும் உண்டு. பெரும்பான்மையான கோயில்களில் இந்நேர்த்திக்கடன் நடைபெறுகிறது.

கயிறு குத்துதல்

கயிறு குத்துதல் என்னும் இந்நேர்த்திக்கடன் மாரியம்மன், காளியம்மன் கோயில்களில் நடைபெறுகின்றது. இந்நேர்த்திக் கடனை ஆண்களே செய்கின்றனர். விழா தொடங்கிய நாள் முதல் விரதம் இருந்து விழா நாளன்று மாலையில் இக்கோயிலுக்கு வந்து அம்மனை வணங்குவர். பின் கயிறு குத்தும் இடத்திற்குச் செல்வர். கயிறு குத்துபவர் ஓர் ஊசியால் நூலைக் கோர்த்து நேர்த்திக்கடன் பட்டவரின் இரு விலாப் பகுதியிலும் ஊசியால் குத்தி அந்நூலைத் தோளில் போடுவார். ஊர்வலம் முடிந்தபின் கோயிலுக்கு வந்து அந்நூலை உருவிக் கோயிலில் போட்டு விடுவர்.

ஆயிரங்கண் பானை எடுத்தல்

ஆயிரங்கண் பானை எடுக்கும் நேர்த்திக்கடன் மாரியம்மன், காளியம்மன் கோயில்களில் நடைபெறுவதாகும். இதனைப் பெண்களே எடுத்து வருவர். ஆயிரங்கண்ணுடையாள் மாரி என்பர். அம்மனுக்கு எடுக்கப்படும் இப்பானையை ஆயிரங்கண் பானை எனக் கூறுவர். அம்மை நோயினால் பாதிக்கப்பட்டவர் இந்நேர்த்திக்கடனைச் செய்வர்.

இவ்வாயிரங்கண் பானை விழாவன்று தான் செய்யப்படும். பானை பச்சை மண்ணாலானதாகும். இதில் மிகுதியான சிறு சிறு துவாரங்கள் இருக்கும். ஆயிரம் துவாரங்கள் இருப்பதாக மக்கள்

நம்புகின்றனர். விழாவன்று இப்பானையினுள் ஓர் அகல் விளக்கு ஏற்றி வைத்து, பானையை மூடியால் மூடி, பானைக்கு மாலையிட்டுப் பெண்கள் தங்கள் தலையில் வைத்துக் கொண்டு ஊர் சுற்றி வருவர். இறுதியில் அப்பானையைக் கோயிலில் செலுத்தி விடுவர்.

முளைப்பாரி எடுத்தல்

முளைப்பாரி போட்டு விழாவன்று அதனை எடுத்து ஊர் சுற்றுதல் முளைப்பாரி எடுத்தல் எனப்படும். இம்முளைப்பாரி கோயில் திருவிழாவிற்கு ஒரு வாரம் முன்னதாகவே போடப்படும். ஒரு புது மண்பானை வாங்கி அதை இரு பகுதியாக உடைத்து அடிப்பகுதியில் சிறு துவாரங்கள் அமைத்து அதனுள் குச்சிகளைச் செருகி அதன்மேல் வைக்கோலைப் பரப்புவர். பின் ஆட்டுச் சாணம், மாட்டுச் சாணம், கரம்பை மண் ஆகியவற்றை ஒன்று சேர்த்து வைக்கோல் மீது தூவுவர். இது முளைக்குடம் எனப்படும். முளை போடுபவர் அனைவரும் ஒரே இடத்தில் தான் போட வேண்டும். எனவே அம்முளைக்குடத்தை முளைபோடும் வீட்டில் கொண்டு போய் வைத்து விடுவர். முளைபோடுவதற்கு முதல் நாளே முளையிடுவதற்கான தானியங்களை ஊற வைத்து விடுவர். முளைபோடும் அன்று அத்தானியத்தை ஓர் ஓலைக் கொட்டானில் இட்டுக் குளித்து ஈரச் சேலையுடன் முளைபோடும் வீட்டிற்குக் கொண்டு செல்வர். அங்கு வந்த அனைவரின் தானியத்தையும் ஒன்று சேர்த்துக் கலப்பர். பின் அதற்குக் கற்பூர தீபம் காட்டி வணங்கி அதனைச் சுற்றி கும்மியடிப்பர். பின் விதையை முளைக்குடத்தில் போடுவர். அப்பொழுது,

"காட்டிலே விளைந்த பண்டம்
கம்புஞ் சோளம் போடுங்கம்மா
பூமியிலே விளைஞ்ச பயிர்
புதுப் பயறு போடுங்கம்மா"(30)

எனப் பாடுவர். அவ்வாறு பேட்ட முளைப்பாரியை இருட்டறையில் வைப்பர். இதற்கு நீர் ஊற்றி வளர்ப்பவர் தீட்டு வீடுகளுக்குச் செல்லக்

கூடாது. தினமும் நீர் ஊற்றிக் கவனித்துக் கொள்வர். யாரும் அதனைப் பார்க்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஒவ்வொரு நாளும் அந்த அறை முன் பாட்டுப் பாடிக் கும்மியடிப்பர். விழாவன்று கொட்டு மேளத்துடன் முளைப்பாரியை ஊர் சுற்றி எடுத்து வருவர். தெரு முனைகளிலும் அம்மன் கோயில்களிலும் கீழே இறக்கி வைத்துக் கும்மியடிப்பர். இறுதியாகக் கோயிலுக்கு வந்தபின் அம்மனை வணங்கி முளைப்பாரியைக் கிணற்றில் போட்டு விடுவர். இதனைப் பெண்களே செய்வர். இம்முளைப்பாரி போட்டவருக்கு அம்மன் அருள் மிகுதியாகக் கிட்டும் என்பதும் அவ்வாண்டு அப்பகுதியில், நாட்டில் விளைச்சல் நன்றாக அமைந்து வளமை கிட்டும் என்னும் நம்பிக்கையில் எடுக்கின்றனர்.

"இந்த முளை வளர்த்த வருக்கோ
இல்லறமும் தான் தருவாள்
தலைப் பிள்ளையும் ஆண் பெறுவாள்
போடுங்கம்மா ஒரு குலவை
பொன்னால் சிறு குலவை"[31]

என்பதால் முளைபோடுதலின் பயனை அறியலாம். முளைப்பாரி எடுக்கின்ற நிகழ்ச்சி அம்மன் கோயிலில் மட்டும் நடைபெறும். ஆனால் இவ்வட்டாரத்தில் ஆண் தெய்வமாகிய சுந்தரசுவாமி கோயிலில் முளைப்பாரித் திருவிழாவை நடத்துகின்றார்கள். பாதாள பேச்சியம்மன் கோயிலில் இரத்தம் கலநத சோற்றினை ஒரு பருக்கைக் கூட கீழே விழாமல் உருட்டி எறிவர். விழுந்தால் அவ்வூருக்குக் கேடு வரும் என நம்புகின்றனர். பகைவர்களது இரத்தம் கலந்த சோற்றுப் பிண்டங்களால் அம்மனை வழிபட்ட செய்தியைப் பதிற்றுப்பத்து,

"நிறம் படு குருதி புறம்படின் அல்லது
மடை எதிர்கொள்ளா அஞ்சுவரு மார்பின்
கடவுள் அயிரையின் நிலைஇ"[32]

என்கிறது. இச்செயலினைக் கப்பறைப் பூசை என்றழைப்பர். இக்கோயிலில் இந்நிகழ்வானது நடைபெறும் போது யாரும் பார்க்கக் கூடாது. அவ்வாறு பார்த்தால் தீங்கு விளையும் என நம்புகின்றனர்.

அக்கினிச் சட்டி எடுத்தல்

இந்நேர்த்திக் கடன் அம்மன் கோயிலுக்கே உரியதாகும். அகன்ற வாயினை உடைய மண்சட்டியில் வேம்புமர குச்சிகளை வைத்து நெருப்பு மூட்டி அதனைக் கையில் காப்பின் மேல் வைத்துக் கொண்டு வீடு, கடை முதலிய இடங்களுக்குச் செல்வர். அவர்கள் கொடுக்கும் காணிக்கைப் பொருளைப் பெறுவர். நெருப்பு அணைந்துவிடாதவாறு அதில் அடிக்கடி நல்லெண்ணெய் ஊற்றுவர். விழா நாளன்று அக்கினிச் சட்டியையும் அவர்கள் காணிக்கையாகப் பெற்ற பொருட்களையும் கோயிலில் செலுத்தி விடுவர். இதனை இருபாலரும் செய்வர்.

உப்பிடுதல்

உப்பிடுதல் என்பது மாரியம்மன் கோயிலில் மட்டும் நடைபெறும் நேர்த்திக் கடனாகும். இவ்வட்டாரத்தில் பெரிய மாரியம்மன் கோயிலில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. அம்மை நோய் கண்டவர்க்கு அம்மன் இறங்கிய உடன் உப்பு வாங்கிக் கொட்டுவதாக நேர்ந்து கொள்வர். அம்மை இறங்கியவுடன் மூன்று நீர் விடுவர். பின்னர் தேங்காய், பழத்துடன் உப்பையும் கொண்டு வந்து தேங்காய் உடைத்து அம்மனை வழிபட்டுப் பின் உப்பை அம்மன் கோயிலில் செலுத்தி விட்டுச் செல்வர். இதுவும் இருபாலரும் செய்யும் நேர்த்திக் கடனாகும்.

பொங்கலிடுதல்

தங்கள் வேண்டுதல் நிறைவேற்றுப்படுமாயின் தெய்வத்திற்குப் பொங்கலிடுவதாக வேண்டுவர். இப்பொங்கலிடுதல் பெரும்பாலும் விழாக் காலங்களிலேயே நடைபெறும்.சில நேரங்களில் தாங்கள் விரும்பும் நாட்களிலும் பொங்கல் வைப்பர்.

குழிப்பிள்ளை தாண்டுதல்

குழந்தைக்கு உடல் நலமில்லாத நேரத்தில் உடல் நலம் பெற வேண்டியும், குழந்தை இறக்காது இருக்கவும், முத்தாலம்மனிடம் 'குழிப்பிள்ளைத் தாண்டுதல் நேர்த்திக்கடன்' செலுத்துவர். "முத்தாலம்மன் திருவிழாவன்று நேர்த்திக்கடன் நேர்ந்தவர் தங்கள் குழந்தைகளைத் தெலுங்குச் செட்டியார் மடத்திலிருந்து வேட்டைக்காரன் கோயில் பகுதிக்குள் வாழை இலையை விரித்து அதன்மேல் மஞ்சள் துணியை விரித்து அதன் மீது குழந்தையைப் படுக்க வைப்பர். பின் குழந்தையை மஞ்சள் துணியால் மூடிவிடுவர்."(33) ஒரு குழந்தைக்கும் மறு குழந்தைக்கும் இடையே ஒரு கால் வைக்கும் அளவே அதாவது சுமார் ஓரடியே இடைவெளி இருக்கும்.

முத்தாலம்மன் சிலையைத் தூக்கி வருபவர் தன் வலது காலை எடுத்து வைத்து ஒவ்வொரு குழந்தையாகத் தாண்டிச் செல்ல வேண்டும். இதுவே குழிப்பிள்ளை தாண்டுதல் எனப்படும். அம்மன் சிலை தலையில் இருப்பதால் கீழே பார்க்க இயலாது. இடைவெளியும் மிகச் சுருக்கமாக இருக்கும். எனவே அம்மன் அருள் இல்லையாயின் சரியாகக் குழந்தைகளைத் தாண்டிச் செல்ல இயலாது என நம்புகின்றனர். இந்நேர்த்திக்கடன் முத்தாலம்மன் கோயிலில் மட்டுமே நடைபெறுகிறது.

கூழ் காய்ச்சி ஊற்றுதல்

ஊரில் அம்மை அதிகமாக இருந்தால் அந்நோய் தீர்ந்த பிறகு நன்றி செலுத்தும் பொருட்டு மாவு இடித்துக் கூழ் காய்ச்சி ஊற்றும் வழக்கம் இருக்கின்றது. ஒவ்வொரு வீடாகச் சென்று பொருளைப் பிச்சையெடுத்து ஊற்றினால் அம்மை நோய் வராமல் இருக்கும் என்ற நம்பிக்கை மக்கள் மனத்தில் இருக்கின்றது.

தொட்டில் கட்டில் போடுதல்

குழந்தைப்பேறு கிட்டாதவர்கள் இந்நேர்த்திக்கடனைச் செய்வர். இச்சடங்கானது இசக்கியம்மன், முனியாண்டி, காளியம்மன், அங்காளபரமேசுவரி போன்ற கோயில்களில் நடைபெறுகின்றது. தொட்டில் மரப்பலகை மற்றும் துணியினால் கட்டி போடுகின்றனர். அதாவது மஞ்சள் துணியின் இருபக்கமும் மஞ்சளில் கட்டப்பட்ட தாலியினை வைத்து தொட்டில் கட்டும் போது அதில் சிறு கல் ஒன்றினை வைத்துக் கட்டி விடுகின்றனர். பின்னர் அதனை மூன்று முறை ஆட்டிவிட்டுச் செல்கின்றனர்.

குதிரையெடுப்பு

நீர்நிலைக்காவல் தெய்வமான "அய்யனார் தெய்வத்திற்குச் செலுத்தும் காணிக்கைப் பொருள்களில் முக்கியமானவை 'மண் குதிரைகள்'. விரதம் பூண்டவரின் வருவாய்க்கேற்ப இக்குதிரைகள் பல அளவுகளில் செய்யப்படும். தங்கள் வேண்டுதல் நிறைவேறிய உடன் குதிரைச் சாற்றி தன் நன்றியைத் தெரிவிக்கின்றனர்."(34) அதாவது போரிட்டு மரணித்த அதியமான் நெடுமான் அஞ்சியின் நடுகல்லுக்கு மயிலிறகு சாத்தி சிறுமண் கலயத்துள் வழிபாட்டு பொருள் வைத்து சிறப்பித்ததை அவ்வையார் பாடலும், களர்நிலத்து கள்ளி மரத்தில் நடந்த தெய்வ வழிபாட்டினைப் புறநானூறும் காட்டுகின்றன. பொரியும், பூவும் வைத்துப் புகார் நகரத்துப் பெண்கள் வழிபட்டதைச் சிலப்பதிகாரமும், திருஞானசம்பந்தர் ஊர்த் தெய்வம் வழிபட்டதைப் பெரிய புராணமும் தெரிவிக்கின்றன. இதனையே வழிபடு தெய்வம் எனும் தொடரால் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

காலம் காலமாய் இப்படி கும்பிடப்பட்ட சிற்றூர் தெய்வங்களில் குலதெய்வத் தகுதியில் முன்னால் முகங்காட்டி நிற்கிறார் அய்யனார். குதிரை, யானை என இவருக்கான வாகனங்களும் வடிக்கப்படுகின்றன. சிற்றூர் மக்களைக் காக்க இந்திரனே அய்யனாரை அனுப்பினார் என்கிறது புராணம். பெண்

தெய்வங்கள் முன்னிலைப்படுகிற சிற்றூர்களில் ஆணாகிய அய்யனார் தனி இடம் பிடிக்கிறார். தீயவை, நோய், இயற்கைச் சீற்றங்களைத் தடுப்பதுடன் மழை தருவிக்கும் கடவுளாகவும் அய்யனாரை வழிபடுகின்றனர். இவரது வாகனமான குதிரையை நேர்த்திக்கடனாக மண்ணில் செய்து வைக்கும் பண்பாடு பல்லாண்டுகள் தொடர்கிறது. இது குதிரையெடுப்பு அல்லது புரவியெடுப்பு எனப்படுகிறது.

யானைச் சிலை வைத்தல்

அய்யனார் கோயிலில் பெரும்பாலும் குதிரைச் சிலையை நேர்த்திக்கடனாகச் செலுத்துவார்கள். ஆனால் இவ்வட்டாரத்தில் யானை சிலையும் வைக்கின்றார்கள். அவரவர்கள் வருவாய்க்குத் தகுந்தாற்போல் இச்சிலை அமைந்திருக்கும்.

தீச்சட்டி எடுத்தல்

அம்மன் கோயிலில் மட்டும் தீச்சட்டி எடுக்கின்ற வழக்கம் உள்ளது. பெரும்பாலும் அக்கினிச்சட்டி மட்டும் எடுப்பார்கள். ஆனால் இப்பொழுதோ தீச்சட்டியும் எடுக்கின்றார்கள். அதாவது 41 வகையான விளக்கு எரிகின்ற சட்டியை எடுப்பதால் இதற்கு இப்பெயர் வந்ததாகக் கூறுகின்றார்கள்.

பூக்குழி (தீ மிதித்தல்)

மாரியம்மனுக்கு எடுக்கப்படும் விழா. சில இடங்களில் காளியம்மனுக்கும் தீமிதி நடைபெறுகிறது. இவ்வட்டாரத்தில் பெரிய மாரியம்மன், சந்தனமாரியம்மன், திரௌபதியம்மன் போன்ற ஆலயங்களில் இச்சடங்கு நடைபெறுகிறது. "தீமிதி உற்சவம் ஆரம்பிப்பதற்கு ஒன்பது நாட்களுக்கு முன்பே காப்புக் கட்டுவர். காப்புக் கட்டிய பின்பு வெளியூர் செல்லக் கூடாது. தீமிதி உற்சவத்தன்று கரகம் காவடி எடுப்பர். தீ மிதிப்பவர்கள் விரதமிருந்து கோயிலுக்குச் சென்று காப்புக் கட்டி வருவர். மாலையில் குளித்து ஈர ஆடையுடன் மாலை அணிந்து குங்குமம் இட்டுத் தீக்குழியை மிதித்துச் செல்வர். தீமிதி விழா மாரியம்மனுக்கு எடுக்கும் விதமாக

அமைந்துள்ளது. மக்கள் அனைவரும் மாரியம்மனை மிகப் பயபக்தியுடன் வழிபடுகிறார்கள்.''[35]

சூலாடு குத்துதல்

''பெண் தெய்வங்களில் ஒருசில தெய்வங்களுக்கு நிறை சினையாகவுள்ள பெண் ஆட்டை தேர்ந்தெடுத்து ஊருக்கு வெளியே அதைக் கொண்டுபோய் அதன் வயிற்றைக் குத்திக் கிழித்து உள்ளே இருக்கும் ஆட்டுக்குட்டியை வெளியே எடுத்து பலிபீடத்தில் வைப்பர். இதனைச் சூலாடு குத்துதல் அல்லது துவளக்குட்டி அறுத்தல் என்றும் அழைப்பர்.[36]

செரா குத்துதல்

''மாரியம்மன் கோயிலில் கயிறு குத்துதல் நிகழ்ச்சி மட்டும் தான் இருந்தது. பெருமாள் தேவன்பட்டி என்ற சிற்றூரில் 'செரா குத்துதல்' நிகழ்வு நடைபெற்றது. விரதமிருக்கின்றவர்கள் உடலில் விலா எலும்பின் இரு பக்கமும் மூன்று அல்லது ஐந்து கம்பிகளைக் குத்துவார்கள். குத்திய இடத்தில் குருதி வந்தால் விபூதியால் அதனை மூடி விடுவார்கள்.''[37]

பட்டாடை செலுத்துதல்

ஒரு சில பெண் தெய்வங்களுக்குப் பச்சை வண்ண ஆடையை அணிவிக்கின்றனர். ''பச்சை வண்ணம் இயற்கையின் கொடையாகும். வளமை மற்றும் உண்மைகளைப் பிரதிபலிக்கின்ற செயல் தன்மை கொண்டதாகும். செல்வ வளத்தையும் இயற்கையின் வரவையும் அறிவிக்கின்ற வண்ணம் பச்சை வண்ணம்''[38] வளமை மற்றும் செழுமையின் குறியீடாக விளங்கும் பெண் தெய்வங்களுக்குப் பச்சை வண்ண ஆடை அணிவிப்பது பொருத்தமுடையதாகும்.

பெண் தெய்வங்களோடு நெருங்கிய தொடர்புடையது சிவப்பு வண்ணமாகும். இவ்வண்ணம் ''பெரும்பாலும் மனிதக் குணங்களின் கடுமையைக் குறிப்பதாகும். காய்கதிர்ச் செல்வனின் கடினத்

தன்மைக்கு அடையாளமாகச் சிவப்பு வண்ணம் விளங்குகிறது.''[39] வறுமை மற்றும் அபாயகரமான செயல்கள் மற்றம் நிகழ்வுகளை அறிவிக்கின்ற வண்ணமாகவும் விளங்குகிறது. பெண் தெய்வங்களின் அவ்வண்ணம் சக்தியை வெளிப்படுதைக் குறிப்பாகும். செவ்வாடைகளைத் தவிர பெண் தெய்வங்களுக்கு விதவிதமான பட்டாடைகளையும் அணிவிக்கின்ற போக்குக் காணப்படுவதை,

"மஞ்சள் நல்ல நீராடி மாநேறத்து (மாமநறிம்) பட்டுடுத்தி
கொஞ்சி நடக்கும் காளியம்மா"[40]

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. நேர்த்திக் கடனாகப் பெண் தெய்வங்களுக்கு மக்கள் ஆடைகளைப் படைக்கின்றனர் என்பதை?

"உடைகளுமே படைக்கிறார்கள் பாரும்மா
பட்டுகளும் பாத்து நல்லோ கொண்டு வந்து"[41]

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன.

மாவிளக்கு எடுத்தல்

மாரியம்மன் கோயிலில் உடலில் ஏற்படுகின்ற பிற நோய்களைப் போக்கினால் மாவிளக்கு எடுப்பதாக நேர்ந்து கொள்கின்றனர். மாவினால் செய்யப்படுகின்ற விளக்கை ஏற்றி நேர்த்திக்கடன் முடிந்தவுடன் சுவையுடன் இருக்கும் மாவினைப் பிரசாதமாக அனைவருக்கும் வழங்குவர்.

அம்மன் உருவம் செலுத்துதல்

அம்மன் கோயிலில் கயிறு குத்தும் நேர்த்திக் கடன் நடக்கின்ற போது அம்மன் உருவம் செய்து தலையில் வைத்துச் சுமந்து செல்கின்றனர். பின்னர் ஊர்வலம் சுற்றி வந்த பின்னர் இச்சிலையை அக்கோயிலில் வைத்து விடுகின்றனர். குழந்தையில்லாதவர்கள் இந்நேர்த்திக்கடனைச் செலுத்துகின்றனர்.

பால்குடம் எடுத்தல்

“அம்மன் கோயிலில் அம்மனுக்குக் காப்புக் கட்டிய அதே நாளில் நேர்த்திக்கடனைச் செலுத்துகின்றவர்களும் காப்புக் கட்டிக் கொள்கின்றனர். காப்புக்கட்டிய நாளிலிருந்து ஏழாவது நாள் பால்குடம் எடுக்கும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. தீராத நோய்களைத் தீர்த்து வைத்த அம்மனுக்குப் பாலால் நீராட்டு செய்து நன்றியைச் செலுத்துகின்றனர்.”(42)

அன்னதானம் செய்தல்

குலதெய்வ வழிபாட்டில் அன்னதானம் செய்கின்ற வழக்கம் காணப்படுகின்றது. தான் நினைத்த காரியம் நல்ல விதமாக நடந்துவிட்டால் இந்நேர்த்திக்கடனைச் செலுத்துகின்றனர். இந்நேர்த்திக் கடன் அசைவம் சைவம் இரண்டும் உண்டு. சங்கிலி வீரப்பன் கோயிலில் இந்நேர்த்திக் கடனைச் செலுத்துகின்றனர்.

அரிவாள் சாற்றுதல்

“எல்லையைக் காக்கின்ற கடவுளுக்கு இந்நேர்த்திக் கடனைச் செலுத்துகின்றனர். இவை குலதெய்வ வழிபாட்டிலும், இனத் தெய்வ வழிபாட்டிலும் காணப்படுகின்றன. குலதெய்வ வழிபாட்டில் பித்தடியான் கோயிலிலும் இனத்தெய்வ வழிபாட்டில் கோட்டைக் கருப்பசாமி கோயிலிலும் அரிவாள் சாற்றுகின்றனர்.”(43)

கரகம் எடுத்தல்

அம்மன் கோயிலில் கரகம் எடுத்தல் என்ற நேர்த்திக்கடனைச் செலுத்துகின்றனர்.

கோடு கீறிக் கும்பிடுதல்

“தான் நடந்து வருகின்ற பாதையில் ஒரு சிறிய கோடு போட்டு அதனை வணங்கி வருவது கோடு கீறிக் கும்பிடுதலாகும். இந்நேர்த்திக்கடன் திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் பெருமாள்

தேவன்பட்டி என்ற சிற்றூரில் மாரியம்மனுக்குச் செலுத்துகின்ற நேர்த்திக்கடனாகும்.''[44]

சிறுதெய்வங்களுக்கென்று சில பொருட்களை நேர்ந்து கொண்டு படைக்கின்றார்கள். அவை இளநீர், முட்டை, பானைக்கறம், கருப்பட்டி, பச்சரிசி, பதநீர், மாலை, முப்பழம், சுண்டல், புளியோதரை, பால், பொரி, எலுமிச்சம்பழம், பயிறு வகைகள், வளையல் போன்ற பொருட்கள் தெய்வங்களுக்குப் படைக்கப் பெறுகின்றன. இவ்வாறு செய்தால் தானியங்கள், காய்கறி, பழவகைகள் நன்றாக விளையும் என்னும் நம்பிக்கையில் செய்கின்றர்.

நெய்விளக்கு ஏற்றுதல்

''பாதாள பேச்சியின் சந்நிதியில் நெய்விளக்குகேற்றி அந்த விளக்கின் சுடர் மீது அடிப்பக்கம் நெய் தடவிய மண்சட்டி ஒன்றைப் பிடிக்கிறார்கள். அப்போது பூசாரி சில சடங்குகளைச் செய்து முடிக்க, அதற்குள்ளாக அந்த மண்சட்டியின் அடிப்பாகத்துக்கு வெளியே நெய் தடவிய இடத்தில் களிம்பு போன்ற ஒரு திரட்டுச் சேருகிறது. அதைக் கையால் வழித்தெடுத்து டப்பிகளில் அடைத்துக் கொடுக்கிறார்கள். இந்த மருந்து எல்லா நேரமும் கிடைக்காது. அம்மனின் அருள் இருந்தால் மட்டும் தான் கிடைக்கும்.''[45]

தொகுப்புரை

சிறுதெய்வங்கள் மீது அளவுக்கு அதிகமாகவே நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்நம்பிக்கையின் அடிப்படையில் தெய்வங்களின் பால் நேர்த்திக்கடன்கள் செலுத்தி வருகின்றனர்.

சிறுதெய்வங்களில் மாரியம்மன், காளியம்மன் கோயில்களில் கயிறு குத்துதல், முளைப்பாரி எடுத்தல் ஆகிய நேர்த்திக் கடன்கள் நிகழ்த்தப்படுகின்றது. முத்தாலம்மன் கோயிலில் மட்டும் குழிப்பிள்ளை தாண்டுதல் என்னும் நேர்த்திக்கடன் குறிப்பிடத்தக்க நிகழ்வாக நடைபெறுகின்றது. நேர்த்திக் கடன்களில் பெண்கள்

ஆயிரங்கண் பானை எடுத்தல் நிகழ்ச்சியும், கயிறு குத்துதல், செரா குத்துதல் ஆண்கள் எடுக்கும் நிகழ்ச்சியும் நடைபெறுகின்றன.

சிறு தெய்வங்களில் முளைப்பாரி எடுத்தல் நிகழ்வு பெண்களுக்கு மட்டுமல்லாது ஆண்களும் இந்நேர்த்திக் கடனைச் செலுத்துகின்றனர்.

சிறுதெய்வங்களில் ஆண் தெய்வக் கோயிலான சுந்தரசுவாமி கோயிலில் முளைப்பாரி எடுக்கின்ற நிகழ்வு நடைபெறுகின்றது. நாட்டுப்புற தெய்வங்களில் சிற்றூர் தெய்வங்கள் ஒவ்வொன்றிலும் தனித்தனி நம்பிக்கைகள் காணப்படுகின்றன. இந்நம்பிக்கையின் அடிப்படையில் நேர்த்திக்கடன்கள் அமைகின்றன.

நாட்டுப்புற தெய்வங்களில் சிற்றூர் தெய்வங்களான அய்யனாருக்கு நேர்த்திக்கடனாக புரவி எடுப்பு நிகழ்வு நடைபெறுகின்றது.

சிற்றூர் தெய்வங்களான அம்மன் கோயிலில் பெண்கள் செலுத்துகின்ற நேர்த்திக்கடன் மென்மையாகவும், ஆண்கள் செலுத்துகின்ற நேர்த்திக்கடன் வன்மையாகவும் காணப்படுகின்றன.

அடிக்குறிப்பு

1. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.241.
2. க.காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.105.
3. முனைவர் அ.அறிவுநம்பி, நாட்டுப்புறக் களங்கள், ப.94.
4. வி.சரசுவதி, நாட்டுப்புறப் பாடல்கள் சமூக ஒப்பாய்வு, ப.176.
5. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.105.
6. A grown person probably has ten thousands of beliefs hundred of attitudes but only dozens of valules - International encyclopedia of social science, Vol. 1&2/ p.455.
7. டாக்டர் சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.69.
8. டாக்டர் இரா.பாலசுப்பிரமணியன், நாட்டுப்புற வாழ்வியல், பக்.69-70.
9. டாக்டர் சு.சண்முகசுந்தரம், நாட்டுப்புற இயல், ப.167.
10. தகவல்: சிவகாமி, 10.05.2008.
11. தகவல்: தர்மராஜ், 19.05.2008.
12. தகவல்: மந்திரமூர்த்தி, 24.05.2008.
13. தகவல்: சங்கிலி, 29.05.2008.
14. தகவல்: செல்வமுத்து, 05.06.2008.
15. தகவல்: பேச்சிமுத்து, 10.06.2008.
16. தகவல்: சுப்பிரமணியம், 17.06.2008.
17. தகவல்: கந்தப்பன், 24.06.2008.
18. தகவல்: முத்துராமலிங்கத்தேவர், 29.06.2008.
19. தகவல்: சுடலைமுத்து, 06.07.2008.
20. தகவல்: சங்கிலி, 08.07.2008.
21. தகவல்: வேல்முத்து, 10.07.2008.
22. தகவல்: அழகப்பன், 12.07.2008.
23. தகவல்: கந்தையா, 14.07.2008.
24. மு. கல்யாணிகுமார், தூத்துக்குடி மாவட்ட வட்டாரச் சிறுதெய்வ வழிபாடு, ப. 243.

25. தகவல்: கந்தையா, 14.07.2008.
26. முனைவர் அ.அறிவுநம்பி, நாட்டுப்புறக் களங்கள், ப.97.
27. சு.சண்முகசுந்தரம், திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்ளில் சமுதாய அமைப்பு, ப.241.
28. கலைக்களஞ்சியம், தொகுதி-9, ப.164.
29. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், ப.128.
30. கண்ணதாசன், இறைவனின் நீதிமன்றங்கள், ப.5.
31. செல்வி, தகவல் 15.04.2008.
32. முனைவர் அ.ஆலிஸ், பதிற்றுப்பத்து, ப.283.
33. ராச சுந்திரம், தகவல் 17.07.2008.
34. பி.ஆர்.ஸ்ரீநிவாசன், நாம் வணங்கும் தெய்வங்கள், ப.21.
35. டாக்டர் சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.243.
36. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், ப.128.
37. தகவல்: தர்மலிங்கம், 19.07.2008.
38. வீ.அய்யனார், தமிழர்களின் சகுனங்கள் மற்றும் கனவுகள், ப.188.
39. மேலது, ப.189.
40. ஆ. கருப்பாயி, நாட்டுப்புறச் சிறுதெய்வ வழிபாடு, ப.148.
41. மேலது, ப.149.
42. தகவல்: கந்தம்மாள், 10.10.2007.
43. தகவல்: முத்தம்மாள், 06.02.2008.
44. தகவல்: சங்கிலி, 08.07.2008.
45. தகவல்: கந்தப்பன், 24.06.2008.

முடிவுரை

முடிவுரை

திருவில்லிப்புத்தூர் வட்டாரச் சிறுதெய்வங்கள் என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகள் பின்வருமாறு அமைகிறது.

திருவில்லிப்புத்தூர் பகுதியை வில்லி மன்னன் ஆண்டதற்கான சான்றுகள் இருக்கின்றன. புராணக் கதையுடன் தொடர்புப்படுத்திக் கூறப்படும் வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன.

முத்தமிழ் வளர்க்க முச்சங்கம் நிறுவிய பாண்டிய நாட்டில் வில்லிபுத்தூர் பகுதியை உள்ளடக்கிய ‘மல்லி நாடு’ என்னும் நிலப்பரப்பை ஆண்ட குறுநில மன்னன் ‘வில்லி’ என்பானின் பெயரில் அமைந்த ஊராகும். மல்லிவள நாட்டு மன்னனின் கனவில் மாதவன் தோன்றியதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

வில்லி மன்னன் ஆண்டதாகவும், ‘புற்று’ என்ற சொல்லில் இருந்து உருவான புற்றூர் நாளடைவில் ‘புத்தூர்’ என்று மருவியிருக்கலாம். ‘புதுவை’ என்னும் குறும்பெயரும் அந்நாளில் இந்நகருக்கு உரித்தாயிருந்தது.

ஒவ்வொரு சிற்றூரிலும் பல சாதியினர் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு சாதியினரும் மற்ற சாதியினரைச் சார்ந்திருக்கும் சூழல் இங்குண்டு.

‘வழிபாடு’ என்ற சொல் இன்று தொழுதல் என்ற பொருளில் பெரும்பாலும் வழங்கப்படுகிறது. முன்னோர் காட்டிய வழியில் பின்பற்றி நடத்தல் வழிபாடாகும்.

மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே வழிபாடும் நிகழ்ந்து வந்திருக்கின்றது. முதலில் இயற்கையை வழிபட ஆரம்பித்துப் பின்னர் மர வழிபாடு, நடுகல் வழிபாடு என்ற அடிப்படையில் வழிபாடுகள் பல வகைகளில் வளர்ந்துள்ளன. தற்பொழுது முன்னோர்

வழிபாட்டின் எச்சமாக சிறுதெய்வ வழிபாடு மக்களிடம் உயர்ந்தோங்கி விளங்குகின்றது.

மரங்களின் வாழ்க்கையோடு தமது வாழ்க்கையை இணைத்துக் கொண்ட மனிதன் அவற்றைப் புனிதத் தன்மை வாய்ந்ததாகக் கருதினான். மரத்தைக் கடவுள் உறையும் இடமாகக் கருதி வழிபட்ட நிலையினை உணர முடிகிறது.

பங்காளிக் குழுக்களின் ஒற்றுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, மக்களின் வசதி ஆகியவற்றிற்கேற்ப இப்பகுதியில் வழிபாடுகளையும், விழாக்களையும், வழிபாட்டுக் காலத்தையும் ஏற்படுத்தியுள்ளனர்.

அதிகார வர்க்கத்தின் ஊடுருவலுக்கும் இச்சிறுதெய்வ வழிபாடு களப்பகுதியில் பயன்படுவதையும் அறியமுடிகிறது.

சிறுதெய்வ வழிபாட்டு நிலையில் பாலி எடுத்தல் இப்பகுதியில் காணப்படுகிறது.

மக்கள் ஓரிடத்திலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடத்திற்குக் குடியேறும் போது தங்களின் வழிபாட்டைப் புதிய இடத்தில் தொடங்குகின்றனர். இதற்குப் பிடிமண் எடுத்தல் என்று பெயராகும். சாமி கனவில் தோன்றியதாக, சாமி ஆடி அருள் கூறுவதும் இப்பகுதியில் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

திருவில்லிப்புத்தூர் வட்டாரத்தில் உள்ள சிறுதெய்வங்களின் தோற்றம், வளர்ச்சி நிலைகள் பற்றிய தனித்தனி வரலாறுகள் இப்பகுதியில் காணக்கிடக்கின்றன. பொருளாதார ஏற்றத் தாழ்வு, தொழில் மற்றும் வேலை வாய்ப்புகளில் புலம் பெயர்வதால் வழிபாட்டு முறைகளின் நிலை மாறிவருகின்றது. வழிபடும் தெய்வங்களுக்குக் கோயில் கட்டுவதற்கு சாமி உத்தரவு தரவில்லை என்ற கருத்தும் நிலவுகிறது.

ஒரு குல தெய்வத்தை ஒன்றுக்கு மேற்பட்ட சாதியினர் குலதெய்வமாக வழிபடுவது தனித்துச் சுட்டத்தக்கது.

தெய்வத்தின் தோற்றக் கதைகள் மறைத்தும் திரித்தும் கூறப்படுகின்றன. ஒருசில தெய்வங்களுக்குத் தோற்றக் கதைகள் தெரியவில்லை.

தெய்வ வழிபாட்டில் முத்தாலம்மன் மட்டும் அன்றே தோன்றி அன்றே மறைகின்ற தெய்வமாக நம்பப்படுகிறது. அய்யனார் மாட்டுத் தலையை மான் தலையாக மாற்றியக் கதை வழக்கத்தில் காணப்படுகிறது.

இப்பகுதிச் சிறுதெய்வங்களுள் வீட்டுத்தெய்வம், குலதெய்வம், பொதுத்தெய்வம், துணைத் தெய்வம் ஆகிய வழிபாட்டு முறைகளில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பெண் தெய்வக் கோயில்களில் மாரியம்மன், காளியம்மன் போன்ற கோயில்களில் மட்டும் கொடிமரம் இருக்கின்றது. இவ்வட்டார ஆண் தெய்வக் கோயில்களில் கொடிமரம் காணப்படவில்லை.

இவ்வட்டாரத்தில் தெய்வ வழிபாட்டிற்குரிய மாதங்களாகக் கருதப்படுகின்ற தமிழ் மாதங்களில் ஒருசில மாதங்களைத் தவிர மற்ற மாதங்களில் வழிபாட்டினை மேற்கொள்கின்றார்கள்.

இன்றைய நிலையில் சாமியாட்டம் மூட நம்பிக்கையாகவும், கௌரவ குறைச்சலாகவும் கருதப்படுகின்ற சூழலில் இப்பகுதி மக்களிடம் இவை பெருவழக்காக உள்ளன. எனவே நம்பிக்கையே வழிபாட்டின் அடித்தளம் என்பதை அறிய முடிகிறது.

நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டில் அனைத்துச் சமூகத்தினரும் தங்கள் உணவுப் பழக்கத்திற்கேற்ற உயிர்களைப் பலியிடுகின்றனர்.

வேளாண்மைத் தொழில் அதிகம் உள்ளதால் வளமை கருதி நம்பிக்கையூட்டும் வகையில் வழிபாடுகள் அமைகின்றன.

குடும்பம், கல்வி அமைப்பு, பொருளாதாரம், இறப்பு ஆகியவை சிறுதெய்வ வழிபாட்டோடு மிகவும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.

தெய்வத்தின் தன்மை, நம்பிக்கை, இடப்பெயர்வு முதலானவற்றின் காரணமாக வழிபாட்டுக் குழுவினரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகிறது.

உறவுகளை, பிரிந்தவர்களை, பல சாதியினரை இணைத்து வைக்கும் பாலமாக இச்சிறுதெய்வ வழிபாடுகள் அமைகின்றன.

இவ்வட்டாரத்தில் பேச்சியம்மன், அளிசோடை புழுகாண்டி கோயில்களில் சூலாட்டுப்பூசை சிறப்பாக நடைபெற்றது. தற்போது பொருளாதாரச் சிக்கல்களின் காரணமாக அப்பூசைக்குப் பதிலாகப் பெரும்பூசை என்னும் பெயரில் விழா நடைபெறுகிறது.

பெரும்பாலான திருவிழாக்கள் வளர்பிறையில் நடத்தப் பெறுகின்றன. சந்தனமாரியம்மன் கோயிலில் மட்டும் தேய்பிறையில் விழா நடத்தப்படுகின்றது.

முனியாண்டி, சுடலைமாடன் கோயில் வழிபாடுகளில் பெண்கள் கலந்து கொள்வதில்லை. இரவு நேரங்களில் பூசை மற்றும் வேட்டைக்குச் செல்லும் போதும் எதிரில் யாரும் வரக்கூடாது. பாதாள பேச்சியம்மன் கோயிலில் ஊட்டுக் கொடுத்தல் நிகழ்ச்சி நடைபெறும் போது கோயிலில் பூசாரி மற்றும் மருளாடிகள் இருப்பார்கள்.

அய்யனார் கோயிலில் அட்டவணை இனத்தவர்கள் விழாக் கொண்டாடி வீட்டிற்கு வரும்பொழுது தெருவில் தீயில் நடந்து செல்வது குறிப்பிடத் தக்கதாகும்.

பெரும்பான்மையான கோயிலில் பலியிடுதல் நடைபெறுகிறது. புதியவன்சாமி கோயில், வடபத்ர காளியம்மன் கோயில்களில் பன்றிப் பூசையில் பன்றி பலியிடப்படுகிறது. அனைத்துக் கோயில்களில் பலியிடப்படும் கடாக்கள் துடிக்கும். ஆனால் பேமலையம்மன் கோயிலில் பலியிடப்படும் கடாக்கள் துடிப்பதில்லை என்ற நம்பிக்கை உண்டு.

முத்தாலம்மன் கோயிலில் மட்டும் குழிப்பிள்ளை தாண்டுதல் என்னும் நேர்த்திக்கடன் குறிப்பிடத்தக்கதாக நடைபெறுகின்றது. இவ்வட்டாரத்தில் சுந்தரசுவாமி கோயிலில் முளைப்பாரி எடுத்தல் என்னும் நேர்த்திக்கடன் குறிப்பிடத்தக்கதாக நடைபெறுகின்றது.

வீட்டுத் தெய்வமாக வழிபடப்படும் தெய்வங்கள் மரணமுற்றுத் தெய்வமானவர்கள். இவற்றுள் ஆண்களின் வழிபாட்டை விட பெண்களின் வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. கொலை மற்றும் தற்கொலை செய்து கொண்டவர்கள் மிகுதியாகத் தெய்வமாக்கப்பட்டுள்ளனர்.

